
தமிழரசு
திங்கள்
இருமுறை
35
காசு
கைத்தறி இருவார

# அரசு சிமெண்ட்

## வலிவும் வனப்பும் வாய்ந்தது




நீண்டகாலம் மங்காத அழகுடன் விளங்க வேண்டுமென்றே தயாரிக்கப்படுகிறது, புதிய அரசு போர்ட்லண்ட் சிமெண்ட், வெகு அருமையான மூலப் பொருள்களும் அதி நவீன தொழில் நுட்பமும் ஈடுபடுத்தி உற்பத்தி செய்யப்படுவதால், அரசு சிமெண்ட் மிக மிகச் சன்னமாக விளங்குகிறது. கட்டிடம் கட்டுபவர்களில் பெரும்பாலோர் அரசு போர்ட்லண்ட் சிமெண்ட்தான் வேண்டும் என்று கேட்டு வாங்குகிறார்கள். நீங்களும் ஏன் கூடாது?

TIDCO

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (வ.து.)**
(தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானது)
150-A, மவுண்ட் ரோடு, எல்.எல்.ஏ. கட்டிடம்,
3வது மாடி, தபால் பை நெ. 5205, சென்னை-2.
தொழிற்சாலை: தமிழ்நாடு சிமெண்ட்ஸ்,
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

# தமிழரசு

மலர் 1 : 1971, மே 16 : இதழ் 22




## இந்த இதழில்

குழந்தைப் பாதுகாப்பு

கைத்தறிக்கு ஓர் மாளிகை

அஞ்ச வேண்டாம்

கைத்தறியே அணிவோம் !

வீடு உண்டு ! வேறு என்ன வேண்டும் ?

கற்பது எப்படி ?

குற்றவாளிகளைத் திருத்த அறிவியல் சீர்திருத்த முறை

இரசாயனத் தொழில்கள் தொடங்க...

காஞ்சியும் காவேரியும்

வெண்பாப் போட்டி

முதல்வர் எழுதும்

இனியவை இருபது

அட்டையில்

சபையர் அரங்கில் நடைபெற்ற
கைத்தறி விழாப் போட்டியில்
பங்குபெற்ற அணங்குகள்




## 16. லூத்தரும் பிஸ்மார்க்கும்.

ஜூலைத் திங்கள் பதினோராம் நாள் காலை கொலோன் நகருக்குப் புறப்பட்டோம். வையகத்தில் வெடிகுண்டு மணத்தைப் பரப்பிய ஜெர்மானிய பூமியில், இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக 'யூடிகோலோனை' உலகிற்கு வழங்கிக்கொண்டிருக்கும் நகரம் அது.

கோலோன் நகரில் இன்றும் கலையரசி கோலோச்சி வருகிறாள். ரைன் நதிக் கரையில் அரைவட்ட வடிவில் அமைந்திருக்கும் இந்த அழகிய நகர் இரண்டாம் உலகப் போரினால் ஏற்பட்ட அழிவிலிருந்து மீண்டும் புத்துயிர் பெற்று எழுந்துள்ளது. பண்டைக் காலம் தொட்டு, ஜெர்மானியக் கலை, கல்வி வளர்ச்சியில் பெரும் பங்கு பெற்று வரும் கோலோன் நகரில் ஒரு வேடிக்கையான அனுபவத்தை நான் பெற்றேன்.

இங்குள்ள '' சர்ச் '' ஒன்று மிகவும் எழிலுடனும், கம்பீரத்துடனும் தோற்றமளிக்கிறது. அதை மீண்டும் புதுப்பிக்கும் பணிக்குப் பொருள் சேர்க்கப் பரிசுச் சீட்டுக்களை விற்றுக்கொண்டிருந்தார்கள். அந்தப் பணிக்கு உதவிட வேண்டும் என்ற ஆவல் உள்ளத்தை உந்த, இரண்டு சீட்டுக்களை வாங்கினேன். ஒரு சீட்டுக்குப் 'பரிசு இல்லை' என்றிருந்தது. அடுத்த சீட்டுக்கு 'மேலும் இரண்டு சீட்டுக்களைக் கட்டணமின்றி வாங்கலாம்' என்றிருந்தது. மறுபடியும் இரண்டு சீட்டுக்களை வாங்கியதில் 'இன்னும் நான்கு சீட்டுக்களை இலவசமாகப் பெறலாம்' என்று எழுதியிருந்தது. இந்த நான்கு சீட்டுக்களில் கட்டாயம் ஒன்றிற்காவது பரிசு கிடைக்கும் என்ற ஆவல் என் நெஞ்சில் அலை மோதியது. அமைச்சர்களோ, அவர்கள் குடும்பத்தினரோ தமிழக அரசின் பரிசுச் சீட்டுக்கள் வாங்கிப் பரிசு பெறுவார்களேயானால், அது பாமர மக்கள் மனத்தில் சரியாகவோ, தவறாகவோ காழ்ப்புணர்ச்சிக்கு வித்திடும். ஆகவே, அமைச்சர்களும் அவர்கள் குடும்பத்தினரும் பரிசுச் சீட்டுக்கள் வாங்கிடக் கூடாது என அன்புக் கட்டளை பிறப்பித்தார் அண்ணா. அந்தக் கட்டளை ஜெர்மானிய நாட்டிற்குப் பொருந்தாது என்ற எண்ணத்தில் பரிசுச் சீட்டுகளை ஆர்வத்தோடு வாங்கிக் கொண்டு இருந்தேன். அந்த நான்கு சீட்டுக்களுக்கும் பரிசு கிடைக்கவில்லை. ஆனால், ஆலயத் திருப்பணிக்கு நம்மால் ஒரு சிறு உதவியாவது செய்ய முடிந்ததே என்ற மன நிறைவுடன் அங்கிருந்து புறப்பட்டோம்.

அந்த ஆலயத்தின் அழகிய சித்திர வேலைப்பாடுகளைப் பார்த்துக்கொண்டிருந்த போது மார்ட்டின் லூத்தரைப் பற்றிய சிந்தனை என் மனத்தில் எழாமல் இல்லை. பதினைந்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில் போப்பிற்குப் பயங்கரக் கனவாக விளங்கினான் லூத்தர்! '' என்னுடைய பகுத்தறிவு ஏற்றாலன்றி, பழைய சமயச் சுவடிகளிலிருந்து சான்றுகள் தந்தாலன்றி, மதத்தின் எந்தத் தலைவர் கூறும் எவ்வித ஆணையையும் ஏற்க மாட்டேன் '' என்றவன் லூத்தர். "கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப் போக '' என்று முழங்கியவன். '' பாவங்கள் புரிபவன் ஆலயங்களுக்குப் பணத்தை அளிப்பதன் மூலம் பிராயச்சித்தம் தேட முடியாது'' என்று அறைகூவல் விட்டவன். 1517-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31-ஆம் நாள் மார்ட்டின் லூத்தர், ரோமன் சர்ச்சுக்கு எதிராகத் தான் தயாரித்த 95 கருத்துக் குவியல்களை விட்டன்பர்க் ஆலயத்தின் கதவுகளில் ஆணியால் அறைந்து தொங்க விட்டான். அந்தக் கருத்துக்கள்



மார்ட்டின் லூத்தர்
1483–1546

மக்கள் மனத்திலும் பசுமரத் தாணி போல் பதிந்து பரவின.

மருண்ட மதகுரு, மதத் துரோகி என்று அவனைக் குற்றம் சாட்டி, மதத்திற்குப் புறம்பானவன் என்று அறிக்கை விட்டார். அந்த ஆணையை ஆலயத்தின் முன்னாலேயே எதிர்த்தான் அஞ்சா நெஞ்சன் மார்ட்டின் லூத்தர். அவனுக்குப் பிறகு முப்பது ஆண்டுகளாகத் தொடர்ந்த போரினாலும் லூத்தரின் கருத்துக்கள் பரவுவதைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

லூத்தரின் நினைவுகள் நெஞ்சை அழுத்திடக் கோலோன் நகரைச் சுற்றிப் பார்த்தேன். துணி உற்பத்தி, வங்கி, வாணிபத் தொழிலில் சிறந்து விளங்கும் நகரம் அது. சாக்லெட், சிறந்த கண்ணாடிச் சாமான்கள் தயாரிப்பதிலும் கோலோன் இணையற்று விளங்குகிறது.

மாலை இரண்டு மணிக்கு எஸ்ஸன் நகரம் சென்றோம். எஸ்ஸன் ஏற்றமிக்கதோர் தொழில் நகர். ரேடியக் கதிரியக்க ஐஸ்டோப்புகள் முதல், சாதாரண இரும்புச் சாமான்கள் வரை இங்கு பெருமளவு உற்பத்தி செய்யப்படுகின்றன.

எஸ்ஸன் நகரில் உள்ள ''அசோரா'' விடுதியில் சிறிது இளைப்பாறிவிட்டு ரெஸ்லிங் ஹாஸன் நகருக்குச் சென்றோம். எஸ்ஸன் நகரில் தொழிற்சாலைகள் எழுப்பும் ஓசையில் மூழ்கிக் கிடந்திட்ட செவிகளில் இந்திய நாட்டியக் கலை தரும் சலங்கை ஒலி தேனெனப் பாய்ந்தது. ஆசிய-தென் கிழக்காசியக் கலாச்சார விழா ஒன்று அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த நேரம் அது.

அங்கு நவீன முறையில் அமைந்த போற்றத்தக்க அரங்கொன்றில், மறைந்த தமிழகத் திரைப்பட இயக்குநர் திரு. சுப்பிரமணியத்தின் மகள் செல்வி பத்மா சுப்பிரமணியம் அவர்கள் கவின்மிகு பரதநாட்டிய நிகழ்ச்சி ஒன்றினை வழங்கிக் கொண்டிருந்தார். கேரளத்துக் கதக்களிக் கலைஞர்களும் தங்கள் திறனைக் காட்டிடும் நிகழ்ச்சியொன்று நடத்தினர். தமிழகத்திலிருந்து நான் வந்திருப்பது தெரிந்ததும் பார்வையாளர்களும் கலைஞர்களும் பெருத்த மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்; நான் கலை மணக்கும் தமிழகத்தின் முதல்வன் என்பதாலோ—அன்றி நானும் ஒரு கலைஞன் என்பதாலோ—அறியேன்!

முத்தமிழில், இசைக்கும் கூத்துக்கும் இரு பகுதிகளை ஒதுக்கி விட்ட இன்பத் தமிழ் மண்ணில் தோன்றிய பத்மா, உச்சியிலே மின்னுகின்ற சுட்டி முதல், உள்ளங்காலில் விளங்குகின்ற செவ்விய சித்திரம் வரை, கலையழகே வடிவமாக ஆடிடும் காட்சியினைக் கண்ட ஜெர்மானிய ரசிகர்கள் பரதக் கலையின் சிறப்பினை உணர்ந்து ரசித்திட்டனர். அந்த பரதக் கலை பெரிதும் பயிலப்பட்டு வரும் பழந் தமிழ் நாட்டின் பண்பாட்டை அவர்கள் மெத்த வியந்திருக்க வேண்டும்; ஆட்டக் கலையின் அணு ஒவ்வொன்றையும் அழகாக விளக்குகின்ற இந்த நாட்டியத்தினைப் பயில்கின்ற நாட்டு மக்கள் எத்தகைய நனி நாகரீகராக விளங்குதல் வேண்டும் என்று அவர்கள் எண்ணியிருக்கக் கூடும்.

ஆட்டக் கலைக்கு உயிர்தந்த ஆட்டன் அத்தி, மாதவி ஆகியோர் வளர்த்த கலையல்லவா பரதக் கலை!

கன்னலோடு கனிச்சாறு கலந்தாற்போல, பொன் மலருக்கு மணம் கூட்டியது போல, நாட்டியத்துடன் நாடகத்தினையும் பின்னவிட்டுக் கதை சொல்லும் கலையான கதக்களியையும் அங்கு ஜெர்மன் மக்கள் கண்டு களித்தனர். கலைஞர்களின் உடையும், ஒப்பனையும், இசைக் கருவிகளின் ஓசைக்கேற்ப அசைவுகளை நிகழ்த்துவதில் அவர்கள் காட்டிடும் ஒப்பற்ற திறனும் ஜெர்மானிய ரசிகர்களை உற்சாகத்தின் உச்ச நிலைக்கே இட்டுச் சென்றன. ஒவ்வொரு காட்சி முடிவடையும்போதும் அவர்கள் எழுப்பிய கையொலி அதற்குச் சான்று கூறியது.

கலை நிகழ்ச்சிகளைப் பார்த்துவிட்டு இரவு பத்து மணிக்கு டஸ்ஸல்டார்ஃப் (Dusseldorf) நகருக்குச் சென்றோம். இட்லரின் காலத்தில் ''சூறாவளிப் பட்டாளத்'' தின் காலணிகளின் ஒலி எப்பொழுதும் அங்குக் கேட்டுக் கொண்டிருக்குமாம். இன்று வேகமாக விரைந்து செல்லும் விதவிதமான கார்களின் ஓசைதான்

முதல்வர் எழுதும் பயணக் கட்டுரை

கேட்கிறது. டஸ்ஸல்டார்ஃப் நகரில் அந்நாளில் சிறுவர்கள் கூடப் போர் உடையுடன் காணப்படுவார்களாம். ஏழு இலட்சம் பேருக்கு மேல் வாழும் இந்நகரில் மலர்ந்த முகத்துடன் இன்று மக்கள் வாழ்வதைக் கண்டேன். ரைன் நதிக்கரைத் துறைமுகங்களாக விளங்கும் டஸ்ஸல்டார்ஃப், கோலோன் நகர்களின் மூலம், ஜெர்மானிய மக்களால் எஸ்ஸன் நகரில் ஏராளமாகத் தயாரிக்கப்படும் நேர்த்தியான பொருள்கள் உலகமெங்கும் விற்பனைக்குச் செல்கின்றன.

டஸ்ஸல்டார்ஃப் விமான நிலையம் உலகத்தின் பல்வேறு நகரங்களுடன் தொடர்பு கொண்டுள்ள சிறந்த விமான நிலையம்: ஜெர்மனி, ''ஆட்டோபான்'' என்று அழைக்கப்படும் நெடுஞ்சாலைகளுக்குப் பெயர்பெற்ற நாடுகளில் ஒன்றாகும். ஜெர்மனிக்குச் செல்லும் எவரும் அந்த நாட்டின் நெடுஞ்சாலைகளின் நேர்த்தியையும், தரத்தையும் மறக்க மாட்டார்கள்.

பல நகருக்குச் செல்லும் நெடுஞ்சாலைகள் இந்நகரைத் தொட்டுச் செல்லுகின்றன. இரவையும் பகலாக்கும் வண்ண விளக்குகள் இந்நகரினிடையே செல்லும் ஆற்றின் கால்வாய்க்கு எழில்தனைக் கூட்டுகின்றன. மேற்கு ஜெர்மனியில் உள்ள நகரங்களிலேயே எழில் மிக்க நகரம் டஸ்ஸல்டார்ஃப்தான். முக்கிய வங்கிகளின் தலைநகராகவும், உலகின் தலைசிறந்த வியாபாரிகளின் இருப்பிடமாகவும் ஐரோப்பாவின் கலைகளுக்கு நடுநாயகமாகவும் விளங்குகிறது. இங்குள்ள வண்ண ஓவியப்பள்ளி மிகவும் சிறப்பு வாய்ந்தது. கலைக் கழகமும், கலைக் கண்காட்சியும் பார்க்கத் தக்கவை.

இந்நகரில் 1899-ஆம் ஆண்டில் பிஸ்மார்க்குக்குச் சிலை ஒன்று நிறுவி உள்ளார்கள். ஐரோப்பாவின் மத்தியில் அமைந்திருக்கிறது ஜெர்மனி. இது ஐரோப்பாவின் இதயம் என்று போற்றப்பட்டிருக்க வேண்டும். ஆனால் எறும்புகளுக்கு இடையில் வைத்த கற்கண்டாகவோ தேனீக்களுக்கு இடையில் மலர்ந்த மலராகவோதான் இது இருந்து வந்திருக்கிறது. 'இது தான் ஜெர்மனி' என்று வரையறுத்த இயற்கை எல்லைகளோடு அந்த நாடு என்றுமே இருந்ததில்லை. நாற்புறத்திலும் சூழ்ந்திருக்கும் நாடுகளின் ஏதேச்சாதிகார ஆசைகளுக்கேற்ப அதன் எல்லைகள் மாறிக் கொண்டே வந்திருக்கின்றன. ''எந்த நேரத்தில் எந்தப் பக்கமிருந்து எந்த எதிரி தாக்குவானோ?'' என்ற அச்சம் ஜெர்மானிய மக்களுக்கு என்றும் இருந்து வந்தது.

அந்த அச்சத்தை விழிப்புணர்ச்சியாக்கி, அந்த விழிப்புணர்ச்சியில் வீரமறவர்களை உருவாக்கியவன்தான் ஒட்டோ வான் பிஸ்மார்க். 1862-ஆம் ஆண்டு பிஸ்மார்க் தலைமை அமைச்சர் ஆனபொழுது பாராளுமன்றத்தில் பகிரங்கமாகவே சொன்னான். ''இது நாள் வரை நீங்கள் பேசிப் பேசிச் சாதித்தது என்ன? கொலை வாளினை எடுங்கள்; மிகு கொடியோர் செயல் அறுப்போம்!'' என்றான். படைகளைச் சீர்திருத்தி, ஆஸ்திரியாவுடன் கூட்டுச்சேர்ந்து, இரண்டு ஆண்டுகளில் டென்மார்க் மீது போர் தொடுத்தான். பின்னர் ஆஸ்திரியாவுடன் வேண்டுமென்றே ஓர் தகராறினை உருவாக்கி, அதனையும் வெற்றி கொண்டான் 1870-ல். பிரான்சின் பெருமையினைத் தகர்த்து, வளமான இடங்களைப் பெற்றதுமன்றி, இருநூறு மில்லியன் பவுன்களைப் போர்க்காலச் சேதத்திற்கு ஈடாகப் பெற்றான். 1871-ஆம் ஆண்டில் உலகப் படத்தில் முதன்முறையாக ஜெர்மானிய இனம் தனக்குரிய எல்லாப் பகுதிகளையும் மீட்டு ஒரு முழுமையான நாடாக வடிவெடுத்தது. ஐரோப்பாவின்

டஸ்ஸல்டார்ஃபிலுள்ள தொடர்வண்டி



அசைக்க முடியாத வல்லரசாக உருப்பெற்றது. ஆகவே. அவனுக்குச் சிலையமைத்து அந் நாட்டு மக்கள் தங்கள் நன்றி யுணர்வைக் காட்டுவதில் வியப்பேதுமில்லை.

வரலாற்றுப் புகழும், தொழில் வளமும், எழிலும் நிறைந்த இந்நகரைப் பார்த்துவிட்டு எஸ்ஸன் நகருக்குத் திரும்பிச் சென்றோம். இரவு கழிந்தது.

ஜெர்மானியர்கள் சிறந்த உழைப்பாளிகள் மட்டுமல்ல; எதனையும் சீர்தூக்கிப் பார்க்க வல்ல சிந்தனையாளர்கள். சிறந்த விஞ்ஞானிகளும் கூட! இரும்பைக் காய்ச்சி உருவாக்குவதில் மட்டுமல்ல, கரும்பை நிகர்த்த காவியங்கள் புனைவதிலும், சுரும்பெனச் சுழன்று ஆடுவதிலும் வல்லவர்கள். பாடுவதிலும், பரவசந் தரும் ஓவியங்கள் தீட்டுவதிலும், சிறப்பு மிக்கவர்கள். ஆல்பர்ட் டியூரர் போன்ற ஓவியமேதைகளையும், கெப்ளர், அலெக்ஸாண்டர், ஹம்போல்ட், ராண்ட்ஜன் போன்ற விஞ்ஞான வித்தகர்களையும், பாச், ஹேண்டல், பீத்தோவன் போன்ற இசைத்துறை விற்பன்னர்களையும், கத்தே போன்ற கவிஞர்களையும், இம்மானுவேல் கந்த் போன்ற இணையற்ற சிந்தனையாளர்களையும் தந்த பூமி இட்லரின் கொடுங்கோன்மையின் விளைவாக இன்று இரு கூறாகப் பிளவுபட்டு நிற்கின்றது. எல்லையைக் குறிக்க நெடுஞ்சுவர் எழுப்பப்பட்டு விட்டது!



ஓட்டோ வான் பிஸ்மார்க் (1815–1898)

1945 வரை இதயங் கலந்து பழகிய உறவினர்களையும், இனிய நண்பர்களையும் பிரித்துக் கொண்டு இன்று ஜெர்மனியின் குறுக்கே எண்ணூறு மைல் களுக்கு எல்லை ஓடுகிறது. உழவன் கிழக்கு ஜெர்மனியிலும், அவன் உழுத நிலம் மேற்கு ஜெர்மனியிலுமாக இருவேறு கோட்பாடுகளுக்கிடையே, இருவேறு நிலைகளில் ஜெர்மானிய நாட்டின் உடன்பிறந்தவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு வியத்தகு முறையில் முன்னேறி இருக்கும் மேற்கு ஜெர்மனியை விட்டு, கலாச்சாரமும், பண்பாடும் மிக்க ஜெர்மானிய மக்களுடன் பழகிய பசுமையான நினைவுகளோடு ஜூலைத் திங்கள் 12ஆம் நாள் டஸ்ஸல் டார்ஃப் விமான நிலையத்தை வந்து அடைந்தோம். சற்றுக் காலதாமதமாக வந்த நியூயார்க் விமானம் எங்களைச் சுமந்து கொண்டு பறந்தது.

ஐரோப்பாவின் மலர்க்காடு என்று வர்ணிக்கப்படும் நெதர்லாந்தை நோக்கிப் பயணமானோம். (தொடரும்)



# இலண்டனில் ஓர் தமிழர்

பெருகிவரும் இலண்டன் நகரப் போக்குவரத்துப் பிரச்சினையைத் தீர்த்துவைக்கும் பொறுப்பை திரு எஸ். தியாகராஜன் என்ற தமிழர் ஏற்றுள்ளார். இவர் வட ஆர்க்காட்டிலுள்ள சோளிங்கரைச் சேர்ந்தவர்.

ஆண்டுக்கு 1,26,000 ரூபாய் (7,000 பவுன்கள்) சம்பளத்துடன் கூடிய இந்த வேலை 33 வயது இந்தியருக்குக் கிடைத்திருக்கிறது என்றாலும், தியாகராஜன் நிறைந்த அனுபவம் உள்ளவர். போக்கு வரத்து, நகர அமைப்பு, கட்டடக்கலை ஆகியவற்றில் நிபுணர்.

இந்தியாவிலேயே பல்கலைக் கழகப் படிப்பை முடித்துக் கொண்டு, கட்டடத்துறை பற்றியும் ஓராண்டு பயிற்சிபெற்ற தியாகராஜன் 1968-ல் அமெரிக்கா சென்றார். அங்குப் பணியாற்றிவிட்டு, பிறகு பெல் கிரேடு நமர அமைப்புக் கழகத்தில் ஆலோசகராகச் சேர்ந்தார். இப்போது இலண்டன் புறநகர்ப் பகுதிப் போக்கு வரத்துப் பொறுப்பை ஏற்றுள்ளார்.



இவர் கண்காணிப்புக்குக் கீழே உள்ள பகுதியின் பரப்பு 600 சதுரமைல்கள்; 80 இலட்சம் மக்கள் வசிக்கிறார்கள். இந்தப் பகுதியில் உள்ள சாலைகளின் நீளம் 8,000 மைல்கள். இதில் 16 இலட்சம் கார்கள் எந்நேரமும் சுற்றிக்கொண்டே இருக்கின்றன. 2,50,000 சரக்கு வாகனங்களும் நடமாடுகின்றன.

இருபத்திநான்கு மணி நேரத்தில் 4,30,000 கார்கள் 6,00,000 மக்களைச் சுமந்துகொண்டு மத்திய இலண்டனுக்கு வருகின்றன. ஒரு நாளில் இலண்டன் போக்கு வரத்துப் பேருந்துகள் 50,00,000 பயணிகளையும், பாதாள இருப்புப் பாதை 20,00,000 பயணிகளையும் சுமந்து செல்கின்றன.




# கைத்தறியே அணிவோம்!

பாசொலி

வெட்டிய விறகை ஈசன்
 வீதியில் விற்றான் அந்நாள்
கட்டியே கையால் நெய்த
 கைத்தறித் துணிகள் தம்மை
சுட்டிடும் வெயிலில் ஓடிச்
 சுமந்துதான் விற்றான், நெய்வோர்
பட்டிடு துயரம் மாற்றப்
 பைந்தமிழ்த் தலைவன் அண்ணா!

இருபது லட்சம் மேலாய்
 இருந்திடு நெசவா ளர்தம்
கருதரு துயரம் நீக்கக்
 கைத்தறி ஆடை கட்டித்
திருமணக் கோலம் கொள்வீர்,
 தீவளிப் பொங்கல் ஆதிப்
பெருவிழாச் சிறக்கச் செய்வீர்,
 பெரியதோர் உதவி ஈதே !

பட்டிலும் மயிரி னாலும்
 பஞ்சிலும் செய்த ஆடைப்
பட்டியல் வரலா றெல்லாம்
 பார்த்தனம் சிலம்பின் உள்ளே
ஒட்டிய வயிற்று மக்கள்
 உண்டுநல் வாழ்வு வாழக்
கட்டுவோம் வண்ண வண்ணக்
 கைத்தறித் துணிகள் நாமே

ஆவியந் துகிலை நெய்த
 அழகிய கரங்கள் இன்று
மேவிய துயரத் தாலே
 மெலிந்திவண் வாடல் நன்றோ !
பூவிரி நங்கை நல்லீர் !
 புதுமணம் புரியும் மக்காள் !
யாவரும் விரும்பும் இந்தக்
 கைத்தறி ஆடை கொள்மின்.

கதரினுக் கடுத்த தாகக்
 கருதுவார் சிலரும் உண்டு
முதலிடம் கையால் நெய்யும்
 கைத்தறி ஆடை கட்கே
இதமுற வழங்கி வாழ்வீர்
 ஏழ்மையை ஒழிக்கச் செய்வீர்
இதனினும் நீவிர் செய்யும்
 எல்லையில் உதவி உண்டோ !

கண்கவர் சோளித் துண்டு,
 கடல்நிறச் சேலை ; எண்ணில்
பெண்களுக் கேற்ற ஆடை ;
 பிள்ளைகட் குரிய சொக்காய் ;
பண்களி ஆடல் பாடல்
 பரதநாட் டியத்திற் கேற்ற
தண்கமழ் உடைக ளெல்லாம்
 கைத்தறித் துணியில் தைப்போம்.

வாங்குமின் கையால் நெய்த
 வண்ணமார் துணிகள் நீவிர்
தாங்குமின் நெய்தல் செய்யும்
 தமிழினத் தோழர் வாழ்வை !
ஈங்குநம் மக்கள் வாழ
 இயன்றிடும் உதவி செய்து
பாங்குடன் தமிழர் ஓங்கப்
 பலபணி ஆற்றி வாழ்வோம்.

வள்ளுவர் நெய்த ஆடை !
 மலையையும் மன்னர்க் கீந்த
தெள்ளிய பாரி வள்ளல்
 செல்வியர் ஔவைக் கந்நாள்
உள்ளமோ டளித்த நீல
 ஒளியுறு சிறிய ஆடை
தள்ளுதல் முறையோ ! மக்காள் !
 தமிழினம் சிறக்கச் செய்வீர் !



# நெசவாளரின் நல் வாழ்வு . . . .

1935-ஆம் ஆண்டில், 43 பிரதம கைத்தறி நெசவாளர் சங்கங்களோடும், ஓராயிரம் தறிகளோடும் ஆரம்பித்த தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் இன்று சுமார் ஓராயிரம் பிரதம சங்கங்களையும், இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட தறிகளையும் கொண்டு இயங்கிவருகிறது. இந்தக் கூட்டுறவுத் துறையில் உள்ள நெசவாளர்கள் அனைவர்க்கும் நல்ல மலிவான மூலப் பொருள்கள் கிடைப்பதற்கு வழி செய்வதும், உற்பத்தியில் கணிசமான ரகங்களை விற்க வகை செய்வதும் சங்கத்தின் முக்கிய பொறுப்புக்களாகும். நாடு முழுவதும் உள்ள சுமார் 350 விற்பனை நிலையங்கள் மூலம் பல திறப்பட்ட மக்களுக்கும் விதம் விதமான துணிகளை விற்பனை செய்கிறது. சங்கத்துக்குச் சொந்தமான சாயச்சாலைகள், கூட்டுநெசவுத் தொழிற்சாலைகள், நூலும் துணியும் பதனிடும் தொழிற்சாலை இவை மூலமாகப் பற்பல வசதிகளைத் தமிழகம் முழுவதும் உள்ள நெசவாளர் சங்கங்களுக்கு இச்சங்கம் செய்து தருகிறது. இந்தச் சங்கத்தின் மொத்த விற்பனை கடந்த ஐந்து ஆண்டுகளில் இரட்டிப்பாக இருக்கிறது. 1970-ல் மொத்த விற்பனை ஆறுகோடியை எட்டியுள்ளது. 1971-ல் எட்டுக் கோடியை எட்டுமென எதிர் பார்க்கப்படுகிறது. 1969-ல் $4\frac{1}{2}$ கோடியாக இருந்து 1970-ல் 6 கோடியாகியது, அதாவது சுமார் $1\frac{1}{2}$ கோடி விற்பனை உயர்வுற்றது ஒரு சாதனையாகும். நிர்வாகம், விற்பனை, கணக்குகள் ஆகிய எல்லாத்துறைகளிலும் மற்ற தலை சிறந்த கைத்தறி நிறுவனங்களைப் போலவே நவீன வேலை முறைகளை இன்றைய வியாபார அடிப்படையில் கடைப்பிடிக்கிறோம். இதன் பயனை மாநிலத்திலுள்ள எல்லா நெசவாளர்களும் பெறுவார்கள் எனலாம், கடந்த மூன்று, நான்காண்டுகளில் காசுக்கடன் நூறு லட்சத்திலிருந்து 175 லட்சத்திற்கு உயர்த்தப்பட்டு இருக்கிறது. இன்னும் 200 லட்சத்திற்கு இதை உயர்த்தவும், அதற்கு வேண்டிய அளவிற்கு தமிழக அரசிடம் பங்குத்தொகை பெறவும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்களின் நன்மைக்காகத் தமிழக அரசும், மாநில தலைமைச்சங்கமும் எவ்வளவு தான் உதவி செய்தாலும், நெசவாளர்களுக்கு நல்வாழ்வளிக்கும் பொறுப்பு, பொது மக்களின் கையிலிருக்கிறது.

நவீன நாகரிகத்துக்கேற்றவாறு மக்கள் விரும்பும் ரகங்களை நெசவாளர்கள் உற்பத்தி செய்து தரத் தயாராக இருக்கின்றார்கள் என்பதற்கு கைத்தறிப் பொருட்காட்சியே சான்று.

**ஆர். கிருபாகரன்**

# கைத்தறிப் பெருமை

இந்தியாவில் உள்ள சுமார் 25 இலட்சம் கைத்தறிகளில், தமிழகத்தில் மட்டும் 5½ இலட்சம் கைத்தறிகள் உள்ளன. சுமார் 1·87 இலட்சம் கைத்தறிகள் கூட்டுறவுத் துறையில் உள்ளன. சுமார் 25 இலட்சம் மக்கள் இத்தொழிலே நம்பி வாழ்கின்றனர்.

தமிழகத்தில் மொத்தம் சுமார் 48 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணி உற்பத்தியாகிறது. இதில் கூட்டுறவுத் துறையில் மட்டும் ரூ. 10 கோடி மதிப்புள்ள துணி உற்பத்தியாகிறது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழக அரசு ரூ. 10·60 கோடி கைத்தறி அபிவிருத்திக்காக ஒதுக்கியுள்ளது. இதில் 1970-71-ஆம் ஆண்டில் 197·06 இலட்ச ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. வருகின்ற 1971-72-ஆம் ஆண்டில் 254·34 இலட்ச ரூபாய் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 903 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 1·87 இலட்சம் தறிகள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களுக்குத் தேவையான நடைமுறை மூலதனத்தை ரிசர்வ் பாங்கு, கூட்டுறவு வங்கிகள் மூலம் 1½ சத விகிதம் குறைந்த வட்டியில் அளித்து வருகிறது. தமிழக அரசு 5 கோடி ரூபாய் அளவிற்கு உத்திரவாதம் அளித்துள்ளது.

1967-68 முதல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைப் பலப்படுத்த அரசு நேரடியாகப்பங்குகள் எடுத்துக்கொள்ளும் திட்டம் கொண்டுவரப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை ரூ. 26 இலட்சம் அரசால் சங்கங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

1970 பிப்ரவரி முதல் நெசவாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்று அமுலாக்கப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் புதிய ரகங்களையும், புதிய முறைகளையும் புகுத்தி ஓர் ஆண்டில் ஒரு பயிற்சி நிலையத்தில் 180 நெசவாளர்களுக்குப் பயிற்சியளிக்கும் முறையில் 12 பயிற்சி நிலையங்கள் மாவட்டத்திற்கு ஒன்றாகச் செயல்பட்டு வருகின்றன. இப் பயிற்சித் திட்டத்தில் அரசுக்கு ஆண்டு ஒன்றிற்கு ரூ. 8 இலட்சம் செலவாகும்.

கைத்தறித் துணித் தேக்கத்தைத் தவிர்க்கவும், விற்பனையைப் பெருக்கவும், ஊக்கமளிக்கக் கைத்தறித் துணி சில்லறை விற்பனையில் ரூபாய்க்கு 5 பை வீதம் தள்ளுபடியும் மொத்த விற்பனைக்கு ரூபாய்க்கு 3 பை வீதமும் ஆண்டுதோறும் தள்ளுபடி கொடுப்பதற்கு அரசு மானியம் அளித்து வருகிறது. மேலும் தீபாவளி, கிறித்துமஸ், பொங்கல், கைத்தறி வார விழா ஆகிய காலங்களில் ரூபாய்க்கு 10 பை வீதம் விசேட தள்ளுபடி மானியம் கொடுக்கப்படுகிறது.

1970-71-ம் ஆண்டு இத்திட்டத்தின்கீழ் ரூ. 110 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. அறுபத்தெட்டு நாட்களுக்கு விசேட தள்ளுபடி மானியம் வழங்கப்பட்டுள்ளது. 1971-72-ஆம்ஆண்டிலும் ரூ. 110 இலட்சம் இத்திட்டத்தின் கீழ் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கைத்தறித் துணி விற்பனையை ஊக்குவிக்க விளம்பரத்திற்காகவும், பிரச்சாரத்திற்காகவும், மானியம் வழங்கப்படுகிறது. 1970-71-ஆம் ஆண்டில் ரூ. 5·39 இலட்சம் இத்திட்டத்தின் கீழ் செலவிடப்பட்டது.

சொந்தத் தறி இல்லாத நெசவாளர்களை ஊக்குவிக்கத் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்குக் கருவிகள் வாங்குவதற்கும், பணிக்கூடங்கள் அமைக்கவும் நீண்டகாலக் கடன்களும், பணியாட்களுக்கும், வாடகைக்கும், மானியங்களும் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது தமிழ்நாட்டில் 22 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. 1970-71-ஆம் ஆண்டில் 1·80 இலட்சம் ரூபாய் இத்திட்டத்தின் கீழ் செலவிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள 20,000 பட்டுத் தறிகளில் 3,500 தறிகள் 11 பட்டு கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் இயங்கிவருகின்றன. இச் சங்கங்களில் அங்கத்தினர்களுக்குப் பங்குத் தொகை கடனும், நவீன கருவிகள் வாங்க மானியமும் அளிக்கப்பட்டு வருகிறது. 1970-71-ஆம் ஆண்டில் ரூ. 0·86 இலட்சம் இத் திட்டத்திற்காகச் செலவிடப்பட்டுள்ளது.

தலைமை நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் அரசு இதுவரை ரூ. 22·50 இலட்சங்களுக்குப் பங்கு எடுத்துள்ளது. மேலும், நூல், இரசாயனப் பொருட்கள் வாங்கவும், துணித் தேக்கக்காலத்தில் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து துணி கொள்முதல் செய்யவும் அவ்வப்போது அரசு கடனுதவி அளித்து வருகிறது. இதனைத் தவிர நடைமுறை மூலதனத்திற்காக ரிசர்வ் வங்கியிலிருந்து ரூ. 200 இலட்சம் காசு கடனாக இச் சங்கம் பெற்றுள்ளது.

நெசவாளர்களின் சமூகப், பொருளாதார நிலைகளை மேம்படுத்த அரசு சில சிறப்பான திட்டங்களை அமுல்படுத்தி வருகிறது. இத் திட்டத்தின் கீழ் நெசவாளர்களுக்குத் தொழில்கூடம் இணைந்த வசதியான வீடுகளைக் கட்டிக் கொடுத்துள்ளது. இதற்கு அரசு ஒரு வீடு ஒன்றிற்கு ரூ. 2,000 கடனாகவும், ரூ. 1,250 மானியமாகவும்



இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு!
சிறு சேமிப்பு
நாட்டுக்கும் வீட்டுக்கும்
நலந்தரும் திட்டம்
காற்றுள்ளபோதே தூற்றவேண்டும்
காசுள்ளபோதே சேர்க்கவேண்டும் அல்லவா!
இன்றே உங்கள் அருகிலுள்ள அஞ்சலகத்துடன் தொடர்பு கொள்க.
இயக்குநர்: சிறுசேமிப்பு நிறுவனம்
சென்னை-9.
முத்து

கொடுத்துதவியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ. 127·65 இலட்சம் செலவிட்டு 2,683 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. நான்காவது திட்டக் காலத்தில் 500 வீடுகள் கட்டிக் கொடுக்க ரூ. 27 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நெசவாளர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கச் சம சிக்கன நிதித் திட்டம் ஒன்றை அரசு நடத்தி வருகிறது. இத்திட்டம் தமிழக அரசிற்கே உரித்தான ஒரு திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் நெசவாளர்கள் அவர்களது கூலியில் ரூ 1-க்கு 6 காசு வீதம் கொடுக்கிறார்கள். சம்பந்தப்பட்ட சங்கம் 2 காசும், அரசு 4 காசும் கொடுப்பதால் இந்தத் திட்டத்தில் நெசவாளர் வழங்கும் தொகைக்கு இணையாக மேலும் 6 காசு சேருகிறது. இத்திட்டம் 1962–63 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் 1970–71 ல் ரூ. 2·05 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 8,500 நெசவாளர்கள் ரூ. 42 இலட்சம் சேமித்துள்ளார்கள்.

கூட்டுறவுத் துறையிலும் பிற துறையிலும் பணிபுரியும் நெசவாளர்களை ஊக்குவிக்கவும், கவர்ச்சிகரமான துணிகளை உற்பத்தி செய்யவும், அரசு ஒவ்வொரு ஆண்டும், போட்டி நடத்தி வருகிறது. இதில் சிறந்த உற்பத்தியாளர்களுக்குப் பரிசு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் ரூ. 20,000 மானியமாகச் செலவழிக்கப்படுகிறது.

தமிழகத்திலுள்ள நெசவாளர்களுக்குத் தரமான நூல் நியாய விலைக்குக் கிடைக்கும் பொருட்டு மாவட்டத்திற்கு ஒன்று என்ற அடிப்படையில் (சென்னை, நீலகிரி மாவட்டம் நீங்கலாக) அரசு 12 கூட்டுறவு நூற்பு ஆலைகளை நிறுவியுள்ளது. இவற்றின் உற்பத்தி ஆண்டு ஒன்றிற்கு 66,000 பேல்களாகும். கைத் தறித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களை நூல் விலை உயர்வினால் பாதிக்கப்பட்டுள்ளதிலிருந்து விடுவிக்கும் பொருட்டு, மத்திய அரசு அண்மையில் பருத்தி நூல் சிறப்புச் சேமிப்புத் திட்டமொன்றை ஏற்படுத்தி 10,20,30, 40 எண்ணுள்ள நூல்களுக்கான அயல் நாட்டுப் பஞ்சினை இறக்குமதி செய்து, நூலை, கைத்தறி, விசைத்தறிகளுக்குப் பயன்படுத்தத் துணி, நூல் ஆணையாளர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் விநியோகிக்கிறது.

கூட்டுறவுத் துறைக்கு வெளியே உள்ள நெசவாளர்களும் தம்தொழிலைத்தொடர்ந்து நடத்த ''கைத்தறி நிதி கார்ப்பரேஷன்'' ஒன்றை நமது அரசு ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலதனமாகிய ரூ. 62·35 இலட்சத்தில் அரசின் பங்கு ரூ. 25 இலட்சமாகும். 31-12-1970 வரை முடிந்த ஓராண்டுக் காலத்தில் அதன் அங்கத்தினர்களுக்கு வழங்கப்பட்ட கடனளவு ரூ. 140·09 இலட்சமாகும்.

கைத்தறித் தொழிலுக்குத் தேவைப்படும் இரசாயனம் மற்றும் சாயமருந்துகள் தமிழ்நாட்டிலேயே உற்பத்தி செய்ய இரண்டு ஆலைகள் அமைக்க நமது அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள பட்டு, கைத்தறி நெசவாளர்கள் ஒவ்வொரு ஆண்டும் சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள ஜரிகையை சூரத்திலிருந்து பெற்று வருகின்றனர். தமிழகத்தில் நியாயமான விலையில் ஜரிகை கிடைக்க 25 இலட்சம் ரூபாய் செலவில் காஞ்சிபுரத்தில் ஜரிகை உற்பத்தித் தொழில் கூடமொன்றை நிறுவ அரசு அனுமதித்துள்ளது.

நெசவாளர் சங்கங்களின் வளர்ச்சிக்கு அதிகக் கவனம் செலுத்துவதற்காக 1969-ஆம் ஆண்டு முதல் இரண்டு, மூன்று மாவட்டங்களுக்கு ஒரு தனிக் கைத்தறித் துணைப் பதிவாளர் நியமிக்கப்பட்டு, கைத்தறித் துறை இயக்குநரின் நேரடி மேற்பார்வையில் பணியாற்றி வருகின்றனர்.


## கரூர் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கம் லிட். நெ. எம்.எம். 76.

கரூர், திருச்சி மாவட்டம். தொலைபேசி 168

கீழ்க்கண்ட தேவைகளுக்கு எங்களை அணுகுக

**உயர்தர படுக்கை விரிப்புகள், போர்வைகள்**

**தலையணை உறைகள், தயாரிப்புகள்**

எங்கள் தயாரிப்புகள் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் அகில இந்திய கைத்தறி மாளிகைகளிலும் கிடைக்கும்

G. பாலாஜி, B.SC.
கூட்டுறவு உப பதிவாளர்-செயலாளர்

மு. குழந்தைவேல்,
தலைவர்

# கைத்தறித் தொழிலுக்கு ஒரு புதிய ஊக்கம்

"தமிழகத்தில் அரசால் நிறுவப்பட்ட பன்னிரண்டு கூட்டுறவு நூற்பாலைகள் மூலம் குறைந்த விலையில் தரமான நூல்''

| | |
|---|---|
| மொத்தத் திட்டச் செலவு .. | ரூ. 10·00 கோடி |
| செலுத்தப்பட்ட மொத்த மூலதனம் .. | ரூ. 3·64 ,, |
| தமிழக அரசால் செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. 2·00 ,, |
| உற்பத்தியாகும் நூல் ரகங்கள் .. | 20-ம் நெம்பர் முதல் 100-ம் நெம்பர் வரை |
| ஆண்டு ஒன்றுக்கு உற்பத்தியாகும் நூலின் அளவு .. .. .. | 66,000 பேல்கள் |
| வேலைவாய்ப்பின் மூலம் பயன் பெறுவோர் எண்ணிக்கை .. .. .. | 5,300 |

தங்களின் தேவையான நூலுக்கு, கீழ்க்காணும் நூற்பாலைகளை அணுகுக:—

| | | Carded | Combed |
|---|---|---|---|
| 1. | தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலை, பேட்டை, திருநெல்வேலி. .. | 20s, 26s, 40s, & 60s 2/20s & 2/17s | 60s & 100s |
| 2. | சேலம் கூட்டுறவு நூற்பாலை, அம்மாப்பேட்டை, சேலம். .. | 60s & 80s & 2/60s | 60s & 80s |
| 3. | தஞ்சை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, மணல் மேடு, மாயவரம். | 60s | 80s & 100s |
| 4. | வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, அரியூர், வேலூர். .. | 40s, & 60s, 80s, 100s 2/60s & 2/80s | .. |
| 5. | தென் ஆற்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, சாரம், திண்டிவனம். | 60s & 80s | .. |
| 6. | காஞ்சீபுரம் காமாட்சியம்மன் கூட்டுறவு நூற்பாலை, காஞ்சீபுரம். | 40s & 60s | .. |
| 7. | திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலை, நாசரத், திருநெல்வேலி மாவட்டம். .. | 30s, 36s, 40s, 60s & 2/40s | .. |
| 8. | ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலை, ஸ்ரீவில்லிபுத்தூர். .. | 36s, 40s, 60s & 2/40s | 60s |
| 9. | மதுரை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, மேலூர், மதுரை மாவட்டம். .. | 20s, 30s, 40s 2/20s, & 2/30s | .. |
| 10. | கோவை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, தாராபுரம். .. | 20s, 40s 2/20s, & 2/40s | .. |
| 11. | திருச்சி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, மலைக் கோவிலூர், கரூர். .. | 20s, 30s 2/17s & 2/20s | .. |
| 12. | கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, ஆரல்வாய்மொழி. .. | 20s, 24s, 26s 40s 2/17s & 2/20s | .. |

கணக்கிடலங்காத ஊர்திகள் பரந்த சாலையின் ஓரத்தில் வரிசை வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. ஓடையில் சலசலவென்று ஒலியுடன் செல்லும் நீரினைப்போல் அலை அலையாக மக்கள் வெள்ளம் சாலையின் இருமருங்கிலும் தமக்குள் ஏதேதோ பேசிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் சென்று கொண்டிருக்கிறது. நறுமணங் கமழும் மலர்களைக் கொண்ட கடைகள் ஏராளமாக ஒருபக்கம் காட்சியளிக்கின்றன. அருகேதான் நாட்டின் அமைதியைக் காக்கும் காவல்நிலையம் ஒன்று தன்னுடைய பணிகளில் மூழ்கிக் கிடக்கிறது. முருகனின் தலங்களில் ஒன்றான கந்தகோட்டமும் சிறிது தூரத்தில் தான் ஏராளமான பக்தர்களைத் தன்னிடத்தே கொண்டிருக்கிறது. இப்படிப் பல்வேறு சிறப்புக்களையும் தன்னிடத்தே கொண்டு விளங்குகிறது, சென்னை நகரில் பிரபலமாக விளங்கும் ரட்டன் பஜார்.

ஊர்திகளைக் கடந்து சாலையின் மேற்பாகத்தை அடைந்தால் பெரிய கட்டடம் ஒன்று மயில் சின்னத்தை ஏந்திக்கொண்டு வருவோரை எல்லாம் எதிர்கொண்டழைக்கிறது. ஏராளமான ஆண்களும், பெண்களும் அவசர அவசரமாகக் கட்டடத்தினுள் நுழைகிறார்கள். அருகில் சென்ற பொழுதுதான் அது புகழ் பெற்ற ''கைத்தறி மாளிகை'' ( Handloom House ) என்று தெரியவருகிறது. ஏராளமான மக்களின் கூட்டம் கைத்தறித் துணிகள் வாங்குபவர்களின் எண்ணிக்கையையும், அவற்றின் மீதுசென்னை வாழ் மக்கள் கொண்டுள்ள ஆர்வத்தையும் நமக்குக் காட்டுகிறது. நிமிடக்கணக்கில் வெளியே நின்றுகொண்டு இவற்றையெல்லாம் வேடிக்கையாகப் பார்த்துக்கொண்டிருந்தோம். எங்களுக்குள் எழுந்த ஆசையின் காரணமாக உள்ளே நுழைய முடிவு செய்தோம்.

கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்ததும் குளிர் மிகு கோடைக்கானலுக்கோ, உதகைக்கோ வந்து விட்டது போன்ற உணர்வு ஏற்பட்டது. கோடையிலே இளைப்பாறிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர்ந்த மர நிழலைப்போல, அங்கே அமைக்கப்பட்டுள்ள குளிர் சாதன வசதி, உடலின் வெப்பத்தைத் தணித்துப் புத்துணர்ச்சியையும், புதுத்தெம்பையும் ஏற்படுத்தியது. திருவிழாவோ என்று வியக்கும் வண்ணம் ஆண், பெண், சிறுவர்கள் கூட்டம் அங்கே நிறைந்திருந்தது. ஒரு பெண்ணைச் சுற்றிப் பல பெண்கள் நின்றுகொண்டு ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்கள். அருகில் சென்று கவனித்தபொழுதுதான் அது பெண் அல்ல என்பது புரிய வந்தது. காட்சிக்காக வைக்கப்பட்ட பொம்மையே அது!




''அந்தப் புடவையின் நிறம் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது'' என்கிறார் ஓர் அம்மையார். சக தோழிகளுடன் வந்த இளம் பெண் ஒருத்தி, ''இந்தப் புடவையையே வாங்குவேன்'' என்று பிடிவாதம் செய்கிறார். புடவையின் ஒரு நுனியைப் பிடித்துக் கொண்டு தன்னையே மறந்து சிலை என நிற்கிறார் ஒரு நடுத்தர வயதுடைய மங்கை. விற்பனை நிலையத்தில் நுழைந்த பெண்கள் அனைவருமே முதலில் அந்தப் பொம்மையின் மீது தான் தங்களுடைய கவனத்தைச் செலுத்துகிறார்கள். வலது பக்கம் எங்களுடைய பார்வையைச் செலுத்தினோம். மக்கள் கூட்டம் ஒரு 'கவுண்டர்' அருகில் காணப்பட்டது. விசாரித்தபொழுது தாங்கள் வாங்கின துணிகளுக்குரிய பணத்தைச் செலுத்துவதற்காகவே அவர்கள் நிற்கிறார்கள் என்பது தெரிய வந்தது.

வேறொரு பகுதியை நோக்கி நடந்தோம். ஏராளமான பெண்கள் தங்களுக்குத் தேவையான புடவைகளைத் தேர்ந்தெடுப்பதில் ஈடுபட்டிருந்தார்கள். இவற்றையெல்லாம் வேடிக்கை பார்ப்பதுபோல் பார்த்து விட்டு மேலே உள்ள மேலாளரின் அலுவல் அறையை அடைந்தோம்; அங்கே மேலாளர் திரு ஏ. ஆர். மணி அவர்கள் இன்முகத்துடன் எங்களை வரவேற்று இருக்கையில் அமர்த்தினார். சில நிமிடங்கள் உரையாடிவிட்டு எங்களுக்குச்சில விற்பனைப் பிரிவுகளைக் காட்டினார். தனது விற்பனை நிலையத்தைப்பற்றிச் சில தகவல்களையும் கொடுத்தார்

இந்தக் கைத்தறித் துணி விற்பனை நிலையம் ( Handloom House ) ''அகில இந்திய மார்க்கெட்டிங் சொசைடி'' என்ற பெயருடன் மத்திய அரசின் உதவியோடு இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்தியாவிலேயே சென்னை, பம்பாய், கல்கத்தா, பெங்களூர், டெல்லி அகமதாபாத் போன்ற ஆறு இடங்களில்தான் இதனுடைய விற்பனை நிலையங்கள் உள்ளன. இதில், மாநில சங்கம், நெசவாளர் சங்கம், தனியார் துறை போன்ற மூன்று பிரிவுகள் உள்ளன. இதில்

உள்ள சில இயக்குநர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாகவும், சிலர் மத்திய அரசாலும் நியமிக்கப்படுகிறார்கள். தனியார் துறையினருக்கு இதில் நியமனம் கிடையாது. இந்நிலையங்களில் விற்பனை செய்யப்படும் துணிகள் கூட்டுறவுச் சங்கத்தினிடம்தான் வாங்க வேண்டும் என்ற ஒரு முறை காணப்படுகிறது. சங்கம் உள்ள இடங்களிலெல்லாம் இவர்களுக்கு அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். குறிப்பாக, தமிழ்நாட்டிலிருந்துதான் இங்கே விற்பனை செய்யப்படுகின்ற துணிகளில் 75 சதவிகிதம் வாங்கப்படுகிறது.



சென்னை நகரிலுள்ள இந்த விற்பனை நிலையம் 1956 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. முதலில் விற்பனை சுமாராக இருந்தாலும் தற்போது வருடத்திற்கு ரூபாய் 1½ கோடி அளவில் துணிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். ரூபாய் 3 கோடி அளவில் உள்நாட்டு விற்பனை உள்ளது. அகில இந்தியாவிலுள்ள ஆறு விற்பனை நிலையங்களிலும், சென்னையிலுள்ள இந்த விற்பனை நிலையமே ஏற்றுமதி செய்வதில் முதல் இடத்தைப் பெற்றுப் பரிசும் அடைந்துள்ளது.

மற்றைய விற்பனை நிலையங்கள் போலன்றி, இதில் தினசரி ரூ. 25 ஆயிரம் முதல் ரூ. 30 ஆயிரம் வரை துணிகள் விற்பனையாகின்றன. தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகை நாட்களில் குறைந்த அளவு ஒரு லட்சம் ரூபாய் வரை துணிகள் விற்பனையாகின்றன. போன பொங்கலன்று மட்டும் ரூ. 1,32,000 வரை துணிகள் விற்பனையாகி உள்ளன. சராசரியாக வருடத்திற்கு ரூபாய் 80 இலட்சம் வரை துணிகள் விற்பனையாகின்றன. ''அடுத்த ஆண்டில் மட்டும் விற்பனையை ரூ. 1 கோடி வரை கொண்டுவந்துவிடுவோம்'' என்று நம்பிக்கையுடன் கூறுகிறார் இதன் மேலாளர்.

காலத்திற்கேற்றவாறு பெண்களுக்கு வேண்டிய ஆடைகள் அனைத்தும் இங்கே கிடைக்கின்றன. எல்லா வகுப்பினர்களும் தங்களுக்குத் தேவையான ஆடைகளை எடுத்துக் கொள்ளத்தக்க வகையில் விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. ஏழை, எளிய மக்களின் வசதிக்கேற்பப் பருத்தி நூல் புடவை ரூபாய் 7-க்குக் கிடைக்கிறது. பட்டு நூல் புடவைகள் ரூபாய் 45 முதல் 50 வரை கிடைக்கிறது. நடுத்தர வகுப்பினர்கள் அதிகமாக வருவதாக மேலாளர் கூறுகிறார். வசதி படைத்தவர்கள் அதிக விலைக்குப் புடவைகள் வாங்க நினைத்தால் பருத்தி நூலில் ரூ. 225 வரையிலும், பட்டுநூலில் ரூபாய் 900 முதல் ரூபாய் 1,000 வரையிலும் வாங்கிக்கொள்ளலாம். இதே போன்று ஆண்களுக்கு வேண்டிய குறைந்த விலை ஆடைகளும், அதிக விலை ஆடைகளும் கிடைக்கின்றன. ஆண்களும் பெண்களும் சம அளவில் வருகிறார்கள்.



பார்ப்பவர்கள் மனத்தை ஈர்க்கும் விதத்தில் பல்வேறு வண்ணங்களில் பலப்பல ரகங்களைக் கொண்ட படுக்கை விரிப்புகள் அடுக்கடுக்காக வைக்கப்பட்டுள்ளன. வாங்க விரும்பாத ஒருவரையும் வாங்கத் தூண்டும் தரம் கொண்டவைகளாகக் காட்சியளிக்கின்றன.

வெளிநாட்டவர்களை இந்த விற்பனை நிலையம் மிகவும் கவருகிறது. இயந்திரத்தால் நெய்யப்பட்ட துணிகளையே வாங்கிக் கொண்டிருந்தவர்கள் கைத்தறி ஆடைகளைக் கண்டவுடன் தங்களையே மறந்து

நிற்கின்ற நிலையினை அன்றாடம் காண்கிறோம். விற்பனை நிலையத்தில் குளிர்சாதன வசதி செய்யப்பட்ட பின்னர் வெளிநாட்டவரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. வெளிநாட்டுப் பெண்களுக்கேற்ற துணிகள் 'ரெடிமேட்'டிலும் கிடைக்கின்றன. துணியாகவும் பெற்றுக்கொள்ளலாம். ஆண்களுக்குத் தேவையான புஸ்கோட், டை போன்றவைகள் ரெடிமேட்டில் விற்பனையாகின்றன. வெளிநாட்டவரின் தேவையைப் பூர்த்தி செய்வதற்குப் பரிசுப் பார்சல் வசதியும் (Gift parcel Service) செய்துதரப்பட்டுள்ளது. குளிர் சாதன வசதி செய்யப்பட்ட பின்னர்தான் காசித் திருமணப் புடவைகள் ஏராளமாக விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. கிடைப்பதற்கரிய மணிப்பூர், வங்காளப் புடவைகள், கேரளா சரிகைப் புடவைகள், காஷ்மீர் கம்பளிச் சால்வைகள் இந்த நிறுவனத்தில் தான் கிடைக்கின்றன. ஐதராபாத் நூலில் தறியில் நெய்யும் பொழுது அந்தத் துணிகளுக்குத் தேவையான டிசைன்கள் தயாராகிவிடுகின்றன. இந்த முறை இந்த நிறுவனங்களில் மட்டுமே உள்ளது.

குறிப்பாக இந்த விற்பனை நிலையத்தில் கல்லூரி மாணவிகள், அலுவலகங்களில் வேலை பார்ப்பவர்கள் அதிக அளவில் வருகிறார்கள். அவர்களுக்குத் தற்பொழுது கைத்தறித் துணிகளின் மீது அதிக நாட்டம் ஏற்பட்டுள்ளது என்பதை அவர்களது வருகையிலிருந்தே நாம் அறிந்து கொள்ளலாம். "இங்கே உள்ள துணிகளை நம்பிக்கையோடும் நல்ல விலையிலும், ஏமாற்றமின்றித் திருப்தியோடு வாங்கிச் செல்லலாம்" என்று கல்லூரி மாணவி ஒருவர் கூறினார்.

இங்கே வேலை பார்ப்பவர்கள் எல்லாரும் சுறுசுறுப்புடன்—சலிப்புக் கொள்ளாமல்—வாடிக்கைக்காரர்களை இன்முகம் கொண்டு வரவேற்று, அவர்களுக்கு வேண்டிய பொருட்களைச் சீரிய முறையில் தந்து தங்களுக்கென ஓர் இடத்தைப் பிடித்துக் கொள்கிறார்கள். சுமார் 75 பேர் வேலை செய்கிறார்கள். ஆண்களும், பெண்களும் சமமாக இருக்கிறார்கள். விற்பனை நிலையத்தில் எல்லாருடைய கவனத்தையும் ஈர்ப்பவர் விற்பனை மேற்பார்வையாளராகப் (Sales Superviser) பணியாற்றும் குமாரி சாவித்திரி ஆவார். விற்பனை நிலையத்தை நாம் ஒரு தடவை சுற்றிப் பார்த்தாலே போதும், அந்த அம்மையாரின் சுறுசுறுப்பைக் கண்டுகொள்ளலாம்.

"தமிழ்நாடு அரசின் சீரிய கொள்கையின்படி கைத்தறித் துணிகளுக்கு ஏற்றம் தரவேண்டும், நெசவாளர்களை வாழ்விக்க கைத்தறித் துணிகளை அதிக அளவில் விற்பனை செய்ய வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் இந்நிறுவனம் இதை ஓர் அழகிய காட்சி அரங்கமாக ஆக்கியுள்ளது. இந்தியாவிலேயே உள்ள எல்லாத் துணிக்காட்சி அரங்கைவிட (Textile Show Room) இதுதான் மிகப் பெரியது; அழகானதும் கூட" என்று பெருமிதத்தோடும், நம்பிக்கையோடும் கூறுகிறார் இதன் மேலாளர். மேலாளரின் திறமையான நிர்வாகத்தாலும் ஊழியர்களின் முழு ஒத்துழைப்பாலும் இது ஒரு சிறந்த நிறுவனமாகவும், சிறந்த விற்பனை நிலையமாகவும் மாறியுள்ளது குறிப்பிடத்தக்கது.



பெண்ணல்ல—பதுமை!

## வளரும் கைத்தறி

1930-ம் ஆண்டில் 1000 தறிகளுடன் துவக்கப்பட்டது, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச்சங்கம். இன்று தமிழகம் முழுவதும் 2 லட்சம் தறிகள் அதன் நேரடி மேற்பார்வையில் உள்ளது,

கோ-ஆப்-டெக்ஸ் என்றால் குறைந்த விலையில் நெடு நாள் உழைக்கத் தரமான துணிகளைக் குறிப்பிடும் பெயராக விளங்குகிறது.

கைத்தறித் துணிகளில் ஒவ்வொரு வகைக்கும் ஒவ்வொரு ஊர் பெயர் போனது.

சேலைக்குப் பெயர் பெற்றது, காஞ்சிபுரம், ஆரணி, தர்மாவரம், சின்னாளபட்டி, கும்பகோணம், சேலம் ஆகிய ஊர்கள்.

வேட்டிக்கு உறையூர், கோவை, ராசிபுரம், அரிசிப்பாளையம் முதலியன; போர்வைகளுக்கு, சென்னிமலை, திங்களூர், மதுரை முதலியவை; துண்டுகளுக்கு ஈரோடு, மதுரை திங்களூர், பாண்டிச்சேரி ஆகியவை.




சங்ககாலம் தொட்டுத் தற்காலம் வரையும், இனி வருங்காலத்தையும் இணைத்துப் பார்த்தால் நமது நாட்டின் கைத்தறி நெசவின் வளர்ச்சி வாழையடி வாழையென வளர்ந்தோங்கி வந்துள்ளது. அதன் வண்ணங்கள், திறன்கள், எழில்கள்— எந்த நூற்றுண்டிற்கும் ஏற்ற வகையில் மாற்றம் அளிக்கக் கூடியதாகச் செழித்துள்ளன.

அறிவியல் வளர்ச்சியில் மேலோங்கிச் சந்திரமண்டலம் செல்லும் அமெரிக்கர் கூடக் கைத்தறி ஆடைகளை விரும்பி அணிகின்றனர். நீர் ஊற்றிலிருந்து நீரை இறைக்க இறைக்க-எடுக்க எடுக்க எவ்வாறு மேலும் மேலும் ஊற்றுக்கள் மீக்கெழுந்து வருகின்றனவோ அதுபோல, மாறிவரும் நாகரிகத்திற்கேற்பப் புத்தம் புது நீர் ஊற்றுக்களாகிய கைத்தறி ஆடைகள் உயர்வுற்று வருகின்றன. எந்தவித மாறிவரும் சூழ்நிலையிலும், எந்த விதச் சக்தியாலும், பொங்கி வரும் புத்தூற்றுக்கள் தடையின்றிப் புது வெள்ளத்தையும் தன்னேடு உள்ளடக்கிக் கொண்டு சலிப்பில்லாமல் ஓடி உழைத்துக் கொண்டே இருக்கும். இது வரலாற்று உண்மை.

இத்தகைய மாற்றங்களுக்கிடையில் எதிர்த்து வந்த இன்னல்களை எல்லாம் இன்பங்களாக மாற்றி விடா முயற்சி, அறிவிலே விடுதலை, கடவுட் பற்று ஆகிய முப்பெரும் ஆயுதங்களால் போராடி, சங்கு முகமது அபூபக்கர் கைத்தறிக் கம்பெனியார் ஒரு வற்றுத ஊற்றுநீர் போல், பரம்பரை பரம்பரையாகச் சிறப்புறுகின்றனர். கைத்தறி உலகில் தனிப் பெருமையும் அருமையும் வாய்ந்த பல புதுமைகளைப் புகுத்தி வெற்றி பெறுகின்றனர். தொடக்கத்திலேயே கடும் போட்டிகளுக்கிடையே, இலங்கை, பர்மா முதலிய நாடுகளில் வெற்றிக் கொடி நாட்டியவர்கள்.

கைத்தறி ஆடைக்கென்றே புது வகையான கட்டங்கள்— இளைஞர் நெஞ்சை இழுக்கும் ஈடில்லாச் சட்டைத் துணிகள்—கண்ணைக் கவரும் வண்ணக் கைக்குட்டைகள்—பெண்மணிகள் விரும்பி வாங்கும் அழகு அழகு டிசைன்கள்—இன்னேரன்ன புதுமைகளை உருவாக்குவதில் தலைசிறந்தவர்கள் "சங்கு" நிறுவனத்தார்.

முன்பொருகால் கைத்தறித் துணிகளின் விற்பனையில் தேக்க நிலை ஏற்பட்ட காலத்தில், சங்கு நிறுவனத்தை உண்டாக்கி உயர்த்திய செம்மல் சங்கு அபூபக்கர் அவர்கள், நமது மேலவைத் தலைவர் திரு. சி.பி.சி. அவர்களோடு சேர்ந்து, தலையில் துணிகளைச் சுமந்து மதுரைத் தெருக்களில் விற்பனை செய்து நெசவாளர்களின் துயரைப் போக்கினர். இந் நிகழ்ச்சி அவர்கள் தொண்டுள்ளத் திற்கோர் சான்று!

மிகமிகச் சாதாரணக் குடும்பத்தில் தோன்றிய சனப் சங்கு முகமது அபூபக்கர் அவர்கள் உள்ள உறுதியோடு உழைத்து உலகம் புகழும் ஒரே கைத்தறி நிறுவனமாகச் "சங்கு" நிறுவனத்தை வளர்த்தார். இவரது காலத்திலேயே இவருடைய மூத்த புதல்வர் சனப் சங்கு அகமது மன்சூர் அவர்கள் தயாரிப்பு, விற்பனை ஆகிய துறைகளில் விற்பன்னராக இருந்தார். குடும்பத்தில் மூத்தவர் இவரே ! நிறுவனத்தில் பொறுப்பு வாய்ந்தவர் இன்று சங்கு மன்சூர் அவர்களே ! அடக்கமும் உழைப்பும், சகிப்புத் தன்மையும், பெருந்தன்மையும், எல்லோரையும் கொண்டு கூட்டிச் செல்லும் வாய்மையும் தந்தையைப் போலவே வாய்க்கப்பெற்றவர் மன்சூர்! அவருக்கும் பின் சகோதரர் சங்கு செய்யது இபுராகிம் அவர்கள். இவர் எம்.ஏ., பி. எஸ்.சி. படித்த பட்டதாரி. சிறந்த பொருளாதார அறிஞர். ஒவ்வொரு கணமும் நிறுவனத்தின் பொருளாதாரச் சூழலைக் கண்காணிப்பதில் சிறந்த பேராற்றல் கொண்டவர். மூன்றுவது சகோதரர் சனப் சங்கு செய்யது அப்துல் காதர் அவர்கள். இவர் சிறந்த நுண்மாண் நுழைபுலம் வாய்ந்தவர். கைத்தறி ஆடைகளுக்கே முக்கிய உயிர் நாடியாக உள்ள வண்ணக் கலவைகளைச் சிறப்பாகத் தேர்ந்தெடுப்பதில் தனித்தகுதி வாய்ந்த வல்லுநர். இவர்கள் மூவரும் ஒன்றுக இயைந்து ஒற்றுமையோடு செயலாற்றி நிறுவனத்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக மேம்பாடடையச்செய்து உயர்த்துகின்றனர் !

வணிகத்துறையில் மட்டும் இவர்கள் வல்லமை வாய்ந்தவர்கள் அல்லர். பொதுச் சேவையிலும் மிகுந்த ஈடுபாடுடையவர்கள். இவர்கள் சொந்த ஊரான அபிராமம் நத்தத்தில் சிறந்த தமிழ்த் தொண்டாற்றி வருகின்றனர். பட்டி மன்றங்கள்—கவி அரங்கங்கள்-கருத்தரங்குகள் அமைத்துப் புலவர்களைப் பாராட்டியுள்ளனர். இவர்கள் தந்தையார் சிறந்த தமிழறிவு மிக்கவர். அவர் காலத்தில் அபிராமம் முசுலிம் உயர்நிலைப் பள்ளியை ஏற்று நடத்தி ஒப்பற்ற சேவை செய்தார். இதனை விரிக்கிற் பெருகும்.

வாழ்க தமிழ் ! வளர்க சங்கு முகமது அபூபக்கர் நிறுவனம் !

வணக்கம்.

ADVT.



# குழந்தைப் பாதுகாப்பு

குழந்தையைத் தெய்வத்துக்கு இணையாக வைத்து நாம் கொண்டாடுகிறோம். யாழை விட இனிமையானது குழந்தைகளின் மழலைச்சொல் என்கிறார் உலகப் பொது நூல் தந்த திருவள்ளுவர். இத்தகைய சிறப்புப்பெற்ற நம் குழந்தைகளை அவர்களின் தெய்வீகத்தன்மை குறையாமல், பாதுகாத்துப்பேணுதல் பெற்றோர்கள் அதிலும் குறிப்பாகத் தாய்மார்களின் தலையாய கடமை. ஆகவே, குழந்தைகளை எவ்விதம் பேணிப் பாதுகாப்பது என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

நாள் தோறும் உலகம் முழுவதும் இரவு பகல் எந்த நேரமும் ஆயிரக்கணக்கான குழந்தைகள் பிறந்த வண்ணமிருக்கின்றன. பிறந்துவிட்ட குழந்தைள் அனைத்திற்கும் அளிக்க வேண்டிய வாய்ப்புக்கள் அனைத்தையும் உருவாக்கி அவர்களைத் தலைசிறந்த மக்களாக ஆக்க வேண்டியதுஉலக சமுதாயத்தின் கடமையெனில் அது மிகையாகாது. முன்னேறிய நாடுகள் குழந்தைப்பாதுகாப்புக்காக விஞ்ஞான ரீதியாக நன்கு வளர்ந்திருப்பதால், அந்நாட்டுக் குழந்தைகள் நன் முறையில் வளர்க்கப்பட்டுச் சமுதாயத்தில் சிறந்த குடிமக்களாக உருவாக்கப் படுகிறார்கள். ஆனால் நம் நாட்டின் நிலை மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. பழங்காலத்தில் நம் முன்னோர்கள் குழந்தைகளைப் பாதுகாத்த முறைகள் பற்றி எழுத்து மூலமாக எச்சான்று மில்லாததால், தற்காலச் சந்ததியினருக்கு அதுபற்றி ஒன்றும் தெரிய வாய்ப்பில்லை. மேலும் நமது தாய்மார்களில் பெரும்பாலோர் கல்வியறிவு பெறாதவர்கள். ஆகவே அவர்களுக்குக் குழந்தைப் பாதுகாப்பைப் பற்றித் தெரிந்து கொள்ள வாய்ப்பில்லாது போய் விடுகிறது. அதிலும் குறிப்பாக நடுத்தரக் குடும்பத்தினரிடமும், ஏழை எளிய மக்களிடமும் இது சர்வ சாதாரணம். குழந்தைப்பாதுகாப்பிற்கு முக்கிய அடிப்படையாகத் திகழ்வது சிறு குடும்ப அமைப்பு. நம் குடும்ப அமைப்புச் சிறிதாக யிருந்தால்தான், குழந்தைப்பாதுகாப்பில் நாம்முழுமையாகவெற்றி பெற முடியும். 'அளவோடுபெற்று வளமோடு வாழுங்கள்' என்று குடும்பநலத் திட்ட அலுவலர்களும், மற்றவர்களும் சொல்வதை முதலில் நம் தாய்மார்கள் சிந்திக்க வேண்டும். அவர்கள் சிந்தனை, செயல் ஆக்கம் பெற்றால் அதுவீட்டுக்கும் நல்லது, நாட்டுக்கும் நல்லது. ஒவ்வொரு தாய்க்கும் குழந்தை பிறந்த பின்னர் ஏற்படுகின்ற இழப்புச் சக்தியை ஈடுகட்டக் குறைந்தது ஒரு குழந்தைக்கும், மற்றொரு குழந்தைக்கும் மூன்றாண்டு இடைவெளியாவது தேவைப்படுகிறது. அடுத்தடுத்துக் குழந்தைகள் பிறப்பதால்குழந்தைகள் பிறப்பிலேயே மிக மெலிவாகவும், சக்திக் குறைவாகவும், போதிய வளர்ச்சியில்லாமலும் காணப்படுகின்றன. மேலும், கணவன்மார்கள் வேலைக்குப்போய் விடுவதால் வீட்டிலே இருக்கின்ற குழந்தைகளைப் பராமரிக்கும் பெரும் பொறுப்பையும் தாய்மார்கள் சுமக்க வேண்டியதிருக்கிறது. வீட்டு வேலைகளையும் பார்த்துக்கொண்டு எல்லாக் குழந்தைகளையும் பாதுகாத்துப் பராமரிப்பது மிகக் கடினமான செயல். குடும்பத்தின் அளவுசிறியதாக இருந்தால்தான், குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்து, மனக்குறைவின்றி வளர்க்க முடியும்.

**இல. பழனியப்பன் எம்.ஏ.**

குழந்தைகளின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, நல்ல காற்று, மனவளர்ச்சிக்கான சூழ்நிலைகள் முதலியவற்றில் பெற்றோர்கள் கவனம் செலுத்த வேண்டியது மிக முக்கியமான ஒன்றாகும்.

குழந்தைப்பாதுகாப்பு, தாயின் கருப்பையிலே குழந்தை இருக்கும் பொழுதே தொடங்கி விடுகிறது. ஆகவே கர்ப்பிணிகளைப் பாதுகாத்தால்தான் பிறக்கின்ற குழந்தைகள் முறையாக வளர்ச்சிபெறச் செய்ய முடியும். இதை முன் காலத்திலேயே நம் வீடுகளில் உள்ள மூத்த தாய்மார்கள் தெரிந்து வைத்திருந்ததால்தான் கருவிலே இருக்கும் குழந்தைகளுக்குத் தேவையான உணவு வகைகளைக் கர்ப்பிணிகளை அருந்தச்செய்து வந்தனர். கர்ப்பிணிகள் கவலையற்று மன நிறைவோடுஇருந்தால்தான்பிறக்கின்ற குழந்தைகள் நல்லவிதமாக இருக்கும் என்ற அடிப்படையிலேதான் கர்ப்பிணிகள் விரும்பும் உணவுப் பொருட்களைக் கொடுக்கின்றார்கள்.

தாய்மைப் பேற்றுக் காலத்திலும் ( Pregnancy ) குழந்தைகள் தாய்ப்பால் அருந்தும் காலத்திலும் (Lactation Period) தாய்மார்கள் உட்கொள்ளும் உணவைப் பொறுத்துத்தான் குழந்தைகளின் வளர்ச்சி அமைகிறது. குழந்தைகளின் வயதையும் (Age) எடையையும் (Weight) மனத்தில் கொண்டு அதற்கு ஏற்ப உணவின் அளவை அமைத்துக் கொள்ள வேண்டும். உணவின் அளவோடு ஊட்டச் சத்தும் ( Nutritional value )மிகவும் அவசியம். நாம் கொடுக்கும் உணவில் புரோட்டின் என்ற புரதச்சத்து, கொழுப்புச் சத்து, கார்போ ஹைட்ரேட் சத்து, வைட்டமின் சத்து, இரும்புச் சத்து ஆகியவை அந்தந்த வயதிற்கு ஏற்ற வகையில் அமைதல் வேண்டும். பால், முட்டை, பருப்புவகைகள், மீன், நெய், கிழங்கு வகைகள், அரிசி வகைகள், எண்ணெய் வித்துக்கள், காய்கறிகள் பழவகைகள், நிலக்கடலைகீரை வகைகள், மாமிசம் ஆகியவற்றில் மேற்கண்ட சத்துக்கள் உள்ளன. இவைகளைத் தேவையானஅளவில் கொடுத்தால் குழந்தைகளுக்கு முறையான வளர்ச்சி (Normal Development) ஏற்பட ஏதுவாகும்.

தாய்ப்பால் கொடுப்பதைப் பற்றி நம் தாய்மார்களிடம் தற்காலத்தில் பலதவறான கருத்துக்கள் நிலவுகின்றன. தாய்ப்பால்

கொடுத்தால் இளமைகுன்றிவிடும் என்று நினைப்பதைப் போல் தவறுன எண்ணம் வேறு ஒன்று மில்லை. தாய்ப்பால் எத்தனை முறை கொடுக்கவேண்டும் என் பதேபெரும்பாலோருக்குத் தெரிவ தில்லை. குழந்தைகளின் வயதிற்கு ஏற்பத் தேவைப்படும் தாய்ப் பாலின் அளவைத் தெரிந்து கொண்டு அதற்கு ஏற்பக் கொடுப் பது அவசியம். போதுமான அளவு தாய்ப்பால் இல்லாதபோது, புட்டிப் பால் கொடுக்கலாம். அதையும் சுத்தமாகக் கொடுக்கவேண்டும். குறிப்பிட்ட அளவுக்குமேல் பால் குடிக்கும் குழந்தைகளுக்கு அசீ ரணம், மந்தம் முதலியன ஏற் படுகின்றன. ஊட்டச்சத்துக் குறைவான உணவை உட்கொள் ளும் நமது ஏழைக் குடும்பப் பெண்களால் குழந்தைகளுக்குத் தேவையான அளவு பால் கொடுக்க முடியவில்லை. தாய்ப் பால் கொடுப்பதால் தொத்து நோய்கள் ஏற்படாது. ஆகவே தாய்ப்பால் மிகவும் அவசியம்.

குழந்தைகளைத் தொத்துநோய் களிலிருந்து பாதுகாப்பது மிகவும் அவசியமானவொன்று. டைபாயிடு சயரோகம், அம்மை, கக்குவான் முதலியன கடுமையான தொத்து நோய்களாகும். தற்கால மருத்துவத்துறை முன்னேற்றத் தால் இவைகளெல்லாம் ஏற் படும் முன்னரே தடுத்துக்கொள்ள வழிவகையிருக்கிறது.

கக்குவான், இருமல் முதலிய வற்றைத்தடுக்க மூன்று ஊசிகள் மாதம் ஓர் ஊசி வீதம் அரசாங்க மருத்துவ மனைகளிலும், குடும்ப நல நிலையங்களிலும் போடப்படு கின்றது. அதேபோல் பி. சி. ஜி. ஊசி, சயரோகத்தைத் தடுக்கவும் போடப்படுகிறது. குழந்தை பிறந்த கொஞ்ச நாட்களிலே இவைகளைப்போட்டுக் கொள்வது மிகவும் நல்லது.

நம் நாட்டில் உணவில் வைட்ட மின் ஏ சத்துக் குறைவினுல் லட்சக்கணக்கான குழந்தைகளுக் குக் கண்பார்வைக் குறைவு ஏற் படுகின்றது. பெரும்பாலான குழந்தைகளுக்கு மாலை வேளை களில் கண்களே தெரிவதில்லை. ஆகவே ஆறு மாதத்திற்கு ஒரு முறை வைட்டமின் ஏ சொட்டு மருந்து ஆறு வயது வரை கொடுத்து வந்தால் இக்குறைபாட்டினைத் தவிர்க்க லாம்.

குழந்தைகளுக்கு அம்மைப்பால் வைக்க வேண்டிய அவசியத்தை நம் பெற்றோர்கள் இன்னும் பூரணமாக உணரவில்லை. ஆகவே இதில் கவனம் செலுத்தவேண்டிய தும் மிக அவசியமான ஒன்ருகும்.

குழந்தைகளுக்கு ஏற்படும் சிறிய நோய்களுக்குக் கூட டாக் டர்களைக் கலந்து ஆலோசித்து ஆவன செய்வது நலம் பயக்கும். நமக்குத் தெரிந்த வைத்திய முறைகளைச் செய்து, குழந்தை களைச் சோதனைப் பொருட்களாக ஆக்கும் போக்கினைத் தவிர்க்க வேண்டும்.

குழந்தைப் பாதுகாப்பிற்கு மிக்க நிதானமும், பொறுமையும் வேண்டும். அதற்கு வேண்டிய மனப் பக்குவத்தை ஆண்டவன் நம் தாய்மார்களுக்கு அளித்துள் ளார். அதை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டி யது நம் தாய்மார்களின் தலை யாய கடமையாகும்.

குழந்தைகளுக்கு ஏற்படும் மற்ற வியாதிகளில் மிக முக்கிய மானது பேதி ( Diarrhoea ) யாகும். இரண்டு மாதக் குழந் தையிலிருந்து ஓராண்டுக் குழந்தை வரை இது சர்வ சாதா ரணமாக நம் நாட்டில் காணப் படுகிறது. பேதி ஆரம்பிக்கும் பொழுது இதைக் குணப்படுத்து வது எளிது. பேதி ஏற்பட முக்கியமான காரணம் கிருமி களே. ஆதலால் குழந்தைக்குக் கொடுக்கப்படும் பாலில் ஈ மொய்க்காமல் பாதுகாக்க வேண்டும். பால் புட்டியையும், இதர பாத்திரங்களையும் சுத்த மான வெந்நீரில் கழுவ வேண் டும். சில வேளைகளில் எளிதில் சீரணிக்க முடியாத காய்கறிகளி ஞலோ அல்லது சர்க்கரைச் சத்து அதிகம் இருப்பதாலோ பேதி ஏற்படலாம். காரணம் எதுவாகயிருந்தாலும் டாக்டர் களிடம் காண்பித்து அவர்களின் ஆலோசனைப்படி நடப்பதுதான் நல்லது.

குழந்தைகளுக்குச் சளி பிடிக்கா மல் பாதுகாப்பது மிகவும் கடின மான செயல். சளிப் பிடிக்காது பார்த்துக்கொள்வது மிகவும் அவசியமான ஒன்று. சளிப் பிடித்தலும் பெரியவர்களிட மிருந்து குழந்தைகளுக்குப் பர வும். சளிப்பிடித்த குழந்தை யைப் பள்ளிக்கு அனுப்பாமல் வைத்துக்கொள்ள வேண்டும்.

காதில் சீழ் வராமல் பாது காக்க வேண்டும். குழந்தைகளைக் குளிக்கச் செய்யும்பொழுது இரண்டு காதுகளிலும் தண் ணீர் புகாமல் பஞ்சு வைத்து அடைத்துவிட வேண்டும்.

கண்களில் சில குழந்தை களுக்குக் கோழை அடிக்கடி ஏற்படும். அது சமயம் கண்கள் சிவப்பாக மாறும். டாக்டரிடம் சோதனை செய்து மருந்து கொடுப் பது நல்லது.

கீரைப்பூச்சித் தொந்தர வினுல் நம் நாட்டில் பல குழந்தை கள் தொல்லைப்படுகின்றன. டாக்டரிடம் காண்பித்துப் பேதி மருந்து கொடுத்தால் இக்குறை பாட்டினைத் தவிர்க்கலாம்.

நகங்களைக் கடிப்பது பெரிய வர்களைப் பார்த்துக் குழந்தைகள் செய்கின்றன. அந்த வாய்ப்பைப் பெரியவர்களாகிய நாம் ஏற் படுத்திக் கொடுக்கக் கூடாது.

குழந்தைகளுக்கு விளையாட்டி லும், வேடிக்கையிலும் நாட்டம் உண்டு. இந்த உணர்வுகள் வளர வாய்ப்பளிக்க வேண்டும்.

குழந்தைகளுக்கு மருந்து கொடுக்கும்முறைகளைத்தாய்மார் கள் நன்கு தெரிந்து கொள்வது மிகவும் அவசியம்.

குழந்தைகளின் உடல் வளர்ச்சி, மன வளர்ச்சி ஆகியவற்றில் பள்ளிகளின் பங்கு மகத்தானது. விளையாட்டின் மூலம் படிப்பினை யையும், ஞாபக சக்தியையும் பிற ருடன் சேர்ந்து வாழ்தலையும், இன்ன பிற குண நலன்களையும் குழந்தைகள் அறிந்துகொள்வார் கள்.

ஆகவே, குழந்தைப் பாது காப்பு மிகப் பொறுப்பான மாபெரும் ஆக்கப் பணி. குழந் தைப் பாதுகாப்பில்தான் எதிர் காலத்தின் ஒளி விளக்கு, சுடர் விட்டுப் பிரகாசிக்க முடியும். அந்தப் பணி சிறக்க நாம் அனை வரும் பாடுபட வேண்டும்.




உடல் வளத்துக்கு உப்புக்களும் சுரப்பிகளும் எப்படியோ அது போல நாட்டின் வளத்துக்கு இரசாயனத் தொழில்கள் சிறப்பிடம் வகிக்கின்றன. தமிழ் நாட்டில் இரசாயனத் தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருட்கள் ஏராளமாக இருக்கின்றன. இரசாயனத் தொழில் வல்லுநர்கள், பொறியாளர்கள் இதர அலுவலர்களுக்கும் குறைவில்லை. இந்த வாய்ப்புகளைப்பயன் படுத்திச் சிறு தொழில்கள் வகையிலும் இரசாயனத் தொழில்களைத் தொடங்குவது பெரும் பயன் அளிக்கும்.

இரசாயனத் தொழில்களை, கன ரக இரசாயனத் தொழில்கள், மென்வகை இரசாயனத் தொழில்கள் என்று இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

கனரக இரசாயனத் தொழில்கள், பெருந் தொழில்கள் என்ற பிரிவில் வருகின்றன. சல்பியூரிக் ஆசிட், நைட்ரிக் ஆசிட், சோடா ஆஷ், காஸ்டிக் சோடா, இரசாயன உரங்கள் போன்ற அடிப்படை இரசாயனப் பொருட்களின் உற்பத்திக்கானவை இத் தொழில்கள். மென் வகை இரசாயனத் தொழில்களைக் கீழ்க் கண்டபடி பிரித்துக்கொள்ளலாம்

### ஏழ்வகைத் தொழில்கள்

1. ஆய்வுக் கூடங்கள், மருந்துகள் பகுப்பு, ஆய்வு முதலியவைகளுக்குத் தேவைப்படும் தூய இரசாயனங்கள் ;

2. நோய்த் தடுப்பு, நோய் சிகிச்சை ஆகியவைகளுக்குப்பயன்படும் இரசாயனங்கள் ;

3. இயற்கை இரசாயனங்கள் வகையில் பெட்ரோ கெமிகல்ஸ், இயற்கை அமிலங்கள் சாயப் பொருட்கள் முதலியவை ;

4. செயற்கை இரசாயனங்கள் வகையில் அலுமினியம் சல்பேட், பிளாஸ்டர் ஆப் பாரிஸ் முதலியவை ;

5. செய்முறை மூலமான பிளாஸ்டிக், பாலித்தீன், சாயங்கள், வார்னிஷ், வைக்கோல், கரும்புச் சக்கை ஆகியவைகளிலிருந்து காகித அட்டைகள் செய்தல் முதலியவை ;

6. விவசாயச் சார்புத்தொழில்கள் என்ற முறையில் இரசாயன உரக் கலவை, பூச்சி மருந்துகள், கால்நடை ஊட்டச் சத்துத்தீவனப் பொருட்கள், கரும்புச் சக்கை, தவிடு போன்றவைகளைப் பயன்படுத்தல், பழப்பதனம், பிண்ணாக்கிலிருந்து எண்ணெய் எடுத்தல், பூக்கள், புல் முதலியவைகளிலிருந்து எண்ணெய் எடுத்தல் முதலியவை ;

7. நானாவித இரசாயனத் தொழில்கள் வகையில் தீக்குச்சி, மத்தாப்பு, வர்ணங்கள், மை, மெழுகுவர்த்தி, பினாயில், காகித அட்டைகள் முதலியன செய்தல்.

### பொருள் வளம்

தமிழ் நாட்டில் கிடைக்கும் கச்சாப் பொருட்களைக் கொண்டு, மாநிலத்தில் கீழ்க்கண்ட தொழில்களைத் தொடங்க முடியும்.



பழங்கால ஆயுதங்களை மியூசியத்திலே நாம் பார்க்கிறோம். ஆனால் பார்வையிட்ட பின்னர் அவற்றை எடுத்துக் கொண்டு போர் புரியத் தொடங்குவதில்லை. அது போலத்தான் பழமைக் கருத்துக்களை நாம் படிக்கலாம். ஆனால் கையாளக்கூடாது.

மிகத் தூய்மையான சுண்ணாம்புக்கல் தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், சேலம் வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, முதலிய மாவட்டங்களில் கிடைக்கின்றது. இது தவிர கிளிஞ்சல் சுண்ணாம்பும் கிடைக்கிறது. கால்சியட் என்ற மிகத் தூய, 98 சதவிகிதம் தூய சுண்ணாம்பு வகை சங்கரி துர்க்கத்தில் மட்டுமின்றி, சிவகங்கை அருகே சுண்ணாம்பூர் போன்ற இடங்களிலும் கிடைக்கின்றது. சர்க்கரை, பிளீச்சிங் பவுடர் போன்றவை தயாரிப்புக்கான உயர்தர இரசாயனச் சுண்ணாம்பு போன்றவைகளையும் உற்பத்தி செய்துகொள்ள முடியும். மருந்துகள், வாசனைப் பொருட்கள், ஒப்பனைப் பொருட்கள் முதலியன தயாரிப்புக்கான, ''பிரிசிபிடேட் கால்சியம் கார்பனேட்" செய்வதற்கான தொழிலகமும் அமைக்கலாம். இவ் வகைப் பொருட்களைத் தயாரிக்க நாடு முழுதிலுமாகச் சேர்ந்து இரண்டு அல்லது மூன்று தொழிலகங்கள் தான் உள்ளன. இவ்வகைப் பொருள் பெரும்பாலும் இறக்குமதி செய்யப்பட்டு, தேவை சரிக்கட்டப்படும் நிலையே இருந்து வருகின்றது.

### கல் ஜிப்சம், கடல் ஜிப்சம்.

பிளாஸ்டர் ஆப் பாரிஸ், பீங்கான், செயற்கைப் பற்கள் சாதனங்கள் முதலியன, தயாரிப்பதற்குப் பயன்படுவது ஜிப்சம். இந்த வெள்ளைக் களிமண் கல் ஜிப்சம்

என்றும் கடல் ஜிப்சம் என்றும் இரு வகைப்படும். கல் ஜிப்சம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கிடைக்கின்றது. கடல் ஜிப்சம் திருநெல்வேலி மாவட்டத்தில் கிடைக்கின்றது. பிளாஸ்டர் ஆப் பாரிஸ் செய்வதற்காக இரண்டு தொழிலகங்கள் அண்மையில் நிறுவப்பட்டன. மேலும் ஒன்றிரண்டு தொழிலகங்களை ஏற்படுத்தலாம்.

### தவிட்டிலிருந்து எண்ணெய்

அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் இறக்கிப் பயனடைய முடியும் என்ற நிலை இருந்தும்கூட அந்தச் செல்வம் பயன்படுத்தப் படாமல் இருப்பது நாட்டுக்கு இழப்பேயாகும். தற்சமயம் தவிட்டிலிருந்து எண்ணெய் இறக்க 2 அல்லது 3 தொழிலகங்கள் தான் உள்ளன. இந்த எண்ணெய் இறக்குவதற்கான இயந்திரங்கள் நம் நாட்டிலேயே கிடைக்கின்றன. 5 டன் திறன் வாய்ந்த இயந்திரத்தின் விலை சுமார் ஒரு லட்சம் ரூபாய் ஆகும்.

நெல் வைக்கோலை, காகித அட்டைகள் செய்வதற்கு நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளலாம். தற்சமயம் தமிழ் நாட்டின் காகித அட்டைத் தேவைகள் பெரும்பாலும் இறக்குமதிமூலம் நிறைவு செய்யப்படுகின்றன. ஒரு நாளில் 24 மணி நேரத்தில் 3 டன் காகித அட்டை செய்வதற்குரிய திறனுடைய இயந்திரத்துக்குச் சுமார் 2 லட்சம் ரூபாய் விலை ஆகும். தங்கு தடையற்ற தண்ணீர் வசதி, பெருமளவில் வைக்கோல் இவை இரண்டும் தான் முக்கியம். திருச்சி, தஞ்சாவூர், தென் ஆர்க்காடு மாவட்டங்களில் இவ் வகைத் தொழிலகங்கள் ஒன்றிரண்டு ஏற்படுத்தலாம்.

### கூந்தல் கருப்புத் தைலம்

ரோஜா, மல்லிகை, மரிக்கொழுந்துமுதலியவைகளிலிருந்து வாசனைத் தைலங்கள் இறக்கும் தொழிலைத் தமிழ் நாடு இதுவரை நல்ல முறையில் பெருக்கிக் கொள்ளவில்லை. எனவே இவ் வகைத் தொழில்கள் தொடங்க நிறைய வாய்ப்புகள் உள்ளன.

தற்சமயம் நமது நாட்டிலிருந்து மூலிகைகள், பச்சிலைகள் முதலியன தூத்துக்குடி துறைமுகம் மூலம் ஏற்றுமதியாகின்றன. இவற்றை அப்படியே கச்சாப் பொருளாக ஏற்றுமதி செய்யாமல் தைலமாக இறக்கி ஏற்றுமதி செய்தால், அயல்நாட்டு நாணய வசதியை அதிக அளவில் சம்பாதிக்க முடியும். சான்றாகச் சொல்லுவது என்றால் நரைமயிர் கறுக்கும் தைலம் செய்வதற்குப் பயன்படும் ஹென்னா காய்ந்த இலைகள் பிரான்ஸ் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இலைகளை அனுப்புவதற்குப் பதிலாக எண்ணெய் இறக்கி அனுப்பினால் அதிகமான இலாபம் கிடைக்கும்.

இரசாயனத் தொழில்கள் தொடங்க விரும்புவோர், கிண்டியில் உள்ள சிறு தொழில் சர்விஸ் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு ஆலோசனைகள் பெறலாம். செய்முறை, இயந்திரங்கள் முதலியன குறித்தும் யோசனைகள் கூறுவார்கள். தொழில் நுட்பத் தொழில்களைத் தொடங்குவதென்றால் அதற்கு உதவ வங்கிகளும் தனி வசதிகள் செய்துள்ளன.


துவக்கம் 1905. தொலைபேசி எண்: 417

## நிக்கல்சன் கோ-ஆபரேடிவ் டவுன் பாங்கு லிமிடெட், எண்-8

தஞ்சாவூர் - 1

தலைவர்: திரு. கோ. இளங்கோவன், B. A. L. T., M. L. A.

பிக்சட் டிபாசிட் வட்டி விகிதங்கள்

| | | | |
|---|---|---|---|
| 3 மாதங்கள் | 5% | 4 வருடங்கள் | $8\frac{1}{4}$% |
| 6 மாதங்கள் | 6% | 5 வருடங்கள் | $8\frac{1}{2}$% |
| 1 வருடம் | 7% | 6 வருடங்கள் | $8\frac{3}{4}$% |
| 2 வருடங்கள் | $7\frac{1}{2}$% | 7 வருடங்கள் | 9% |
| 3 வருடங்கள் | 8% | | |

ரூ. 10,000-மும் அதற்கு மேற்பட்டுப் போடப்படும் தொகைகளுக்கும் மேற்கண்ட விகிதத்திற்கு மேல் $\frac{1}{2}$% வட்டி வழங்கப்படும்.

இரண்டு வருடங்களுக்கும் அதற்கு மேற்பட்ட காலத்திற்கும் ரூ. 5,000-மும் அதற்கு மேற்பட்ட தொகையையும் பிக்சட் டிபாசிட்டில் போடுபவர்கள் விரும்பினால் மாதம் ஒருமுறை வட்டி வழங்கப்படும்.

சேவிங்ஸ் டிபாசிட்டு (Daily Products) 5%

நிர்வாக சபையாரின் ஆணைப்படி

R. ராதாகிருஷ்ணன், B. Com., H. D. C

செயலாளர்

# காஞ்சியும் காவேரியும்

காஞ்சி கலைகளின் பிறப்பிடமாகவும், அறிவாலயங்களின் இருப்பிடமாகவும், புதுமைகள் மலரும் இடமாகவும் திகழ்ந்ததாக ''யுவான் சுவாங்'' என்ற சீன வரலாற்றுசிரியர் கூறியுள்ளார். அதிலிருந்து அன்று காஞ்சியின் புகழ் சீனா வரை பரவியிருந்தது என்பது தெளிவாகிறது.

அந்தக் காஞ்சியிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்தார்கள். அண்ணா அவர்களால் காஞ்சியின் புகழ் அகிலமெங்கும் பரவியது.

இத்தகைய பெருமை பெற்ற காஞ்சிக்கு மேலும் ஒரு மகுடம் சூட்ட அண்மையில் தமிழ் நாடு அரசு 'காஞ்சி' என்ற பெயரில் ஒரு புதிய உயர் விளைச்சல் நெல் ரகத்தை வெளியிட்டுள்ளது.

''வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவேரி'' என்று புகழ் பெற்ற காவேரி தமிழ் நாட்டின் பசிப்பிணி தீர்க்கும் அருமருந்தாக அன்றும் இருந்தது! இன்றும் இருக்கிறது! இனியும் இருக்கும்!

அந்தக் காவேரியாற்றின் கரையிலேதான் தமிழர் நாகரிகம் வளர்ந்தது. காவேரி ஆறு கடலோடு கலக்கும் இடத்தில்தான் தமிழர் நாகரிகத்தின் தொட்டிலாக விளங்கிய பூம்புகார் அமைந்திருந்தது.

அன்று வேலி ஆயிரம் கலம் விளைவதற்குக் காரணமாயிருந்த காவேரி, பரம்பரை பரம்பரையாக ஒரு போகமே சாகுபடி செய்யப்பட்டுவந்த நிலத்தில் இன்று இரு போகம் சாகுபடி செய்வதற்கும் மூல காரணமாகத் திகழ்கிறது.

காவேரி ஆறு அளித்த வீரமும், தீரமும் அன்று, கரிகால் சோழனை காவேரியாற்றுக்குக்கரையெடுக்க வைத்தது!

அதே காவேரி ஆறு அளித்த வீரமும் தீரமும் இன்று, நமது தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களை காவேரியாற்றைப் புதுப்பிக்கும் பெருமுயற்சியில் ஈடுபட வைத்துள்ளது.

இத்தகைய சிறப்புக்களைப்பெற்றுள்ள காவேரி அன்னையின் நினைவாக 'காவேரி' என்ற பெயரில் ஒரு புதிய உயர் விளைச்சல் நெல் ரகத்தை அண்மையில் தமிழ் நாடு அரசு வெளியிட்டுள்ளது.

'காஞ்சி', 'காவேரி' என்ற புதிய உயர் விளைச்சல் நெல் ரகங்கள் தமிழ் நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்கி வறுமையைப் போக்கவும், ஏழை எளிய உழவர்கள் வாழ்வை ஏற்றமுறச் செய்யவும், சமுதாயத்தில் உள்ள ஏற்றத் தாழ்வுகளை அகற்றவும், காஞ்சி, காவேரி ஆகியவைகளின் புகழ் தமிழக உழவர் பெருமக்களின் உள்ளங்களிலெல்லாம் நீங்காத நினைவாக நிலைத்திருக்கவும் வழிகோலும் என்பது திண்ணம்.

### 'காஞ்சி' நெல்லின் சிறப்பியல்புகள்

காஞ்சி என்ற புதிய உயர் விளைச்சல் நெல் ரகம், கோ-29 (குலை நோய் தாக்காத அறுபதாம் கோடை) என்ற தமிழ் நாட்டு உயர் விளைச்சல் நெல் ரகத்தையும், 'தைச்சுங் நேடிவ் 1-(டி.என். 1) என்ற வெளி நாட்டு உயர் விளைச்சல் நெல் ரகத்தையும் கரு இணைப்பு (Hybridisation) செய்து கோயம்புத்தூரில் உள்ள நெல் ஆராய்ச்சி நிலையத்தில் உருவாக்கப்பட்டதாகும். இதற்கு 'கோ-34' என்றும் பெயருள்ளது.

சாயாத தன்மை, அதிக உர மேற்றுக்கொண்டு அதற்கேற்ப நிறைந்த மகசூல் அளிக்கும் சக்தி, தரமான அரிசி, குறைந்த வயது ஆகியவை 'காஞ்சி' நெல்லின் சிறப்புக் குணங்களாகும். இதன் வயது 110 முதல் 115 நாட்களாகும்.

'காஞ்சி' நெல்ரகம் ஹெக்டேருக்கு 1,000 கிலோ (ஏக்கருக்கு 405 கிலோ) அதிக மகசூல் கொடுக்கும் தன்மையுடையது; காஞ்சிபுரத்தில் நடத்திய பரிசோதனையில் அதிக உர அளவில் ஹெக்டேருக்கு 7,250 கிலோ (ஏக்கருக்கு 2,935 கிலோ) மகசூலும், குறைந்த உர அளவில் ஹெக்டேருக்கு 6,420 கிலோ (ஏக்கருக்கு 2,599 கிலோ) மகசூலும் கொடுத்துள்ளது.

இந்த ரகத்தைச் செங்கற்பட்டு, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம்



16-5—6

முதலிய மாவட்டங்களிலும், 'கோ-29' நெல் ரகம் சாகுபடி செய்யப்படுகின்ற மற்ற எல்லா இடங்களிலும் 'கோ'-29க்குப் பதிலாகப் பயிரிடலாம்.

ஆடுதுறை-27, டி.கே.எம். 6, கருணை, கோ-29 ஆகிய ரகங்களை விடக் 'காஞ்சி' நெல் ரகம் அதிக மகசூல் அளிக்கும் ஆற்றல் வாய்ந்தது.

### 'காவேரி' நெல்லின் சிறப்பியல்புகள்

நயமான அரிசி கொடுக்கும் ரகம் என்ற பெயர்பெற்ற 'சன்ன சொர்ணவாரி' (டி.கே.எம். 6) என்ற தமிழ் நாட்டு ரகத்தையும், தைச்சுங் நேடிவ்-1 என்ற வெளி நாட்டு உயர் விளைச்சல் ரகத்தையும் கரு இணைப்புச் செய்து கோயம்புத்தூர் நெல் ஆராய்ச்சி நிலையத்தில் உருவாக்கப்பட்டதே 'காவேரி'.

'காவேரி' என்ற இந்த ரகத்திற்கு கோ-35 என்றும் பெயர் உண்டு. அதிக உர மிட்டாலும் 'காவேரி' ரகத்தின் பயிர் சாய்ந்து விடாமல் நிமிர்ந்து நிற்கும் தன்மையுடையது. அதிக உரம் இடுவதற்கேற்ப அதிகமாக மகசூல் அளிக்கும் ஆற்றல் வாய்ந்தது 'காவேரி'.

'காவேரி' நெல் ரகத்தின் அரிசி வெண்மையானது; தரம் மிகுந்தது. இதன் வயதும் 110 முதல் 115 நாட்களே.

பல்வேறு மண்வகைகளிலும், மண் வளங்களிலும், பருவங்களிலும் பயிர் செய்வதற்குக் 'காவேரி' மிகவும் ஏற்றது.

'டி.கே.எம். 6' என்ற நெல் ரகம், மற்றும் அதன் சார்புடைய ரகங்களுக்குப் பதிலாக, 'காவேரி' யைப் பயிரிட்டால் ஹெக்டேருக்கு 1,000 கிலோ (ஏக்கருக்கு 405 கிலோ) கூடுதல் மகசூல் பெறலாம்.

'காஞ்சி', 'கர்வேரி' ஆகிய இரு நெல் ரகங்களையும் பயிரிடக் கீழ்க்கண்ட ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை மேற்கொள்ளுமாறு, தமிழ் நாடு அரசின் வேளாண்மைத்துறை பரிந்துரைக்கிறது.

### ஒருமித்த செய்நேர்த்தி முறைகள்

**விதையளவு:—**

ஒரு ஏக்கர் நடவு செய்ய 15 கிலோ விதையை நாற்றுவிட வேண்டும்.

**விதைக்கும் பருவம்:—**

சொர்ணவாரி : ஏப்ரல்-மே முதல் ஜூலை-ஆகஸ்ட் (சித்திரை -வைகாசி முதல் ஆடி-ஆவணி) வரை.

குறுவை அல்லது கார் : மே-ஜூன் முதல் ஆகஸ்ட்-செப்டம்பர் வரை (வைகாசி - ஆனி முதல் ஆவணி-புரட்டாசி வரை.)


நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ் பிரைவேட் லிமிடெட்
1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
"கோபுரம்" மார்க்
மைதா, சூஜி
மற்றும்
"கப்பல்" மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

கோபுரம் மார்க் மைதா
கோபுரம் மார்க் சூஜி

தொலைபேசி எண் : 52670 - 52671
52672 - 52673

தந்தி : MONARCH

Sarath



பள்ளக்காட்டுப்புதூர் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் நெ. AA. 128.

2/17 கைத்தறி படுக்கை விரிப்புகள், துண்டு ரகங்கள்
தலையணை உறைகள், 20s துண்டு ரகங்கள்
தயாரிப்பாளர்கள்.

விற்பனை நிலையம் :
தெற்கு ரத வீதி, சென்னிமலை.

பள்ளக்காட்டுப்புதூர் நெசவாளர் கூட்டுறவு
உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிட். No. AA. 128.
சென்னிமலை (P.O.) ஈரோடு (தாலுகா)
தமிழ் நாடு.

S. ராமசாமி, தலைவர்.
K. பழனிசாமி, மேலாளர்.

நவரை : டிசம்பர்-ஜனவரி முதல் மார்ச்சு-ஏப்ரல் வரை (மார்கழி-தை முதல் பங்குனி-சித்திரை வரை)

**விதையுடன் மருந்து கலக்குதல் :—**

ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் வீதம் 'அக்ரசான்' அல்லது 'செரசான்' மருந்து இட்டு, விதை கலக்கும் கருவி மூலம் நன்கு கலக்கச் செய்யவும்.

**நாற்றங்கால் தயாரித்தல் :—**

ஒரு ஏக்கர் நடவு செய்ய 10 சென்ட் நிலத்தில் நாற்றங்கால் தயாரிக்கவேண்டும்.

நாற்றங்காலை இரும்புக் கலப்பையால் நன்கு உழுது பண்படுத்த வேண்டும்.

பத்து சென்ட் நாற்றங்காலுக்கு இரண்டு வண்டி, தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு அல்லது ஒரு வண்டி பசுந்தாள் எரு அல்லது பசுந்தழை எரு இடவேண்டும்.

நாற்றங்காலில் ஒரு சென்ட் அளவுள்ள (54 அடி நீளம்× 8 அடி அகலம்) 10 மேடைப் பாத்திகளை அமைக்கவும்.

ஒவ்வொரு பாத்தியிலும் 1½ கிலோ நெல் விதையை விதைக்கவும். ஊற வைத்து முளை கட்டிய விதைகளை விதைப்பதே சிறந்தது.

**நடவு வயல் தயாரித்தல் :—**

நடவு வயலை இரும்புக் கலப்பையால் நன்கு உழுது சேருக்கவும்.

நடவு வயலுக்கு ஏக்கருக்கு 10 வண்டி தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு அல்லது 5 வண்டி பசுந்தாள் எரு அல்லது பசுந்தழை எரு வீதம் போட வேண்டும்.

நடவு வயலில் சணப்பை, பில்லிப்பயறு போன்ற பசுந்தாள் உரப்பயிர்கள் வளர்க்கப் பட்டிருந்தால், அவைகளை அப்படியே உழுதுவிட வேண்டும்.

• பர்மிய சட்டம் அல்லது தழை மிதிக்கும் கருவியைப் பயன் படுத்திப் பசுந்தாள் பயிர்கள் அல்லது பசுந்தழைகளைச் சேற்றில் அழுந்திவிடுமாறு செய்துவிட வேண்டும்.



நிலத்தை உழுவதற்குக் கூண்டுச் சக்கரம் (கேஜ் வீல்) இணைக்கப்பட்ட டிராக்டர் பயன்படுத்தப்பட்டால், நிலத்தில் குறுக்கும் நெடுக்குமாக இரு முறை உழுது பின்னர் பரம்புப் பலகையால் நிலத்தினைச் சமப் படுத்திவிட வேண்டும்.

**அடியுரமிடுதல் :—**

கடைசி உழவின்போது 35 கிலோ மணிச்சத்து அளிக்க 220 கிலோ சூப்பர்பாஸ்பேட் உரத்தையும், 35 கிலோ சாம்பல் சத்து அளிக்க 60 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தையும் அடியுரமாக இட்டு மண்ணுடன் நன்கு கலக்குமாறு செய்யவும்.

நாற்று நடுவதற்கு முன்பு 45 கிலோ தழைச்சத்து அளிக்க 225 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 100 கிலோ யூரியாவை இட வேண்டும்.

**நாற்றின் வயது :—**

நாற்றுவிட்ட 20 முதல் 25 நாட்களுக்குள் நாற்றைப் பறித்து நட்டு விட வேண்டும்.

**நடவு செய்தல் :—**

நாற்றுகளை நடவு வயலில் வரிசை வரிசையாக நடவு செய்வதே நல்லது. வரிசைக்கு வரிசை 20 சென்டிமீட்டர் (8 அங்குலம்) இடைவெளியும், வரிசையில் குழிக்குக் குழி 10 சென்டி மீட்டர் (4 அங்குலம்) இடைவெளியும் விட்டுக் குழிக்குக் குழி 2 நாற்றுகள் வீதம் வைத்து நடவு செய்ய வேண்டும்.

வரிசை வரிசையாக நடவு செய்யக் கயிறு பிடித்து அல்லது வயலில் 'மார்க்கர்' என்னும் கருவியால் கோடு போட்டுக் கொண்டு நடவு செய்வது மிகவும் எளிதான முறைகளாகும்.

**களை எடுத்தல் :—**

நடவு வயலில் களைகள் தோன்றுவதைப் பொறுத்து ஒன்று அல்லது இரண்டு முறை, களை எடுக்க வேண்டும். நாற்று நட்ட 15-வது நாள், முதல் முறையும், 30-வது நாள் இரண்டாம் முறையும் இடை கிளறியால் (Inter cultivator) மண்ணைக் கிளறிவிட்டுக் களை எடுக்கவும். வரிசையில் பயிர்களின் இடையே உள்ள களைகளைக் கைகளால் எடுக்கவும்.

**மேலுரமிடுதல் :—**

நாற்று நட்ட 30-வது நாள் ஏக்கருக்கு 30 கிலோ தழைச் சத்து அளிக்க 150 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 65 கிலோ யூரியாவை மேலுரமாகப் பயிர்களின் வரிசைகளுக்கு இடையில் இடவும்.

**பயிர்ப் பாதுகாப்பு:—**

நாற்றங்காலிலிருந்து நாற்றுப் பறிப்பதற்கு ஒரு வாரம் முன்பாக பாரத்தியான் 0·05 சதம் (100 மில்லி லிட்டர் பாரத்தியானை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) மருந்தையும், டைத்தியோ கார்பமேட் மருந்தையும் [சைரம் 0·1 சதம் (112 கிராம் சைரம் மருந்தை 112 லிட்டர் தண்ணீரில் கலந்து) அல்லது சினப் 0·2 சதம் (224 கிராம் மருந்தை 11 லிட்டர் தண்ணீரில் கலந்து)] தெளிப்பான் மூலம் தெளிக்கவும்.

நாற்று நட்ட 15-ஆம் நாளில் இருந்து, 15 நாட்களுக்கு ஒரு முறை வீதம், பூ விடும் வரை மேற்கூறிய அளவிலேயே பாரத்தியானையும், டைத்தியோ கார்பமேட் மருந்தையும் தெளிக்க வேண்டும்.

பூவில் பால் பிடிக்கும் சமயத்தில் பி.எச்.சி. 10 சதத் தூளை ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவான் கருவியைப் பயன் படுத்தித் தூவவும்.


காந்தியடிகள் கனவை நனவாக்கி
தமிழ் நாடு வழி காட்டுகிறது!
கதர் - கதர்ப்பட்டு
சோப்பு - தேன்
செக்கெண்ணெய்
தோல்பொருள்கள்
பனைவெல்லம் சர்க்கரை
மண்பாண்டம் - வார்ப்படங்கள்
பனைபொருள்கள்
பித்தளை. வெண்கலப் பாத்திரங்கள்
பற்பல கைநுட்பப் பொருள்கள் தயாராகின்றன!
கதர் - கிராமத் தொழில்கள்
கதர் கிராமத் தொழில்களை ஆதரிப்பது உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்
வளர்ச்சியும் முன்னேற்றமும்
விவசாயிகளுக்கு
ஊதியத்துடன் கூடிய
வேலைவாய்ப்பளிக்கின்றன
வெளியீடு: கதர்- கிராமத் தொழில் துறை, ௨. சர் தேசிகாச்சாரி ரோடு, சென்னை-4.
குமார்





# திசையெட்டும் எழில் பரப்பும்







கோடைவெய்யில் அதிகாலையிலேயே அனலாய்க் கொதித்தது. வெய்யிலின் கடுமைக்குப் பயந்து ''அறை'' என்னும் கூண்டுக்குள் அடைந்து கிடந்த எனக்கு அன்றைய நாளிதழில் வெளி வந்த ''இன்றைய நிகழ்ச்சிகள்'' விவரம் குளிர் தரும் செய்தியாயிருந்தது. ''ஏப்ரல் திங்கள் 2ஆம் நாள்-காலை 9-30 மணி—கைத்தறி ஆடை அலங்கார அணிவகுப்பு—சபையர் திரைப்பட அரங்கு''—என்ற செய்தியைப் படித்ததும் துள்ளிக்





## தென்னாட்டுக் கைத்தறித் தொழில்



# வின் டெக்ஸ்

## விசயமங்கலம், தொழிலியல் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம்

## லிட் : A. A. 245

விசயமங்கலம் (அஞ்சல்), ஈரோடு (வட்டம்)

கோயமுத்தூர் மாவட்டம்

படுக்கை விரிப்புகள், மேசை விரிப்புகள், நவீன அலங்கார ஆடைகள், துண்டுகள், வேட்டிகள், தரத்திற்கும் நவீன ரகத்திற்கும் கெட்டிச் சாயத்திற்கும் குறைந்த விலைக்கும் மிகச் சிறந்தவை.

தமிழ்நாடு அரசினரால் முதல் பரிசுகளும் அனேக கண்காட்சிகளில் நற்சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் எல்லா விற்பனை நிலையங்களிலும் எங்கள் ஜவுளிகள் கிடைக்கும்.

எப்பொழுதும் 'வின்டெக்ஸ்' பெட்ஷீட் ரகங்களையே வாங்குங்கள்.

T. P. பஞ்சாபகேசன்,
செயலாளர்.

V. C. சின்னசாமி,
தலைவர்.



தொலைபேசி எண்: 222

தந்தி : "திருகோசில்க்"

காஞ்சீபுரம பட்டு ஜவுளி இரகங்கள் உற்பத்தி முன்னணியில் திகழ்வது

நவீன மோஸ்தர்களுக்கும், கண்கவர் இரகங்களுக்கும்
நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உரிய
ஒரே கூட்டுறவு நிலையம்

## காஞ்சீபுரம் திருவள்ளுவர் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட், எண். ஜி. 2054

(தேரடி சமீபம்)
சின்னக் காஞ்சீபுரம்
தமிழ்நாடு

G. குப்புசாமி,
கூட்டுறவு உப பதிவாளர்/செயலர்

இரா. வெங்கிடேசன்,
தலைவர்.

குதித்தேன். நண்பன் ஒருவன் அந்நிகழ்ச்சிக்கு அனுமதிச்சீட்டுத் தந்திருந்தது நினைவுக்கு வந்தது. ஆனந்தமாகப் புறப்பட்டேன்.

எங்கும் வெய்யில். ஆனால் சபையர் அரங்கு ஜில்லென்றிருந்தது. குளிர் சாதனம் மட்டும் காரணமல்ல. வந்திருந்தோர் கூட்டம் அப்படி! ஒருவிதமான உள்ள உவகை. நவநாகரிக உலகின் ஒரு பகுதியை அங்கே நான் காண முடிந்தது. எத்தனை விதமான ஆடை அணிகலன்கள்! எத்தனை விதமான சிகை அலங்காரங்கள்! அனைவரது பார்வையும் மேடையை நோக்கியிருந்தது.

எனக்கு அது புது அனுபவம். சுற்றியிருந்தவர்களை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது எனது பிரம்மச்சரிய உள்ளம்.

திடீரென்று மின் விளக்கு ஒளி மங்கியது. எங்கிருந்தோ இனிய அறிவிப்பு காற்றில் மிதந்து வந்தது. அந்தச் சிங்கார அரங்கத்தின் திரைச் சீலை மெள்ள விலகியது. அழகு மங்கை மீரா ........காற்றினிலே வரும் கீதம் போல் மேடையில் நடனமாடியபடி கால் தொட்டும் தொடாமலும் மிதந்து வந்தார். மேடையில் மட்டுமல்ல...... அரங்கத்தில் மக்கள் மத்தியில் அமைக்கப்பட்டிருந்த செந்நிற நடைபாதையிலும் புள்ளி மான் போல் துள்ளிக் குதித்து வந்தார். விளக்கொளி சிறிது சிறிதாகப் பிரகாசமாகியது.

மீரா அணிந்திருந்தது கைத்தறி ஆடை! மஞ்சள், பச்சை, சிவப்பு, நீலம் ஆகிய பல வண்ணப்பட்டுக்கள் இணைந்த உடுப்பு எடுப்பாக இருந்தது. இப்படி ஒரு நடை! அப்படி ஒரு பார்வை! மீரா மேடைக்குத் திரும்பி மறைந்துவிட்டார்.

மீரா போனால் என்ன ? கீதா இல்லையா ? கையில் வளை குலுங்க, காலில் கொலுசு 'சல் சல்' என ஒலிக்க, கண்கள் மின்னிடச்சேலையுடுத்தித் தென்றலில் ஆடிவந்தார் கீதா.

லுங்கி கட்டிப் பேரெழில் காட்டிவந்தார் லீனா. ஆம்! மீரா, கீதா, லீனா, நளினி, டயனா ஜூலியன், ஏஞ்செலா இப்படி பட்டாம்பூச்சி போல் பதினாறு இளம் மங்கையர் பல வண்ணக் கைத்தறி ஆடைகள் அணிந்து மேடையில் தோன்றினர். தமிழ் நாட்டுத் தங்கைகள், வடநாட்டு மங்கைகள், மேலைநாட்டு நங்கைகள் ஆக பலதரப்பட்டவர்கள் மேடையில் தோன்றினர். அனைவரிடமும் ஒற்றுமை! அவர்கள் அனைவர் அணிந்திருந்ததும் கைத்தறி ஆடைகளே! திசையெட்டும் எழில் பரப்பும் தென்னாட்டுக் கைத்தறித் தொழில் தான் அந்த ஒருமைப்பாட்டை உருவாக்கியது.

கைத்தறி ஆடைகளில் எத்தனை ரகம் உண்டு? எவ்வளவு எழில் உண்டு? வண்ணங்கள் உண்டு ? என்பதனை அந்த அணிவகுப்பு நிகழ்ச்சி நன்கு எடுத்துக்காட்டியது. வெள்ளைக்கார மங்கையர் அணிவதற்கு ஏற்ப நமது பட்டாடையை அமைத்து உடுப்பாக, நீண்ட அங்கியாக எவரையும் கவரும் வண்ணம் அமைத்திருந்தது, ஒரு சிறப்பாகும்.

கைத்தறிக் கடைகளில் எத்தனையோ விதமான படுக்கை விரிப்புகளைப் பார்க்கிறோம். படுக்கையில் விரித்தால் அழகாகயிருக்குமே, குளிருக்கு மூட இதமாகயிருக்குமே என்று தான் நாம் எண்ணுகிறோம்! விலைக்கு வாங்கிச் செல்லுகிறோம்.

ஆனால் அந்தப் படுக்கை விரிப்பை எவ்வளவு அழகான உடுப்பாக, மேலாடையாகப் பயன்படுத்தலாம் என்று எடுத்துக் காட்டினர் இந்த உடையலங்கார நங்கையர்.

இது படுக்கை விரிப்பு! இது தலையணைக்கான துணி! இது தலை துவட்டும் துண்டு! என்று சொன்னால் யாரும் நம்ப மாட்டார்கள்! அத்தனை அழகான ஆடைகளாக அவை மாறிப், பார்ப்போரின் கண்களை மயக்கின.

'' இம்மாதிரித் துணிகளுக்கு எங்கள் நாட்டில் மிகுந்த வரவேற்பு இருக்கு''மென்றார், என் அருகில் அமர்ந்திருந்த வெள்ளைக்காரர். அவர் அமெரிக்கச் சீமையைச் சேர்ந்தவர். '' சேலைக்கு ஈடான அழகு வேறு எந்த ஆடைக்கும் கிடையாது. அதுவும் பட்டுச் சேலைக்கு நிகராக எதையும் ஒப்பிட முடியாது! '' என்றார் அவரது துணைவியார்.

பெருமிதத்தால் எனது உள்ளம் விம்மியது. 'கவுன்' உடையும், 'பஞ்சாபி' ரக உடையுமே பெண்களின் அழகுக்கு அழகூட்டுபவை என்று நான் நெடுங்காலமாக எண்ணியது உண்டு. ஆனால் அந்தக் கருத்தைத் தகர்த்தெறிந்தார் அந்த அமெரிக்கப் பெண்மணி.



படுக்கை விரிப்பு உடையாகிவிட்டது.

அவர் மட்டுமல்ல· சேலை மிகக் கவுரமான, மிகக் கவர்ச்சியான உடை என்பது இன்று உலகமெங்கணும் ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்து. அதற்கு முக்கிய காரணம் நமது கைத்தறிப் புடவைகள்தான் என்றால் மிகையாகாது.

ஜப்பானியரின் எக்ஸ்போவினைப் படையெடுத்த பெருமை நமது காஞ்சிப் பட்டுப்புடவைகளுக்கு உண்டு. அமெரிக்கப் பொருட்காட்சிகளில் பலமுறை பங்கெடுத்துப் பார்புகழச் செய்த பெருமையும் நமது கைத்தறித் தயாரிப்புகளான பட்டாடைகள்—பருத்தி ஆடைகளுக்கு உண்டு.

கற்பனை உலகில் திரிந்த எனது கண்களைத் தன்பக்கம் இழுத்தார், புன்னகை சிந்தியபடி மேடையில் ஆடிவந்த மீரா. அவரது நண்பர்களைப் பார்த்து அவ்வாறு சிரிக்கிறாரா என்று மீராவின் கண் சென்ற இடமெல்லாம் என் கண்களைப் பாயவிட்டேன்.

மீரா யாரையும் குறிப்பிட்டுப் பார்க்கவில்லை. சிறுமி போன்று உடுப்பு அணிந்து குழந்தைச் சிரிப்பை அதரங்களில் நெளிய விட்டிருந்தார்.

இதோ, ஒரு புதிய ஜோடி! லீனா—ராசா. அவர்கள் அணிந்திருந்த உடை படுக்கை விரிப்புகளால் தைக்கப்பட்டவை. இளஞ்சிவப்பு, வெள்ளை, பச்சைக் கோடுகள் போட்ட அந்த உடை அந்த இளஞ் ஜோடிக்குத்தான் எவ்வளவு கச்சிதமாகப் பொருந்தியிருந்தது! அவர்களுக்கு மட்டுமல்ல எவருக்குமே பொருந்தக் கூடியது இந்தக் கைத்தறி 'டிசைன்'.

தொடர்ந்து அந்தப் பதினாறு பெண்களும், ஆறு ஆண்களும், 60 வகையான 'டிசைனு'ள்ள கைத்தறி ஆடைகள் அணிந்து எங்களை மகிழ்வித்தனர். நேரம் போனதே எனக்குத் தெரியவில்லை.

திரை கீழிறங்க, விளக்குகள் பளிச்சிடவும்தான் இடைவேளை வந்து விட்டதை நான் உணர்ந்தேன். குளிர்பானம் பருகியதும் மீண்டும் புதிய தெம்பு.

திரையுலகத்தாரகை சவுகார் ஜானகி, தனது இருமகள்கள் புடைசூழ அமர்ந்திருந்தார். அவர்தான் அன்றைய கைத்தறி அழகு ராணிப்போட்டிக்கு நடுவர் என்று அப்போது கேள்விப்பட்டேன். கலெக்டராய், காவியத் தலைவியாய் தோன்றிச் சிறப்பாக நடித்த அந்த நட்சத்திரத்தை நேரில் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்ததில் எனக்குப் பெருமகிழ்ச்சி. என்னைப் போலவே பலர் அவரை வேடிக்கை பார்ப்பதை நான் கண்டேன்.

மீண்டும் நிகழ்ச்சி தொடங்கியது. இப்போது நடைபெறுவது கைத்தறி அழகிப்போட்டி.

முந்திய நிகழ்ச்சிக்கு மாறாக இதில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் சேலையிலேயே தோன்றினர், ஒரே ஒரு பெண்மணியைத் தவிர. 1, 2, 3,.. ......என ஒவ்வொருவருக்கும் ஒரு எண் கையில் தரப்பட்டிருந்தது. மொத்தம் எட்டுப் பேர். பலர் கல்லூரி மாணவியர் போல் தோற்றமளித்தனர். எனது ஊகம் சரி என்பது விழா முடிவில் தெரிந்தது.

அந்தப்போட்டியில் முதல் பரிசு பெற்ற சந்திரகலா, ஸ்டான்லி மருத்துவமனையில் இரண்டாவது ஆண்டு மாணவி. இரண்டாவது பரிசு பெற்ற ராதா சென்னைக் கல்லூரியில் எம்.ஏ. படிப்பவர். சந்திரகலா, இதற்கு முன் 'பெமினா' நடத்திய போட்டிக்காகத் தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுப் பம்பாய்க்கு அனுப்பப்பட்டார். ஆனால் பிராந்திய வாரிப் போட்டியில்லாததால் பங்கு பெறவில்லை. இப்போது கண்டிப்பாகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்ற நம்பிக்கையில் வந்ததாகவும், அதேபோல் பரிசு கிடைத்ததாகவும் அவர் பத்திரிகை நிருபர்களிடம் பேசியதை நானும் கேட்டுக்கொண்டேன்.


தமிழரசு

சந்தா

ஓர் ஆண்டு ரூ. 8.00

அரை ஆண்டு ரூ. 4.00

தனிப்பிரதி 35 காசுகள்

விவரங்களுக்கு

நிருவாகி,
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-2


அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சந்திரகலாவுக்கு திருமதி சவுகார்ஜானகி, ராணி போல் தலையில்முடிசூட்டினார். அவருக்கு 500 ரூபாய்க்குக் கைத்தறி ஆடைகள் பரிசு தரப்பட்டன. திருமதி சபாநாயகம் தலைமை தாங்கினார். அந்த விழாவினைச் சிறப்பாக நடத்திய தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தனி அதிகாரி திரு. கிருபாகரன் அனைவரையும் வரவேற்றார்.

விழா முடிவடைந்து விட்டதெனப் புறப்பட நினைத்தேன். அப்போது மணமகள் போல் மாலை சூடி மேடையில் தோன்றினார் ஓர் இளமங்கை. சுற்றிலும் பல்வேறு நங்கைகள். இங்கும் கைத்தறியே நீக்கமற நிலைத்து நின்றது. திருமணச் சடங்கினை அவர்கள் இரு நிமிடங்கள் கண்முன் கொண்டு வந்து நிறுத்தினர்.

அடுத்த நிகழ்ச்சி மேலைநாட்டு ஆடல்கள். மூன்று ஜோடியினர் வந்து ஆடினர்.

இவற்றிற்கெல்லாம் சிகரம் துவைத்தாற்போல் அமைந்த கடைசி நிகழ்ச்சி. வானத்திலிருந்து தேவர்கள் பூமாரி பொழிவார்கள் என்பார்களே, கதைகளில், அதைப்போல் இங்கு பல வண்ணப் பலூன்களைப் பூவாகத் உதிர்த்தனர் கீழே மேடையில் நின்ற அழகு மங்கையர் கூட்டத்தின்மீது, இடையிடையே ராசா, வஹாப், அசீஸ் ஆகிய ஆடவர்கள்! கைத்தறி ஆடை அணிவகுப்பில் பங்கு பெற்ற இவர்கள் உற்சாகமாக மனமகிழ்ந்து ஆடவும், மேலிருந்து பலூன்கள் மழையெனப் பொழியவும் அங்கு ஒரு 'கனவுலோகக் காட்சியே' தோற்றமளித்தது.

ஆம், அன்று நான் கண்ட அந்தக் கைத்தறி விழா இன்றளவும் கனவு போலவே காட்சியளிக்கிறது. இனிமையான கனவு அது.




— பேராசிரியர் வ. பெருமாள், எம். ஏ., பி. டி. —

கற்றல் என்னும் சொல்லுக்கு மிகப் பரந்த பொருள் உண்டு. நூல்களைக் கற்பது மட்டும்தான் கற்றல் என்று எண்ணுவது தவறு. நூல்களின் உதவி இல்லாமலும் கற்கமுடியும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

மெய், வாய், கண், நாக்கு, செவி ஆகியவை ஐம்பொறிகள் எனப்படும். இவற்றின் வாயிலாகப் பெறும் அறிவு ஐம்புலன் எனப்படும். பொறி என்னும் சொல் புற உறுப்பையும், புலன் என்பது அப்பொறி வாயிலாகப் பெறும் அறிவையும் குறிக்கும். பொறி இயங்காவிட்டால் அப்பொறி வாயிலாக அறிவைப் பெறமுடியாது. எடுத்துக் காட்டாக ஒருவனுக்குக் காதின் புறத் தோற்றம் மிக நன்றாகவும் அழகாகவும் அமைந்திருக்கின்றது. ஆனால் அக்காது தனக்குரிய வேலையைச் செய்ய முடியாமல் இயங்க முடியாமல்செவிடாக இருக்கின்றது. அச்செவிட்டுக் காதால் ஒலியையோ ஒலி வேறுபாட்டையோ அறிய முடியாது. எனவே, அவன் காதைப் பெற்றிருந்தும் அது வேலை செய்யாத காரணத்தால் காதின் பயனைப் பெறமுடியாமல் போகின்றான். எனவே, பொறி இருந்தால் மட்டும் போதாது. அப்பொறி தனக்கு உரிய பணியாற்றவேண்டும்.

## கைவிரல் மூலம் அறிவு

ஐம்பொறிகள் வாயிலாக எவ்வாறு அறிவு பெறமுடியும் என்பதைச் சிறிது விளக்குவோம். மெய்யின் வாயிலாகத் தொடுதல் உணர்ச்சி ஏற்படுகின்றது. சமைக்கும்போது சோறு வெந்திருக்கின்றதா இல்லையா என்றறியச் சோற்றைக் கைவிரல்களால் பதம் பார்க்கின்றோம். சோறு கடினமாக இருந்தால் இன்னும் வேகவில்லை என்றும், நடுத்தரமான மென்மையுடன் இருந்தால் உண்பதற்கு ஏற்ற பதத்துடன் இருக்கின்றது என்றும், பசைபோன்று இருந்தால் குழைந்துவிட்டது என்றும் அறிந்துகொள்கிறோம்.

சோறு வெந்திருக்கின்றதா இல்லையா என்பதை நாம் புத்தகங்கள் படித்து அறிந்து கொள்ளவில்லை. மெய்ப்பயிற்சி வாயிலாக நாம் அறிந்திருக்கின்றோம்.

## பாடிப்பெற்ற பயிற்சி

நம் தாய்மார்கள் குழந்தையைத் தொட்டிலில் இட்டுத் தூங்கவைக்கும்போது 'கண்ணே, கண்மணியே கண்ணுறங்காயோ' என்று தாலாட்டுப் பாடலை நீலாம்பரி இராகத்தில் பாடுவதையும் அப்பாட்டைக் கேட்டுக் கொண்டே குழந்தை உறங்குவதையும் நாம் கண்டிருக்கின்றோம். நம் தாய்மார்கள் இத்தகைய தாலாட்டுப் பாடல்களை எவ்வாறு கற்றார்கள் ? அவர்கள் முன்னோர்களிடமிருந்து செவி வழியாகக் கற்றார்கள் என்பது எல்லோரும் அறிந்த உண்மை. செவி வாயிலாகக் கேட்டுவிட்டு அப்படியே சும்மா இருந்துவிட்டால் அவர்களுக்குப் பாட்டு மட்டும் தெரிந்திருக்குமே தவிரப் பாடத் தெரிந்திருக்காது. எனவே, அவர்கள் நூல் உதவி இல்லாமல், செவி வாயிலாகக் கேட்டவற்றை வாய் மூலமாகப் பன்முறை பாடிப் பாடிப் பயிற்சி பெற்றுத் தாலாட்டுப் பாடலைப்பண்ணுடன் பாடுவதில் தேர்ச்சி பெற்றனர். அவர்களுடைய தாலாட்டுப் பாடல் புலமைக்குக் காரணம் அவர்கள் செவி வழியாகக் கற்ற பாடலும் வாய்மூலமாகப் பெற்ற பயிற்சியுமேயாகும்.

மாணவர்கள் திரைப்படப் பாடல்களையும் நாட்டுப் பாடலையும் மிகத் திறமையாகப் பாடுவதற்குக் காரணம் இதுவே. 'செந்தமிழும் நாப்பழக்கம்' என்பது முதுமொழி.

நிறம், ஒளி, உருவம் ஆகியவற்றை அறியக் கண் துணை புரிகின்றது. ஒருபொருளின் அழகை நிர்ணயிப்பது கட்புலனே. எழுத்தறிவற்றவனுக்கும் அழகு உணர்ச்சி உண்டு. அவன்கூட அழகான பொருளைவிரும்புகிறான். அழகற்ற பொருளை வெறுக்கின்றான். கண்ணின் வாயிலாகத்தான் நிறம், ஒளி, உருவம் ஆகியவை பற்றிய அறிவும் உணர்வும்பெற முடியும் என்பது தெளிவு.

## வேறுபடும் சுவைகள்

மணத்தைப் பற்றிய அறிவை மூக்கின் வாயிலாகப் பெறுகிறோம். காப்பிக்கும் தேநீருக்குமிடையே மணத்தில் வேறுபாடு உண்டு. இந்த வேறுபாட்டை மூக்கால்தான் அறிந்து உணர முடியும். மாங்கனி, வாழைப் பழம் ஆகிய இரண்டும் இன்சுவையாக இருந்தாலும் இவற்றிற்கிடையே வேறுபாடு உண்டு. அவ்வேறுபாட்டை நாக்கால் அறிகின்றோம். இவ்வாறு ஐம்பொறிகள் வாயிலாக நாம் கண்டு, கேட்டு, உண்டு, முகந்து, உற்று அறிகின்றோம்.

ஒவ்வொரு பொறியும் அதற்குரிய நெறியில் நின்று அறிவைப்



16-5—8.



உங்களுக்கு வேண்டிய
எல்லாமே இங்கே கிடைக்கும்
குறளகம்
சென்னை-1
கதர்-கைத்தொழில்
அங்காடி
தொலைபேசி 20461. 20462.
எண்கள்: 20463. 20464. 20465.
கைவண்ணப்
பொருள்களின்
களஞ்சியம்

பெறமுடியுமே தவிர வேறு பொறிக்குரிய அறிவைப் பெற முடியாது. செவி வாயிலாக இசை கேட்கலாமே தவிர மூக்கின் வாயிலாகக் கேட்க முடியாது. பசும்பாலின் இன் சுவையை நாக்கு உணரும். கண் உணருமா ?

கற்பதற்கு ஐம்பொறிகள் ஐந்து வழிகளாக அமைந்தாலும் எல்லோருக்கும் ஒரே அளவாக அமைவதில்லை. அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று இயற்கைக் காரணம். ஐம்பொறிகளில் ஒன்றோ அதற்கு மேற்பட்டோ ஆற்றல் குறைந்திருப்பது அல்லது முழுவதும் இழந்து விடுவது. ஐம்பொறிகளில் ஏதாவது ஒன்று குறைந்திருந்தால் அதற்கு ஈடாக இன்னொரு பொறி அளவுக்கு அதிகமான ஆற்றல் பெற்றிருக்கும். குருடர்க்கு ஐம்புலன்களில் ஒன்றாகிய கட்புலன் இல்லை. ஆனால் அதற்குப் பதிலாகத் தொடுதல் உணர்ச்சி மிகுதியாக இருக்கின்றது. 'கண்ணைக் கெடுத்த தெய்வம், கோலைக் கொடுத்தது' என்னும் பழமொழிக்கேற்ப ஒரு புலன் குறைபாட்டை ஈடு செய்யும் வகையில் இன்னொரு புலன் அமைந்திருக்கின்றது. இது இயற்கையின் விதி.

## தொழிலுக்கு ஏற்பப் புலன் அறிவு

ஐம்பொறிகளும் எல்லாருக்கும் ஒரே அளவாக அமையாததற்கு மற்றொரு காரணம் உண்டு. இது பயிற்சியின் வாயிலாக ஏற்பட்ட செயற்கைக் காரணம். இசைவாணர்களுக்குச் செவிப்புலன் உணர்வு மிகுதியாக உண்டு. ஓவியர்களுக்குக் கட்புல உணர்வு அதிகமாக இருக்கும். சமையற்காரருக்கு வாய்ச்சுவை உணர்வு மிகுதி என்பது சொல்லாமலே விளங்கும். பூக்கடைக்காரர்கள் அதிகமான மூக்காற்றல் படைத்தவர்கள்.

மளிகைக் கடையில் பொட்டலங்கள் கட்டுகின்ற வேலைக்காரர்களுக்குத் தொடுதல் உணர்ச்சி மிகுதியாகயிருக்கும். இருபதுக்கு மேற்பட்ட பொட்டலங்களைக் கட்டிய பிறகு அப்பொட்டலங்களைப் பிரிக்காமல் ஒவ்வொரு பொட்டலத்திலும் என்ன இருக்கின்றது என்பதை அவர்கள் சரியாகச் சொல்லி விடுகிறார்கள். பொட்டலத்துக்குள் இருப்பது கடலைப் பருப்பா, துவரம் பருப்பா என்பதைப் பிரித்துப் பார்க்காமலே அவர்களால் சரியாகச் சொல்ல முடிகின்றது. இவ்வாறு ஒவ்வொருவருக்கும் அவரவர் தொழிலுக்கும் பயிற்சிக்கும் ஏற்ப ஏதேனும் ஒரு புலனறிவு மிகச் சிறந்து விளங்கும்.

சுருங்கக் கூறுமிடத்துக் கற்கும் முறையை முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன : கண்டறிதல், படித்தறிதல், ஊகித்தறிதல். இவற்றை வடமொழியில் பிரத்தியட்சம், ஆகமம், அனுமானம் என்று குறிப்பிடுவதுண்டு. யானையைப் பார்க்கிறோம். யானை மிகப் பெரிய விலங்கு என்னும் முடிவுக்கு வருகின்றோம். எப்படி அந்த முடிவுக்கு வந்தோம் ? யானையை நாமே நம் கண்களால் பார்த்தோம்— கட்புலன் வழியாக நாம் பெற்ற அறிவைக் கொண்டு யானை மிகப் பெரிய விலங்கு என்று முடிவு செய்தோம்.

## ஊகித்து அறிந்த அறிவு

அசோகர் மிகவும் நல்லவர் என்று முடிவு செய்திருக்கிறோம். அசோகரை நாம் பார்த்ததில்லை. அசோகருடன் நாம் பழகியதில்லை. அவ்வாறிருக்க அசோகர் நல்லவர் என்று மிக உறுதியாகச் சொல்கின்றோம். ஆம்! அசோகரைப் பற்றி வரலாற்று நூல்களில் நாம் பக்கம் பக்கமாகப் படித்திருக்கிறோம். எனவே, அசோகரைப் பற்றி நாம் அறிந்தவை எல்லாம் நூலை அடிப்படையாகக் கொண்டவை. தெரிந்ததைக் கொண்டு தெரியாதவற்றை அறிதல் ஊகித்தல் எனப்படும்.

தூரத்திலுள்ள புகை கண்ணுக்குத் தென்படுகின்றது. புகை மட்டும்தான் தென்படுகின்றது. புகையுள்ளவிடத்தில் நெருப்பும் இருக்கும் என்று ஊகிக்கிறோம். ஒரு நாற்காலியைக் காண்கிறோம். அதை ஒரு தச்சன் செய்திருக்கவேண்டும் என்று ஊகிக்கிறோம்.

யானையைக் கண்ணால் கண்டு அது மிகப் பெரிய விலங்கு என்று அறிந்து கொண்டோம். அசோகரைக் கண்ணால் காணாமல் —ஆனால் நூல் வாயிலாகப் படித்தறிந்து அவர் மிகவும் நல்லவர் என்று முடிவுசெய்தோம். புகையைக் கண்டவுடன் நெருப்பு இருக்க வேண்டும் என்றும் நாற்காலியைக் கண்டவுடன் தச்சன் அதைச் செய்திருக்க வேண்டும் என்றும் ஊகித்தறிந்தோம். இவ்வாறு மனிதன் கண்ணால் கண்டும், நூலைப் படித்தும், ஊகித்து உணர்ந்தும் அறிவு பெறுகின்றான். இவையே கற்றலின் முப்பெரும் பிரிவுகளாகும்.



# 10%

சேமிப்பு

எல்லாவித
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறித்துணிகள்
மீதும் உண்டு

# 17வது
# அகில இந்திய
# கைத்தறி
# இருவார
# கண்காட்சி '71

மே 2 ஆம் தேதி முதல்
மே 16 ஆம் தேதி வரை

Criterion CO 2564 TM











# கோ-ஆப்டெக்ஸ்

**கைத்தறி ஆடைகள்**

**சகாயமான விலை...**

**ஆதாயமான உழைப்பு**

பட்டு, பருத்தி மற்றும் ஆர்ட் சில்க் புடவைகள், வேஷ்டிகள், துவலைகள், சட்டைத்துணிகள் மற்றும் நாகரீக அலங்கார திரைத்துணிகள் இவையனைத்துக்கும் அகிலஇந்திய கைத்தறி இருவார கண்காட்சி முடியும் வரை 10% விசேஷ தள்ளுபடி உண்டு. இச்சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்.

**தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்**

பாலசுந்தரம்
பில்டிங்ஸ்,
எழும்பூர்,
சென்னை-8.






# குற்றவாளிகளைத் திருத்த அறிவியல் சீர்திருத்த முறை



குற்றம் என்பது யாவரும் அறிந்ததே. உலகம் பழித்தது குற்றம். குற்றம் செய்தவன் குற்றவாளி. குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டியவர்கள் என்பது நியதி. குற்றம் செய்தவர்களைத் தண்டிப்பதால் அவர்கள் மறுபடியும் பிழை செய்யமாட்டார்கள். மற்றும் அத்தண்டனை மற்றவர்களுக்கும் ஒரு படிப்பினையாகும் என்பதே பல நூற்றுண்டுகளாக இருந்து வந்த முறை.

மேர்சே என்னும் பெரியார் காலத்தில் ''ரத்தத்துக்கு ரத்தம்'' என்ற கொள்கை இருந்து வந்தது. அப்போது ''குற்றயியல்'' நூல் கிடையாது. குற்றவாளிகளைக் கடுமையாகவும் கொடுமையாகவும் தண்டித்தனர். சமுதாயம் வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. பழி வாங்கும் தன்மையே மேலோங்கி நின்றது. இன்றைய நிலையில் நாம் மரண தண்டனையையே மாற்றி அமைக்க முற்பட வேண்டும் என்னும் நாட்டம் உடையவர்களாக இருக்கிறோம். ஏனெனில் போன உயிர் மீள மறு உயிரால் சரி செய்ய முடியாது. ஆனல், ஒருவன் உயிரைக் குடித்த கொடுமைக்காரனுக்கு நாம் இரக்கம் காட்டக் கூடாது என்னும் ஒரே கொள்கைக்காகத்தான் நாம் மரண தண்டனையை இன்னும் ரத்தாக்கவில்லை.

குற்றம் என்பது ஒரு தனிப்பட்ட காரணத்தால் உண்டாகக் கூடியதல்ல. சந்தர்ப்ப சூழ்நிலைகளும், போதுமான சமுதாய வளர்ச்சி இல்லாமையும்தான் குற்றங்கள் நிகழ்வதற்குப் பெரும்பாலும் காரணம் என உணருகிறோம். குற்றம் செய்தவனைத் தண்டித்தல் ஒரு மரத்தை வெட்டிச் சாய்த்தலைப் போன்ற ஒரு செயல் என்றும், அவனை வாழவிடுவது சமுதாயத்தின் நன்மகனுக்கும் செயல் மேற்படி மரத்தைத் துளிர்க்கச் செய்து பயனுடையதாக்குவது போன்றது என்றும் தற்போது நீதியியல் வல்லுநர்கள் கருதுகிறார்கள். அண்ணல் காந்தி அடிகளும், 'குற்றவாளி ஒரு நோயாளிக்கு ஒப்பானவன், அவனைக் குணப்படுத்த முயல்வதே சீரிய பணி' என்று கருதினர். ஆகவேதான், குற்றம் செய்தவனைத் தண்டித்துச் சிறைக்கனுப்பி அவனைச் சமுதாயத்துள் செல்லாக் காசாகச் செய்வதை விட அவனைச் சமூகத்தில் வாழவிட்டுச் சீர்திருத்துவதே மேலான கொள்கை.

இந்தக் கொள்கையின் அடிப்படையில் வளர்ந்ததே குற்ற

---

**இர. நா. சீதாபதி**

---

வாளிகள் நல்லபடி நடந்து கொள்கிறார்களா என்று பார்க்கும் பொருட்டு அவர்களை விடுதலை செய்வதைக் குறித்த சட்டம்.

இச் சட்டம் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. இச் சட்டத்தின் அடிப்படை, குற்றவாளிகளைச் சீர்திருத்தி அவர்களைச்சமுதாயத்தில் ஒன்றவிடுதலே! இச் சட்டத்தின் மூலம் குற்றவாளி திருந்துவதோடல்லாமல் அவன் குடும்பத்



தினரும் நல்ல முறையில் வாழ வழி கோலப்படுகிறது.

நீதிமன்றத்தில் குற்றவாளி எனத் தீர்ப்பெடுத்த பின்னரும் தண்டனை அளிக்கு முன்னரும், அவன் செய்த குற்றத்தின் காரணகாரியங்கள், சந்தர்ப்ப சூழ்நிலை அவனது முந்தைய வாழ்க்கை முதலியவைகளை நன்னடத்தை அலுவலர் மூலம் கேட்டறிந்து அவன் குற்றவாளி என்னும் நிலை மாறி, சமுதாயத்துக்கும் அவன் குடும்பத்துக்கும் நாட்டுக்கும் ஒரு நல்ல குடிமகனுகை மாற வேண்டும் என்ற சீர்திருத்த முறைகளை மனத்தில் கொண்டு அளிக்கப்படும் தண்டனையே இந்த நன்னடத்தை முறை என்பது. இதன்படி குற்றவாளி நீதிமன்றத்துக்கு ஒரு முச்சலிக்கை எழுதிக் கொடுக்கிறுன். நீதிமன்றத்தார் குறிப்பிடும் கால அளவு வரை (குறைந்தது ஓராண்டு, உயர்ந்தது மூன்று ஆண்டுகள்) நன்னடத்தையோடும் சமூகத்தில் ஒழுங்கோடும் வாழ உறுதி கூறுகிறுன். அந்தக் காலத்தில் நன்னடத்தை அலுவலர் அவனைத் தனது மேற்பார்வையில் கொண்டு அவனைக் குற்றப் பாதையினின்றும் நீக்கி அறப் பாதையில் திருப்பி விடுகிறார். அவனும் காக்கப்படுகிறுன். அவனுல் செய்யப்படக் கூடிய மற்ற குற்றங்களும் தவிர்க்கப்படுகின்றன. சமுதாயமும் இன்புற வழியாகிறது.

அப்படியின்றி அவன் சிறைக்கு அனுப்பப்பட்டால் அவன் சமுதாயத்தோடு ஒட்டி வாழ அருகதை அற்றவனுய் பல்லார் பழிப்புக்கும் ஆளாகி, வாழ வகையின்றி, நல்லார்க்கும்பொல்லாதவனுகி, சந்தேகிக்கப்பட்ட நபராகி மறுபடியும் மறுபடியும் சிறை செல்லும் கொடுமைக்கு ஆளாக நேருகின்றது.

அது மட்டுமா? உழைத்து ஊதியம் பெற்றுத் தன் பெண்டு பிள்ளைகளைக் காக்க வேண்டிய கடமைஉள்ள ஒருவன் சிறைக்குச் சென்றுவிட்டால், அவன் குடும்பம் அவதிக்குள்ளாகி, நிவர்த்திக்கப்பட முடியாத இன்னல்களுக்கு உட்பட்டு, வாழ வழி



குறிப்பிடத் தக்கது. குற்றவாளியைச் சிறைக்கு அனுப்பி அவனைப் பேணிப் பாதுகாக்கும் செலவினங்கள் தவிர்க்கப்பட்டு அரசுக்குப் பணச் செலவும் மிச்சமாகின்றது. குடிமக்களின் பணம் வேண்டாச் செலவுக்குக் கரைகின்ற நிலை தவிர்க்கப்படுகின்றது.

இத்துணை நன்மை பயக்க வல்லதும் மேலை நாடுகளில் மிக முக்கியத்துவத்தோடு கையாளப் படுவதுமான இம்முறையை நாம் புறக்கணிப்பது சரியல்ல. ஆகவே இந்த 1971-ஆம் ஆண்டை 'ப்ரோபேஷன்' ஆண்டு என நிர்ணயித்து இந்த ஆண்டிலே மேற்படி சட்டத்தின் நல்ல கருத்துக்களை நாடெங்கும் பரப்புவது அவசிய மாகும்.

யின்றி அவனுடைய குடும்பமும் தீச் செயலில் இறங்க நேரிடுகிறது. இது குற்றத்தைத் தடுக்கும் முறையாகாமல் குற்றத்தை வளர்க்கும் முறையேயாகும். நன்னடத்தை விடுதலையால் அவன் குடும்பம் காக்கப்படுகிறது. அவனுக்குச் சிறை சென்றவன் என்னும் அவப் பெயரும் அணுகாது.

மற்றும் ஒரு முக்கிய விளைவு

இன்னா செய்தார்க்கும்
இனியவை செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு

—குறள்


தமிழக அரசின் முழு மூலதன ஆதரவில் கைதேர்ந்த நெசவாளர்களால் நடத்தப்பட்டு வருவதுதான்

# சென் கோப்டெக்ஸ் AA-399

படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள், டர்க்கி துண்டுகள் தயாரிப்பாளர்கள்.

தந்தி : CHENCOPTEX — தொலை பேசி : 43.

சென்னிமலை தொழிலியில் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம். லிட். No. AA-399, சென்னிமலை.

S. சென்னியப்பன்,
தலைவர்.

P. K. கணேசன்,
கூட்டுறவு உப பதிவாளர்
காரியதரிசி.

நல்ல ஆடை அணிகலன்கள்

நவநாகரீகத்தின் அடையாளம் !

நேர்த்தியான ஆடைகளுக்கான நல்ல இழை நூல்களை

உற்பத்தி செய்பவர்கள்

# தஞ்சாவூர் டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்

அஞ்சல் பெட்டி எண் : 23,

தஞ்சாவூர்.

(பருத்தியில் 20 நெம்பர் முதல் 100 நெம்பர் நூல் வரை தயாரிப்பவர்கள்)

கே. திருவேங்கட முதலியார்,
நிருவாக இயக்குநர்.

தந்தி : GOODYARN.

தொலைபேசி எண் : { தஞ்சாவூர் : 325.
சென்னை : 83443.

சென்னை அலுவலகம் :

3-வது மாடி, " சோர்தியா மாளிகை "

150-ஏ, மவுண்ட் ரோட்,

சென்னை-2

# வெண்பாப் போட்டி

## 8. ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து எனுந்தலைப்புக்(கு)
அன்றுதித்த வெண்பா அமுதமிதாம்—தென்னாட்டில்
வன்சாதி எல்லா மதங்கடந்து நீதிவழி
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

ஆண்ட தமிழர் அழகில் தமிழகத்தை
ஈண்டுயர்வில் ஆளுகிறார் இன்புறவே—நீண்டுலகில்
அன்பின் கலைஞரவர் ஆட்சிக் குறுதுணையாய்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

சாதி மதங்கடந்து சாத்திரமெல் லாங்கடந்து
நீதி தவறா நெறிதொடர்ந்து—மேதினியில்
என்றும் மனிதன் இனத்தில் இனம்பிரியா (து)
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

ஏற்புடைய கற்பில் இணைந்தார் மணவாழ்க்கை
நோற்புடையோர் பெற்று நுகர்பயனாம்—போற்றுதலில்
அன்பில் இளையாது ஆண்பெண் துணைநலத்தே
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

பாயும் புலியும் பயனற்ற தீயவினை
தோயும் மதியின் தொடர்பொன்றே—தீயுருவில்
நன்றென் வினையெல்லாம் நாடிகழும் அவ்வினைவிட் (டு)
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

எல்லாம் பெரியார் இயல்பே அவர்வகுத்த
வல்லமையில் ஞாலம் வளருதலால்—வல்லவராம்
தன்மையிலே அப்பெரியார் தாள்பணிந்து ஓங்குநிலை
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

கற்றாரே ஞாலம் கணித்தறிவர் நற்றெளிவு
பெற்றாரைப் பற்றியவர் பின்செல்வர்—அற்றாலும்
மன்னர் குடிமையுறும் மாண்படக்கம் அத்தெளிவில்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

மானம் இழத்தல் மதியிழத்தல் மாந்தருறும்
ஞானம் இழத்தல் நலமிழத்தல்—ஊனமதே
உன்னுந் தொழிலாய் உலகலையும் பேதமையற் (று)
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

தோய்ந்த நிலத்தே துலங்கும் வளம்போன்று
வாய்ந்த குடிகள் வரிசையதாம்—காய்ந்தநிலம்
நன்னீர் மழையால் நலம்விளைக்கும் அக்குடிபோல்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—புலவர் சி. துரைசாமி, சென்னை–35

சுயாட்சி சமத்துவத் தண்டமிழ் நாடாய்
உயர்வுபெற நாமோ உழைப்போம்—முயற்சியிலே
என்றென்றுஞ் சோரா (து) இருந்தே நலங்காண
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—வ. இராசசேகரன், சென்னை–7

ஏற்றத்தாழ் வற்ற எழிலுடைய பூங்காவாய்
மாற்றித் தமிழ்நாட்டின் மாண்புயர்த்தி—மாற்றாரும்
நன்றே யெனப்போற்ற நம்மின் நலம்பெருக்கி
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—வி. மு. உலகநாதன், சென்னை–7

ஒன்றுபட்ட மெல்லிதழ்கள் சேர்ந்தோர் மலராகி
வென்றுவிட்ட வீரனைப்போல் வீரமுடன்—தென்றலிட்ட
மன்றத்தின் நின்றாடும் பொழிலாகிச் சேர்ந்தெல்லாம்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து .

—ந. இராதாகிருஷ்ணன், காஞ்சிபுரம்

---

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :

புலவர் சி. துரைசாமி,
36, கால்வாய்க் கரைத் தெரு,
சி. ஐ. டி. நகர்,
சென்னை-35.

இன்றுமலர்த் தேனெடுத் தின்பமுறும் ஈயினங்கள்
நன்றுபக லாயுழைத்து நானிலத்தில்—ஒன்றித்து
நன்றினிக்கும் தேனீந்து நல்லுணவு செய்வதுபோல்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—ஏ. வி. சாமுவேல், ஆத்தூர்

அன்பு அருளிரக்கம் ஆற்றலுடை நல்லறத்தோ (டு)
என்பும் பிறர்க்காக்கி, ஏற்றமிகு—பண்புடனே
நின்றுலக வாழ்வில் நிலைத்தபுகழ் வந்தெய்த
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—சடையப்பன், ஆனத்தூர் அஞ்சல்

சண்டையிட்டுச் சண்டையிட்டே இந்தியமே துண்டுபட
அண்டையர்கள் ஆட்சியிலே வாழ்ந்திழிந்தோம்—நன்றி துவோ?
இன்றுதொட் (டு) இந்நெஞ்சில் நட்புணர்வு கொண்டென்றும்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து

—இராசவேலன், காஞ்சிபுரம்-1

முல்லை அரும்பே! முழுநிலவே! தெள்ளமுதச்
சொல்லால் வடித்த சுவைத்தமிழே—மெல்லிடையே!
என்றும் பிரியாமல் இல்லறமாம் நல்லறத்தில்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—காங்கேயன், வெங்கல்பாளையம்

வெண்ணீ றணிந்துலகில் வாழ்ந்தாலென்? அல்லாவை
எண்ணித் தொழுதாலென்? ஏசுபிரான்—ஒண்சிலுவை
மண்டியிட்டு நின்றாலென்? மானிடருள் வேற்றுமையேன்?
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—வை. மறைமணி, புதுக்கோட்டை-2

பண்டைத் தமிழனது பண்புயரப் பாட்டாளி
கொண்ட வறுமை குலைந்தோடத்—தண்டமிழால்
இன்று நமையாள் கலைஞர் அரசுடனே
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—வை. நடராசன், திருமலைராயன்பட்டினம்

கண்ணளிக்கும் ஆசிரியர் கட்டத்தைப் போக்குதற்கு,
நண்ணிய சம்பளத்தை நல்கியே—தண்ணளியாய்த்
துன்பத்தைப் போக்கவல்ல தூய்மையுள்ள நம்மரசில்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—பி. வெங்கடாசலம், ஆவத்திப்பாளையம்

மூதறிஞர் நாட்டிலின்று மூட்டிவிட்ட சாதிவெறித்
தீதகல; நாடு செழித்தோங்கப்—பேதமின்றி
இன்பத் தமிழ்நாட்டில் எல்லாரும் ஓரினமாய்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—குழ. அண்ணாமலை, கோவை

பகைமறந்து சாதிமறந்து மதம்மறந்து கொள்கை
வகைசிறந்த தென்புலத்தார் வாழத்—தொகை சிறந்து
நன்றுமட்டும் எண்ணி நயத்தக்க நாம்படைக்க
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—எழில்மாறன், நரிக்கல்பட்டி

வாட்டும் பசியை, வருத்துகின்ற நோயதனை
ஓட்டும் பணியில் ஒழிவின்றி—ஆட்சியினர்
நன்றாய் உழைக்குமிந் நாளதனில் எல்லாரும்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—ஏ. காந்தி, தேவத்தூர் அஞ்சல்

தேர்தல் பகைமறந்து, தீமை விரைந்தொழிய
ஆர்வமுடன் நித்தம் ஆய்பணிகள்—நேர்மையுடன்
என்றென்றும் செய்தே எழிலார் வளநாட்டில்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—சுப்பராயலு, பெரியகுளம்

மன்றம் மணக்க மலர்புலமை காட்டுமெழில்
தென்றல் நடைக்கலைஞர் சீராட்சி—நன்றுசெயப்
பொன்றாப் புகழ்குவியப் பொன்வாழ்வு மின்னலிட
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—புலவர் முத்துவேங்கடேசன், திருமயம்

தேர்தலெனும் சூறை திருநாட்டில் மோதிவிட்டுப்
போரோய்ந்து போனதுபோல் போயிற்றே—யாருமினி
நன்றாற்றி நம்முதல்வர் நல்லவழி பின்பற்றி
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—புலவர் க. நாகேஸ்வரன், திருத்தணி

அன்றிருந்த காந்திமகான் அண்ணாவின் நல்வழியில்
சென்றே செயல்படுவோம் செந்தமிழா—என்றும்நாம்
வென்றவர்கள் தோற்றவர்கள் வேற்றுமையைத் தான் [மறந்து
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—வெ. நடராசன், சுந்தராபுரம்

வேற்றுமை எண்ணங்கள் வேரறுத்து, நாட்டினில்
ஏற்றமுங் காண எழுவீரே—தோற்றவரும்
வென்றவருங் கூடியே வெல்வோம் வறுமைதனை!
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—ஏ. பார்த்தசாரதி, கரூர்

கொன்றன்ன செய்தாலும் குற்றங் களைமறந்தே
நன்றெண்ணி வாழ்கவென்றே நற்குறள்—என்றென்றும்
நன்றே உளமதனில் நாம்பதித்துக் கொண்டோமேல்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—நாகு. ஆறுமுகம், அரிக்காரன்வலசு

தமிழின் வளங்காத்துத் தன்மானங் காத்துத்
தமிழர் நலங்காத்தே ஆளும்—தமிழர்க்கே
என்றும் துணையாக இங்கே தமிழரெல்லாம்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—சிவ. அம்பிகாபதி, சென்னை–15.

வென்றவர்கள் யாரெனினும் வீழ்ந்தார்நாம் காழ்ப்பின்றி
நன்றுளத் தந்திடுவோம் நல்லுரைகள்—சென்றபகை
கொன்றொழிப்போம் மக்களுக்காய்க் கூடிப் பணிபுரிவோம்
ஒன்றாக வாழ்வோம் உவந்து.

—அழகம்மாள் செல்லமுத்து, புதுக்கோட்டைஅஞ்சல்.

இன்று தமிழர் இயற்றுகின்ற நல்லாட்சி
என்றும் உலகியலில் ஏற்றமுற—நன்றுழைத்துக்
கன்றுக்குத் தாய்ப்பசுதான் காட்டுமுயர் அன்பேபோல்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—புலவர் சி. இரத்தினவேலனார், சென்னை–19.

ஒன்றாய் உயிராய் உடன்வாழ்ந்த நான்கெருதை
ஒன்றொன்றாய்ச் சிங்கம் உறழ்வூட்டித்—தின்றகதை
நன்றாய் உணர்வோமேல் நாட்டில் நலம்விளைய
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—சு. நாராயணசாமி, திருச்சி–3

மூவேந்தர் நாளினிலே மூண்டிட்ட வெம்பகையை
நாவேந்தர் பாடினார் நற்பயனென் ?—கோவேந்தர்
ஒன்றாய் இவர்குறையை ஒண்டமிழர் நாமொழித்தே
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—அ. சுந்தரேசன், மேட்டுப்பாளையம்.

தீமை புரிந்தொழுகும் தீயோரை மன்னிப்போம்
ஆமைபோல் ஐந்தடக்கி ஆண்டிடுவோம்—ஊமையாய்
பின்தங்கி வாழ்ந்தாரைப் பேணிப் பயன்படுத்தி
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—வெ. இரா. இராசகோபாலன், காவேரிநகர்.

உள்ளத்தால் சேர்ந்தாலும் ஊரலரால் தூற்றலுற்றோம்
வெள்ளம்போல் வந்தெதிர்த்தோர் மீண்டுவந்து—தள்ளாது
மன்றமணப் பந்தரிலே மாமணச்சீர் கூட்டுவதால்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—மு. சிக்கந்தர், கோரிக்கடவு.

தங்கத் தமிழைத் தடையின்றிக் கற்றுநாம்
மங்காப் புகழ்பெற்று மாவீரர்—வங்கர்போல்
வென்று பகையை விரட்டிடுவோம் ; எந்நாளும்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—வாசு, கணேசன், விழுப்புரம்.

தேர்தல் புயலொய்ந்து தென்றல் தவழ்வதுகாண் ;
தீர்ப்பளித்தார் முன்னணிக்கே தீந்தமிழர்—ஆர்த்தெழுவோம்
குன்றா(து) உழைத்திடுவோம் கோடி நலம்துய்ப்போம்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—ந. செனார்த்தனன், அரக்கோணம்.

நாடு நமக்கென்ன நற்பணிகள் செய்ததென்று
கூடிக் குரலெழுப்பிக் கூவாமல்—நாடுய்ய
முன்னின்று பாடுபட்டு முன்னேற்றம் கண்டுமனம்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—துறவி, சென்னை 12.

பள்ளிக் கணக்கில் பயிலும் முதலெண்ணை
உள்ளித்தான் காதலர்கள் ஒன்றினரோ—பள்ளிதனில்
ஒன்றாமல் ஒன்றுண்டோ ஊரில் ; எனவேநாம்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—சி. சௌ. கருப்பன் செட்டி, திருச்சி–16.

சாதிமுறை போக்கிச் சமதர்மம் தோற்றுவித்து,
வீதிமுறை வாழ்வோரை மேம்படுத்தி,—ஓதுதமிழ்
நின்று செழிக்கும் நிலைசெய்தே, எந்தமிழீர் ;
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—புலவர் த. வாசுதேவன், நயினார்பாளையம்.

ஏழையெனச் செல்வத்தின் ஏந்தலென வாழ்வதற்(கு)
ஊழையொரு ஏதாய் உரைப்பவர்கள்—பீழையுற
நன்றுசமு தாயத்தை நேர்வழியிற் கொண்டுசெல்ல
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—மாதையூரான், திருவாமாத்தூர்.

நன்றுசெயும் நல்லரசை நாம்பெற்ற காரணத்தால்
வென்றுவிட்டோம் வேதனையை வேல்விழியே—இன்றேநாம
மன்றம் முழங்கிவரும் மாநிலத்தன் னாட்சிபெற்றே
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—இரா. கூத்தரசன், காவேரிநகர்.

கைவிரல்கள் ஐந்தும் தனித்திருந் தேயிணையும்
மெய்வலியே மேன்மைகொள் தன்னாட்சி—பொய்மையிலை
இன்றுதொட்டே அம்முழக்கம் எல்லாரும் செய்தடைந்தே
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து

—வி. இராமலிங்கம், நாங்குநேரி.

ஒன்றே குலமா யொருவனே தேவனாய்
என்றே அனைவரும் எண்ணிநாம்—நன்றாய்
உறவுக்கே ஒன்றி உரிமைக் குரலீந்து
ஒன்றுபட்டு வாழ்வோ முவந்து.

—வெ. சொக்கலிங்கம், ஒரத்தி.

செஞ்சொற் கலைஞருடை சீர்மேவு மாட்சியிலே
நெஞ்சினிக்க நற்பணிகள் செய்கின்றார்—வஞ்சமிலை
நன்செய்யும் புன்செய்யும் நன்கு விளைவுதர
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—பெ. கோவிந்தசாமி, விழுப்புரம்

நின்றபுகழ் நம்நாட்டி லென்றும் நிலைத்திடவே
அன்றண்ணன் பெற்றிட்ட ஆட்சிதனைக்—குன்றாமல்
நன்றாகப் போற்றிவரும் நம்கலைஞர் கையோங்க
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—அ. க. சண்முகசுந்தரம், சேயாறு.

உள்ளத்தால் ஒன்றானேம் ; ஒவ்வாதுன் சாதியென்றார் ;
அள்ளக் குறையாநம் அன்பினையே—கொல்லத்தான்
கன்றி வருங்கூற்றைக் கொன்றழித்(து) என்றுமிங்கே
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—செ. நாராயணன், சென்னை-14.

வீணையில் நாதத்தை வெட்டிப் பிரிப்பதுபோல்
ஆணையிட்டுக் காதல் அறுத்தனரால்—ஊனஉயிர்
ஒன்றுதல் போல்ஒன்றி என்றும் இறப்புலகில்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து

—கி. க. இராசேந்திரன், சென்னை-7.

பண்டிருந்த பொற்காலம் பார்க்கத் துடிதுடித்து
நின்றிருக்கும் வேளை நினையாயோ—கொண்டிருந்த
வன்பகையை நீமறந்து வருவாய் உலகத்தில்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—வி. பெ. ராமசாமி, சென்னை-18.

சிந்தனையில் சீர்த்திறமும் செந்தமிழின் கூர்அறமும் ;
நிந்தனையோ ஏதுமிலை நெஞ்சினிலே—வந்தனைசெய்
என்றுசொல்லி வாட்டமிலா ஏற்றமிகு ஆட்சியினில்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—து. ம. ராமசாமி, துடியலூர்.

நன்றி மறவாமல் நாளும் சரியாமல்
குன்றில் ஒளிரும் விளக்கேபோல்—வென்றிமிகச்
சென்றெட்டு மாதிரமும் செந்தமிழின் சீரோங்க
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—வெ. ப. கிருட்டிணமூர்த்தி, சிவகாசி.

தண்டமிழ்த்தாய் ஒன்றே தமிழர் மலையாளர்
ஒண்தெலுங்கர் கன்னடர்கள் ஓர்குடும்பம்—பண்புடனே
வென்றி வினைபுரிய வெற்றிக் கனிகொணர
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—அ. கிருஷ்ணன், கனியூர்.

பூத்துக் கமழும் பகுத்தறிவுத் தத்துவத்தைப்
பாத்திறமை யில்பகர்ந்த பார்வேந்தன்—மாத்தமிழன்
அன்னவன்தன் நல்வழியாம் அன்புவழி பின்பற்றி
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—பரணன், பந்தநல்லூர்

செந்தமிழ் நாட்டிலுறை செல்வருடன் ஏழைகளும்
பைந்தமிழ் வல்லாரும் பாமரரும்—செந்தமிழ்த்தாய்க்
கென்றும் டணிபுரிய எங்கலைஞர் சொல்வழியே
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—நா. தணிகை அரசு, காஞ்சிபுரம்

எங்கும் தமிழ்மணக்கும் ; என்றும் வளம்பெருக்கும் ;
பொங்கும் மகிழ்விருக்கும் ; பொன்மனம்—இங்கிருக்கும்
நன்றாய் நலமாய் நமக்கென்றும் நல்வாழ்வாய்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—நா. அழகர்சாமி, தா. வாடிப்பட்டி.

செந்நெல் வயல்கொழிக்கச் சீரணைத்தும் நாடுபெறக்
கன்னல் தமிழரசு கண்டாளும்—இந்நிலத்தில்
தொன்றுதொட்டு நின்றிலங்குந் தூயபண்பு மாறாமல்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—க. ரத்தினம், ஆயக்காரன்புலம்-2.



# ஏர்-இந்தியா

## அறிவிக்கின்றனர்:

# கட்டணங்களிலே கணிசமான குறைப்பு!

எமது (அ பினிடி க்ரூப்) இன ஒருமைக் குழுப் பயணத் திட்டத்தின் கீழ், தீவிரமான கட்டணக் குறைப்புகளை வழங்குகின்றனர் ஏர் - இந்தியா. பல துறைகளுக்கு இந்த இறக்கம் ரூ. 2000/-க்கு மேற்படும்.

### இன ஒருமைக் குழு (அஃபிடினி க்ரூப்) என்பது என்ன?

பயணம் அல்லாத, பொதுவான பிற நோக்கங்களையோ, அலுவல்களையோ கொண்டதாய், பயணத்திற்கு 6 மாதங்களுக்கு முன்பிருந்தே இயங்கிவரும் ஒரு சங்கம் அது. அமெரிக்க நாடுகளுக்குப் பயணம் செய்வதானால், அச் சங்கம் குறைந்தபட்சம் இரு ஆண்டுகளாவது இயங்கிவந்திருக்க வேண்டும்.

உதாரணங்கள் : கலைத்துறை, இன்னிசை, விஞ்ஞானம், பொறியியல், மருத்துவம், உணவியல் போன்ற கல்வி நிறுவனங்கள்; வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், அறுவை சிகிச்சையாளர்கள், நோய்க் குறி ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், கலைஞர்கள் போன்றோரின் தொழிற் குழுக்கள்; லயன்ஸ் க்ளப், ரோட்டரி கிளப் போன்றவை, விளையாட்டுக் கழகங்கள், ஜிம்கானாக்கள், பாடகர் குழாம்கள், நாடக இன்னிசை மன்றங்கள் முதலானவை.

### குறைந்த பட்சத் தேவைகள் :

மேற்கூறிய எந்த ஒரு இன ஒருமைக் குழுவிலும், பயணத்திற்கு முன் குறைந்த பட்சம் 6 மாதங்களாவது உறுப்பினராக இருந்தால்தான், இந்தக் கட்டணக் குறைப்பைப் பெற உரித்தாவீர்கள். பயணமுழுதுமே நீங்கள் உங்கள் குழுவுடன் சேர்ந்துசெல்லத் தேவை; அக் குழுவோ 15 பேருக்குக் குறையாதிருக்கவேண்டும்.

இன ஒருமைக் குழுப் பயணத் திட்டத்தின் கீழ் பெருமளவான கட்டணக் குறைப்பைத் தருவதோடு மட்டுமல்ல; கடந்த 3 ஆண்டுகள் நீங்கள் வெளிநாடு செல்லாதவராக இருப்பின், தமக்கே உரித்தான உயர்தனிப்பெரும் நலன்களை உங்களுக்குத் தருகின்றனர் ஏர்-இந்தியா.

| | அஃபினிடி க்ரூப் கட்டணங்கள் (எல்லாக் கட்டணங்களும் இந்திய ரூபாய்களிலே) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| செல்லுமிடம்: | பம்பாய் | | கல்கத்தா | | டெல்லி | | சென்னை | |
| | சாதாரண ரிடர்ன் கட்டணம் | அஃபினிடி ரிடர்ன் கட்டணம் | சாதாரண ரிடர்ன் கட்டணம் | அஃபினிடி ரிடர்ன் கட்டணம் | சாதாரண ரிடர்ன் கட்டணம் | அஃபினிடி ரிடர்ன் கட்டணம் | சாதாரண ரிடர்ன் கட்டணம் | அஃபினிடி ரிடர்ன் கட்டணம் |
| ஆம்ஸ்டர்டாம் ... ... | 5984 | 4189 | 6732 | 4713 | 5984 | 4189 | 6650 | 4655 |
| ஃப்ரான்க்ஃபர்ட் ... ... | 5984 | 4189 | 6732 | 4713 | 5984 | 4189 | 6650 | 4655 |
| பாரிஸ் ... ... ... | 5984 | 4189 | 6732 | 4713 | 5984 | 4189 | 6650 | 4655 |
| ப்ரேக் ... ... ... | 5984 | 4189 | 6732 | 4713 | 5984 | 4189 | 6650 | 4655 |
| ஜெனீவா/ஜுரிச் ... ... | 5895 | 4127 | 6646 | 4653 | 5895 | 4127 | 6561 | 4593 |
| ரோம் ... ... ... | 5233 | 3664 | 6027 | 4219 | 5233 | 3664 | 5899 | 4130 |
| மாஸ்கோ-நேராக டெல்லி வழி | 4986 | 3491 | 5633 | 3944 | 4938 | 3457 | 5652 | 3957 |
| " மத்தியகிழக்கு/ஐரோப்பா வழி | 7704 | 5393 | 8498 | 5949 | 7704 | 5393 | 8370 | 5859 |
| லண்டன் ... ... ... | 6070 | 4249 | 6821 | 4775 | 6070 | 4249 | 6736 | 4716 |
| நியூ யார்க் ... ... ... | 9210 | 5603 | 9615 | 5963 | 9210 | 5603 | 9615 | 5963 |
| கோலாலம்பூர் ... ... | 2915 | 2041 | 2207 | 1545 | 2736 | 1916 | 2339 | 1633 |
| நாந்தி ... ... ... | 8649 | 6055 | 8073 | 5652 | 8649 | 6055 | 7987 | 5591 |
| பெர்த் ... ... ... | 6133 | 4294 | 5561 | 3893 | 6133 | 4294 | 5471 | 3830 |
| சிங்கப்பூர் ... ... ... | 2915 | 2041 | 2385 | 1670 | 2915 | 2041 | 2339 | 1638 |
| ஸிட்னி ... ... ... | 7015 | 4910 | 6441 | 4509 | 7015 | 4910 | 6354 | 4443 |
| டோக்யோ ... ... ... | 5912 | 4139 | 5206 | 3645 | 5604 | 3923 | 5427 | 3799 |

முழு விவரங்களையும், இக் கட்டணங்களுக்கு உரிய இதர நிலையங்களின் பட்டியலையும் பெற, உங்கள் அருகமைந்த எங்கள் 56 அலுவலகங்களில் ஒன்றுக்கோ, உங்கள் பிரயாண ஏஜண்டுக்கோ இக் கூப்பனை அனுப்புக.

ஏர்-இந்தியா அஃபினிடி க்ரூப் பயணத் திட்டம் பற்றிய இலவசத் தகவலேடுகளை எனக்கு அனுப்புக.

பெயர் ........................................

எதன் உறுப்பினர் ........................................

முகவரி ........................................ TAM.

AI. 2623




இன்றைய தொழில் நுட்ப யுகத்தின் நாடி நரம்பாக இருப்பது எலக்ட்ரானிக்ஸ். பொறியியல், இரசாயன இயல், உலோக வியல் தொழில்களின் உற்பத்தி முறைகளில் இது முக்கிய இடம் வகிக்கின்றது. பழைய கம்பியில்லாத் தந்தி சாதனத்திலிருந்து தற்காலச் செய்திப் போக்கு வரத்து முறைகள், கம்ப்யூட்டர்கள், நாட்டுப் பாதுகாப்புப் பணிகள், அணு சக்தி, விண்வெளி நுட்பங்கள் வரை பல்வேறு துறைகளிலும் இது புரட்சிகரமான மாறுதல்களைச் செய்திருக்கின்றது.

நமது நாட்டில் எலக்ட்ரானிக்ஸ் மூலமான முதன்மையான பலன் வானொலிப் பெட்டிகளாகும். இந்த வானொலிப் பெட்டித் தொழில் நன்கு வேரூன்றி நிலைத்துவிட்டது.

இயந்திரங்கள், கருவிகள் முதலிய வகையில் ரூ. 7·5 லட்சத்துக்கு உட்பட்ட முதலீடு உள்ளவை சிறு தொழில்கள் என்ற விளக்கத்தின் படி எலக்ட்ரானிக்ஸ் தொழில் சிறுதொழில் வகையில்சிறப்பிடம் வகிக்கின்றது. நமது நாட்டிலும் அயல்நாடுகளிலும் தொழில்நுட்ப நுணுக்க முறைகளின் வேகமான வளர்ச்சி காரணமாக, சிறு தொழில் முனைவர்களுக்கு அரிய தொரு வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது. பெரிய அளவில் முறையாக அமைந்த தொழில் நிறுவனங்கள் மட்டுமே செய்ய இயலும் என்று கருதப்பட்ட, பல உற்பத்திப் பொருட்களை, சிறு தொழில் முனைவர்கள் உற்பத்தி செய்ய முடியும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒரு சில துணைக் கருவிகள், துல்லியமான நுட்ப இயக்கங்கள் கொண்ட இணைப்புக் கருவிகள் நீங்கலாக மற்றப் பெரும்பாலான துணைக்கருவிகளை உற்பத்தி செய்யக்கூடிய திறனைச் சிறு தொழில்கள் பெற்றுள்ளன. சில அயல் நாடுகளின், குறிப்பாக ஜப்பான் நாட்டின் தொழில் நுட்ப ஒத்துழைப்பு, இந்த நம்பிக்கையையும் திறனையும் வலுப்படுத்தியிருக்கிறது.

## டெலிவிஷன் பெட்டிகள்

டெலிவிஷன் பெட்டிகள், சிறப்புக்கருவிகள், கார் ரேடியோ, நாடா ஒலிப்பதிவு, சில குறிப்பிட்ட வகை ஒலிபெருக்கிகள், எலக்ட்ரானிக்ஸ் போட்டோ ஃப்ளாஷர்கள், வால்யூம் கண்ட்ரோல், போன்ற நுண்ணிய கருவிகளைச் செய்யும் சிறு தொழில்கள் நாட்டில் தோன்றி விட்டன. இந்தப் பொருட்களில் சில, ஏற்றுமதி செய்யப்படும் நிலையில் இருக்கின்றன.

சிறு தொழில் உற்பத்தியில் வகையான முறையில் இடம் பெறக்கூடிய சில வகைக் கருவிகள் விவரம் கீழே தரப்படுகின்றது.

கருவி உறுப்புகள் என்ற வகையில் மெட்டல் ஆக்சைடு ரெசிஸ்டர்கள், பாலி கார்பனேட் கபாசிட்டர்கள், அலுமினியம் கபாசிட்டர்கள், வேரியேட்டர்கள், கனெக்டர்கள், பவர் பாக்குகள், பாட்டரி எலிமிநேட்டர்கள் ஆகியவைகளைச் சிறு தொழில் அமைப்புகளில் தயாரிக்கலாம். ஒலிக் கருவிகள், செய்திக் கருவிகள் என்ற வகையில் நாடா ஒலிப் பதிவுகள், இசைத்தட்டு இயக்கிகள், ஒலி பெருக்கிகள் முதலியவற்றைச் செய்ய இயலும்.

மருத்துவ எலக்ட்ரானிக்ஸ் என்ற முறையில் டயாதமி, தசை ஊக்குவிப்புக் கருவிகள், பி. செ. மீட்டர்கள், எலக்ட்ரானிக்ஸ் ஈ பிடிப்பான், காது மிஷின்கள், ஸ்டெலிலைசர், ஆபரேசன் விளக்குகள் முதலியவைகள் உற்பத்தி செய்யலாம்.

### கம்ப்யூட்டர்கள் இணைப்பு

இக் கருவிகளைத் தயாரிப்பதற்கான செய் முறைகளை நம் நாட்டிலேயே அறிந்து கொள்ள வசதி இருக்கிறது. ரயில்வே சிக்னல், செய்திப் போக்குவரத்துக்கருவிகள், மைக்ரோ வேவ் கருவிகள், கம்ப்யூட்டர்கள் இணைப்பு முதலியவைகளில் கருவிகள் செய்ய இங்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளன.

எலக்ட்ரானிக்ஸ் தொழில்கள் சம்பந்தப்பட்ட சில செயல்நடை முறைகளைக் கீழ்க்கண்ட தேசீய ஆய்வுக் கூடங்கள் உருவாக்கியுள்ளன.

1. மத்திய எலக்ட்ரானிக்ஸ் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம் பிலானி, ராஜஸ்தான்:—இந்த நிறுவனத்தின் சிறப்பானபொருள் வகைகள் டெலிவிஷன் பெட்டிகள், சிக்னல் ஜெனரேட்டர், மைக்ரோவேவ் துணைக் கருவிகள், மைக்ரோ போன், நாடா ஒலிப் பதிவுகள் முதலியன. செய்முறையை விளக்குவதிலும், தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்குவதிலும் இந்த நிறுவனம் உதவ முடியும்.

2. காரைக்குடியில் உள்ள எலக்ட்ரோ மெடிக்கல் ஆராய்ச்சி நிறுவனம்—டின் ஆக்சைடு ரெசிடைர்கள், டிரை செல்கள், சீலிட்ட வகை நிசிடி பேட்டரி ஆகியவற்றை உருவாக்குவதில் இது சிறப்பிடம் வகிக்கின்றது.

3. தேசீய இரசாயன ஆய்வுகூடம், பூனா-8—இதில் தெர்மிஸ்டர்கள், கடினமான, மென்மையான பெர்ரைட்ஸ், சி.டி. எஸ். போட்டோ செல்ஸ், சிலிகான் டெட்ரோ குளோரைடு, எலக்ட்ரானிக்ஸ் கருவிகள், போலரோகிராப் முதலியவைகள் உருவாக்கு முறைகள் உள்ளன.

### காந்தப் பெட்டி

4. தேசீய பௌதிக ஆய்வுக் கூடம், புதுடில்லி:—இதில் காந்தக் கருவிப் பொருட்கள், நிக்கல், ஜிங்க் பெர்ரைட் பொருட்கள், மைக்ரே வேவ் பொருட்கள் உடைப்புகள் விரிசல்களைக் கண்டறிய காந்தப் பொடி முதலிய பல வகைப் பொருட்கள் தயாரிப்பு முறை இருப்பது குறிப்பிடத் தக்கது. சோதிப்பதற்கான கருவிகளும் இந்த ஆய்வுக்கூடத்தில் உள்ளன.

5. திடநிலை பௌதிக ஆய்வுக்கூடம், டில்லி:—இதில் நிக்கல் காட்மியம் செல்கள், சோலார் செல்கள், வேரியேட்டர் டையோடின், தெர்மோ எலெக்ட்ரிக் ஜெனரேட்டர்கள், மைக்ரோ வேவ் பெர்ரைட்டுகள் முதலியன செய்முறை குறிப்பிடத்தக்கது.

வானொலிப் பெட்டிகள், எலக்ட்ரானிக்ஸ் கருவிகள், ஒலி பெருக்கிகள், கபாசிட்டர், ரெசிஸ்டர், சுவிச்சுகள், டிரான்ஸ்பார்மர்கள் முதலிய முக்கியமான எலக்ட்ரானிக்ஸ் கருவிவகைகளுக்காக இந்திய தர நிர்ணய நிறுவனம் 150க்கு மேற்பட்ட தர வரையறைகளைக் குறிப்பிட்டுள்ளது. இத்தொழில் வளர்ச்சிக்கும் தொழில் முனைவோர்களுக்கும் இவை பெரிதும் பயன்படும்.

### எலக்ட்ரானிக்ஸ் தொழில் மையம்

எலக்ட்ரானிக்ஸ் தொழில்களுக்காகத் தமிழ்நாடு அரசாங்கம் அமைத்த அலுவல் குழு, எலக்ட்ரானிக்ஸ் துணைக் கருவிகள் வகையில் 24 பொருட்களையும், மருத்துவ எலக்ட்ரானிக்ஸ் வகையில் 17 பொருட்களையும் குறிப்பிட்டுள்ளது. தமிழ்நாட்டில் இவற்றுள் பல பொருட்களைச்சிறு தொழில்கள் மூலம் உற்பத்தி செய்யலாம். சாத்தியக்கூறு அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டுள்ளன.

சென்னை அடையாறு தொழில் நுட்பநிறுவனங்களின் மையத்தில் எலக்ட்ரானிக்ஸ் தொழில்மையம் ஒன்றை அமைக்க எண்ணியிருக்கிறது. இப்படித் தொடங்கினால் அண்மையிலுள்ள பல்வேறு தொழில் நுட்ப நிறுவனங்களையும் இதன் வளர்ச்சிக்கும் செயல் முறைக்கும் முடிந்த அளவு பயன்படுத்திக் கொள்ள இயலும்.

இந்த நாட்டிலும் அயல் நாடுகளிலும் செய்முறைத் தொழில் நுட்ப உதவிகள் கிடைக்கும் நிலையினாலும் உள்கட்டுக் கோப்புக்கான வாய்ப்பு வசதிகள் இருப்பதினாலும் அரசு நிறுவனங்களின் உதவியினாலும், சிறு தொழில் துறையில் எலக்ட்ரானிக்ஸ்தொழிலுக்கு ஒளிமயமான வருங்காலம் உள்ளது என்று உறுதியாகச் சொல்லலாம்.

# நெற்பயிரையும் களையையும் வேற்பிரித்தறிவது கடினமானதால், நாங்கள் களையை மட்டும் ஒழிக்கும்

# ஸ்டாம் F-34

## தயாரித்திருக்கிறோம்



**களையைப் பிய்த்தெடுக்கும்போது நிறைய நெற்பயிர்களும் பிய்ந்து வருகின்றன அல்லவா? மேலும், கையால் பிய்த்தெடுப்பது சிரமமான காரியம். நிறைய சமயம் விரயமாகிறது. களையை அறவே ஒழிக்கவும் முடியாது. ஆகவே புது வழியைப் பின்பற்றி களைகொல்லியான ஸ்டாம் F-34 தெளியுங்கள். அது நெற்பயிர்களுக்கு ஒரு கெடுதலும் விளைவிக்காமல் களையை மட்டுமே ஒழிக்கிறது. இதன் பயனாக நெற்பயிர் அதிக ஆரோக்கியமானதாகச் செழித்து வளரும். உங்கள் வருவாயும் பெருகும்.**

**ஸ்டாம் F-34 — குறைந்த செலவில் துரிதமாக களையை மட்டும் ஒழிக்கும் அற்புத களைகொல்லி!**




**இண்டோஃபில் கெமிக்கல்ஸ் லிமிடெட்**
**பம்பாய் 25, இந்தியா**

**STAM F–34 என்ற பெயரும், ஃப்ளாஸ்க்கின் சின்னமும், ரோம் அண்ட் ஹாஸ் கோ., ஃபிலடெல்ஃபியா, பா., வின் டிரேட் மார்க்குகள். இவை யு.எஸ்.ஏ. மற்றும் இதர நாடுகளில் ரெஜிஸ்டர் செய்யப்பட்டவை.**

விநியோகிப்போர் :

தி சைன்டிபிக் பெர்டிலிசர்ஸ் கம்பெனி (பி) லிட்., சுதர்சனம் : பொன்னுரங்கம் ரோடு,
ஆர். எஸ். புரம், கோயம்புத்தூர்-2. தொலைபேசி : 22854. தந்தி : NITROPHOS
கிளைகள் : உதகமண்டலம், சென்னை, மதுரை, கடலூர், திருச்சிராப்பள்ளி.



# அஞ்சவேண்டாம்!

நம்முடைய வாழ்வுக்கு, இயக்கத்துக்கு, நாம் செயல்படுவதற்கு—சக்தி தேவைப்படுகிறது. நாம் உண்ணும் உணவிலிருந்து சக்தியைப் பெறுகிறோம். உண்ணும் உணவில் உள்ள மூன்று வகையான உணவுச் சத்துக்கள் சக்தியை அளிக்கின்றன. அவை, மாவுச் சத்து, புரதச்சத்து, கொழுப்புச் சத்து எனப்படும். இவற்றுள் மாவுச் சத்துக்கள் நிறைந்த சர்க்கரை, ' அரிசி, கோதுமை முதலிய உணவுப் பொருள்கள் உட்கொண்டு குடலில் பல்வேறு செரிமானப் பொருள்களின் துணையுடன் செரிக்கப்பட்டு 'குளுகோஸ்' எனப்படும் பொருளாக மாற்றமடைந்து ஈரலை அடைகிறது. ஈரலில் இந்த 'குளுகோஸ்' மேலும் மாற்றம் அடைந்து சேமித்து வைக்கப்படுகிறது.

அவ்வப்போது ஈரலிலிருந்து கிளைகோஜீன் (மாற்றமடைந்த குளுகோஸ்) மறுபடியும் குளுகோஸாக மாற்றப்பட்டு இரத்த ஓட்டத்துடன் கலந்து உடலின் பல்வேறு பாகங்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. இவ்வாறு விநியோகிக்கப்படும் 'குளுகோஸ்' உடலுக்குச் சக்தி அளிக்கிறது. 'குளுகோஸ்' உடலுக்கு விநியோகிக்கப்படும்போது—உடலின் பல்வேறு நுண்ணறைகளிடையிலும் நுழையவேண்டும். அவ்வாறு நுழைவதற்கு ''இன்சுலின்'' எனப்படும் இயக்குமாற்றலுள்ள சுரப்பி நீர்—உதவுகிறது. மேலும் ஈரலில் சேமிக்கப்படும் 'குளுகோஸ்' கிளைகோஜீன் ஆக மாற்றப்படுவதற்கும் ''இன்சுலின்'' தேவைப்படுகிறது.

உடலில் 'இன்சுலின்'' இல்லாததால், அல்லது மிகவும் குறைந்துவிடுவதால்—

*(1)* 'குளுகோஸ்' சத்து ''கிளைகோஜின்'' ஆக மாற்றப்படாமல் ஈரலில் சேமிக்கப்படுகிறது. அது அப்படியே, குறிப்பாக உணவு உட்கொண்டவுடன், பெருமளவில் இரத்த ஓட்டத்தில் கலந்துவிடுகிறது.

*(2)* இரத்தத்திலுள்ள 'குளுகோஸ்' உடலின் நுண்ணறைகளில் புகுவதில்லை. அதனுல், 'குளுகோஸ்' சத்து உடலுக்குப் பயன்படாமல் வீணாகிறது; இரத்தச் சர்க்கரை அளவு மிகுதியாகிறது.

இவ்வாறு சிறுநீரில் சர்க்கரை வெளிப்படுவது—சக்தி வீணுவதற்கு அறிகுறியாகும். சாதாரணமாகச் சிறுநீரில் சர்க்கரை இருப்பதில்லை. உடலில் வீணுகும் சர்க்கரை தண்ணீரில் கலந்து சிறுநீரில் வெளியேற வேண்டியுள்ளது. எனவே நீரிழிவு நோயாளி (சர்க்கரை நோயாளி) மிகுதியாக, அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டியுள்ளது. இவ்வாறு சிறுநீர் வழியாக மிகுதியான தண்ணீர் வெளியேறுவதால் நோயாளியின் உடலில் தண்ணீர் குறைந்துவிடுகிறது. உடலுக்கு மிகுதியான தண்ணீர் தேவைப்படுகிறது. எனவே நோயாளிக்குத் தாகம் மிகுதியாக எடுக்கும். மிகுதியாகத் தண்ணீர் குடிப்பார். உடலில் சர்க்கரைச் சத்துப் பயன்படாமல் வீணுவதால் மிகுந்த பசி, சர்க்கரைத் தேவையை ஈடுசெய்ய முனைகிறது. நோயாளி நன்கு சாப்பிடுவார். உணவை விரும்பி உட்கொள்வார். நன்கு உணவுண்டபோதும் அவருடைய எடை குறைந்து கொண்டே போகும்.

எனவே, நீரிழிவு நோயாளி,

மிகுதியான சிறுநீர் கழிப்பார்.

மிகுதியான தண்ணீர் உட்கொள்வார்.

மிகுதியான உணவு உட்கொள்வார்.

பசி,

தாகம்,

மெலிவு

பலவீனம்—முதலியன நீரிழிவு நோயின் அறிகுறிகளாகும். நீரிழிவு நோய் முதிர்ந்த நிலையில் நோயாளி மயக்கம்—செயலற்ற நிலையை (Coma) அடைந்துவிடுகிருர்.

நீரிழிவு நோய்க்குச் சிகிச்சை அளிப்பதன் முக்கிய நோக்கம், இரத்தச் சர்க்கரை அளவைச் சமநிலையில் சாதாரண நிலையில் இருக்குமாறு பார்த்துக்கொள்வதேயாகும். இதற்கு,

உணவுக்கட்டுப்பாடு,

உடற்பயிற்சி,

''இன்சுலின்'' உடலில் செலுத்திக்கொள்ளுதல் (அல்லது) உடலில் 'இன்சுலின்' தோற்றுவிக்கும் மருந்து உட்கொள்ளுதல், நீரிழிவுநோய் அறிகுறிகளைக் கண்டறிந்து உரிய சிகிச்சை அளித்தல்.

போதைதரும் குடிவகைகளை விலக்குதல்

புகையிலை, புகை முதலியவற்றை விலக்குதல்.

—ஆகிய முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

நீரிழிவு நோய் உள்ளவர்கள் தங்கள் உணவு வகையில் கட்டுப்பாட்டுடன் நடந்து கொண்டால் இரத்தச் சர்க்கரையைச் சம அளவில் இருத்தி—உடல்

**1948, ஏப்ரல், 17-ஆம ததி உலக நல நிறுவனம் செயல்படத் துவங்கியது. ஒவ்வோராண்டும் இந்த நாளை ''உலக நல நாளாகக் கொண்டாடி வருகிறோம்.'' இவ்வாண்டு உலக நல நாளுக்கு ''நீரிழிவு நோய்க்குப் பின்னும் நிறைவாழ்வு''** (A full life despite Diabetes) **என்னும் கொள்கை குறிக்கப்பட்டுள்ளது.**

# புத்தணிபூண்டு புதிய பொலிவுடன் திகழ்கிறது – ஹேண்ட்லூம் ஹவுஸ்

(ஏர்-கண்டிஷன் வசதி கொண்டது)

இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும்
தருவிக்கப்பட்ட பல வகைப் பட்டுச் சேலைகள்,
திருமண பட்டுச்சேலைகள் மற்றும் இதர
ஆடைகள். உங்களுக்காகவே உள்ளன.
வாருங்கள், பாருங்கள், வாங்குங்கள்.

செல்லும் சாலைகளெல்லாம்
சேருமிடம்
**ஹேண்ட்லூம் ஹவுஸ்**
9, ரத்தன் பஜார்,
சென்னை-3



நிலையைச் சீராக வைத்திருக்கலாம். நோயாளி எடை குறைந்திருந்தால்-உணவு முழு அளவுக்கு உட்கொள்ள வேண்டும். மாவுப் பொருள் நிறைந்த சர்க்கரை, அரிசிச் சோறு, கிழங்கு வகைகள் முதலிய உணவு வகைகளைக் குறைத்துக்கொள்வது நல்லது.

உடற்பயிற்சி, சர்க்கரைச் சத்து உடல் நுண்ணறைகளில் சென்றடைய உதவுகிறது.

வழக்கமாக, காலையில் சிற்றுண்டிக்கு முன்னதாக, 'இன்சுலின்' ஊசி போட்டுக்கொள்வது நல்லது.

குடிப்பழக்கம் நீரிழிவு நோயாளிக்கு நல்லதல்ல; சிலவற்றில் மிகுந்த மாவுச் சத்து இருக்கிறது. மேலும், குடி, பசியைத் தூண்டும் இயல்புடையது. ஈரலைப் பாதிக்கும் தன்மையது. எனவே குடியை விலக்குவது நல்லது.

புகைபிடித்தல் நல்லதல்ல. நிகோடின் நச்சுப் பொருள் இருதய இரத்தக்குழாய்களில் அடைப்பு ஏற்படுத்தி இதயத்



தைப் பாதிக்கக்கூடியது. எனவே புகைப்பழக்கம் நீரிழிவு நோயாளிக்கு நல்லதல்ல.

வயது முதிர்ந்தவர்களிடையேயும், இனிப்பு முதலான திண்பண்டங்களையும் மாவுப் பொருள்களையும் மிகுதியாக உண்பவர்களிடையேயும், நீரிழிவு நோய் மிகுதியாக வருகிறது. மேலும், நீரிழிவு நோயுள்ள குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் அதே நோயுள்ள குடும்பத்தில் திருமண உறவு கொள்வதும், நீரிழிவு நோய் தொடர்ந்து வரக் காரணமாகிறது. எனவே நீரிழிவு நோயுள்ள குடும்பத்தினர் சுற்றத்தினரிடையே திருமணத் தொடர்பு கொள்ளாமை நல்லது.

நீரிழிவு நோய், உடலின் எல்லா முறைகளையும் பாதிக்கும் ஒரு நோய்; ஆரம்பத்தில் கண்டறிந்து சிகிச்சை அளித்தால் கட்டுப்படுத்துவது எளிது. நோயின் அறிகுறிகள் தோன்றினால் உடனே டாக்டரை அணுகி ஆலோசனை பெறவேண்டும்!

# உழைப்பால் உயர்ந்த உழவர்

ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்திஐந்திலே, ஆறு ஏக்கர் நிலத்திற்குச் சொந்தக்காரராக இருந்த ஒருவர், இன்று அறுபது ஏக்கர் நிலத்திற்குச் சொந்தக்காரர் என்ற நிலைக்கு உயர்ந்துள்ளார்!

'' இந் நிலைக்கு அவரால் எப்படி உயர முடிந்தது?'' என்று பலர் கேட்கின்றனர்.

'' அறிவியல் முறையில் உழவியலை மேற்கொண்டு அயராது உழைத்து அதிக வருவாயைப் பெற்றதே அவரது உயர்வுக்குக் காரணம்'' என்று அவரைப் பற்றி நன்கு அறிந்தவர்கள் கூறுகின்றார்கள்.

அவர் 1968-69-ஆம் ஆண்டில் நடைபெற்ற மாநில நெல்விளைச்சல் போட்டியில் பங்கு கொண்டு ஐ. ஆர். 8 நெல் பயிரிட்டு ஒரு ஏக்கரில் 5,152 கிலோ மகசூல் விளைவித்து மாநில இரண்டாம் பரிசுக்கு (ரூபாய் 1,000) உரியவரானார்.

மதுரை மாவட்டம் தேனி வட்டத்தில் உள்ள பாலகிருட்டிணபுரம் என்னும் கிராமத்தைச் சேர்ந்தவர் அவர். அவருடைய பெயர் திரு சுந்தரராசன் என்பதாகும்.

திரு சுந்தரராசன் அவர்கள் தனது 60 ஏக்கர் பண்ணையில் நெல் மற்றும் பருத்தி, நிலக்கடலை, மிளகாய், கேழ்வரகு முதலிய பல பயிர்களையும் சாகுபடி செய்து வருகிறார். ஐந்து கிணறுகளிலிருந்து தண்ணீரை எடுத்து அழுத்தத்துடன் கூடிய தொட்டியில் தேக்கி அங்கிருந்து குழாய்களின் மூலம் அவரது பண்ணையின் பல்வேறு பகுதிகளுக்கும் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. பாஸ்பேட், பொட்டாஷ், எம். எப். காம்ப்ளெக்ஸ் ஆகிய இரசாயன உரங்களை அவர் உபயோகப்படுத்தி வருகிறார். அவர் ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 1,200 செலவு செய்கிறார். ஏக்கர் ஒன்றிலிருந்து ரூபாய் 3,000 வருவாய் அவருக்குக் கிடைக்கிறது.

அவருடைய வெற்றிக்குக் காரணம், அவர் தனது பண்ணையின் மண் மாதிரிகளை எடுத்து, மண் பரிசோதனை நிலையங்களுக்கு அனுப்பிப் பரிசோதனை செய்து, வேளாண்மைத் துறையினர் பரிந்துரைக்கும் முறையில் வேளாண்மையைச் செய்து வருவதேயாகும். அவர் எப்பொழுதும் வேளாண்மைத் துறையிலிருந்தே பொறுக்கு விதைகளை வாங்கிப் பயன்படுத்துகிறார். அவரிடம் ஒரு டிராக்டரும், இதர திருந்திய கருவிகளும் உள்ளன.

திருந்திய வேளாண்மையின் நவீன முறைகளை அறிந்து கொள்ள ஏராளமான உழவர்கள் அவருடைய பண்ணையை அடிக்கடி பார்வையிடுகின்றனர். பாலகிருட்டிணபுரத்தில் 1,000 பேர்களே உள்ளனர். அவர்களில் பெரும் பகுதியினர் வேளாண்மையிலேயே ஈடுபட்டு உள்ளனர். அவ்வூருக்கு வெகு அருகாமையிலேயே கூட்டுறவு விற்பனைச் சங்கம் உள்ளது. அதனால் அந்தக் கிராம உழவர்கள் தங்கள் விளை பொருள்களை எளிதில் விற்றுக்கொள்ள முடிகிறது.

தேனி வட்டாரத்தில் திரு சுந்தரராசன் அவர்களது பண்ணை ஒரு நல்ல மாதிரிப் பண்ணையாகவே விளங்குகிறது. உழைப்பால் உயர்ந்த உழவர் பெருமகன் திரு சுந்தரராசன் அவர்களைப் போல், எல்லா உழவர்களும் அறிவியல் அடிப்படையில் உழவியலை மேற்கொண்டால் உற்பத்தியைப் பெருக்கி உயரிய வருவாய் பெற்று வளமான வாழ்வு பெறலாம்.


மர்பி
டிரான்ஸிஸ்டர்கள்
கொஞ்சும் எழிலோடு சக்தியும்
இணைந்தவை
murphy musician
murphy MUSIC MASTER
முஸிஷன்
25 மீடர் பாண்ட்ஸ்ப்ரெட் கொண்ட
மத்திய அலை வரிசை ரூ 125*
ம்யூஸிக் மாஸ்டர்
2-பாண்டு ரூ 160*
தேர்ந்தெடுக்க பல ரகங்கள்
உண்டு. ஒவ்வொன்றும்
கண்ணைக் கவரும், செவிக்கு
விருந்தாய் அமைந்துள்ளன
ஒவ்வொரு மர்பியும்
தெளிவான சக்தி வாய்ந்த
உன்னத ஒலிப்பரப்பிற்கு
"மாக்னி-ட்யூன்"
செய்யப் பட்டுள்ளது.
murphy MINI BOY DELUXE
மினி பாய் டீலக்ஸ்
2-பாண்டு ரூ 175*
மினி மாஸ்டர்
2-பாண்டு ரூ 210*
* விலைகள் எக்சைஸ் தீர்வை
• ள்ளிட்டவை.எல்லா இதரவரி
களும் தனி.
murphy
மஸ்தானா
3 பாண்டு ரூ 245*
மேரா-முஸாபிர்
4-பாண்டு 'டீலக்ஸ்' ரூ 328*
மர்பி இல்லத்தை மகிழ்விக்கிறது!

NAS-C-49-D

# கேளுங்கள் கொடுக்கப்படும்!

சென்ற மாதம் 30 ஆம் தேதி, மாண்புமிகு தமிழ் நாடு வேளாண்மை அமைச்சர் திரு. அன்பில் தருமலிங்கம் அவர்கள் வேளாண்மையில் புது முறைகள் என்ற தலைப்பில் வானொலியில் பேசும் பொழுது, புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நெற்கதிரடிக்கும் இயந்திரத்தைப் பயன்படுத்துமாறு குறிப்பிட்டார். அந்த இயந்திரம் ஒரு மணி நேரத்தில் எவ்வளவு நெல்லைப் பிரித்துக் கொடுக்கும்? அதன் விலை என்ன? எங்குக் கிடைக்கும்? விவரம் கூறவும்.

—இராமசாமி, வயலூர்.

தமிழ்நாடு வேளாண்மை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட நெற்கதிரடிக்கும் இயந்திரம், ஒருமணி நேரத்தில் 18 மூட்டை நெல்லைக் கதிரடித்துப் பிரித்துக் கொடுக்கும். மாடுகட்டிப் போரடிக்கத் தேவையில்லை. அந்த நெல்லைத்தனியாகத் தூற்ற வேண்டிய அவசியமும் இல்லை. அந்த இயந்திரம் உயர் விளைச்சல் தரும் குட்டையான ரகங்களுக்கு மிகவும் ஏற்றது.

மழைக்காலத்தில் ஈரப்பதத்தில் கதிரடிக்கையில் கணிசமான பகுதி, போரிலே தங்கிவிடுகிறது. மழையின் காரணமாக,குறிப்பாக தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் உடனடியாகப் போரடிக்கவும் முடிவதில்லை. இதனால் ஏக்கருக்கு 2 முதல் 3 மூட்டை நெல் வீணாகி விடுகிறது. அத்துடன் நெல்லை நன்கு தூற்றித் தூய்மைப்படுத்தவும் முடிவதில்லை. இத் தொல்லைகளிலிருந்து விடுதலை பெறவே, தஞ்சை தீவிர சாகுபடித் திட்ட அலுவலர்கள், அந்தப் புதிய கதிரடிக்கும் இயந்திரத்தை உருவாக்கியுள்ளனர்.

அந்த இயந்திரத்தை டிராக்டரில் இணைத்து உபயோகிக்கலாம்; அல்லது தனியாக மோட்டருடன் இணைத்துப் பயன்படுத்தலாம். அந்த இயந்திரம் உழைப்பாளர்களின் வேலைப்பளுவைப் பெருமளவில் குறைத்துவிடும்.

அந்த நெற்கதிரடிக்கும் இயந்திரத்தின் விலை ரூ. 2,250. அந்த இயந்திரம் பற்றி மேலும் விவரம் அறியக் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்:

‘‘ இணைவேளாண்மை இயக்குநர்
தீவிர சாகுபடித் திட்டம்
தஞ்சாவூர்

நான் எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்து இருக்கிறேன். நான் நவீன முறையில் விவசாயம் செய்து, ஒரு போகமே சாகுபடி ஆகும் என் நிலத்தில் இரு போகம் சாகுபடி செய்ய ஆசைப்படுகிறேன். அதனால் அரசாங்கம், நீர் இறைக்கும் இயந்திரம் வாங்கக் கடன் உதவி செய்யுமா? கிணறு கட்டுவதற்கும் அரசாங்கம் உதவி செய்யுமா? யாருக்கு விண்ணப்பிக்க வேண்டும்? எவ்வளவு காலத்தில் இந்த உதவி கிடைக்கும்? கையில் கொஞ்சமும் பணம் இல்லாமல் இந்த முயற்சியில் இறங்கலாமா?

—மேரிகிருட்டிணன்,
சாத்தான்குளம்.

உங்கள் ஆசையை வரவேற்கின்றோம். ஆனால் தங்கள் அவசரத்தைப் பாராட்ட முடியவில்லை. ஏனெனில், கடன் கிடைப்பதற்கு வேண்டிய முயற்சிகளில் நீங்கள்தான் ஈடுபட வேண்டும். நீர்இறைக்கும் இயந்திரம் வாங்குவதற்குக்கடன் பெறவும், கிணறு வெட்டுவதற்குக் கடன் பெறவும், உங்கள் பகுதியில் உள்ள நிலவள வங்கிக்கு நீங்கள் மனுச் செய்து கொள்ள வேண்டும். உங்களுக்கு எவ்வளவு நிலம் உள்ளது, அதன் மதிப்பு என்ன என்பதெல்லாம் தெரியாத நிலையில் எவ்வளவு காலத்தில் தங்களுக்குக் கடன் கிடைக்கும் என்பதைத் தெரிவிக்க இயலாத

**வேளாண்மை பற்றிய வினாக்களையே கேட்கப்பட வேண்டும்!**

# மிக **வலிமையான** டயர்

## பயர்ஸ்டோன்

படைத்திடும்
தனிப்பட்ட 23°
கோணமுள்ள
டிராக்ஷன்
பார்களை
உடைய
டிராக்டர்
டயர்கள்.

ஆழமாக இறுகப் பற்றி அதிக இழுதிறனை அளிக்கும்படி ரப்பர் பரப்பை முற்றிலும் பயன்படுத்தும் திறனுள்ள வளைவும் கூம்பு முனையும் அமைந்தவை.
பயர்ஸ்டோன் டயர்கள், கடுமையான நீடித்தகால உழைப்புக்கான வலிமை படைத்திருக்கக் காரணம் மும்மடங்கு வலுவுள்ள கட்டுமானம் — டயருடன் டிரெட்டை ஒட்டிப் பிணைக்கவும், பக்கவாடுகளைப் பலப்படுத்தவும், கார்டுகளை இன்சுலேட் செய்வதற்குமான முறை அது.






40
ஆண்டுகளுக்கு
மேலாக
இந்தியாவுக்கு
சேவை

## பயர்ஸ்டோன்

இந்தியாவெங்கும் வாங்கக் கிடைக்கிறது – இன்றே காண்க உங்கள் பயர்ஸ்டோன் விற்பனையாளரை.

FOCUS-W 28 (R).TM

நிலையில் உள்ளோம். தங்களுக்கு உள்ள நிலங்கள் பற்றிய விவரம் அடங்கிய 'சிட்டா', அடங்கல் நகல்கள், தங்கள் நிலங்களில் வேறு எந்த வில்லங்கமும் இல்லையென்பதற்குரிய 'வில்லங்கச் சான்றிதழ்', சொத்து மதிப்புச் சான்றிதழ் இவைகளையெல்லாம் வாங்கிக், கடன் மனுவையும் தயாரித்து, அத்துடன் இணைத்து அனுப்பினால், அதில் எந்தவிதக் குறையும் இல்லாதிருந்து, சொத்து மதிப்பும் இருக்குமானால் 2 மாத காலத்திற்குள் கடன் கிடைக்கலாம். மேற்கூறிய சான்றிதழ்களெல்லாம் வாங்கக் கையில் கொஞ்சமும் பணமின்றி முடியாது. மேலும் விளக்கம் பெறத் தங்கள் பகுதியில் உள்ள நிலவள வங்கியின் தலைவரையோ செயலாளரையோ தயவுசெய்து அணுகுங்கள்.

**'மசூரி' என்ற ஒரு புதிய நெல் வந்திருப்பதாகவும், அது தஞ்சை மாவட்டத்தில் தாளடிப்பட்டத்தில் நல்ல மகசூல் கொடுக்கும் என்றும் வானொலியின் மூலம் அறிந்தேன் அதன் விவரங்களைக் கூறவும்.**

—முத்துவேல், கூறை நாடு.

தாளடிப்பட்டத்தில், தஞ்சை மாவட்டமெங்கும் செம்டம்பர் மாதம் 15-ஆம் தேதி (ஆவணி 30) வாக்கில் நாற்றுவிட்டு அக்டோபர் 15-ஆம் தேதி வாக்கில் நடுவதற்கு 'மசூரி' மிகவும் ஏற்ற ரகமாகும்.

மசூரி நம்நாட்டில் கரு ஒட்டுச் சேர்க்கப்பட்டு மலேசியாவில் பயிரிடப்பட்டு வருகிறது. இது 'ஜப்பானிகா இண்டிகா' ரகத்தையும் 'ஜமெய்க்கா' ரகத்தையும் கரு இணைப்புச் செய்ததின் மூலம் உருவாக்கப்பட்ட ரகமாகும்.

மசூரியின் வயது 140 நாட்கள். இது தாளடிப்பட்டத்தில் மற்ற ரகங்களைவிட ஏக்கருக்கு 8 மூட்டை நெல் அதிகமாகக் கொடுக்கக் கூடியது. இதன் அரிசி வெண்மையாகவும், நல்ல உயர்தரமானதாகவும் இருக்கும்.

சுமாரான அளவு உயரம்; நீர்தங்கும் பகுதியிலும் வளரும் தன்மை; அதிக மகசூல்; தரமான அரிசி; அதிக வருவாய்; இவை அனைத்தும் மசூரியின் சிறப்புக்குணங்களாகும்.

மசூரிக்கு அடியுரமாக 35 கிலோ டை—அமோனியம் பாஸ்பேட், 20 கிலோ யூரியா, 25 கிலோ மூரியேட் ஆப் பொட்டாசு ஆகியவைகளை இடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது. விதைத்த 80—85 நாட்களில் 35 கிலோ யூரியாவை மேலுரமாகவும் இடவேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேலும் விவரம் அறிய உங்கள் ஊராட்சி ஒன்றிய வேளாண்மை வளர்ச்சி அலுவலரை நாடுங்கள்.

**எச்.பி. 3 கம்புவிதை வேளாண்மைக் கிடங்கில் கிடைக்காதபோது எங்கிருந்து வாங்குவது?**

—ராமசுப்பு, சிவகங்கை.

உயர்விளைச்சல் ரகத் திட்டத்தின்கீழ் வீரிய ஒட்டுக் கம்பு ரகவிதைகளைத் தேவையான அளவுக்கு வேளாண்மைக் கிடங்குகளில் இருப்புவைத்திருக்க ஆவன செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு வேளாண்மைக் கிடங்குகளில் விதை கிடைக்காவிட்டால், "தேசிய விதைக் கார்ப்பரேசன், கோயம்புத்தூர்" அல்லது "கோயம்புத்தூர் விதைக் கார்ப்பரேஷன், கோயம்புத்தூர்-10" அல்லது "சக்தி சுகர்ஸ், ராம் நகர், கோவை-9" என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.


தொலைபேசி எண்: 2433, 4623 — தந்தி: "சொஸைட்டி"

## அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கம் S. 532

அம்மாப்பேட்டை — சேலம்-3

[1938-ல் ஆரம்பிக்கப்பட்டது]

உங்கள் விசேட காலத் தேவைக்கும் மற்றும் திருமணம் போன்ற மங்கல நிகழ்ச்சிகளுக்கும் எங்கள் சங்கத்தில் 20-ம் நெ. முதல் 120-ம் நெ. நூலைக் கொண்டு உற்பத்தியாகும் புதிய ரக சேலை, வேட்டி, ரவிக்கைத் துண்டுகள் மற்றும் கைக்குட்டைகள் போன்றவற்றை வாங்கிப் பயன் பெற வேண்டுகிறேன்.

ஏ மாரியப்பன்,
தலைவர்.

சங்கம் பற்றிய புள்ளி விவரங்கள்

| | |
|---|---|
| மொத்த அங்கத்தினர்கள் | 2,382 |
| மொத்தத் தறிகள் | 2,358 |
| ஒதுக்கப்பட்ட மூலதனம் | ரூ. 10·00 இலட்சம் |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. 6·15 இலட்சம் |
| ஆண்டொன்றுக்கு உற்பத்தியாகும் துணியின் மதிப்பு | ரூ. 65·49 இலட்சம் |
| ஆண்டொன்றுக்கு விற்பனையாகும் துணியின் மதிப்பு | ரூ. 71·07 இலட்சம் |
| 1969-70 ல் நிகர லாபம் | ரூ. 2·90 இலட்சம் |

சென்னை விற்பனை நிலையம்: 9, உஸ்மான் ரோடு, தியாகராய நகர், சென்னை-17.

தொலைபேசி: 441723.

கெட்டி நெசவு ! கெட்டிச்சாயம் !

அகலம் நீளத்திற்கு உத்திரவாதம்

ஆடவர், பெண்டிர், மாணவ மாணவியர் யாவருக்கும் ஏற்ற உயர்தர ஆடைகள்

குறைந்த விலை நீடித்த உழைப்பு

20, 40, 60, நெ. நூல்களில் பல வேஷ்டிகளும், துண்டுகளும், கைக்குட்டைகளும், வெண்ணிற வண்ண பீசுகளும், ஷர்ட்டிங்குகளும், சேலைகளும், நர்சுகள், மாணவியர்க் கேற்ற வெண்ணிறப்புடவைகள் 2/40 & 2/60 டைமண்ட் வேஷ்டிகளும் ஷர்ட்டிங்கு பீசுகளும் தயார் செய்யப்படுகின்றன. மாணவ மாணவியர்க்கேற்ற யூனிபாரம் துணிகளும் கிடைக்கும். அரசாங்க கழிவுத் தொகையுடன் சில்லறையிலும் மொத்தத்திலும் விற்பனை உண்டு.

குறிப்பு.—கழக அரசின் சாதனையால் நவீன நெசவுப் பயிற்சிசாலை துவக்கப்பட்டு, சிறப்புடன் நடைபெற்றுவருகிறது என்பதனை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

எங்கள் சரக்குகள்

"கோ—ஆப்டெக்ஸ்"

விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்

கீழ்க் கொடுங்காலூர்
கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்
லிமிடெட், நெ. C. 1374
(வந்தவாசி வட்டம், வ. ஆ. மா.)

எஸ். சி. பெருமாள்
உதவித் தலைவர்

R. 56. இராஜபாளையம் கூட்டுறவு பால் விநியோக சங்கம் லிமிடெட்,
இராஜபாளையம்.

தொடக்கம் : 2-1-1946. தொலைபேசி எண் : 206

தலைவர் : திரு A.K.D. பலராம ராஜா

உப தலைவர் : திரு C. வீரபத்ரன்

அங்கத்தினர்கள்: 2931. பங்குத் தொகை ரூ.40738

நடப்பு முதலீடுகள் : ரூ. 77,170

இதர முதலீடுகள் : ரூ. 62,500

பால் உற்பத்தி நிலையங்கள் : 24.

பால் விற்பனை நிலையம் : 1.

சங்கம் சுமார் ரூபாய் 80,000 மதிப்புள்ள தனது சொந்தக் கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. தினமும் சுமார் 3,500 லிட்டர் பால் உற்பத்தியாகிறது. பொதுமக்களின் உபயோகத்துக்கு விநியோகம் செய்த பின்னர் மீந்தும் பாலை மதுரை பால் திட்டத்திற்கு அனுப்பப்படுகிறது.

A. செல்லையா,
கூட்டுறவு உப-பதிவாளர்—காரியதரிசி.

Telegram : 'KOTHARI' Telephone : 24 & 44 Lalgudi
Telex : 258 TR

*With the best compliments of*

KOTHARI
SUGARS AND CHEMICALS LIMITED
Kattur Railway Station, Lalgudi P.O.
TIRUCHIRAPALLI DISTRICT, TAMIL NADU

Manufacturers of WHITE CRYSTAL SUGAR

*Head Office :*
'KOTHARI BUILDINGS'
20, Nungambakkam High Road,
Madras-34

Telegram : 'KOTHARI' Telephone : 82036 (8 lines)
Telex : 325 MS Trunk : 811421 (3 lines)



# வீடு உண்டு வேறு என்ன வேண்டும்?

"ஆரம்பிக்கலாமா?" என்று குடிசை மாற்றும் வாரியத் தலைவர் திரு. இராம. அரங்கண்ணல், எம். எல். ஏ. அவர்கள் அன்புடன் பத்திரிகை நிருபர்களைப் பார்த்துக் கேட்டார்.

"சீக்கிரம், சிக்கனம்" என்று எழுதி உங்கள் மேசை மேல் வைத்துள்ளீர்கள். அதனால் சீக்கிரமே ஆரம்பித்து விடலாம்" என்று சிரித்துக் கொண்டே கூறினார் ஒரு நிருபர்.

"எந்தக் காரியத்தையும் சீக்கிர மாகவும், சிக்கனமாகவும் செய்து முடிக்கவேண்டும் என்பது தான் என் கொள்கை. ஆனால் பத்திரிகை நிருபர்களிடையே அந்தக் கொள்கையை நான் வற்புறுத்த விரும்பவில்லை. பத்திரிகை நிருபர்கள் சீக்கிரத்தை மட்டும் கருத்தில் கொண்டு செயல் பட வேண்டுமே ஒழிய, சிக்கனத்தை விட்டு விட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். ஏனென்றால் நீங்கள் சிக்கனத்தைக் கடைப்பிடித்தால், உங்கள் பத்திரிகைகளில் செய்தி குறைவாகவே வரும். எனவே நீங்களெல்லாம் சிக்கனமாக இருந்துவிடாமல், தாராளமாக இருந்து உங்கள் பத்திரிகையில் நிறைய இடம் ஒதுக்கி முழுவிவரத்தையும் வெளியிட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். குடிசைகளை எல்லாம் மாற்றி மாடி வீடுகளாகக் கட்டிக் கொடுப்பதை ஒரு மனிதாபிமான பிரச்சினையாகவே கருதி, குடிசை மாற்று வாரியம் செயல்பட்டுவருவதால், இம்மாபெரும் பணியில் பத்திரிகைகள் அனைத்தும் நன்கு ஒத்துழைக்க வேண்டும்" என்று அன்பு வேண்டுகோள் விடுத்தார்.

இவ்வாறு பேட்டியை ஆரம்பித்த திரு. இராம. அரங்கண்ணல் அவர்கள் தொடர்ந்து கூறியதாவது—

### ஏழை-நடுத்தர மக்களுக்கும் மலிவான வாடகை வீடுகள்

"அரசாங்கத்தில் பணிபுரியாமலும் ஆனால்தனியாரிடமோ அல்லது தாங்களோ சிறுசிறு அளவில் தொழில் செய்தவண்ணம், குடியிருக்க வீடுகிடைக்காமல் அவதிப்படுவோருக்கும் உதவுவது என்று குடிசை மாற்றுவாரியம் முடிவு செய்துள்ளது. முக்கியமான இடங்களில், மாதம் ரூபாய் 400க்குக் கீழ் ஊதியம் பெறுகின்ற இப்படிப்பட்ட கீழ்த்தர-நடுத்தர வர்க்கத்தினருக்கு நியாயமான மாத வாடகையில் (சுமார் ரூபாய் 40 அல்லது 50), பல அடுக்கு மாடிக் குடியிருப்புகள் எல்லா வசதிகளோடும் கட்டித்தரலாம் என்று குடிசை மாற்றும் வாரியம் யோசித்து வருகிறது."

### சிறுகடைக்காரர்களுக்கு நியாய வாடகையில் கடை

"இதேபோல், சிறு காய்கறிக் கடைக்காரர்கள், சில்லறை வியாபாரிகள், துணி தைப்பவர்கள், சலவை நிலையங்கள், சிகையலங்கரிக்கும் கூடங்களில் பணி புரிபவர்கள், ஆகியோர்களுக்கு நியாயமான வாடகையில் வியாபாரக் கடைகள் கட்டிக் கொடுக்கவும் யோசித்து வருகிறோம்."

அடுத்து திரு. இராம. அரங்கண்ணல் அவர்கள் குடிசைவாழ் மக்கள் வீடுகளைச் சொந்தமாக்கிக் கொள்ளுதற்குரிய திட்டம் ஒன்றைத் தெரிவித்தார். அதன் விவரம் வருமாறு—

### சொந்த வீடு

"சென்னையில் குடிசை வாழ் மக்களுக்காகவும் மாதம் 300 அல்லது அதற்குக் குறைவாகச் சம்பாதிப்பவர்களுக்காகவும், கட்டிக்கொடுக்கப்படும் வீடுகளை

அவர்கள் விரும்பினால், ரொக்கத்திற்கோ அல்லது தவணை முறையிலோ அவர்களுக்கே விற்றுவிடக் குடிசை மாற்றும் வாரியம் முடிவு செய்துள்ளது.

"விலைக்கு வாங்கிக் கொள்ள விரும்பினால் ரூபாய் 5,500 முதல் ரூபாய் 6,000 வரை அடங்கும். ஒரே நேரத்தில் முழுத் தொகையையும் செலுத்தி வீட்டைவாங்க முடியவில்லை என்றால், 20 ஆண்டுத் தவணை அடிப்படையில் அவர்களுக்கு விற்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 'மே' நாள் முடிவாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திரா நகர், டி.பி. சத்திரம், வியாசர்பாடி ஆகிய பகுதிகளில் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்படும். சொந்தமாக வீடுகளை வாங்கிக் கொண்டவர்கள் கூடுதல் வசதி செய்து கொடுக்கும்படிக்கோரினால், வீட்டுச் சொந்தக்காரர்கள் செலவில் கூடுதல் வசதிகளைச் செய்து கொடுக்கவும் குடிசை மாற்றும் வாரியம் தயாராக உள்ளது."

அடுத்தாற்போல், சென்னை நகரில் உள்ள அபிவிருத்தி செய்யப்பட்ட திறந்த வெளி பிளாட்டுகளை (Open developed Plots) விற்பனை செய்வது பற்றி அவர் குறிப்பிட்டார்.

"சென்னை நகரின் பல இடங்களில் உள்ள அபிவிருத்தி செய்யப்பட்ட திறந்த வெளி பிளாட்டுகள் ஒருவருக்கு காலே அரைக் கால் மனை வீதமும், அந்த வீட்டு மனைக்கு மாத வாடகை ரூபாய் 3 வீதமும் முன்பே பலருக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. அந்தவீட்டு மனைகளை ஒதுக்கப்பட்டுள்ளவர்களுக்கே மார்க்கட்விலையில் விற்றுவிட வாரியம் முடிவு செய்துள்ளது. அந்த வீட்டு மனைகளில் அவர்கள் வீடு கட்ட விரும்பினால் அவர்களுக்காகக் குடிசை மாற்று வாரியமே வீடு கட்டிக் கொடுத்து விட்டு, அதற்குரிய தொகையைப் பெற்றுக்கொள்ளும். அவர்களிடம் பணம் இல்லாவிட்டால், வீட்டிற்குரிய தொகையை 20 ஆண்டு கால சுலபத் தவணையில் வசூலித்துக் கொள்ளவும் குடிசை மாற்று வாரியம் முன்வந்துள்ளது.

"இவ்வாறு கட்டிக் கொடுக்கும் வீடுகளை வாரியத்தின் அனுமதியின்றி விற்க முடியாது.

"அரசுக்குச் சொந்தமான திறந்த வெளி மனைக்கட்டுகளை அரசுக்குத் தெரியாமல் சிலர் வாங்கியிருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்களுக்கு வாரியம் ரூபாய் 250 அபராதம் விதிக்கும். அத்துடன் அந்த மனைக்கட்டுகளை விலைக்கு வாங்க முன்வதால், தற்போதைய மார்க்கட் விலைக்கே விற்றுவிட வாரியம் தயாராக இருக்கிறது.

"அபிவிருத்தி செய்யப்பட்ட திறந்த வெளி பிளாட்டுகளில் சிலர் குடிசை மாற்றும் வாரியத்தின் அனுமதியின்றியோ அல்லது மாநகராட்சி மன்றம் அனுமதித்துள்ள வரை படத்திற்கு (Plan) மாறாகவோ கட்டடங்களைக் கட்டியிருக்கிறார்கள். குடிசை மாற்றும் வாரியத்தின் கண்காணிப்பு அலுவலர்கள் இவைகளைக் கண்டு பிடித்து அக்கட்டடங்களின் விலையை மதிப்பிட்டு வருகிறார்கள். அந்தக் கட்டடங்களின் சொந்தக்காரர்கள், கட்டட மதிப்பில் 10 சத தொகையை அபராதமாகக் கட்டிவிட்டால், அந்த இடமும் கட்டடமும் (கட்டடம் விதிமுறைப்படி கட்டப்பட்டிருந்தால்தான்) அவர்களுக்கே விற்பனை செய்யப்படும்.

"வாரியத்திற்குச் சொந்தமான நிலங்களை ஆக்கிரமித்துக்கொண்டு அந்த நிலங்களில் பெரிய கட்டடங்களைக் கட்டிக் கொண்டிருந்தால், அவர்களுக்குக்குடிசை மாற்றும் வாரியம் எந்தச் சலுகையும் காட்டாது. கட்டடத்தை வாரியமே எடுத்துக் கொண்டு விடும். குடிசை மாற்றும் வாரியத்திற்குச் சொந்தமான இடத்தில் கடைகள் மற்றும் வியாபாரக் கூடங்கள்கட்டப்பட்டுள்ளதாக ஒன்றிரண்டு புகார்களும் வந்துள்ளன. அக்கட்டடங்களை வாரியமேஎடுத்துக் கொள்ளும்" என்று குடிசை மாற்றும் வாரியத் தலைவர் குறிப்பிட்டார்.

அடுத்துச் சென்னையில் புதிதாகக் குடிசைகள் போட்டால் அவைகளைப் பிரித்து அகற்றப் படும் என்று திரு. அரங்கண்ணல் எச்சரித்தார். அதுபற்றி அவர் கூறியதாவது—

## புதிதாகக் குடிசை போடாதீர்கள்!

"புதிது புதிதாகக் குடிசைகள் போடுவதைச் சட்டம்தடுக்கிறது. எனவே, யாரும் குடிசைகள் போடும் முயற்சியில்ஈடுபடவேண்டாம் என வேண்டுகிறேன். அப்படிப்பட்டவர்கள் யாரேனும் தனிப்பட்ட முறையிலோ, பல குடிசைகளையோ போட முயற்சித்தால், தகவல் கிடைத்த உடனேயே அவை பிரித்து எறியப்படும்.

"இதற்காக போலீஸ் படை ஒன்று வாரியத்தின் உதவிக்குத் தயாராக இருக்கும் என்று தமிழ் நாடு அரசு அறிவித்துள்ளது. இதில் எந்த விதமான சலுகையோ, 'ஸ்டே'களோ நிச்சயமாக வழங்கப்படமாட்டாது.

"ஆனால், பல்லாண்டுகளாக வாழும் பழைய குடிசை வாசிகள் பயமின்றி இருக்கலாம். தனிப்பட்டவர்கள் கோர்ட் உத்தரவைக் காட்டிப் பிரித்துவிடுவார்கள் என்று அஞ்சவேண்டியதில்லை. சட்டப்படி, இவர்களுக்குத் தக்க பாதுகாப்புக் கிடைத்திருப்பது தமிழக அரசின் பெரிய சாதனையாகும்.

"பழைய குடிசை வாசிகளுக்கு வாரியத்தின் உதவியும், மாற்றிடமும் காட்டப்பட்டாலொழிய எவராவது பிரித்துவிடுவார்களோ என்ற அச்சம் தேவையில்லை. தனியாரும் வாரியத்தின் உதவியை நாடினால், அவர்களுக்குக் குடிசை வாழ் பகுதிகளைப் புனரமைப்புச் செய்வது போலவே எல்லா உதவிகளையும் அளிக்கும்".

இவ்வாறு அவர் கூறி முடித்த உடனே ஒரு நிருபர், 'தனியார் இடத்தில் முன்பே குடிசை போட்டு வாழ்பவர்களை உடனடியாகக் காலி செய்ய முடியாதா?'' என்றார்.

"சட்டப்படி முடியாது" என்று கூறிய திரு. அரங்கண்ணல் அவர்கள் ஒரு நிகழ்ச்சியையும் சான்றுகக் கூறினர். "சேத்துப்பட்டுப் பகுதியில் ரயில்வே லைனுக்குப் பக்கத்தில் குடிசை போட்டு வாழ்ந்தவர்களைக் காலிசெய்யும்படி ரயில்வே நிர்வாகத்தினர் எழுதினர். அதில் குடிசை மாற்று வாரியம் தலையிட்டு, அவர்களுக்கெல்லாம் அண்ணா நகரில் மாற்று இடம் கொடுக்க ஆவன செய்ததுடன் மாறிச் செல்வதற்காக ஒவ்வொரு குடிசைக்கும் ரூபாய் 50 வீதம் கொடுக்கவும் ஏற்பாடுசெய்தது. இவ்வாறு செய்த பின்புதான் ரயில்வே லைனுக்கு அருகில் உள்ள குடிசைகளை அகற்ற முடிந்தது" என்று விளக்கினர்.

"குடிசைகளை மாற்றி மாடிவீடு கட்டிக் கொடுக்கும்போது, ஆள் மாராட்டம் செய்வார்களே

அதைத் தடுப்பதற்கு என்ன செய்கிறீர்கள்?''என்றார் மற்றொரு நிருபர்.

''குடிசைப் பகுதிகளில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தையும்படம் எடுத்துக்கொள்கிறோம். இப்படிச் செய்வதால், பின்னால் அவர்களுக்கென்று வீடு கட்டித்தரும் போது ஆள்மாறாட்டம் செய்வது தவிர்க்கப்படும்.

''இது ஒரு புதுமுறை, எல்லோரும் போற்றுகிற முறை. எத்தனை குடும்பங்கள் சொந்தமாகவும், வாடகைக்கும் வாழ்கின்றன என்ற புள்ளிவிவரத்தை அறியவும் இது பயனுள்ளதாக இருக்கும்.

"சிலர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி—பொய் சொல்லலாம், புகைப்படம் எடுத்துவிட்டால் வீடு கிடைக்கும்' என்ற நப்பாசையால் யார் யாரையோ கொண்டு வந்து புகைப்படம் எடுத்துக் கொள்கின்றனர். வாரியம் இதனால் ஏமாந்து விடாது. **1962, 1967, 1971** பொதுத் தேர்தல்கள், கார்ப்பரேஷன் பட்டியல்களிலும், முன்பே வீட்டு வாரியம் எடுத்துள்ள பட்டியல்களிலும் அவர்களுடைய பெயர்கள் உள்ளனவா என்று பரிசோதிக்கப்படும். இதற்கு என்று ஒரு தாசில்தார் தலைமையில் 'பரிசீலனை இலாகா' நிறுவப்பட்டு இருக்கிறது. பிறகு பங்கீட்டு அட்டை பெற்றிருக்கிறாரா, என்று அறிந்து கொள்ளப்படும். அப்படித் தயார் செய்த பட்டியல் ஒவ்வொரு குடிசைப் பகுதியாக அந்தந்தக் குடிசைப் பகுதியைச் சார்ந்த இடங்களில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்படும். தவறு செய்கிறவர்கள் --தவறான முறையில் உரிமைபெற முயற்சிக்கிறவர்கள் பற்றி எவர் வாரியத்திற்கு புகார்செய்தாலும் அவைகளை ரகசியமாகக் கண்டறிய "துப்புத் துலக்கும் இலாகா" நிறுவப்பட்டுள்ளது. இந்த இலாகா இரகசியமாகத் தலைவருடைய நேரிடையான பார்வையில் இயங்குவதால், யாரும் ஏமாற்ற முடியாது. ஆனால், வீடில்லாத குடிசைவாசிகள் எல்லாருக்கும் வீடு கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதால் வாரியத்துடன் ஒத்துழைக்குமாறு எல்லாரையும் வேண்டுகிறோம். ஏமாற்ற எண்ணுவோர் பற்றிய பட்டியல் 'துப்புத் துலக்கும் பிரிவினரால்' தயாரிக்கப்படும். அவர்கள், வாரியத்தினிடமிருந்து சலுகைகள் பெற இயலாதவர்களாக ஆக்கப்பட்டுவிடுவார்கள்.

''இந்தப் புகைப்படம் எடுப்பது முக்கியம்—இதுவே பிறகு ஒவ்வொரு குடிசைவாசிகளுக்கும் உரிமைச் சீட்டாக விளங்கப்போவதால், எவரும் அஞ்சாமலோ, தடுக்காமலோ, அவரவர்களும் புகைப்படம் எடுத்துக்கொள்வது நல்லது'' என்று அவர் விளக்கினார்.

''இதுவரை எத்தனை குடிசைப் பகுதிகளில் புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளது? எப்பொழுது இவ்வேலை முடிவடையும்?'' என்றார் ஒரு நிருபர்.

''இதுவரை 100-க்குமேற்பட்ட குடிசைப் பகுதிகளில் புகைப்படம் எடுக்கும் வேலையும், ஆய்வு செய்யும் வேலையும் முடிந்து விட்டது. இன்னும் ஏறத்தாழ 400 பகுதிகளில் இவ்வேலை நடைபெறவேண்டியுள்ளது. இதற்குக் குறைந்தது ஆறுமாத காலமாகக் கூடும்'' என்றார்.

''தற்பொழுது எவ்வளவு வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன?'' என்று கேட்டார் இன்னொரு நிருபர்.

''10,000 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன'' என்றார் தலைவர்.

பேட்டி தொடர்ந்தது. ஒவ்வொருவராகக் கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டனர். தலைவர் மிகவும் பொறுமையாகப் பதிலளித்தார். அவைகள் இதோ·

''சென்னையில் எவ்வளவு பேர் குடிசைகளில் வசிக்கிறார்கள்?''

''சென்னையில் 8 லட்சம் பேர் குடிசைகளில்வசிக்கிறார்கள். மைய அரசு அமைத்த மாத்தூர் கமிட்டி அறிக்கையில், சென்னை நகரமே வீட்டு வசதி செய்து தருவதில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.





சென்னையில் தற்பொழுது 1.3 இலட்சம் வீடுகளே உள்ளன. இன்னும் 4.2 இலட்சம் வீடுகள் கட்டப்பட வேண்டும். மற்ற மாநகரங்களுடன் சென்னையின் வீட்டுவசதிகளை ஒப்பிட்டால், நாம் செய்ய வேண்டிய பணி—கட்டவேண்டிய கட்டடம்—மிகவும் அதிகம் என்பது விளங்கும்.''

''குடிசைப் பிரச்சினையைத் தீர்க்க எவ்வளவு நிதி வேண்டும் என்று நினைக்கின்றீர்கள்.?"

''சென்னை நகரில் குடிசைகள் பிரச்சினையைத்தீர்க்க ரூபாய் 80 கோடி தேவைப்படும். ஆனால் தற்பொழுது ரூபாய் 40 கோடியே ஒதுக்கப்பட்டுள்ளது."

''பாதியளவு நிதிதானே ஒதுக்கப்பட்டுள்ளது? அப்படி இருக்கையில் புதிய திட்டங்களை ஏன் தொடங்குகிறீர்கள்?''

''தற்பொழுது குடிசை வாழ் மக்களுக்கு மாதம் 10 ரூபாய் வாடகைக்கே வீடு கொடுக்கப்படுகிறது. இந்த வகையில் மாதம் ஒன்றுக்கு ஒவ்வொரு வீட்டிற்கும்





ஏறத்தாழ ரூபாய் 27·50 நட்டம் ஏற்படுகிறது. அந்த வீடுகளை அவர்களுக்கே விற்றுச் சொந்தமாக்கிவிட்டால், கிடைக்கும் நிதியைக் கொண்டு மேலும் மேலும் புதிய பகுதிகளில் வீடுகளைக் கட்ட இயலும். எனவேதான் புதிய திட்டங்களைச் செயல்படுத்த வாரியம் முன்வந்துள்ளது."

''இந்திய அரசு ஏதேனும் நிதி ஒதுக்க இசைந்துள்ளதா?''

''இந்திய அரசின் வீட்டுவசதி அமைச்சர் மாண்புமிகு திரு. குஜ்ரால் அவர்களிடம், நமது மாண்புமிகு அமைச்சர் திரு. ராசாராம் அவர்களும், நானும் இதுபற்றி விளக்கிச் சொன்னோம். நமது மாபெரும் திட்டங்களை அவர் மிகவும் பாராட்டியதுடன், நிதி ஒதுக்கீடு செய்ய ஆவன செய்வதாகக் கூறினார். நாங்கள் மைய அரசிலிருந்து நிதி கிடைக்கும் என்று நம்புகிறோம்'' என்றார்.

'வீடு உண்டு! வேறு என்ன வேண்டும்?' என்று கேட்கும் பொன்னாள் விரைந்து வரப் போகிறது.

நவம்பர் மாதத்தில் தீபாவளி; சனவரி மாதத்தில் பொங்கல்; ஏப்ரல் மாதத்தில் சித்திரை வருடப்பிறப்பு; இப்படி மாதத்திற்கொரு பண்டிகை தமிழ் நாட்டில் கொண்டாடப்பட்டு வருகிறது; மார்ச் மாதத்தில் கைத்தறிக்கு விழா அனைத்திந்தியாவிலும் கொண்டாடப்பட்டு வருகிறது. ஆனுல், இந்த ஆண்டு மார்ச் திங்களில் கைத்தறி விழா நடைபெறவில்லை. இடைத்தேர்தலின் வருகையினுல், சிறிது இடைவெளி ஏற்பட்டு மே திங்களில் கொண்டாடப்படுகிறது.

சென்னையில், கைத்தறிக் கண்காட்சி, வழக்கம் போல் சிறப்பாகத் துவங்கியது. தமிழகத் தொழில் அமைச்சர் திரு மாதவன் அவர்




கள் தலைமையில், தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் துவக்கி வைத்திருக்கிருர்கள்.

**கரியவனைக் காணுத கண் என்ன கண்ணே**
**கண்ணிமைத்துக் காண்பார்தம் கண் என்ன கண்ணே**

என்று இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்திலே கூறியுள்ளார்.

அதனைச் சற்று மாற்றி,

**கைத்தறிக் கண்காட்சி காணுத கண் என்ன கண்ணே!**
**கண்ணிமைத்துக் காண்பார்தம் கண் என்ன கண்ணே!**

என்று கூறலாம் போலத் தோன்றுகிறது. அத்தனை சிறப்பாக அமைந்திருக்கிறது கண்காட்சி.

கூட்டுறவை விளக்கிக் காட்டும் ஏழுவண்ணக் கொடிகள் கண்காட்சியில் உள்ள பல கடைகளில் கம்பீரமாகப் பறந்து கொண்டிருக்கின்றன.

ஆடவர், பெண்டிர், இளையவர், முதலியவர், இப்படி, சென்னை நகரத்துச் சனத்தொகையில், பாதிப்பேராவது நாள் தோறும் வருகை புரிகிருர்கள். கைத்தறிப் பொருள்களை வாங்கிச் செல்கிருர்கள்.

கண்காட்சிக்கு வருபவர்கள், கண்ணுல் பார்ப்பதோடுநிறுத்திக் கொள்வார்களா? வாய்மொழியையும் உதிர்க்கத்தானே செய்வார்கள்? அவர்கள் என்னென்ன பேசுகிருர்கள் என்பதைக் கேட்க வேண்டும் போல இருந்தது. ஒருசிலரைப் பின் தொடர்ந்தோம். அவர்களின் உரையாடலை, 'அசைபோட்டு' இங்கே கொடுக்கிரேும்.

* * *

## கண்டதும்... கேட்டதும்...!

''இந்த பெட்சீட் என்ன விலைங்க?''

''பன்னிரண்டரை ரூபாய்!'

''கமிஷன் நீக்கினு எவ்வளவு ஆகுங்க?''

''ஒரு ரூபாய் இருபது பைசாக் குறையும்!''

''பரவாயில்லியே! ரெண்டு பெட்சீட் கொடுங்க!''

—உடனே கடைக்காரர் வேக வேகமாக பில் போடுகிருர். வந்திருப்பவர் ஜிப்பாப் பைக்குள் கைவிட்டுப் பணத்தை எடுத்துக் கொடுக்கிருர். மறுவினடி பெட்சீட்டுகள் அவரது கைக்கு மாறுகின்றன. மகிழ்ச்சியுடன் புறப்படுகிருர்; அப்போது அவரது நண்பர், ''இந்த பெட்சீட்டைப் பார்த்திங்களா'' என்று வியப்புடன் சுட்டிக் காட்டுகிருர். நண்பர் சுட்டிக்காட்டிய பெட்சீட்டைப் பார்த்த ஜிப்பாக்காரரும் வியப்படைகிருர். ஆம்! அவர் மட்டுமல்ல, ஏறக்குறைய அங்கே வந்திருப்போர் அனைவரும் கண்டு வியப்படைகின்றனர். பெட்சீட் கடையில் வியப்புத் தருவதற்குரிய வகையில், என்ன இருக்கிறது என்றுதானே கேட்கிறீர்கள்! 'குடும்பக் கட்டுப்பாடு' டிசைன் போடப்பட்ட பெட்சீட் அந்தக் கடையில் இருப்பதுதான் அனைவருக்கும் வியப்பை ஏற்படுத்துகிறது.

சென் கோப்டெக்ஸ் நிறுவனத்தார்தான் இந்த பெட்சீட்டைத் தயாரித்தவர்கள். கோவை மாவட்டத்தில்ஆண்டுதோறும் முதல் பரிசைத் தட்டிச் செல்லும் இந்த நிறுவனத்தார், இந்த ஆண்டு தான் குடும்பக் கட்டுப்பாடு டிசைன் உள்ள படுக்கை விரிப்பைத் தயாரித்திருக்கிருர்கள்.

''ஆமா! இந்த டிசைன் உள்ள பெட்சீட் இதுவரை எத்தனை வித்திருக்கும்?'' 'ஜிப்பாக்'காரர் கேட்கிருர்.

"ஒரு வாரத்திற்குள் 500-க்கு மேலே வித்திருக்கும்''-கடைக்காரர் பதில் சொல்கிருர்.

வந்தவர் வியப்படைகிருர்; அவரது விழியும் இமையும் மேலே சென்று திரும்புகின்றன.

''புது கல்யாண ஜோடிகளுக்கு இதைப்பரிசாக் கொடுக்கலாமே'' — ஜிப்பாக்காரரின் நண்பர் வேடிக்கையாகக் குறிப்பிடுகிருர்.

''சரியான யோசனை! அடுத்த வாரம் எங்க ஊரிலே எங்க சொந்தக்காரங்க வீட்டுக்

கல்யாணம் ஒண்ணு இருக்கு '' அவங்களுக்கு இதையே வாங்கிக் கொடுத்துடுவோம் '' — என்று சொல்லிவிட்டுக் கடைக்காரரைப் பார்த்துக் ''குடும்பக்கட்டுப்பாடு பெட்சீட் என்ன விலை? '' என்று கேட்கிறார்.

''இருபத்தோரு ரூபாய்ங்க'' —கடைக்காரர்.

'' விலைஅதிகமா இருக்குதே'' —ஜிப்பாக்காரர்.

'' முதல்லே வாங்கினது 'சிங்கள்' பெட்சீட்டுங்க, இது 'டபுள்ஸ்' பெட்சீட்டுங்க''— கடைக்காரர் சொல்கிறார்.

வெளியூர்க்காரர் சிரித்துக் கொள்கிறார் ; ''இருவருக்காகத் தானே வாங்கப் போகிறோம்'' என்ற எண்ணம்தான் அவரது சிரிப்புக்குக் காரணம்.

பணத்தைக் கொடுத்துவிட்டுப் புறப்படுகிறார் ; மூன்று படுக்கை விரிப்புகளையும் சுமக்க அவரால் முடியவில்லை. தவியாய்த் தவிக்கிறார்; அவரது நிலையை உணர்ந்த நண்பர், தனது கையிலே ஒரு சுமையை ஏற்றுக் கொண்டு, பளுவைக் குறைக்கிறார்.

இந்தச் சமயத்தில் அவரை மோதியபடி இரண்டு நவநாகரிக வாலிபர்கள் செல்கின்றனர்.

'' ஏண்டா சேகர்! இந்த பெட்சீட் ரகங்களைப்பார்த்தியா''?

'' ஆமாடா அத்தனையும் நல்லா இருக்குதுடா !''

''கரெக்ட்டுடா ! எதை வாங்கிறதுன்னே தெரியலே ! எல்லாத்தையும் வாங்கிடலாம்னு தோணுதுடா !''

நவநாகரிக வாலிபர்களின் பேச்சு இதயத்தின் எதிரொலியாகவே பட்டது அந்த ஜிப்பாக்காரருக்கு.

* * *

'' ஏம்பா ! தலையணை உறை இருக்குதா? ''—ஓர் அம்மையார் கேட்கிறார்.

'' இருக்குதும்மா ! பாருங்க ! மூனரை ரூபாய் ''—

'' பரவாயில்லியே ! எங்கே இரண்டு மூன்று எடுத்துப்போடு''

கடைக்காரர் இரண்டு மூன்றல்ல பத்துப் பதினைந்து ரகத்தை எடுத்துப்போடுகிறார்.

எதை வாங்குவது என்பதில் அம்மையாருக்குக் குழப்பம் ஏற்பட்டுவிட்டது.

ஒவ்வொரு ரகமாகப் பார்வையிடுகிறார், ஒன்றைக் கையில்எடுத்து வைத்துக்கொண்டு கூர்ந்து நோக்குகிறார் ; சில வினாடிகளில் அதைக் கீழே வைத்துவிட்டு, வேறொன்றைக்கையிலே எடுத்துப் பார்க்கிறார்; அருகிலுள்ள தனது சகாக்களையும் பார்வையிடுகிறார். இறுதியில் குழப்பம் அதிகரித்து விடுகிறது.

'' ஏண்டி, ருக்கு ! நீ எதுக்காக என்னோடே வந்தே ! எனக்குக் குழப்பமா இருக்கும்னுதானே


"சென்டெக்ஸ்" உங்கள் மனதைக் கவரும் புதிய ரக அலங்காரத் துணிகளை இப்பொழுது உங்களுக்கு அளிக்கிறது.



படுக்கை விரிப்புகள்
அலங்காரத்துணிகள்
தலையணை உறைகள்.
மற்றும் பல ரகங்கள்...

சென்டெக்ஸ்

உலகெங்கிலும் உள்ள
இல்லங்களை அழகுபடுத்துகிறது

சென்னிமலை நெசவாளர்
கூட்டுறவு உற்பத்தி
& விற்பனை சங்கம் லிமிடெட்.

சென்னிமலை, தென் இந்தியா.

உன்னைக் கூட்டிவந்தேன். நீ என்னடீன்னு ஒன்னுமே பேச மாட்டீங்கிறியே" —அன்பு கலந்த கோபத்துடன் பேசுகிறார் அம்மையார்.

" ஒங்களுக்குத் தெரியாததா அத்தே!"-பணிவுடன் சொல்கிறாள் அந்த இளம் பெண்.

"சரிசரி ஒன்னைச் சொல்லிக் குத்தமில்லே! நானே பார்த்துக்கிறேன் " — சொல்லிவிட்டு அம்மையார் தனக்குப் பிடித்தமான 2 ரகங்களை எடுத்துக்கொள்கிறார்.

ராகங்களின் சுரங்கள் ஏழு என்பார்கள். ஏழு சுரங்களும் உருவாகி வடிவாகி வருவது போலக், கல்லூரி மாணவியர் ஏழு பேர் ஒன்றுசேர்ந்து ஒரு குழுவாக வந்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்களின் பார்வை, பட்டுப் புடவைக் கடையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. தனது கடையை நோக்கிக் கல்லூரி மாணவிகள் வருகிறார்கள் என்பதை அறிந்து, மன மகிழ்ச்சி கொண்டார் பட்டுப்புடவைக் கடைக்காரர். நைலான், நைலக்ஸ், டெர்லின் துணிகளை வாங்கி அணிகின்ற 'அன்னக் கொடிகள்' பட்டுப் புடவையை வாங்க வருகிறார்களே என்றறிந்ததும், கடைக்காரர் மனமகிழ்ச்சி அடைந்ததில் வியப்பில்லை.

ஆனால், அந்த மனமகிழ்ச்சி நெடு நேரம் நீடிக்கவில்லை. வந்திருந்த பூவிருந்த வல்லிகளில் ஒருவரின் கண்பார்வை, பட்டுப் புடவைக்கடைக்கு எதிரில்இருந்த கடையில் நிலைத்துவிடுகிறது.

"அதோ பாரடி லவ்லி லுங்கீஸ்' —உணர்ச்சி ததும்ப ஒரு மாணவி சொன்னவுடன் மற்ற அறுவரின் கண்களும் லுங்கிகளின் பக்கம் வெடுக்கென்று திரும்புகின்றன. மறுவினாடி, அவர்களது கால்கள் லுங்கிக் கடையை நோக்கி ஓடுகின்றன.



## ஆரஞ்சுப் பழத்தில் ஊசி!

நீரிழிவு போன்ற சிலநோய்களால் பாதிக்கப்படுபவர்கள் தனக்குத் தானே ஊசி போடுவது அவசியமாகிறது.

எப்படித் தனக்குத் தானே போட்டுக் கொள்வது ? சிலருக்குத் தன் உடலில் ஊசி குத்தப் பயம் ஏற்படுவது இயற்கை. இவ்வாறு ஊசி போடுவதற்கு முன், முதலில் ஆரஞ்சுப்பழத்தில் ஊசி இறக்கிப் பழகிக் கொள்ள வேண்டும். இப்படிப் பழகினால் உடலில் வலிஇல்லாமல் ஊசி போடும் கலையை விரைவில் கற்றுக்கொள்ளலாம். மேலை நாடுகளில் இவ்வாறே பழக்கப்படுத்திக் கொள்ளுகின்றனர்.

" ஹவ் மச் ... ... ?"

" சாயம் நிற்குமா ?"

" எனக்கு ஹாப் -எ-டஜன் கொடுங்க "

" எனக்கு சிகப்பு கலர் "

" எனக்குப் பச்சைக் கலர் "

எழுவரும் ஒருவரையொருவர் போட்டி போட்டுக் கொண்டு லுங்கிகளை வாங்குகிறார்கள்.

பட்டுப் புடவைக்கடைக்காரர் ஏக்கப் பார்வையுடன் பார்க்கிறார். "புடவைக்கு வந்த வாய்ப்பை லுங்கி தட்டிப் பறித்துக் கொள்கிறதே" என்று நினைக்கிறார். மறுகணம், தலையை அசைத்துக்கொண்டு ஏதோ முணுமுணுக்கிறார். ஏதோ ஒரு முடிவுக்கு வந்திருப்பதுபோல அவர் காணப்படுகிறார்.

ஒருவேளை, " அடுத்த ஆண்டு பட்டு லுங்கி தயாரித்துவிடலாம்" என்று எண்ணியிருப்பாரோ என்னவோ ?

* * *

"ஆறுகெஜம் பிளெய்ன் நூல் புடவை இருக்கிறதா " ஓர் இளம் தம்பதியர், ஒரு கடையில் கேட்கிறார்கள்.

"இருக்குதுங்க"-சொல்லிவிட்டு, ஏழெட்டுப் புடவைகளை எடுத்துக் காண்பிக்கிறார் கடைக்காரர்.

புடவைகளைத் தொட்டுப் பார்த்துவிட்டு அந்த அம்மையார், "புட்டா புடவை இருக்கிறதா " என்கிறார்.

"இருக்குதுங்க " — சொல்லிவிட்டு, புட்டா ரகப் புடவைகள் சிலவற்றை எடுத்துப் போடுகிறார் கடைக்காரர்.

"நல்லாத்தான் இருக்கு எடுத்துக்கோ!"—அவரது கணவர் சொல்கிறார்.

" விலை எவ்வளவு?" — மனைவி கேட்கிறார்.

" இருபது ரூபாய் ! நூறும் நம்பர் !"—கடைக்காரர் சொல்கிறார்.

அம்மையார் ஐந்தாறு புடவைகளைப் பார்வையிடுகிறார். நெசவின் அழுத்தத்தைக் கூட ஆய்ந்து பார்க்கிறார். எதுவும் வாங்காமல்,

''வாருங்கள் போகலாம்''— கணவருக்கு உத்தரவு போடுகிறார்.

அந்த உத்தமர் உடனே புறப்பட்டு விடுகிறார். கடைக்காரருக்குச் சிரிப்பு வருகிறது.

''கண்காட்சின்னு போட்டதும் கண்ணுலே பார்த்துட்டுப் போகலாம்னு நெனைக்கிறாங்க போலிருக்கு!'' — தனக்குத்தானே பேசிக்கொள்கிறார் கடைக்காரர்.

*   *

கோ ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் கடைக்குள்ளே ஏகக் கூட்டம்! புகை வண்டி நிலையத்திற்குள் வந்துவிட்டோமோ என்ற சந்தேகம் நமக்கு ஏற்படுகிறது. யார் உள்ளே போகிறார்கள், யார் வெளியே வருகிறார்கள் என்பதைக் கூட அறிந்து கொள்ள முடியவில்லை. இம்மியளவு கூட இடமில்லாமல் மக்கள் கூட்டம் அங்கே ததும்பி வழிகிறது.

''முற்றுகை யிடப்பட்ட கோட்டை மாதிரி இருக்கிறதே''- தமிழ் இலக்கியப் பயிற்சி உள்ள ஒருவர் குறிப்பிடுகிறார்.

மக்கள் முண்டியடித்துக் கொண்டு, கைத்தறி ஆடைகளை வாங்குகிறார்கள் என்பதை நினைக்கும் போது, நமது இதயம் பூரிப்படைகிறது. இதிலே மகிழ்ச்சிக்குரிய செய்தி ஒன்று உண்டு. பொது மக்களின் பணம் எல்லாம்-தனிப்பட்ட முதலாளிகளுக்கு அதிகம் போகாமல், பெரும்பாலும் கைத்தறித் தொழிலாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் செல்வதை எண்ணும் போது நமக்கு மிகுந்த திருப்தி ஏற்படுகிறது. கூட்டுறவின் பெருமை நமக்குப் புரிகிறது. கூட்டுறவே நாட்டுயர்வு என்னும் தத்துவத்தின் மெய்மை தெளிவாகிறது.




'இவர்தான் திருவாளர் பொன் மொழியார்' என்று உங்களுக்கு அவசியம் அறிமுகம் செய்துதான் ஆகவேண்டும்.

அடுத்த இதழ் முதல் ஒவ்வொரு இதழிலும் நீங்கள் இவரைச் சந்திக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகிவிட்டீர்களே!

'இதென்ன அறுவைக் கேஸ்?' என்று அஞ்ச வேண்டாம்!

திருவாளர் பொன்மொழியார் பொல்லாத மனிதரும் அல்லர்; புனிதமானவரும் அல்லர்!

எதையும் வெள்ளை உள்ளத்துடனே நோக்கும் இவரை ஒரு சராசரி மனிதராகவே நீங்கள் எடுத்துக் கொள்ளலாம்.

சராசரி மனிதரைச் சந்திப்பதில் என்ன 'சுவை' இருக்கும் என்று மட்டும் எண்ணிவிடாதீர்கள்.

பூர்வீகத்தில் புண்ணிய கோடி என்ற பழம்பெயருக்குச் சொந்தக்காரரான இவரையும் இவர் மனைவி அருந்ததியையும் சந்தித்த பிறகு நீங்களே சொல்வீர்கள்!

வேறு விவரம் வேண்டுமா?

அடுத்த இதழில்தான் நீங்களே சந்திக்கப் போகிறீர்களே........!

# கைத்தறி பற்றி அறிஞர் அண்ணா

நூல்—எப்போதும் சிக்கலுக்கு ஆளாவதுதான்! நூலுடன் தொடர்பு கொண்ட நெசவாளர் வாழ்க்கையும் சிக்கல் கொண்டதுதான். பக்குவமாக அந்தச் சிக்கலை நீக்குவதுதான் மிக முக்கியமான தேவையாகும். மற்ற ஆலைத் தொழிலுக்குக் கிடைக்காத வாய்ப்பும், வசதியும் விஞ்ஞானக் கருவிகளின் உதவியும் கிடைக்காத போதும்கூட—நேர்த்தியான—மெச்சத் தக்க துணிகளைக் கைத்தறியாளர்கள் தயாரித்து வருகிறார்கள்!

ஆலைத் துணியில்தான் கண்ணைக் கவரும் ஆடைகளைத் தயாரிக்க முடியும் என்று நம்பப்பட்டது. ஆனால் இப்போது கைத்தறியில் கண்ணைக் கவரும் ஆடைகள் வேகமாகத் தயாராகின்றன.

நெசவாளர்களது எதிர்காலத்தைக் கவனித்து—வேறு தொழிலில் அமர்த்த வேண்டும் என்பது கவனிக்கப்படத்தக்க பிரச்சினை என்றாலும்—

பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்ந்து வரும் நேர்த்தியான கைத் திறமையை—வெளிச் சந்தையிலிருந்து ஏராளமான பணத்தை ஈட்டித் தந்த கைத் திறமையை விட்டுவிட வேண்டும் என்பது வரவேற்கத் தக்க கருத்தல்ல.

மக்களின் தேவைகளை அறிந்து ஆடைத் தினுசுகளை அடிக்கடி மாற்ற வேண்டும் என்று சில பெரியவர்கள் கூறுகிறார்கள்.

அப்படிப்பட்டவர்கள் ஆண்டுக்கொரு முறை கண்காட்சியில் மட்டும் ஆடைகளைக் காண்பவர்களாக இருப்பார்கள். ஏனென்றால், கைத்தறியாளர்கள் வாரத்திற்கு ஒரு முறை சேலைத் தினுசுகளை மாற்றி வருகிறார்கள்.

ஒரு சினிமா வெற்றிகரமாக ஓடிவிட்டால் போதும், அடுத்த வாரமே அந்தப் பெயரில் ஒரு அழகான சேலைத் தினுசு தயாரித்து விடுவார்கள் கைத்தறியாளர்கள்.

இத்தனைக்கும் அந்தச் சினிமாவை நான்கு முறை பார்க்கும் வசதி அந்த நெசவாளருக்கு இல்லை. ஒரே முறைதான் பார்க்கிறார். அந்தப் படத்தில் வரும் கதாநாயகி அணிந்திருக்கும் சேலையைப் போல்—தயாரிக்க நினைக்கிறார். அந்த நினைப்பு நம்பிக்கையாய் மாறி உள்ளத்திலிருந்து கிளம்பி விரல் நுனிக்கு வருகிறது. பிறகு தறியிலமர்ந்து அழகான சேலையைத் தயாரிக்கிறார்.

கோடிக்கணக்கான மக்கள் இந்தத் தொழிலால் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். உண்மையைச் சொன்னால் வதை பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வெளி நாட்டின் சந்தை தேடிக் கொடுக்கும் பொறுப்பு மத்திய அரசைச் சார்ந்ததாகும்.

நெசவுத் தொழில் இதுநாள் நசித்துப் போகாமல் இருக்க—நெசவாளர் பாதி வயிறுவது சாப்பிட உதவுபவர்கள் நமது நாட்டுத் தாய்மார்கள்தான். ஆடவர்கள் எப்படிப் போனாலும் தாய்மார்கள்தான் மறவாமல் கைத்தறியாடைகளை வாங்குபவர்கள்! ஆகவே, கைத்தறியாளர்களைக் காப்பாற்றும் தாய்க் குலத்திற்கு எனது மரியாதை கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆடவர்களைப் போல் தாய்மார்களும் ஆமதாபாத்தையும், கட்டாவையும் நம்பத் தொடங்கினார்கள் என்றால் நெசவாளர்கள் வண்ணாரப்பேட்டையில்—தண்டையார்ப் பேட்டையில்—வீதியோரங்களிலோ—குடிசைகளிலோ— குடியேற வேண்டிய வேதனையான நிலை ஏற்பட்டிருக்கும்.



அண்மையில் வந்த அறிவிப்புகள்
பரிசுச் சீட்டு
பரிசுச் சீட்டு
பரிசுச் சீட்டு
ரூபாய் 75 லட்சம்.
பரிசுச் சீட்டு வருவாயிலிருந்து ரூ.75 லட்சம் மருத்துவ மனைகளுக்காகச் செலவிட அரசு திட்டமிட்டுள்ளது.
கலைஞர் கலைக் கல்லூரி
வாங்க! வாங்க!! உங்களுக்கு அதிக இடங்கள் தருகிறோம்.
கல்லூரிகள், அரசுப்பணிகள் ஆகியவற்றிற்கு முன்பு பிற்பட்டோருக்கு 25 சதவிதமும், தாழ்த்தப்பட்டோருக்கு 16 சதவிதமும் இடங்கள் ஒதுக்கப்பட்டன. இனி பிற்பட்டோருக்கு 31 சதவிதமாகவும், தாழ்த்தப்பட்டோருக்கு 18 ஆகவும் ஒதுக்கத் தமிழக அமைச்சரவை முடிவு செய்துள்ளது.
இனி சரிகை வாங்க சூரத் போகவேண்டாம், காஞ்சியிலே வாங்கலாம்
சரிகைத் தொழிற்கூடம்
காஞ்சிபுரத்தில் 25 லட்சம் ரூபாய் செலவில் சரிகைத் தொழிற்கூடம் அமைக்கப்படுகிறது.
கோபன்...


!?
ஒன்றரைக் கோடி
போதாது! தாருங்கள்
6 கோடி
ரூபாய்!
ரூ
1½ கோடி
கிராமப் புறத்தில்
30 ஆயிரம் பேருக்கு
வேலை வாய்ப்பளிக்க
6 கோடி
ரூபாய்களாவது
தேவை என்று
தமிழக அரசு
மத்திய அரசிடம்
வலியுறுத்தி
வருகிறது
என்று
முதல்வர்
அறிவித்தார்!
இதனை
மாற்றி
அமையுங்கள்!
முன்னாள் தலைமைச் செயலர்
திரு. வர்கீஸ் தலைமையில்
நிர்வாகச் சீர்திருத்தக் குழு
அமைக்கப்பட்டுள்ளது.
இதோ பணம்!
உணவு உற்பத்தி
யைப் பெருக்குங்கள்!
சிறு விவசாயிகள் ரசாயன
உரம், பொறுக்கு விதைகள்,
விவசாயக் கருவிகள்
வாங்கவும், கிணறுகள் வெட்டவும்
பம்பு செட்கள் அமைக்கவும்
கடன் தந்து உதவ தமிழ்நாடு
அரசு ரூ. 5½ கோடி ஒதுக்கி
யுள்ளது.

# பார்த்தோம் படித்தோம்

### கோவைக்கு இல்லையா?

மதுரைச் சிறப்பிதழ் மனத்தைக் கவர்ந்துவிட்டது. எங்கள் கோவைக்குச் ‘ சிறப்பிதழ் ’ தரமாட்டீர்களா ?

— எஸ். ராமச்சந்திரன்,
கோவை-12.

### இத்தனை புலவர்களா ?

மதுரைப் புலவர்கள் என்ற தலைப்பில் வெளிவந்துள்ள செய்தியைப் படித்தேன். அடேயப்பா! அந்தக் காலத்திலேயே அறுபத்து நான்கு பேர் இருந்திருக்கிறார்களே !

— எல். தணிகாசலம், தஞ்சை.

### சிறப்புமிகு இரு பக்கங்கள்

இரா. நாகசாமி எழுதியுள்ள ‘மதுரை வரலாற்றில் சில இதழ்கள்’ படிக்கச் சுவையாக இருந்தது. இரண்டு பக்கங்களில் எத்தனையோ ஆயிரக்கணக்கான ஆண்டுகளை அடைத்துவிட்டாரே!

— எஸ். முரளி, மணப்பாறை.

### கன்னித் தமிழ்ச் சுவை !

‘ கன்னித் தமிழ் மதுரை ’ என்னும் கவிதை சுவையாக இருந்தது. அதனை யாத்தவர்க்கு எம் பாராட்டு.

— புலவர் பொன்னப்பன்,
சாத்தூர்.

### ஒரே ஒரு பக்கம்தானா ?

எண்ணூர் அனல் மின் நிலையம் பற்றிய செய்தியை ஒரே ஒரு பக்கத்தில் வெளியிட்டிருக்கிறீர்களே ! இன்னும் விளக்கமாக எழுதினால் குறைந்தா போய் விடுவீர்கள் ?

— கோதை, திருவில்லிப்புத்தூர்.

### மகுடக் கட்டுரை!

தொழிலாளர் கல்வியைப் பற்றி, தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தந்திருக்கும் கட்டுரை, உற்பத்தித்திறன் சிறப்புப் பகுதிக்கே மகுடம் போன்றது.

— எம். சதாசிவம், பெங்களூர்.

### காட்டூரார்க்குப் பாராட்டு!

தொழிற்சங்கங்களின் பங்கு பற்றிக் காட்டூர் கோபால் தீட்டியுள்ள கட்டுரையைப் படித்தேன். இதுவரை நாங்கள் அறிந்துகொள்ளாத செய்திகளை எல்லாம் அறிந்துகொள்ளப் பயன்பட்டது அந்தக் கட்டுரை.

—பி. அன்பரசன், வேலூர்.

### வாழ்க கார்ட்டூன்

ஆளுநரின் உரையைக் ‘கார்ட்டூன’க்கி வண்ணக் களஞ்சியமாகப் படைத்திருக்கிறீர்கள் ! கேலி செய்வதற்கு மட்டும் தான் கார்ட்டூன் என்ற கொள்கையுடைய பத்திரிகையாளர்களின் மத்தியில், ஆக்கத்தைத் தெரிவிப்பதற்கும் கார்ட்டூனைப் பயன்படுத்த முடியும் என்பதை மெய்ப்பித்து விட்டீர்கள் !

—கே. சேகர்,
சிந்தாதிரிப்பேட்டை.

### கலைஞர் கலைஞர்தான்!

குடும்ப நலம் பற்றித் தமிழ்நாடு முதல்வர் கலைஞர் அவர்களின் வானொலிப் பேச்சைத் ‘தமிழரசு’ இதழில் படித்தேன். ‘‘இது நாள்தோறும் நினைவு படுத்திட வேண்டிய விவகாரம்’’ என்று முதல்வர், சுருக்கமாக—தெளிவாக—நகைச்சுவையாக எடுத்துக் காட்டியிருக்கிறார்; கலைஞர் கலைஞர் தான்!

— என், நமச்சிவாயம்,
சென்னை-1.

### உதகை உள்ளம்

ஜெர்மனி மீண்டெழுந்த திருச்சரிதத்தைச் செங்கனித் தமிழ் நடையில் முதல்வர் தரும் போது, நமது உள்ளமெல்லாம் உதகையில் நனைந்தது போன்ற உவகையில் ஆழ்கிறது.

—கே. கதிரவன், செங்கை.

## வெண்பாப் போட்டி-10

**ஈற்றடி: ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு**

முடிவு நாள்: 1—6—1971

பரிசு ஓராண்டு ‘தமிழரசு’ அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி :—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-2.

குறிப்பு : நேரிசை வெண்பா மட்டுமே அனுப்ப வேண்டும். முடிவு தேதிக்குப் பின்னர் வருபவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா

ஆசிரியர், வெளியிடுபவர்: செய்தித்துறை இயக்குநர், தமிழ் நாடு அரசு. அச்சிடுபவர்: அச்சக எழுதுபொருள் இயக்குநர், அரசினர் அச்சகம், சென்னை-1

தமிழ்நாட்டுக்கு

# மாநிலத் திட்டக்குழு



நம் நல்வாழ்வுக்காக நம் தேவைகளை உணர்ந்து, உணர்த்திட இந்தியாவிலேயே முதன்முறையாக **மாநிலத் திட்டக்குழு** அமைக்கப்பட்டுள்ளது.

ஆக்கப் பணிகளின் முழு வெற்றிக்கு நாம் அனைவரும் பாடுபட வேண்டாமா?

**நம் ஒத்துழைப்பைக் காட்டும் ஒரே வழி..**



## திட்டமிட்ட அளவான குடும்பம்

அதுவே

நாட்டுக்கும் நல்லது! வீட்டுக்கும் நல்லது!!



வெளியீடு: இயக்குநர். சுகாதாரம், குடும்பநலத்துறை தமிழ்நாடு அரசு.

முத்து

தமிழரசு

# ரூ. 75 லட்சம்

# உங்கள் நல் வாழ்வுக்காக!

தமிழ்நாடு அரசு பரிசுச்சீட்டு ஒதுக்கியுள்ளது.



## இன்றே வாங்குவோம்
## தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

மொத்தப்
பரிசுத்தொகை: ரூ. **7,00,000**

மொத்தப் பரிசுகள்: **1222**

குலுக்கல் நாள்: **25-5-1971**

தமிழ்நாடு அரசு பரிசுச்சீட்டால் இதுவரை உருவாகிய லட்சாதிபதிகள் 243 பேர்.

தமிழ்நாடு அரசு பரிசுச்சீட்டு வருவாய் மூலம் நம் நல்வாழ்வுக்காக மருத்துவ வசதி அளிக்க அரசு ரூ. 75 லட்சம் இப்போது ஒதுக்கியுள்ளது.

நாம் அளிக்கும் ஒவ்வொரு
ரூபாயும் நமக்கே திரும்பி வருகிறது.
வாங்கிடுவோம் பரிசுச்சீட்டு
ஒன்றின் விலை ரூ. 1/- தான்.

செலவு ஒரு ரூபாய்




வரவோ லட்ச ரூபாய்

வெளியீடு:
இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி விளம்பரத்துறை, சென்னை-9

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:— இயக்குநர், தமிழ்நாடு அரசு பரிசுச்சீட்டு, சென்னை-2

* 2 வரிசை வெளியீட்டுக்கு உட்பட்டது.

பதிவு எண். M 8657

# நமது நிலை



தமிழக முதல்வர், கலைஞர்

**மு. கருணாநிதி**



# நமது நிலை

தமிழக முதல்வர்
கலைஞர்

## மு. கருணாநிதி

# நமது நிலை

**1971** பொதுத் தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பினை ஏற்றுத் தமிழகத்தில் புதிய அமைச்சரவை அமைந்த பின்பு, சட்டமன்றப் பேரவை, மேலவை இரண்டும் கூடின. சட்டமன்றக் கூட்டு அவையில் மாநில ஆளுநர் சர்தார் உஜ்ஜல்சிங் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதும், பின்னர் 1971—72-க்கான இடைக்கால நிதிநிலை அறிக்கை மீதும் இரு அவைகளிலும் விவாதம் நடைபெற்றது. மாநிலத்தின் பல்வேறு துறை இயல்களையும் நாட்டின் பிரச்சினைகளையும் ஊடுருவிப் பார்க்கும் முறையில் உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கும் கிளப்பிய ஐயங்களுக்கும் முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் துல்லியமான, விளக்கமான விடை அளித்தார்கள்.

நாட்டை இன்று எதிர்நோக்கியுள்ள ஒவ்வொரு பிரச்சினையிலும் மாநிலத்தின் நிலையை, அரசின் நிலையைக் கோடிட்டுக் காட்டி விளக்கம் தருவதாக இருக்கிறது முதல்வர் அவர்களின் உரை. அவருடைய பதில் ‘நமது நிலை’ என்ற தலைப்பில் இந்த வெளியீட்டில் தொகுத்துத் தரப்படுகின்றது. மாநிலத்தின் நிலையை, நமது பிரச்சினைகளை உணர்ந்துகொள்ள இந்த விளக்கம், மக்களுக்குப் பெரிதும் பயன்படும் என்று நம்புகிறோம்.

சென்னை
22—5—1971.

செய்தி-விளம்பரத் துறை,
தமிழ்நாடு அரசு.

# நமது நிலை

தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை-மேலவை உறுப்பினர்களடங்கிய கூட்டவையில் 24—3—1971 அன்று ஆளுநர் சர்தார் உஜ்ஜல்சிங் அவர்கள் நிகழ்த்திய பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்குத் தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், இரு அவைகளிலும் விடையளித்தார்கள். அவருடைய உரை வருமாறு:—

கவர்னர் பெருமானுடைய உரையின்மீது இந்த மாமன்றத்தில் உறுப்பினர் திரு. வேழவேந்தன் கொண்டுவந்த நன்றி அறிவிப்புத் தீர்மானத்தையொட்டி எல்லாக் கட்சிகளின் தலைவர்களும், கட்சிகளினுடைய உறுப்பினர்களும் கலந்து கொண்டு தங்களுடைய நல்ல கருத்துக்களை எடுத்துக் கூறி இருக்கிறார்கள்.

இறுதியாகப் பேசிய நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் உட்பட மொத்தம் 67 பேர் இந்த விவாதத்திலே கலந்து கொண்டு உரை நிகழ்த்தியிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 183 பேர் இங்கே இருந்தாலும் கழகத்தின் சார்பிலே உரையாற்றியவர்கள் 33 பேர். எதிர்க்கட்சியிலே மொத்தம் 52 பேர் இருந்தாலும் 34 பேர் உரையாற்றுவதற்கான வாய்ப்பினை இங்கே பெற்றிருக்கிறார்கள்.

இது ஒன்றே ஆளுங்கட்சி, எதிர்த்தரப்பிலே உள்ளவர்களை நல்ல வகையிலே மதிக்கிறது என்பதற்குச் சரியான சான்றாகும்.

கவர்னர் அவர்களுடைய உரையில் குறிப்பிட்ட, தேர்தலைப் பற்றி உறுப்பினர்கள் உரையாற்றும்போது காரசாரமாக விவாதம் நடைபெற்றது.

## தீமையை எதிர்ப்பதில் ஒற்றுமை

ஆனால், ஒவ்வொருவரும் தங்களுடைய தொகுதியில் நடைபெற்ற அசம்பாவிதங்களை எடுத்துச் சொல்லிவிட்டு இனிமேல் இதுபோன்ற அசம்பாவிதங்கள் நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கூறியதில் இருந்தே, இந்த வன்முறை வெறியாட்டங்களைத் தமிழகத்தைப் பொறுத்தவரையில் யாரும் விரும்பவில்லை என்பது வெகு தெளிவாகத் தெரிகிறது.

முஸ்லீம் லீக் கட்சித் தலைவர் திருப்பூர் மொய்தீன் அவர்கள் பேசும்போது, ''நடந்தவைகளை மறந்துவிட்டு ஜனநாயகத் தீர்ப்பை ஏற்றுக்கொண்டு நாட்டின் எதிர் காலத்தை ஒளிமயமாக்குவதற்கு நாம் அனைவரும் சேர்ந்து பாடுபடுவோம்'' என்று அழகாகக் குறிப்பிட்டார்கள். அப்படிப் பாடுபட வேண்டும் என்று எண்ணுகிற நேரத்தில் நடந்து முடிந்த தேர்தல் ஏதோ மோசடியானது, தவறாக நடந்துவிட்டது—என்ற பிரச்சாரம் இங்கே அவையில் செய்யப்பட்டாலும் சரி, அல்லது வெளியிலே செய்யப் பட்டாலும் சரி, அது நல்லதல்ல, பொருத்தமுடையது மல்ல.

தேர்தல் முடிவு வெளியானதும் சுதந்திராக் கட்சியின் ஒரு பெருந்தலைவரான மசானி அவர்கள் தெரிவித்த கருத்து வெளியாகி இருக்கிறது.

## ஜனநாயக மரபு

நாடாளுமன்றத்திற்கும், அவர்களது கட்சிக்கும் வாக் காளர்கள் நம்பிக்கையோடு அளித்த வாக்குகளை, ஜனநாயக வாதி என்ற ரீதியில் மக்கள் அளித்த தீர்ப்பாகத் தாங்கள் ஏற்றுக்கொள்வதாகச் சுதந்திரக் கட்சித் தலைவர் திரு மசானி கூறிய கருத்துக்கள் பத்திரிகைகளில் வெளியாகி இருந்தன.

அதுதான் ஜனநாயகத்திலே போற்றிப் பாராட்டவேண் டிய நல்ல மரபாகும்.

அடுத்தபடியாக மையிலே ஏதோ ரசாயனக் கலவை, ஏதோ மாயங்கள் நடந்தன, இந்திரஜாலங்கள் நடந்து விட்டன—என்று உறுப்பினர் பொன்னப்ப நாடார் பேசும் போது சொன்னார்கள்.

இந்திரஜாலங்கள் என்று அவர் குறிப்பிடுவதை நான் புரிந்து கொள்கிறேன். 'மையிலே தவறு இருக்கிறது' அதை வைத்தால் உடனே காய்ந்து விடுகிறது 'வேறு மாதிரி மாறி விடுகிறது' என்றெல்லாம் இன்றைக்கும் பேசப்படுகிறது; எழுதப்படுகிறது.

## டாட்டாவின் மறுப்பு

வாக்குச் சீட்டில் மோசடி நடந்ததா என்று ஒரு கேள்வி எழுப்பப்பட்ட நேரத்தில் ஜனநாயகக் கூட்டணியில் உள்ள சில கட்சிகளின் ஆதரவோடு சுயேச்சையாகப் போட்டியிட்ட டாட்டா அவர்கள் அந்தப் புகாரை மறுத்து ஒரு அறிக்கை வெளியிட்டார்கள்.

தமது தோல்வியை எதிர்த்து, தான் வழக்குத் தொடரப் போவதாக வந்துள்ள செய்தியை மறுத்து நாவல் டாட்டா அறிக்கை ஒன்று விட்டுள்ளார்.




அந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ள கருத்துக்களாவன "நான் தேர்தல் முடிவை எதிர்த்து மனு எதையும் தாக்கல் செய்ய விரும்பவில்லை. அவ்வாறு ஒரு போதும் யோசித்ததும் இல்லை. நான் வழக்காடப்போவதாக வந்துள்ள செய்தி குறும்புத் தனமானது. வாக்குச் சீட்டுகளில் ரசாயன மை பயன்படுத்தப் பட்டது எனும் புகார்கள் நெருங்கிய தொடர்பில்லாதவை; கற்பனையானவை. மர்ம ரசாயன மை பயன் படுத்தப்பட்டது, விசேஷ வாக்குச் சீட்டுகளிருந்தன என்ற புகார்களெல்லாம் உண்மையாயிருக்கும் பட்சத்தில் நான் சுமார் 20,000 வாக்குகளைத் தான் பெற்றிருப்பேன். நீரிலிருந்து வெளியே தூக்கிப்போட்ட மீன் போலாகி விட்டேன். மீண்டும் தண்ணீருக்கே போக விரும்புகிறேன்."

மக்களின் தீர்ப்பை எவ்வளவு மிகுந்த பெருந்தன்மையோடு அவர்கள் ஒத்துக் கொண்டார்கள் என்பதற்காகத் தான் நான் இவைகளை எல்லாம் எடுத்துச் சொல்லுகிறேன்.

### தெளிவான தீர்ப்பு

அதே போல் மாநிலங்களவை உறுப்பினர் திரு ஆர். டி. பார்த்தசாரதி அவர்கள் "சமீபத்தில் நடந்து முடிந்த தேர்தலில் இந்திரா காங்கிரசுக்கு மக்கள் பெருவாரியான ஆதரவு தந்ததால் அதன் முற்போக்குக் கொள்கையில் மக்கள் தங்கள் நம்பிக்கையைத் தெரிவித்தனர் என்பது நிரூபணமாகிவிட்டது. இந்திரா காந்தியின் தலைமைக்கு மக்கள் பெருவாரியான ஆதரவு அளித்தனர். ஜனநாயகவாதி என்ற முறையில் மக்கள் தீர்ப்பை நான் ஏற்கிறேன்" என்று கூறியுள்ளார். அந்தக் காங்கிரசிலிருந்து கூட அவர் வெளியேறியிருக்கிறார். அவரோடு வேறு சிலரும் சென்றிருக்கிறார்கள்.

இப்படி, தேர்தல் முடிவை அவர்கள் மிகுந்த பெருந்தன்மையோடு ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

## குறை வேறு ; குற்றம் வேறு.

தேர்தலில் இன்னும் நவீனமான முறைகள் எல்லாம் பயன்படுத்தப்படவேண்டும் என்று இங்கு பலர் பேசியிருக்கிறார்கள், அதில் எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. மேலும் நவீனமான முறைகள் தேவை தான்.

ஆனால், தேர்தலில் அங்கொன்றும் இங்கொன்றும் என்று சில குறைகள் இருக்கலாமே தவிர, குற்றங்கள் இருப்பதாக நாம் கூறுவது நல்லதல்ல. குறைகளுக்கும் குற்றங்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை நாம் ஆழ்ந்து கவனிக்கவேண்டும்.



குறைகள் என்றால், ஆங்காங்கே சென்று உடனடியாகக் களையப்பட வேண்டியவை. தெரிந்து மீறி செய்யப்படுகின்ற காரியங்கள் குற்றங்களாகும். அப்படி எந்தக் குற்றமும் இந்தத் தேர்தலில் நடைபெறவில்லை.

நம்முடைய பெருமதிப்பிற்குரிய உறுப்பினர் மணலி கந்தசாமி அவர்கள் பேசும்போது, இந்தத் தேர்தலில் ஜாதி உணர்வுகள் தலைகாட்டின; கடவுளர் இழுக்கப்பட்டார்கள்; ஆஸ்திக நாஸ்திக வாதங்கள் தேவையில்லாமல் தேர்தலில் பயன்படுத்தப்பட்டன என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள்.

ஆமாம் ! இந்தத் தேர்தலில் என்றைக்கும் இல்லாத அளவிற்கு வகுப்புணர்ச்சிகள் தூண்டப்பட்ட காட்சியைப் பார்த்தோம். ஆனால் அந்த வகுப்புவாத சக்திகள் பெரும்பான்மையான அளவில் வெற்றியைப் பெறவில்லை என்பதையும் நாம் கண்டோம்.

சேலம் நகரில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியைத் திராவிட முன்னேற்றக் கழகத்தோடு இணைத்து, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியோடு இணைத்து—ஆகவே திராவிட முன் னேற்றக் கழகத்திற்கு வாக்களிக்கக்கூடாது என்றெல்லாம் சேலம் நிகழ்ச்சியோடு தேர்தலுக்கு முடி போட்டார்கள்.

### சேலம் நிகழ்ச்சி; ஒரு விளக்கம்!

இன்றும் சொல்கிறேன். சேலம் நிகழ்ச்சியை யாரும் ஒத்துக் கொள்ளவில்லை. சேலத்தில் நடைபெற்ற சம்பவங் களை யாரும் ஏற்றுக் கொள்ள இயலாது.

நான் சேலம் சம்பவம் நடைபெற்ற இரண்டு மூன்று நாட்களுக்கெல்லாம் மதுரை சென்றிருந்த போது நிருபர்கள் என்னைச் சந்தித்துக் கேட்ட நேரத்தில் 'சேலம் நிகழ்ச்சிகளை நான் ஏற்றுக்கொள்ளவில்லை, காவல் துறையினர் அதைப் பற்றி நடவடிக்கைகள் எடுப்பார்கள்' என்றுதான் கூறினேனே அல்லாமல், அவர்களிடம் விளக்கம் கேட்கப்பட்டிருக்கிறது என்று கூறினேனே தவிர, சேலம் நிகழ்ச்சியில் என்ன தவறு என்று நான் கேட்கவில்லை.

ஆனால், சேலம் நிகழ்ச்சி நடந்து முடிந்து விட்ட பிறகும் சேலம் நிகழ்ச்சியில் என்னென்ன நடந்ததோ' அவற்றை எல்லாம் பெரிய பெரிய சுவரொட்டிகள் போட்டு ஊர் எல்லாம் ஒட்ட வேண்டியது அவசியம் தானா? எண்ணிப்பார்க்க வேண்டும். உள்ளபடியே கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் என்றால் அப்படிச் செய்வார்களா ?

என்ன போட்டிருந்தார்கள் சுவரொட்டிகளில்? ராமன் படத்தையும், முருகன் படத்தையும் போட்டு, பெரியார் அதைச் செருப்பால் தாக்குவது போலவும் போட்டு, அதை நான் பார்த்துக் கொண்டு சிரித்துக் கொண்டிருப்பதைப் போலவும் போட்டிருந்தார்கள். அந்தச் சுவரொட்டிகளை ஊரெல்லாம் ஒட்டினார்கள்.

உள்ளபடியே, அது அனுமதிக்கக் கூடிய காரியமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். சேலம் நிகழ்ச்சி தவறு என்றால், ஊரெல்லாம் அந்தச் சுவரொட்டி களை ஒட்டி, தவறு இப்படித்தான் நடந்தது என்று சொல்ல வேண்டுமா ?

## தவறைச் செய்து காட்டுவது முறையா ?



ஒருவரின் தகப்பனுரை ஒருவன் சண்டையில் அடித்து விடுகிறுன். அப்படி அடிபட்ட நேரத்தில் அதைப் புகைப்படமும் எடுத்து விடுகிறுன் ஒருவன். அடித்தவன் மீது அடிபட்டவனின் மகன், வழக்குப் போடச் செல்வான். இல்லே, வழக்கு மன்றத்திற்குச் சென்று விவகாரத்தை அவ்வளவு பெரிதாக்காமல் சும்மா இருந்து விடுவான்.

இந்த இரண்டையும் விட்டு விட்டு, அடித்தவன் தீயவன் என்பதை உலகத்திற்குச் சொல்ல வேண்டும் என்பதற்காக, எடுக்கப்பட்ட அந்தப் புகைப்படத்தைப் பெரிதாக்கி அதைப் பிளாக் செய்து, அழகான வண்ணத்தில் சுவரொட்டிகள் அடித்து, அதை ஊரெல்லாம் ஒட்டினுல் என்ன நடக்கும்? அந்தத் தந்தை மகனேக் கூப்பிட்டு, "அடப்பாவி! அவன் ஒரு இடத்தில் தான் என்னே அடித்தான், நீ ஊரெல்லாம் என்னே அடிக்கச் செய்திருக்கிருயே'' என்று கூறி அவர் வருத்தப்பட மாட்டாரா ?

## மகேசனும் சேர்ந்து அளித்த தீர்ப்பு

எங்கள் பேரறிஞர் அண்ணு அவர்கள் அடிக்கடி சொல்லுவதுண்டு, '' மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு '' என்று. மகேசனும் சேர்ந்து அளித்த தீர்ப்புதான் இந்தத் தீர்ப்பு என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் இந்த ஆட்சியிலே பத்திரிகை சுதந்திரம் எல்லாம் பறிக்கப்பட்டு விட்டது என்று குறிப்பிட்டார்கள்.

ஒரு பத்திரிகையிலே சில வெறுக்கத்தக்க, வேண்டத்தகாத படங்கள், வெளிவரத்தகாத படங்கள், வெளியிடப்பட்டன என்ற காரணத்தால் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அந்த நடவடிக்கைகளின் உட்பொருளுக்கு நான் செல்ல விரும்பவில்லே.

இந்த ஆட்சி 4 ஆண்டுக் காலத்தில் எத்தனை பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுத்தது? எத்தனை பத்திரிகைகள் மீது ஜாமீன் தொகை கேட்டது? எத்தனை நாடகத்திற்குத் தடை போட்டது? எத்தனை நூலுக்குத் தடை போட்டது?

### பத்திரிகை சுதந்திரம் : அன்றும் இன்றும்.

இருபது ஆண்டு காலக் காங்கிரஸ் ஆட்சியில் எத்தனை பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது தெரியுமா? 1965-ம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்ட காலத்தில் 'மித்திரன்' பத்திரிகை மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லையா? அதனுடைய ஆசிரியர் கைது செய்யப்படவில்லையா? 'மாலை மணி' பத்திரிக்கை மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லையா? அதனுடைய அலுவலகத்தில் புகுந்து ஆசிரியர் கைது செய்யப்படவில்லையா?




'விடுதலை', 'திராவிட நாடு' போன்ற பத்திரிகைகளிடத்தில் ஜாமீன் தொகை கேட்கப்படவில்லையா? 'இரணியன்' நாடகம் தடை செய்யப்படவில்லையா? 'தூக்குமேடை' 'உதய சூரியன்' நாடகங்கள் தடை செய்யப்படவில்லையா? 'போர்வாள்' நாடகம் தடை செய்யப்படவில்லையா?

நூல்களைப் பொறுத்த வரையில், 'பெரியார் பொன்மொழி', 'இலட்சிய வரலாறு' 'இராவண காவியம்' போன்ற பல நூல்கள் தடுக்கப்படவில்லையா?

அரசாங்கச் சார்பில் தடை உத்திரவு போடப்பட்டது, பத்திரிக்கைச் சுதந்திரம் பறி போயிற்று என்று எப்படிச் சொல்லுகிறார்களென்றால் எங்கள் அமைச்சரவையில் இருக்கும் யாரைப் பற்றியாவது ஆளும் கட்சியில் இருக்கும் எவரைப் பற்றியாவது தனிப்பட்ட முறையில் மக்கள் தவருகப் புரிந்து கொள்ளவேண்டுமென்று கெட்ட நோக்கத்தோடு எழுதப்படுகிற நேரத்தில் விஷயங்களை, நாங்கள் நீதி மன்றத்துக்கு எடுத்துச் செல்லாமல் வேறு எங்கே செல்வது?

கருணாநிதி தன்னுடைய கட்சிப் பணத்தை, தேர்தல் நிதியைக்கொண்டு சினிமா எடுத்து விட்டான் என்று பத்திரிகையில் செய்தி போட்டார்கள். நானும் ஒவ்வொரு கூட்டத்திலும் இல்லை, இல்லை என்று சொன்னேன். அவர்கள், ஆமாம், ஆமாம் என்று சொல்லிக் கொண்டே இருந்தார்கள். நீதி மன்றத்திற்குச் சென்றால்தான் அதற்குச் சரியான தீர்வு காண முடியும் என்று நீதி மன்றத்திற்குச் சென்றோம்.

நீதி மன்றத்திற்குச் செல்கிறவர்கள், நீதி மன்றம் தரும் தீர்ப்பை ஏற்கத் தயார் என்று சொல்லும் நேரத்தில், எழுதியவர்கள் அந்தத் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளத் தயாராகத்தான் இருக்க வேண்டும்.

### நாடகத் தடைகுறித்துக் கூறியது யார் ?

எங்கள் மீது சில பத்திரிகைகளால் சுமத்தப்பட்ட அபாண்டங்களை மறுத்து, உண்மையை நிரூபிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதே தவிர, எந்தப் பத்திரிகையும் தடை செய்யப்படவில்லை. எந்த நாடகமும் தடை செய்யப்படவில்லை. ஒரு குறிப்பிட்ட நாடகத்தைத் தடை செய்ய வேண்டுமென்று, காங்கிரஸ் ஒன்றாக இருந்த காலத்தில், காங்கிரஸ் உறுப்பினர்கள் பேசிய நேரத்தில் கூட நான் எழுந்து, ''எழுத்து உரிமையைப் பறிப்பது நல்லதல்ல. எங்களைப் பொறுத்த வரையில் மக்கள் ஆதரித்தால் ஆதரிக்கட்டும். இல்லாவிட்டால், ஆதரிக்காது செல்லட்டும்''! என்று சொன்னேனே தவிர, '' ஆமாம், நாடகம் தடை செய்யப்பட வேண்டும்'' என்று சொல்லவில்லை. இதை நாடு நன்றாக அறியும். அது பத்திரிகையிலும் வந்து இருக்கிறது.

### அரசியலும் கொலைகளும்.

தேர்தல் நேரத்தில் நடந்துவிட்ட கொலைகள் 17 என்று திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் குறிப்பிட்டார்கள். 17 கொலைகள் நடந்து இருக்கின்றன என்று சொன்னால் அவை தேர்தல் காலத்திற்கு முன்னும் பின்னும் நடைபெற்றவை. நடைபெற்ற கொலைகள் எல்லாம் தேர்தலுக்குத் தொடர்புடைய கொலைகள் என்று சொல்ல முடியாது. அப்படிச் சொல்வது தவறாகும்.

17 கொலைகளில், ஒன்பது, பத்து கொலைகள் அரசியல் தொடர்புடையதாக உள்ளன. மற்றவை தனிப்பட்ட தகராறுகள் அவர்களுக்குள்ளே இருந்ததால் ஏற்பட்டவை என்றுதான் நமக்குச் செய்திகள் கூறுகின்றன.

அந்த வழக்குகள் அனைத்தும் நீதி மன்றத்தில் இருக்கிற காரணத்தால், நான் அவற்றின் மீது அதிகம் ஆராயப் புக வில்லை. என்றாலும் கொலைகள் விழக்கூடாது. வன்முறைச் சம்பவங்கள் ஏற்படக்கூடாது என்று நாம் இந்த மன்றத் தில் ஒவ்வொரு நாளும் பேசிக்கொண்டே இருக்கிற காலத்தில் தான், இரண்டு நாளைக்கு முன்பு கூட, பரங்கிமலைத் தொகுதி யில், எம்.ஜி.ஆர். அவர்கள் வெற்றி பெற்று வந்த தொகுதி யில், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த முருகேசன் குத்திக் கொலை செய்யப்பட்டு இருக்கிறார்.

ஆகவே, கொலைகள் எந்த அரசியல் காரணத்திற்காக நடைபெற்றாலும், எந்த அரசியல் கட்சிக்காரர்களால் நடத் தப்பட்டாலும், அவை தடுத்து நிறுத்தப்பட வேண்டும். எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் இதைச் செய்தாலும் மிகவும் கண்டிக்கத்தக்கது தான்.

பலரும் இங்கே அபிப்பிராயம் தெரிவித்தார்கள், சர்வ கட்சித் தலைவர்களும் சேர்ந்து அறிக்கை விட வேண்டுமென்று சொன்னார்கள். நான் அதற்கு மறுப்புக் கூறவில்லை. நாம் அறிக்கை விடுகின்ற அதே நேரத்தில், நமக்கு அடுத்து இருக்கிற ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள தலைவர்களும், கிளை அமைப்புக்களும் அந்த முறையைக் கடைப்பிடித்தாக வேண்டும். தமிழ் நாட்டில் இதுவரை கடைப்பிடிக்கப்பட்டு வரும் பண்பாடும், நாகரீகமும் காப்பற்றப்பட வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

## நமது கொள்கை

கவர்னர் உரையில் எந்தத் திட்டங்களும் இல்லை, எந்தக்கொள்கையும் இல்லை என்று குறைசொல்லப் பட்டது. ஆனால், கவர்னர் உரை மீது நடைபெற்ற இந்த விவாதத்திலும், இடைக்கால நிதி நிலை அறிக்கை மீது விவாதம் நடைபெற்ற நேரத்திலும் ஆளும் கட்சியின் சார்பில் நாம் பல்வேறு வகையான முற்போக்குக் கொள்கை களை எல்லாம் நிறைவேற்றக் காத்துக் கொண்டு இருக் கிறோம் என்பதை மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லி இருக்கிறோம்.



முற்போக்குத் திட்டங்களையெல்லாம் இந்த அரசு நிறைவேற்றித் தரவேண்டுமென்று கோரிக்கை வருகின்ற நேரத்தில், அதுவும் குறிப்பாக நிஜலிங்கப்பா காங்கிரஸ் கோரிக்கை விடுகிற நேரத்தில் நாம் மெத்த மகிழ்ச்சியோடு அதனை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

முற்போக்குத் திட்டம் யார் சொன்னாலும் அதை நிறைவேற்றித்தர நாங்கள் தயாராக இருக்கிறோம். அவற்றின் மூலம் எங்களுக்கு நன்மையையே தவிர, தீமை ஒன்றும் இல்லை.

கைத்தறி நெசவாளர்களைப்பற்றிச் சொல்லவில்லை, சேது சமுத்திரத் திட்டத்தைப் பற்றிச் சொல்லவில்லை. வேறு சிலவற்றைக் குறித்துச் சொல்லவில்லை என்ற காரணத்தால் அவற்றில் இந்த அரசுக்கு அக்கறை இல்லை என்று எண்ணிவிடக் கூடாது.

மிகவும் குறிப்பாகவும், சிறப்பாகவும், மாநிலத் திட்டக் குழு அமைப்பது ஆளுநர் அவர்கள் உரையில் அறிவிக்கப் பட்டிருக்கிறது.

## நிர்வாகச் சீர்திருத்தம்



ஆராய்ந்து நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள், ஒழுங்காகவும், செம்மையாகவும் விரைவாகவும் விறுவிறுப்பாகவும், செயல்பட வேண்டுமானால், நிர்வாக இயந்திரம் ஒழுங்காக இருக்க வேண்டும்.

நிர்வாக இயந்திரம் ஒழுங்காக இருந்திடவும், மேலும் நல்ல முறையில் முடுக்கி விடப்பட வேண்டுமென்பதற்காகவும், அதிகாரிகளின் கடமைகளை நல்ல வகையில் பயன்படுத்துவதற்காகவும்தான் நிர்வாகச் சீர்திருத்த ஆணைக் குழுவை இந்த அரசாங்கத்தின் சார்பில் ஆளுநர் அவர்களுடைய உரையில் அறிவித்து இருக்கிறார்கள்.

நிர்வாகத்தில் இருக்கும் தாமதங்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்பது பற்றி இந்த மன்றத்தில் இருக்கும் உறுப்பினர்கள் கோடிட்டுக் காட்டிய எண்ணங்களை நான் வரவேற்கிறேன். அதற்குக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இந்தத் தாமதங்கள் தவிர்க்கப்பட்டால்தான், அரசாங்கம் நிறைவேற்றும் திட்டங்கள், அந்தத் திட்டங்களுக்காக அரசு அள்ளி இறைக்கும் பணம் ஆகியவை எல்லாம் ஏழை எளிய மக்களின் படிக்கட்டுகளில் சென்று மக்கள் அமைதியான வாழ்வு பெற வகை செய்ய முடியும்.

நமது அதிகாரிகள் கடமை உணர்ந்தவர்கள். கடமை உணர்ந்த அதிகாரிகள் பலபேர் இருக்கிறார்கள். அதே நேரத்தில் சில அதிகாரிகள் வேறு மாதிரி எண்ணம் கொண்டு இருக்கிறார்கள். அந்த அதிகாரிகள் திருந்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதிகாரிகள் திருந்திக் கொண்டால் மட்டும் போதாது. திருந்திக் கொண்ட அதிகாரிகளை இணைத்து, நிர்வாக இயந்திரத்தை மிகவேகமாக இயக்கிடவும், ஆக்கபூர்வமாகக் கருத்துக்களை எடுத்துக் கூறவும் இந்த நிர்வாகச் சீர்திருத்தக் குழுவை அமைத்து இருக்கிறோம்.

**காரியம் ஒன்று, கடிதங்கள் பதினொன்று**

பட்டா வழங்குவதில் அரசு எந்த வகையில் பரிசீலித்துப் பணியாற்ற வேண்டும் என்று எடுத்துக்காட்டி, நிர்வாகத் துறையில் இருக்கிற சிக்கல்களையெல்லாம் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் சொன்னார்கள். ஒரே காரியத்திற்கு 11கடிதங்கள் எழுதப்பட்டு 11 உறைகளில் இடப்பட்டு 11 வில்லைகள் ஒட்டி அனுப்பப்பட்டன என்று சுட்டிக்காட்டினார்கள். அதுகூட அறிவிக்க வேண்டிய ஒன்றுதான்.

எந்த நிலம் பட்டா செய்யப்படுகிறது, ஆர்ஜிதம் செய்யப்படுகிறது என்பது சம்பந்தப்பட்ட ஒருவருக்கு மட்டும் தெரிவிக்கக் கூடியது அல்ல.

தமிழக அரசு பட்டா வழங்குகிற நேரத்தில் யார் யாருக்கு என்று எந்த எந்தப் பகுதிகளில் வழங்கப்பட்டது என்று அந்த அந்த எம். எல். ஏ., எம். எல். சி.,எம். பி.-க்களுக்கு அறிவிக்க வேண்டியதுதான். அந்த விவரங்களை ஒன்றாகக்கூட அனுப்பி இருக்கலாம். நிர்வாகத்தில் இப்படிப்பட்ட சீர்கேடுகளைக் களைவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும்.

## பதவி நீடிப்புப் பிரச்சினை

திரு கே. டி. கே. தங்கமணி அவர்கள் நிர்வாகச் சீர்திருத்தக் குழு அமைத்தது சரிதான்; அதிகாரிகளுக்குப் பதவி நீடிப்பு விஷயத்தில் யாருக்கும் சலுகை காட்டக் கூடாது என்று சொன்னார்கள். அமைச்சரவைக் கூட்டத் திலேயே இந்த முடிவை மேற்கொண்டு இருக்கிறோம்.

பதவி நீடிப்பைப் பொறுத்தவரையில், '' சிலர் நிபுணர் கள், இவர்களை விட்டால் அந்த இடங்களுக்கு வேறு தகுதியான ஆட்கள் கிடையாது, அவ்வளவு நிபுணத்துவம் உள்ளவர்கள் '' என்ற நிலையில், மருத்துவத் துறைபோன்ற சில அத்தியாவசியத் துறைகளைத் தவிர மற்றத் துறைகளில் பதவி நீடிப்புக் கிடையாது என்று அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

அது சில இடங்களில் இப்பொழுது சரியான முறையில் நிறைவேறாமல் இருக்கலாம். அதிலே சில சங்கடங்கள் ஏற்பட்டிருந்தன.

திரு கே: டி: கே: தங்கமணி அவர்களுடைய உரையை யொட்டி மீண்டும் வலியுறுத்திச் சொல்கிறேன்: மிகவும் தவிர்க்க முடியாத காரணங்கள் இருந்தால் அல்லாமல் பதவி நீடிப்பை இந்த அரசாங்கம் இனி நிச்சயம் தராது என்பதை யும் நான் இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (ஆரவாரம்)

## ஆசியாவிலேயே பெரிய ஒரு தொழில் திட்டம்

நம்முடைய நாட்டிலே தொழில் வளம் எவ்வாறு இருக் கிறது என்பது, சிலராலே போற்றப்பட்டது, பாராட்டப் பட்டது. தொழில் வளம் நல்ல வகையிலே இல்லை என்றும் சில உறுப்பினர்களால் எடுத்துச் சொல்லப்பட்டது. கவர்னர் உரையிலே தூத்துக்குடி உரத்தொழிற்சாலையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதற்கான அனுமதி விரைவிலே கிடைக்கும் என்று கூறினார்கள்.

அதே நேரத்தில் கவர்னர் உரையின் மீது விவாதம் நடத்திக்கொண்டிருக்கிற இந்தநேரத்திலே இந்த உரத் தொழிற்சாலைக்கு நாப்தா மூலப்பொருளாக நமக்கு அனுமதி கிடைத்திருக்கிறது.



தூத்துக்குடி உரத் தொழிற்சாலைத் திட்டம். ரூ. 65 கோடித் திட்டம். ஆசியாவிலேயே மிகப் பெரிய திட்டம். இதற்கு மாநில அரசு ரூபாய் 3 கோடியும், தனியார் பிரதிநிதிகள் 3 கோடியும் தருகிறார்கள். தனியார் பிரதிநிதிகளின் முயற்சியினால் அரசு சார்புள்ளதும், அரசு சார்பற்றதுமான நிறுவனங்களின் வாயிலாக மீதமுள்ள தொகை திரட்டப்பட்டு இந்த உரத் தொழிற்சாலை அமைகிறது. நாம் இதைக் கூட்டுத்துறையில் அமைத்திருக்கிறோம். கூட்டுத் துறையில் இதனை அமைத்திருப்பதால் அரசாங்கத்தினுடைய கண்காணிப்பு இந்தத் தொழிற்சாலைக்கு இருக்க வேண்டும் என்பதற்கு அடையாளமாக அரசாங்கத்தின் சார்பிலே நான்கு டைரக்டர்கள் இதிலே இருக்கிறார்கள்.

## அணுமின் நிலயத்திற்குக் கனநீர் உற்பத்தி

அதைப் போலவே ரூ. 20 கோடி அளவில் ஹெவி வாட்டர் உற்பத்தித் திட்டம் விரைவிலே வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கான தொடக்கப் பேச்சுவார்த்தைகளெல்லாம் முடிவுற்றிருக்கின்றன. அது சம்பந்தமாக அணுசக்தி ஆணைக்குழுவுடன் நம்முடைய அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள்.

இந்த ஹெவி வாட்டர் உற்பத்தித் திட்டம் வந்து விடுமேயானால், நம்முடைய கல்பாக்கம் அணுமின் நிலையத்திற்குப் பயன்படக்கூடிய இத்திட்டம் ரூ. 20 கோடியில் ஒரு பெரிய திட்டமாக அமையும்.

## சேலம் உருக்காலை வந்த விதம்

சேலம் உருக்காலைத் திட்டத்தைப் பற்றி இங்கே பலரும் பேசினார்கள். ரூ. 110 கோடியில் இந்தத் திட்டம் நமக்குக் கிடைத்தது. இந்தத் திட்டம் கிடைத்ததைப் பற்றிப் பேசிய உறுப்பினர்கள்—எதிர்த் தரப்பில் உள்ளவர்கள்—குறிப்பாக நிஜலிங்கப்பா காங்கிரஸில் உள்ளவர்கள் இது

எங்களுடைய காலத்தில் சொல்லப்பட்டதுதான். எங்களுடைய காலத்தில் கேட்கப்பட்டதுதான்' என்றெல்லாம் சொன்னார்கள். நானும் அதை மறுக்கவில்லை.

இன்னும் சொல்லப்போனால், சேலம் உருக்காலைக்கு அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்ற நேரத்தில் இந்தத் திட்டத்திற்காக ஆரம்ப காலத்தில் பாடுபட்ட திரு. காமராஜர் அவர்களுக்கும், திரு. வெங்கட்ராமன் அவர்களுக்கும் திரு. சுப்பிரமணியம் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். நாங்கள் யாரும் நன்றி மறந்துவிடுபவர்கள் அல்ல. அரசியல் பண்பாட்டை இழந்துவிடுபவர்கள் அல்ல.

ஆனாலும், இந்தத் திட்டம் இடைக்காலத்தில் 'கிடப்பிலே' போடப்பட்டது. இது வராது என்கிற அளவுக்கு நிலைமை போயிருந்தது என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது. இதற்காக நாம் ஒரு பெரிய போராட்டம் நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தமிழ் நாட்டிலுள்ள எல்லாக் கட்சியினரும் இணைந்து 'எழுச்சி நாளை'க் கொண்டாடினோம். அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்களும் நாடெங்கிலும் பல்வேறு பகுதிகளிலும் பேசி, தீர்மானங்களெல்லாம் நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

அதற்குப்பிறகு நடைபெற்ற தேசீய வளர்ச்சிக் குழுவில், முதலமைச்சர்கள் கலந்து கொண்ட மாநாட்டில் நான் "சேலம் உருக்காலைத் திட்டத்தை எங்களுக்கு அளிக்காவிட்டால், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதை நிறுவாவிட்டால், நான்கு கோடித் தமிழ் மக்களுடைய சார்பாகச் சொல்கிறேன், இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு என்னுடைய சம்மதத்தைத் தர முடியாது" என்று திட்டவட்டமாகச் சொன்னேன்.

"நீங்கள் எதிர்த்துப் பேசுவதில்லை. அங்கு போனதும் வளைந்து விடுகிறீர்கள், இங்கேதான் வீரமாகப் பேசுகிறீர்கள், அங்கு சென்று துணிச்சலாகக் கேட்பதில்லை!" என்று டாக்டர் ஹாண்டே அவர்களும், திருமதி அனந்த நாயகி அவர்களும் பேசும்பொழுது குறிப்பிட்டதால் அங்கு நடந்ததைச் சொன்னேன்.

தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்திலிருந்து வெளியே வந்ததும் டெல்லியில் உள்ள சில தமிழ் நாட்டுத் தலைவர்களெல்லாம் என்னைச் சந்தித்து "இப்படி என்.டி.சி. கூட்டத்தில் வேகமாகப் பேசலாமா? நிபந்தனை பாட்டுப் பேசலாமா? ஒருவேளை சேலம் உருக்காலை

கிடைக்காவிட்டால் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை விட்டுவிடுவதா? '' என்று கூடக் கேட்டார்கள். பிறகு 10 நாளைக்குள் சேலம் உருக்காலை கிடைத்துவிட்டது என்பதை நாம் மறந்துவிட முடியாது.

**பெண் கேட்டவர்கள் கதை.**

'' நாங்கள்தான் கேட்டோம், நாங்கள்தான் கேட்டோம் ஆகவே வெற்றியில் உங்களுக்குச் சொந்தமில்லை '' என்று கூறுகிறார்கள்.

ஒரு வீட்டில் அழகான பெண் இருக்கிறாள். பல பேர் போய்ப் பெண் கேட்கிறார்கள். பையன் பிடிக்கவில்லை. நல்ல வருமானம் இல்லை. நல்ல அழகு இல்லை என்று சொல்லித் தட்டிக்கழித்துவிட்டு, கடைசியில் அந்தப் பெண்ணுக்குத் திருமணம் ஆகி, திருமண ஊர்வலம் வரும்பொழுது, பாதை ஓரத்தில் நின்றுகொண்டு ''நான் கேட்ட பெண்தான்'' என்று கேலி செய்வதா? கட்டினவனுக்குத்தான் பெண்ணே தவிர, கேட்டவனுக்கெல்லாம் அல்ல என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதைப்போலத்தான் தி.மு.க. ஆட்சிக்கு வெற்றி கிடைத்தது. வெற்றியை நாங்கள் கொண்டாடுகிறோம். அனைவரும் சேர்ந்து கொண்டாடுகிறோம். ஆனால் வெற்றி கிடைத்த நேரத்தில், '' நாங்கள்தான் கேட்டோம், நாங்கள்தான் கேட்டோம்'' என்று சொல்வதா ?

'' சேலம் உருக்காலைகுறித்து மேலும் ஒரு அறிக்கை தேவைதானா ? ஆராய்ச்சிகள் முடிந்துதானே அறிக்கை கொடுக்கப்பட்டது ? மறுபடியும் அறிக்கை எதற்கு ?'' என்று குறிப்பிட்டார்கள்.

புது அறிக்கை பெரிய அறிக்கையாக இருக்காது, ஒரு திருத்த அறிக்கையாகவே இருக்கும். அது ஏன் தேவை ? இந்த அறிக்கை வெளியாகி பல ஆண்டுகளாகக் கிடப்பில் போடப்பட்டு விட்டது. தொழிற்சாலை வராது என்ற நிலையில் அறிக்கையை ஏறெடுத்துப் பார்க்காத சூழ்நிலை உருவாகியிருந்தது. உருக்காலை வருகிறதா என்ற சந்தேகம் ஏற்பட்டு, காலக் கடத்தல் காரணமாக, தாமதம் காரணமாக, அந்த அறிக்கையில் சில திருத்தங்கள் தேவைப்பட்டன.

திருத்த அறிக்கையையும் ஆறுமாத காலத்தில் கொடுத்து, வேலையைத் தொடங்கிட வேண்டும் என்று வலியுறுத்திக் கூறுகிறோம். நல்ல சூழ்நிலை இருப்பதால், தேர்தலுக்குப் பின்னால் ஆட்சி மாற்றம், அமைச்சரவை மாற்றம்

கள் காரணமாக சேலம் உருக்காலை ஏற்படுவதற்கு, சீக்கிரமே செயல்படுவதற்கு ஏற்ற சூழ்நிலை உருவாகியிருப்பதாக அறிகிறேன்.

இதிலே நாம் அவசரப்படுகிறோம். அதே நேரத்தில், ஆறு மாதத்தில் அறிக்கை வரவேண்டும் என்றும் மத்திய சர்க்காரிடத்தில் வலியுறுத்துகிறோம். அறிக்கை தேவையா —இல்லையா என்பதில்லை வாதம். தேவை என்பதை நாம் அறவே மறுக்கவில்லை. காலதாமதம் ஏற்பட்டதன் காரணமாக, சில திருத்தம் தேவை என்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஆறு மாதங்கள்தான். அதற்குள் சமர்ப்பித்துவிட வேண்டும் என்று கூறித் திருத்த அறிக்கைக்கு ஒத்துக் கொண்டிருக்கிறோம்.

### நல்லதைச் செய்தோமா, இல்லையா?



அம்மையார் ஜோதி வெங்கடாசலம் அவர்கள், இவர்கள் விவசாயத்தை அபிவிருத்தி செய்திருக்கிறார்கள், உணவு உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறார்கள் என்றால், எங்கள் காலத்தில் போட்ட திட்டம் தான் என்கிறார்கள்.

இப்படியே போய்க் கொண்டிருந்தால், எங்கள் காலத்து வயல்கள் என்றுகூடச் சொல்லலாம். ஆகவே, சொன்னவைகளையும் செய்தவைகளையும் நாங்கள் கெடுக்காமல், மேலும் அது தொடர்பாக முயற்சியில் ஈடுபட்டு நல்லவைகளைச் செய்து முடித்திருக்கிறோமா, இல்லையா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதை விட்டு விட்டு, 'நாங்கள் செய்தோம், நாங்கள் செய்தோம்' என்று சொன்னால் எப்படி அது முறை ஆகும்?

உணவு உற்பத்தி பெருகியது என்றால், மழை பெய்தது ஆகவே தான் அதிக உணவு உற்பத்தி என்று சொல்வது எப்படி ஒரு வாதம் ஆகும்? அப்படி வாதத்திற்கு எடுத்துக்கொள்வோமானால், நல்லவர்கள் இருக்கிறார்கள், மழை பெய்கிறது என்று அதையும் சொல்லலாம் அல்லவா?

நான் சொல்கிறேன் : மழை, பற்றுக்குறையாக இருந்தது உண்டு. கடந்த நான்காண்டு காலத்தில் வறட்சி கூட வந்தது. வறட்சியையும் சமாளித்துத்தான் நாங்கள் உணவு உற்பத்தியை கணிசமாகப் பெருக்கியிருக்கிறோம், அதில் வெற்றி பெற்றிருக்கிறோம் என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது.

## தொழிலில் நமது வளர்ச்சி.



சேலம் உருக்காலையைப் போல அடுத்து பல பெரிய தொழிற்சாலைகள் நம்முடைய நாட்டுக்குக் கிடைத்திருக்கின்றன. நம்முடைய மாநிலம் பெற்றிருக்கின்றது. அந்த அளவுக்குப் பெரிய தொகை கொண்ட தொழிற்சாலைகள் இல்லை என்ருலும், டயர் தொழிற்சாலை ஒன்று வருகிறது. சோடியம் ஹைட்ரோ சல்பேட் தொழிற்சாலை ஒன்று உருவாகிறது. சோடா ஆஷ் தொழிற்சாலை அதுவும் கூட்டுத் துறையிலே உருவாகிறது. நைலான் தொழிற்சாலை விரைவிலே வரும் என்பதற்கான அறிகுறிகள் தோன்றியிருக்கின்றன. பாலிஸ்டர் ஃபைபர் தொழிற்சாலை ஒன்றும் அமைக்கப்பட இருக்கிறது.

நமது மாநிலத்தில் எந்த அளவுக்குத் தொழில்கள் வளர்ந்திருக்கின்றன என்பதற்கான விவரங்களைக் காட்டுகிற குறிப்புகளை இங்கே எடுத்துக் கூறுவது பொருத்தமுடையதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

தொழில் உற்பத்திக் குறிப்பீட்டெண் என்ற தலைப்பிலே *1967-ல் 158·3, 1968-ல் 166·3, 1969-ல் 172·8, 1970-ல் 182·3* என்கின்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறது.

அதைப்போலவே பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் *1967-ல் 7,065, 1970-ல் 7,922*, எதுவும் குறைந்து விடவில்லை.

பொதுத்துறையிலும், தனியார் துறையிலும் பதிவான நிறுவனங்கள், கம்பெனிகள் 1967-ல் 91, 1969-ல் 116, 1970-ல் முதல் 6 மாதங்களில் 76 கம்பெனிகள் பதிவாகி யிருக்கின்றன.

தொழில் உரிமங்களுக்காக மத்திய அரசுக்கு அனுப்பப் பட்ட விண்ணப்பங்கள், 1967-ல் 38 விண்ணப்பங்கள் அனுப் பினேம். அதிலே 16 விண்ணப்பங்களுக்குத் தொழிற்சாலை ஆரம்பிக்க உரிமங்கள் கிடைத்தன. 1968-ல் 51 விண்ணப்பங்கள் அனுப்பினேம். அதிலே 9-க்கு லைசென்ஸ் கிடைத்தது. 1969-ல் 97 அனுப்பினேம். 12-க்கு லைசென்ஸ் கிடைத்தது. 1970-ல் 142 விண்ணப்பங்கள் அனுப்பினேம். அதில் இதுவரையிலே 36-க்கு லைசென்ஸ் கிடைத்திருக்கிறது. ஆகவே, தொழிற்சாலைகள் ஆரம்பிக்க எந்த முயற்சியும் மேற்கொள்ளாமலே இருந்துவிட்டோம் என்று குறை சொல்வதற்கில்லை.

## சிறு தொழில் நிறுவனங்கள்.

சிறுதொழில்கள் வகையில் தொழில் வர்த்தக இயக்குநரால் பதிவு செய்யப்பட்ட தொழில் நிறுவனங்கள் :

| | | | |
|---|---|---|---|
| 1967-ல் | .. | .. | 11,929 |
| 1968-ல் | .. | .. | 13,571 |
| 1969-ல் | .. | .. | 18,063 |
| 1970-ல் | .. | .. | 21,857 |

ஆக, இந்த அளவிற்குத் தொழில் துறையில் நாம் முன்னேறியிருக்கிறோம் என்றாலும், இது உள்ளபடியே போது மான முன்னேற்றம் இல்லை. இன்னும் அனுமதிகள் கொடுக் கப்படவேண்டும். 100 கேட்டால் 30-க்கு அனுமதி கிடைக் கிறது. ஆகவே, இதில் குறைபாடு இல்லாமல் இல்லை.

இன்னும் அதிகமாகத் தொழில் வளர்ச்சி அடைந்திட வேண்டும் என்கிற கொள்கையின் அடிப்படையில் தொடர்ந்து மத்திய சர்க்காரிடம் எடுத்துச் சொல்லி வருகிறோம்.

## கூட்டுத்துறையின் சிறப்பு.

மேலும், மேலும் தொழிற்சாலைகளை விரைவில் உருவாக்க வேண்டும் என்று மத்திய சர்க்காரைத் தொடர்ந்து வலி யுறுத்திக் கொண்டே இருப்போம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.




தனியார் துறை, பொதுத்துறை, கூட்டுத் துறை இவைகளைப் பற்றி விவாதத்தில் குறிப்பிடப் பட்டது. கூட்டுத்துறை என்பது என்ன? கூட்டுத் துறை என்பது அநேகமாகத் தனியார் துறையாகத்தான் இருக்கிறது என்று உறுப்பினர்கள் சிலரால் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

கூட்டுத்துறை என்பதில், தனியாருடைய ஊக்கமும், அரசாங்கக் கண்காணிப்பும் இருக்கும். முன்பெல்லாம் தனியார் துறை என்றால் அரசாங்கக் கண்காணிப்புக் கிடையாது.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், மெட்ராஸ் அலுமினியம் பாக்டரியில், அதற்குப் பங்கு மூலதனம்—முதலீடு ரூ. 3 கோடி. அதிலே, தனியார் ஒன்றரைக் கோடி ரூபாயும், அரசாங்கம் ஒன்றரைக் கோடி ரூபாயும் போட்டார்கள். கண்காணிக்கும் பொறுப்பை அரசாங்கம் வைத்துக் கொள்ளாமல் இருந்தது. அரசின் சார்பில் ஒரே ஒரு டைரக்டர் அதில் இருக்கிறார். அரசைக் கலந்து கொண்டு பாக்டரியில் தனியார் தங்கள் காரியங்களைச் செய்வதில்லை.

இப்பொழுது ஏற்பட்டிருக்கிற கூட்டுத் துறையில் நிலைமை முற்றிலும் மாறுபட்டது. தனியாருடைய ஊக்கம் பயன்படுத்தப்படுகிறது. அதே நேரத்தில் அரசாங்கத்தின் கண்காணிப்பும் இருக்கிறது. இரண்டும் இணைந்து கூட்டுத்துறைக் கொள்கை நிறைவேறுகிறது என்ற அளவில், இந்த அரசு புதிய கொள்கையை உருவாக்கியிருக்கிறது.

## நமது முடிவான லட்சியம்

தமிழ்நாடு தொழில் வளம்பெற வேண்டும் என்கிற எண்ணத்தில், பொதுத் துறைதான் நம் முடிவான லட்சியம். ஆனாலும் அப்படிச் சொல்லிக்கொண்டே தொய்ந்து விடக் கூடாது என்கிற அடிப்படையில்தான் இன்றைக்கு இந்தக் கூட்டுத் துறையை நாம் ஒத்துக் கொண்டிருக்கிறோம். இறுதி லட்சியம் பொதுத் துறையே.

கவர்னர் உரையில் குறிப்பிட்டபடி, வேலை வாய்ப்புக்கள் பற்றி உறுப்பினர்கள் பெரிதும் எடுத்துச் சொன்னார்கள். வேலை வாய்ப்புக்களை அளிப்பதில், தமிழ்நாடு அரசும் மத்திய சர்க்கார் அளவிலும் பல திட்டங்கள் தீட்டப்பட வேண்டும் என்றார்கள்.

### படித்தோரிடையே வேலை இல்லா அவதி

குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் காலதாமதம் ஆனதன் காரணத்தாலும், திட்டங்கள் இல்லாததாலும், வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டிருக்கிறது. பட்டதாரிகள், பொறியாளர் இவர்களுக்கெல்லாம், வேலை அளிக்கக் கூடிய திட்டங்கள் இல்லை என்பதால், வேலை வாய்ப்பின்மை நாட்டில் பெருகியதை மறுத்திட இயலாது.

மாநில மட்டத்தில் சில காரியங்களைச் செய்து இருந்தாலும், அது பூரண திருப்தி அளிக்கக் கூடியதாக இல்லை. புன்னகை அளிக்கக் கூடியதாக இல்லை.

### ஆர்வத்தைக் காட்டும் அறிகுறி

ஆனாலும், 6,500 ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எந்தச் சம்பளமும் பெறாமல், குடும்பத்தை நடத்த முடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டு இருப்பவர்களுக்கு ஓரளவு ஊதியமாவது கிடைக்க வேண்டும் என்று, தொழில் பயில் ஆசிரியர்களுக்கு உதவியளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 6,500 ஆசிரியர்களுக்கு வேலை அளிக்கப்பட்டு, அனைவரும் வேலைக்குச் சேர்ந்து விட்டனர்.




அதேபோலத்தான் 2,400 பொறியாளர்களுக்கு உதவியளிக்க முன்வந்ததில், 1971 பிப்ரவரி முடிய 1,795 பேர்கள் வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

இப்படி 6,500 ஆசிரியர்களுக்கும், 2,400 பொறியாளர்களுக்கும் வேலை வாய்ப்புக் கொடுத்தோம். இதனால் தமிழ் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் அறவே ஒழிந்துவிடும் என்பதல்ல. இந்த அரசுக்கு வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க ஆர்வம் இருக்கிறது என்பதைக் காட்டத்தான், இது செய்யப்பட்டது. இந்த ஆர்வம் மேலும் மேலும் பெருகும். மேலும் மேலும் பெருகுகின்ற வகையில் திட்டங்கள் தீட்டப்படும் என்பதற்கு இது விடிவெள்ளி என்ற அளவில் இந்தக் காரியம் செய்யப்பட்டது. இதை வைத்துக் கொண்டு வேலை வாய்ப்புப் போதுமா என்று கேட்பது நல்லதல்ல.

## குமுறிக் கொந்தளிக்கும் கேள்வி




மேலும் மேலும் வேலை வாய்ப்புகள் பெருகிட மத்திய அரசினரும் ஒரு திட்டம் தீட்டியிருக்கிறார்கள். கிராமப்புறங்களில் ஒவ்வொரு மாநிலத்திலும், ஒவ்வொரு மாவட்டத்திலும், 1,000 பேர்களுக்கு வேலை கொடுப்பது என்பது திட்டம். கிராமப்புறத்தை ப்ளாக் ப்ளாக்காக எடுத்துக் கொள்கிறார்கள். ஒவ்வொரு ப்ளாக்கிலும் 100 பேர்களுக்கு வேலை கொடுப்பது. ஒரு மாவட்டத்தில் 10 ப்ளாக்குகள் எடுத்து, 1,000 பேர்களுக்கு வேலை கொடுப்பது என்பது மத்திய சர்க்காருடைய திட்டம். டெல்லியில் தலைமைச் செயலாளர்கள் மாநாட்டில் இந்தக் கிராமப்புறத்திட்டம் விவாதிக்கப்படும்.

கிராமப்புற மக்களுக்கு இந்த அளவில் வேலைகள் கொடுப்பது மாத்திரம் போதுமா? விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் மக்கள் வருஷத்தில் ஆறு மாதம் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு இது வேலை கொடுக்கும். ஆனால் படித்துவிட்டு வேலையற்றிருப்பவர்களுக்கு, நம்முடைய வாலிபர்களுக்கு—இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு என்ன என்று கேள்வி போட்டார்கள்.

இந்தக் கேள்வி எதிர்க் கட்சியில் இருக்கிறவர்களுடைய உள்ளங்களில் மட்டும் இருப்பது என்பதில்லை. ஆளுங் கட்சியிலிருக்கிற அத்தனை உறுப்பினர்களுடைய உள்ளங்களிலும் குமுறிக் கொந்தளிக்கும் கேள்வி இது.

### பதில் சொல்லத் தான் போகிறோம்!

புதிய புதிய கல்லூரிகளைத் திறந்து, கல்லூரிகளில் சலுகைகள் கொடுத்துப் படிக்கவிட்டு, அனுப்புகிறோம். மருத்துவக் கல்லூரிகளுக்கும் மற்ற கல்லூரிகளுக்கும் அனுப்புகிறோம். பட்டதாரிகளாக ஆகிறார்கள். அப்படிப் படித்துவிட்டுக் கல்லூரிகளிலிருந்து வெளிவந்ததும், அவர்கள் வேலை எங்கே, வேலை எங்கே என்று கேட்கிறார்கள். நாம் அவர்களுக்குப் பதில் சொல்லியாக வேண்டும். பதில் சொல்லப் போகிறோம்; நல்ல முறையில் பதில் சொல்லப் போகிறோம்.

அதனால்தான் இந்தத் தேர்தலில் முற்போக்குக் கூட்டணி வாக்காளப் பெருமக்களைச் சந்தித்து, ஆதரவு பெற்று, இந்த மாமன்றத்திலும், மத்திய சர்க்காரிலும் அரசுகள் அமைத்திருக்கும் காட்சியைக் காண்கிறோம்.

### சொன்னதைச் செய்தோம்



அளிக்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் திராவிட முன்னேற்றக் கழக அரசு முன்னின்றிருக்கிறது. முன்பு 1967-ம் ஆண்டு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளில் பெரும்பான்மையானவற்றை திராவிட முன்னேற்றக் கழக அரசு நிறைவேற்றியிருக்கிறது.

இந்தப் புதிய அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு, அறிஞர் அண்ணா அவர்களுடைய வழியில் நின்று தேர்தல் நேரத்தில் எடுத்துச் சொன்ன நாட்டு மக்களுக்குத் தேவையான காரியங்கள் என்ன, எப்படி வேலை வாய்ப்புகள் அளிக்க வேண்டும். சுதந்திர நாட்டில் ஏழைக்கு எத்தகைய சுதந்திரம் வேண்டும். பாட்டாளிக்கும், தொழிலாளிக்கும் விடிவு காலம் எந்த

வகையில் ஏற்படவேண்டும், ஏழை வீட்டில என்றென்றும் நல்ல விளக்கு எரிந்திட வேண்டுமென்பதற்காக என்னென்ன வாக்குறுதிகள் அளித்தோமோ, அந்த வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்ற இந்த அரசு கொஞ்சம் கூடத் தயங்காது என்பதை மிகுந்த திட்டவட்டமாக இந்த மன்றத்தில் எடுத்துக் கூறிக்கொள்ளுகிறேன்.

### மின்சார வாரியத்தில் வேலைகள்

மின்சாரத் துறையில் பல்லாயிரக் கணக்கான மனுக்களைப் பெற்றீர்களே, ஒருவரைக் கூட வேலைக்குச் சேர்த்துக் கொள்ளவில்லையே என்று பெருமதிப்பிற்குரிய டாக்டர் ஹாண்டே கேட்டார்கள்.

டாக்டர் ஹாண்டே போன்றவர்கள் இப்படித் தகவல் அறியாமல் பேசுகிறார்களே என்பதுதான் என் கவலை. பல்லாயிரக் கணக்கான மனுக்களைப் பெற்றது உண்மை. அந்த மனுக்கள் என்னனென்ன வேலைகளுக்காகக் கோரப்பட்டதோ அந்த வேலைகளுக்கு எல்லாம் ஆட்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவர்கள்—பில் கலெக்டர்கள் 360 பேர்; டைப்பிஸ்ட் 100 பேர்; கிளார்க்குகள் 1,500 பேர்.

டாக்டர் ஹாண்டே அவர்களுக்குத் தரப்பட்ட தகவல்—அவர் சொல்லிய தகவல் என்று சொல்லவில்லை—தவறான தகவல்: மின்சார வாரியத்தில் மனுக்களைப் பெற்று யாரையும் வேலையில் சேர்க்கவில்லை என்ற குற்றச்சாட்டு தவறானது.

### விலைவாசி குறைவின் அளவு

விலைவாசி பற்றிப் பேசப்பட்டது. எல்லா வகையிலும் விலைவாசி அறவே குறைந்து விட்டது என்று யாரும் கூறிக் கொள்ளவில்லை. உணவு தானியங்களைப் பொறுத்தவரை விலைவாசி குறைந்திருக்கிறது. வேறு சில விஷயங்களிலும் குறைந்திருக்கிறது.

எல்லாப் பொருள்களின் விலையும் குறையவேண்டுமென்றால் மத்திய சர்க்கார் ஒத்துழைப்புடன் தான் செய்யமுடியும். இதுதான் கவர்னர் உரையிலும், நிதிநிலை அறிக்கையிலும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. இதனை யாரும் மறுத்திட முடியாது.

விலைவாசியைப் பொறுத்த வரை திருச்சி மார்க்கெட்டை எடுத்துக்கொண்டால் இரண்டாம் ரக அரிசி மார்ச் 70-ல்

100 கிலோ கிராம் கொண்ட மூட்டைக்கு ரூ. 100 ஆக இருந்தது. மார்ச் 71-ல் ரூ. 86·60 ஆகக் குறைந்திருக்கிறது. சோளம் மார்ச் 70-ல் 85·3 ஆக இருந்தது. மார்ச் 71-ல் ரூ. 73·35 ஆகக் குறைந்திருக்கிறது. கம்பு 90 ரூபாயாக இருந்தது. 52 ரூபாயாகக் குறைந்திருக்கிறது. ராகி 70 ரூபாயாக இருந்தது. 62 ரூபாயாகக் குறைந்திருக்கிறது. கடலை எண்ணெய் 470 ரூபாயாக இருந்தது. 445 ரூபாயாகக் குறைந்திருக்கிறது.

### பருப்புக்கு ஒரு திட்டம்

பருப்பு வகை, சில எண்ணெய் வகைகளின் விலை சற்று ஏறி இருக்கிறது என்பதை மறுக்கவில்லை. அவற்றின் விலை குறைய, உற்பத்தியைப் பெருக்கியாக வேண்டும். அதற்காகத்தான் பருப்பு வகைகளின் உற்பத்தியைப் பெருக்க நாம் தனித் தொகை ஒதுக்கி, தமிழ்நாட்டில் ஆறு லட்சம் ஏக்கரில் பருப்பு வகைகளை விளைவிக்க வேண்டுமென்று திட்டம் தீட்டியிருக்கிறோம்.



மிளகாய் 100 கிலோ கிராம் 1970-ல் 410 ரூபாயாக இருந்தது. 1971-ல் 350 ரூபாயாகக் குறைந்திருக்கிறது. மஞ்சள்—ஈரோடுதான் மஞ்சளுக்குப் பேர் போனது—ஈரோடு மார்க்கெட்டின்படி 380 ரூபாயாக இருந்தது, 180 ரூபாயாகக் குறைந்திருக்கிறது. மஞ்சள் விலை குறைந்ததைப் பெண்கள் அதிகமாக வரவேற்பார்கள் என்று கருதுகிறேன். விறகுவிலை 14-ல் இருந்து 18 ஆக ஏறியுள்ளது.

### ஒன்றுபட்டு வாதாடுவோம்

விலைவாசி குறைவதற்கு உற்பத்தியைப் பெருக்கவேண்டும். அதற்கான முயற்சிகளில் அரசு ஈடுபட்டிருக்கிறது. அதே நேரத்தில் மத்திய அரசு விலைவாசிகளை உயர்த்தும் போது நம்மைக் கலந்து கொண்டு செய்தாக வேண்டும். அதைத்தான் திரு கே.எம். சுப்பிரமணியம் அவர்கள் விலை உயர்வை எதிர்த்தீர்களா ? என்று கேட்டார்கள்.

எதிர்ப்பதற்கு எங்கள் கையைப் பலப்படுத்துங்கள். எல்லோரும் சேர்ந்து எதிர்ப்போம். எதிர்ப்பதற்கு நாங்கள் அஞ்சுபவர்கள் அல்ல. எந்த முறையிலே எதிர்ப்பது? அந்த எதிர்ப்பைத்தான் கவர்னா உரையிலும் நிதிநிலை அறிக்கையிலும் இணைத்திருக்கும் வாசகங்கள் தெரிவிக்கின்றன.

மத்திய அரசு சம்பள உயர்வு அறிக்கையாக இருந்தாலும், விலைவாசிகளை உயர்த்துவதாக இருந்தாலும் மாநிலங்களைக் கலந்து ஆலோசிக்க வேண்டுமென்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். அவை நம்முடைய எதிர்ப்பைக் காட்டுகின்ற உணர்ச்சியின் அடிப்படையில் உள்ள வாசகங்கள்தான்.

## நியாயத்தைக் கேட்டோம்

திட்டங்களுக்குத் தேவையான நிதியைப் பெறுவதற்கு நீங்கள் அவர்களுடன் வாதித்தீர்களா என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்டார்கள். எத்தனை முறை கடிதம் எழுதினேம்? எத்தனை முறை சந்தித்துப் பேசி இருக்கிறேம்? கடிதங்களின் முழு விவரங்களைக் கொடுக்க முடியாவிட்டாலும் சிலவற்றைக் குறிப்பிடுகிறேன்.

பேரவைத் தலைவராக இருக்கின்ற அன்றைய நிதியமைச்சர் அவர்கள் 1969 ஆகஸ்டில் இந்தச் சட்டமன்றத்தில் அறிக்கை ஒன்றை வைத்தார்கள். அதில் நம்முடைய மாநிலத்திற்குக் கிடைக்க வேண்டிய நிதி அளவின் சதவிகிதம் குறைந்தது குறித்து எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியப் பிரதமருக்கு 1969 செப்டம்பரில் நான் எழுதிய கடிதத்தில் இந்திய நிதிஆணைக்குழு இழைத்த அநீதி, திட்டக் குழுவின் தகுதிவரைமுறைகளினுல் நேர்ந்துள்ள நஷ்டம் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி நியாயம் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டிருக்கிறேன்.

## மூன்று நிபந்தனைகள்

இந்தியப் பிரதமருக்கு மீண்டும் 1969 நவம்பரில் ஒரு கடிதம் எழுதியதோடு இந்தியப் பிரதமரையும், திட்டக்குழுத் துணைத்தலைவர் அவர்களையும் சந்தித்து நீண்ட நேரம் இதைப்பற்றி விவாதித்திருக்கிறேன்.

இதற்குப் பிறகு இரண்டு மூன்று தடவை நிதியமைச்சர் திட்டக் குழுவினரோடு பேசி நமக்குச் சாதகமான ஒரு முடிவுக்கு வரமுடியாததால் ஐந்தாண்டுத் திட்டத்தின் அளவு நிச்சயிக்கப்படாமல் போய்விட்டது.

ஊதியக் குழுவின் சிபாரிசுகளால் ஏற்படக்கூடிய பெரும் செலவினை ஈடுகட்ட மத்திய அரசு உதவியளிக்க வேண்டுமென 1970 மார்ச்சில் வலியுறுத்தப்பட்டது.

தேசீய அபிவிருத்திக்குழு 21—3—70 அன்று கூடியபோது அக்கூட்டத்தில் எதிர்ப்புக் குறிப்பு எழுதினீர்களா என்று கேட்டார்கள். அந்தக் கூட்டத்திலேதான் நான் மூன்று நிபந்தனைகளைச் சொன்னேன். ஒன்று சேலம் உருக்காலை; இரண்டாவது சிறப்பு நிதியாக ஒதுக்கப்பட்ட 800 கோடி ரூபாயில் நம்முடைய மாநிலத்திற்குப் பங்கு வர வேண்டும் என்பது. மூன்றாவது ஒவ்வொரு மாநிலத்திலும் பின்தங்கிய பகுதிகளுக்காக ஒதுக்கப்பட்ட 100 கோடி ரூபாயில் நம்முடைய மாநிலத்தில் பின்தங்கிய பகுதிகளுக்கும் பணம் ஒதுக்க வேண்டுமென்பது.

ஆக, இந்த மூன்று நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டால்தான் திட்டத்திற்குச் சம்மதம் தருவோம் என்று சொன்னோம். அதற்குப் பிறகுதான் 800 கோடி ரூபாயில் முதல் தடவையாக 7 கோடி ரூபாய் தந்தார்கள். இந்த ஆண்டு தர மறுக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் பின்தங்கிய பகுதிகளாக இராமநாதபுரம் மாவட்டத்திற்கும், தர்மபுரி மாவட்டத்திற்கும் இரண்டு கோடி ரூபாய் அளவுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். முதலிலே சொல்லப்பட்ட சேலம் உருக்காலைக்கும் இசைவு தந்தார்கள்.

## இடைவிடாத முயற்சி

நமக்குச் சிறப்பு உதவியளிப்பது அவசியம் என்றும் அதற்காக நம் நிதி வாயில்களைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்றும் 1970 ஏப்ரல் 15 அன்று நாம் கோரினோம். 25—4—70 அன்று இந்தக் கோரிக்கை மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

நமது இக்கட்டான நிதி நிலையை 1970 ஆகஸ்டில் விவரமாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம். டாக்டர் காட்கில் அவர்கள் உடல்நிலை சரியாக இல்லாததால் ஒத்தி வைக்கப்பட்டிருந்த சந்திப்பு துரிதமாக நடத்தப்பட வேண்டுமென்று வலியுறுத்தினோம்.

நம்முடைய தொழிலமைச்சர், அதிகாரிகள் அனைவரும் சேர்ந்து 1970 அக்டோபர் 12 அன்று டாக்டர் காட்கில் அவர்களைச் சந்தித்துப் பேசினோம். நம் வாதத்தில் நியாயம் இருக்கிறது என்பதை ஓரளவுக்கு ஒப்புக்கொண்ட காட்கில் அவர்கள், அதிகாரிகள் மட்டத்தில் நம் நிதி பற்றிய புள்ளி விவரங்கள் திரும்பப் பரிசீலிக்கப்பட வேண்டும் என்ற அளவோடு பேச்சு வார்த்தை முடிந்தது. அந்த சந்திப்புக்குப் பிறகு 1970 அக்டோபர் 31, நவம்பர் 1 ஆகிய இரு நாட்களிலும் அதிகாரிகள் மட்டத்தில் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன.

தலைமையமைச்சரிடம் 1970 டிசம்பர் இறுதியில் இதே கோரிக்கைகளை மீண்டும் பரிசீலிக்க வேண்டுமென்று கூறி

யிருக்கிறேன். 1971 ஜனவரி 19-ல் தலைமை அமைச்சருக்கு மீண்டும் இது குறித்து வற்புறுத்திக் கடிதம் எழுதியிருக்கிறேன்.

### தொடரும் போராட்டம்

நம் வாதங்களுக்கு ஒரு சில மறுப்புகள் தெரிவிக்கும் நீண்ட குறிப்பை திட்டக்குழுச் செயலாளர் 1971 ஜனவரி 12-ல் அரசுக்கு அனுப்பினார். அதற்கு பிப்ரவரி 3-ம் நாள் மறுபடியும் பதில் அனுப்பப்பட்டிருக்கிறது. இப்படி தொடர்ந்து மத்திய அரசோடு போராடிக்கொண்டிருக்கிறோம்.

டாக்டர். எச். வி. ஹாண்டே : 21—3—70 அன்று நடந்த என்.டி.சி. மீட்டிங்கில் சில நிபந்தனைகளைக் கூறியதாக முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த மீட்டிங்கில் இதையெல்லாம் செயலில் ஒத்துக்கொள்ளும் வகையில் அதிகார பூர்வமாகத் தெரிவிக்கும் வகையில் வாயில் சொன்னதோடு மட்டுமில்லாமல் 'டிஸ்சென்டிங் நோட்' எழுதியிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முதல்வர் : அங்கே நமது பேச்சுக்கள்தான் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அப்படி ரிகார்டுகள் எதுவும் பதிவு செய்யப்படுவதில்லை.

நாம் எந்தெந்த அளவுக்குப் போராடி இருக்கிறோம், எந்தெந்த அளவுக்குப் போராடி வெற்றி பெற்றிருக்கிறோம், பெற வேண்டிய உரிமைகளை எப்படி எப்படியெல்லாம் வலியுறுத்திப் பெற்றிருக்கிறோம் என்பதற்காகத்தான் இதையெல்லாம் சுட்டிக்காட்டுகிறேன்.

### தகுதி வரைமுறையை எதிர்ப்பது ஏன்?

திட்டத்திற்காக மத்திய அரசு கொடுக்க ஏற்கெனவே ஒத்துக் கொண்ட தொகை 250 கோடி ரூபாய்; ஆனால் மத்திய அரசு 202 கோடி ரூபாய் அளவுக்குக் குறைத்திருக்கிறது. மத்திய அரசின் சார்பிலே அங்கே இருக்கிற திட்டக்குழு, மாநிலங்களுக்கு என்று சில தகுதிகளை வரையறுத்தது. அந்தத் தகுதிகள் என்ன என்ன என்று பார்த்தால் மக்கள் தொகுதியிலே 60 சதவீதம், நபர்வாரி வருமானம் என்பதிலே ஒரு 10 சதவீதம், தனிப் பிரச்சினைகள் என்பதற்காக ஒரு 10 சதவீதம்; வரி விதிக்க எடுத்த முயற்சிக்காக ஒரு 10 சதவீதம், தொடர்ந்து திட்டவேலைகள் நடைபெறுகிறதா என்ற அடிப்படையில் 10 சதவீதம் என்ற அளவில் வரையறுத்திருக்கிறது. இந்த அளவிலேதான் மாநிலத்தின் தகுதிகள் என்று தகுதியை உருவாக்கினார்கள்.

இந்த அடிப்படையின் காரணமாகத் தமிழ்நாடு அரசுக்குக் கிடைக்கக்கூடியது கிடைக்காமல் போய் இருக்கிறது. ஆகவே, இந்தத் தகுதிகளை வரையறுத்த முறைகளை எதிர்க்கிறேன்.

இப்படித் தகுதி வரையறுத்த முறைகளால் ஆந்திரா 40 கோடி ரூபாய் இழந்துவிட்டது; மத்தியப்பிரதேசம் 26 கோடி ரூபாயை இழந்திருக்கிறது ; மைசூர் 49 கோடி ரூபாயை இழந்து விட்டது, மேற்கு வங்காளம் 24 கோடி ரூபாயை இழந்து விட்டது, தமிழ்நாடு 48 கோடி ரூபாயை இழந்து விட்டது .

## வராது போன உதவி

நபர்வாரி சராசரி வருமானம் என்றிருக்கிறதே ஒரு பத்து சதவீதம் ; அதை அகில இந்தியக் கணக்கிலே பார்த்தால் அனைத்திந்திய சராசரி 418 ரூபாய். தமிழ் நாட்டின் நபர்வாரி சராசரி வருமானம் 434 ரூபாய். 418 ரூபாய்க்கு மேல் நபர்வாரி வருமானம் இருந்தவர்களுக்கு உதவி மறுக்கப்பட்டது. நமக்கு—தமிழ் நாட்டுக்கு 16 ரூபாய் அதிகமானது என்ற காரணத்தாலே, நமக்கு அந்தப் பத்து சதவீதத்தில் பங்கு இல்லையென்று சொல்லிவிட்டார்கள். 418-க்கும் 434-க்கும் அதிக வித்தியாசம் இல்லையென்ற அளவில் அவர்கள் செயல்பட்டிருந்தால் நமக்கு மேலும் 25 அல்லது 30 கோடி ரூபாய் கிடைத்திருக்கும்.

அதே நேரத்தில் என்ன செய்தார்கள்? 9 மாநிலங்களுக்கு ரூ. 800 கோடி சிறப்பு நிதியாகத் தந்தார்கள். முன்பு நான் கூறியபடி தகுதி வரையறுத்த முறைகளால் மத்திய உதவியைக் கணிசமான அளவு இழந்த தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களில், மத்தியப் பிரதேசம், ஆந்திரா, மைசூர், மேற்கு வங்காளம் ஆகிய நான்கு மாநிலங்களுக்கு இச் சிறப்பு நிதியில் பங்கு அளித்தார்கள். ஆனால் அந்த நிதியில் தமிழ் நாட்டுக்குப் பங்கு இல்லை.

அதிகமாகச் சண்டைபோட்டு, நிபந்தனை போட்டு, தேசீய வளர்ச்சிக்குழுக் கூட்டத்தில் கேட்டபோது 7 கோடி ரூபாய் தரப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு தர மறுக்கிறார்கள்; அதைத்தான் இந்த நிதி நிலை அறிக்கையிலும் கோடிட்டுக் காட்டியிருக்கிறோம்.

தனிப் பிரச்சினையாக கணக்கிட்டு மேற்கு வங்காளத்தில் கல்கத்தா நகரத்திற்குப் பணம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், சென்னை மாநகரத்திற்குத் தனிப் பிரச்சினையாகப் பணம் கொடுக்கவில்லை. சென்னை மாநகரின் மவுண்ட்ரோடு மற்றும் பல ரோடுகளையும் பார்த்துவிட்டு, சென்னை மாநகரம் எல்லாவகையிலும் முன்னேறியிருக்கிறது என்று நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ள நான் விரும்பவில்லை.

கடற்கரையோரத்தில் இருக்கிற குப்பங்களில் எவ்வளவோ பேர் நடுத்தெருவில் படுப்பதற்குப் பாய் கூட அற்ற நிலையில் இருக்கிறார்கள். குடிசைகள் எல்லாம் இருள் சூழ்ந்திருக்கின்றன. சுகாதார வசதி கிடைத்தபாடில்லை. இவ்வகைக் குறைகளை நீக்கி, மேம்பாட்டுக்காக நாம் 40 கோடி ரூபாய் அளவிலே குடிசை மாற்று வாரியத்தை அமைத்திருக்கிறோம்.

இதைத் தனிப்பிரச்சினையாக மத்திய அரசு கவனித்து அதிலே பத்துச் சதவீதம் ஒதுக்கியிருந்தால் நமக்கு ஒரு பத்துக் கோடி ரூபாய் கிடைத்திருக்கும். மாநிலத் தகுதி என்ற அடிப்படையில் செயல்படுகிற விதம், நமக்கு மறுக்கப்படுகிற விதம் சரியில்லை.

ஐந்து மாநிலங்களுக்கு மத்திய திட்ட உதவியில் இழப்பு ஏற்பட்டதில், தமிழ்நாட்டைத் தவிர நான்கு மாநிலங்களுக்கு சிறப்பு நிதி கிடைக்கிறது. வேறு ஐந்து மாநிலங்களுடன் சேர்த்து 800 கோடி ரூபாய் சிறப்பு நிதியாகத் தரப்படுகிறது. அதில் நமக்குப் பங்கு இல்லையென்று சொல்வது நியாயம் அல்ல என்பதைத்தான் கவர்னர் அவர்களுடைய உரையிலும், நிதிநிலை அறிக்கையிலும் சுட்டிக் காட்டியிருக்கிறோம்.

## போராடிப் பெற்றவை



நாம் போராடி எதுவுமே பெறவில்லையா என்று கேட்டால், போராடிப் பெற்றிருக்கிறோம் என்று சொல்ல விழைகிறேன்.

கையாலாகாதவர்கள், புள்ளி விவரங்களைக் கேட்டறியாதவர்கள் என்றெல்லாம் டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்லாவிட்டாலும், சுற்றிச் சுற்றி அந்தப் பொருள் தொனிக்கும்படியாகப் பேசினார்கள்.

சென்ற ஆண்டு மட்டும் வாதிட்டு வறட்சிப் பணிக்காக 14 கோடி ரூபாய் பெற்றிருக்கிறோம்.

அடுத்து, ராயலசீமா கடன், ராஜாஜி ஆட்சியில் ரிசர்வ் பாங்கின் ஓவர் டிராஃப்ட் ஆக 23 கோடி ரூபாய் இருந்தது. அதில் நமக்கு 13 கோடி ரூபாய் பங்கு உண்டு.

இப்போது பேரவைத் தலைவராக இருப்பவர் நிதியமைச்சராக இருந்த நேரத்தில் அதைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். போராடியதன் விளைவாகத் தவணையாக அந்தக் கடன் (13 கோடி ரூபாய்) 4 வருடமாக தள்ளிக் கொடுத்து வருகிற சாதகமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

இப்படியாக நாம் சென்ற ஆண்டு 31 கோடி ரூபாயைப் பெற்றிருக்கிறோம். புயல்நிவாரணப் பணிகளுக்காக 14 கோடி ரூபாய், பின்னர் 10 கோடி ரூபாய், பின்னர் 7 கோடி ரூபாய் ஆக—சென்ற ஆண்டு வாதிட்டுக் கேட்டுப் பெற்றது 31 கோடி ரூபாய் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## மாநிலங்களுக்கு அதிக அதிகாரம்

அதேபோல் இந்த ஆண்டும் பெற வேண்டுமென்றுதான் போராடி வருகிறோம். சட்டசபையில் இப்படி அறிக்கை வைத்திருக்கிறோம், பேசுகிறோம், இவையெல்லாம் எங்களுடைய எதிர்ப்புத்தான். தமிழ்நாட்டு மக்களுடைய சார்பாக மத்திய அரசுக்குக் காட்டும் எதிர்ப்புத்தான் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

மக்களிலே சிலபேர் இது எங்கே பிரிவினையில் கொண்டு போய்விடுமோ என்று அஞ்சுகிறார்கள். அப்படி அஞ்சத் தேவையில்லை. மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்றுதான் கோருகிறோம். இந்திய நாட்டு ஒருமைப் பாட்டில் நாம் அக்கறை கொண்டிருக்கிறோம். இந்திய நாடு ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்றுதான் ஆசைப் படுகிறோம்.

இந்திய நாடாளுமன்றத்திலே ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. கிழக்கு வங்காளப் பிரச்சினையை அந்தத் தீர்மானம் பரிந்துரைத்திருக்கிறது. ஒரு நாடு பிரிந்துபோகிறபோது நாடாளுமன்றத்திலே ஆதரவு தரப் படுகிறது. அதைப்பற்றிய சர்ச்சையில் நான் இறங்க விரும்பவில்லை.

## முஜிபுர் ரகுமான் கோரியது என்ன?

கிழக்குப் பாகிஸ்தானின் தலைவராக இருக்கிற முஜிபுர் ரகுமான் என்ன கோரிக்கைகளை ஆரம்பத்தில் வைத்தார்? இலங்கையில் இருந்து வெளிவரும் 'பீப்ள்ஸ் வில்' என்ற பத்திரிகையில் ரகுமானுடைய ஆறு அம்சத் திட்டம் இருக்கிறது.

இவைகளை யெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொண்டு அதைத் திருப்பித் திருப்பிச் சொல்கிறது என்று யாரும் கருதவேண்டாம்.

இப்போது சுதந்திர நாடு என்று கேட்கிற ரகுமான் முதலில் ஆறு அம்சத் திட்டத்தைத்தான் முன்வைத்தார். அவரது முதல் திட்டம் கிழக்குப் பாகிஸ்தான், மேற்கு பாகிஸ்தான் இரண்டு மாநிலங்களில் உண்மையான தன்மையில் கூட்டாட்சியை ஏற்படுத்த வேண்டும் என்பது. இது நாம் கேட்கிற சுயாட்சியின் உண்மையான தன்மையில், கூட்டாட்சி ஏற்படவேண்டும் என்பதன் சாயலாகத் தோன்றக் கூடும்.

இரண்டாவது திட்டம், பாதுகாப்பு, வெளி விவகாரம் ஆகிய இரண்டு மட்டும் மத்திய அரசின் அதிகார வரம்பில் வரவேண்டும்; மீதி அத்தனை அதிகாரங்களும் மாநிலத்திற்கு வரவேண்டும் என்பது. நான் அப்படிச் சொல்லவில்லை. நம்முடைய மாநில சுயாட்சியில் அப்படிச் சொல்லவில்லை. நமக்கும் அதற்கும் வித்தியாசமிருக்கிறது.

மூன்றாவதாக, இரண்டு பகுதிகளுக்கும் கரன்சி நோட்டு தனித் தனியாக இருக்க வேண்டும். அடுத்தது, வரி போடும் அதிகாரமும், வசூலிக்கும் அதிகாரமும் மாநிலத்திற்கே இருக்க வேண்டும் என்று கோரியிருக்கிறார். இந்த வருமானத்திலிருந்து மத்திய அரசின் நிர்வாகத்திற்கு ஒரு பகுதியைச் செலுத்துவது என்பது அவருடைய திட்டம். இங்கே தலை கீழாக இருக்கிறது. மத்திய அரசு வசூலித்து ஒரு பகுதியைத்தான் நமக்குக் கொடுத்து வருகிறது.

அடுத்து, அந்தந்த மாநில அந்நியச் செலாவணிவருமானம் அந்தந்த மாநில அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டு இருக்க வேண்டும் என்பது. மத்திய அரசுக்குச் செலவுக்குத்தேவையான அந்நியச் செலாவணியை மாநில அரசு பங்காகச் செலுத்த வேண்டும். அடுத்து, வர்த்தகம், தொழில் வளர்ச்சிகளுக்காக வெளிநாடுகளோடு ஒப்பந்தம் செய்து கொள்கிற உரிமைகளை மாநிலத்திற்கே வழங்கவேண்டும் என்ற கோரிக்கையாகும்.

ஆறாவது (ஏ) தனி ராணுவம், இருமாநிலங்களுக்கும் தனித் தனியாக இருக்க வேண்டும். அதிலேயும் (பி) வங்க மொழியும் கூட்டாட்சி மொழிகளில் ஒன்றாக வேண்டும்.

இவை எல்லாம் முஜிபுர் ரகுமான் தன்னுடைய மாநில சுயாட்சித் திட்டத்திற்காக எடுத்து வைத்த 6 அம்சமாகும். இப்போது அவரது மாநில சுயாட்சித் திட்டம் நாட்டுக்குச் சுதந்திரம் தேடுகிற திட்டமாக, பாகிஸ்தானில் இருந்தே பிரிந்து போகிற திட்டமாக ஆகிவிட்டதைக் காண்கிறோம்.

## எதிர்க் கட்சித் தலைவரின் ஆதரவு

மேலவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராஜாராம் நாயுடு அவர்கள் பேசும்போது நம்முடைய உரிமைகளுக்காக நாங்கள் எத்தகைய நடவடிக்கை எடுத்தாலும் 'நாங்கள் உதவத் தயார்' என்று சொன்னார்கள்.

நான் பேசும்போது குறிப்பிட்டேன். அவர் கவனம் இல்லாமல் சொல்லவில்லை. நாங்கள் எத்தகைய நடவடிக்கை எடுத்தாலும் உதவத் தயார் என்று திரு. ராஜாராம் அவர்கள் சொன்னார் என்றால் நாங்கள் எடுக்கிற நடவடிக்கைகள் எல்லாம் அறவழி முறையில் இருக்கும். இந்தியாவைப் பலப்படுத்தி மாநிலங்களும் வளப்படுகிற முறையில்தான் இருக்கும் என்கிற நம்பிக்கையின் காரணமாகத்தான் எத்தகைய நடவடிக்கை எடுத்தாலும் ஒத்துழைக்கத் தயார் என்று சொல்லியிருக்கிறார் என்று குறிப்பிட்டேன்.

## இது பிரிவினைக் கோரிக்கை அல்ல



அதையேதான் மீண்டும் சொல்கிறேன். நாம் கோருகிற அதிகாரங்கள் மாநிலத்தைத் தனியாகப் பிரிப்பதற்கு அல்ல. இந்தியா எப்போதும் ஒன்றாக வலுப்பெற்று இருப்பதற்கு அதிகாரங்கள் பரவலாக்கப்படவேண்டும் என்று கோருகிறோம். மாநில அதிகாரங்களில் மத்தியத் தலையீடு அடிக்கடி இல்லாதபடி, தவிர்க்கப்பட வேண்டும். மத்திய அரசின் அதிகாரச் சுமை குறைந்தால் அதுவும் செம்மையாகத் திறம்படத் தன் பணியை ஆற்றமுடியும். மாநிலங்களுக்கு அதிகாரம் பரவலாக்கப்படுவதன் மூலம் மாநிலங்கள் வளமடையும் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறோம். கவர்னரின் உரையிலும், எனது அறிக்கையிலும், இந்தக் கருத்துத்தான் எதிரொலிக்கிறது. இதுதான் இந்த மன்றத்தின் ஏகோபித்த வாசகமாக உருக்கொள்ள வேண்டும்.

கவர்னர்பெருமான் உரையில் புரட்சிகரம் இல்லை, சோஷலிசம் இல்லை என்று விவாதத்தில் எடுத்துச் சொன்னார்கள்.

திரு. மணலி கந்தசாமி அவர்களும், திரு. கே.டி.கே. தங்கமணி அவர்களும் நிலச் சீர்திருத்தம் பற்றிச் சொன்னார்கள். பல அன்பர்கள் புரட்சிகரமான மாறுதல் உண்டாக்கப்பட வேண்டும் என்றார்கள்.

### நிலமில்லாதோர் இல்லை என்ற நிலை

நிலம் இல்லாதவர்கள் இருக்கக் கூடாது, ஒவ்வொருவருக்கும் 50 செண்ட் நிலமாவது இருக்க வேண்டும். 15 குழி மனைக்கட்டாவது இருந்தாகவேண்டும் என்கிற புதிய சூழ்நிலையில் திராவிட முன்னேற்றக் கழக அரசு தக்க ஏற்பாட்டைச் செய்ய என்னுடைய தலைமையில் உருவாகியிருக்கிற அந்தக் குழு விரைவில் அந்தப் பணியை ஆராயத்தொடங்கும்.

பஸ் உச்சவரம்பைப் பற்றிக்கூடச் சொன்னார்கள். அந்த அடிப்படைக் கருத்தைத் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. நேற்று திருமதி அனந்தநாயகி அவர்கள் பேசும்போது கூடக் குறுக்கிட்டுச் சொன்னேன். பஸ்ஸுக்கு உச்சவரம்பு விரைவில் வரும். 'ரெட்ராஸ்பெக்டிவ் எஃபக்டோடு' வரும் என்று இந்த நேரத்திலும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

### வேடுவர்கள் சூழ்ந்த மான்



மேலவையில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மது விலக்கைத் தயவு செய்து எடுத்து விடாதீர்கள் என்று குறிப்பிட்டார்கள். மது விலக்குக் கொள்கையைப் பொறுத்த வரை தி.மு.க.வுக்கு அதில் நம்பிக்கை இல்லை என யாரும் கருதமாட்டார்கள். எங்களை ஆளாக்கிவிட்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் சட்டப் பேரவையிலும் மேலவையிலும் உரை நிகழ்த்தும் போது இந்த அரசு மது விலக்குக் கொள்கையில் தீவிரமாக இருக்கும் என்று அறிவித்தார்கள்.

தமிழ்நாட்டிலும், குஜராத்திலும் மட்டும் இப்போது மதுவிலக்கு அமுல் படுத்தப்பட்டு

வருகிறது: இந்தியா முழுமைக்கும் ஏன் இதனை அமுல் ஆக்கக்கூடாது என்பது தான் நமது கேள்வி. நான் கூட நிருபர்களைச் சந்தித்தபோது குறிப்பிட்டேன். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் எனக் கேட்கும் நாங்கள் இந்த ஒரு அதிகாரத்தினை மத்திய அரசுக்குத் தரத் தயாராக இருக்கிறோம். அதனைக் கொண்டு இந்தியா முழுவதற்கும் மதுவிலக்கை அமல்படுத்த மத்திய அரசு முன் வரவேண்டும் என்றேன்.

தமிழ் நாட்டில் மதுவிலக்கு அமலில் இருக்கிறது. ஆனால் இங்கிருந்து 50 மைல் சென்றால் பாண்டிச்சேரி—அங்கு மதுவிலக்கு கிடையாது. இந்தப் பக்கம் 50 மைல் சென்றால் ஆந்திர எல்லை வருகிறது; மறுபக்கம் 50 மைல் சென்றால் பெங்களூர் வருகிறது. மற்றொரு பக்கம் கேரளம். இப்படி நான்கு பக்கமும் வேடுவர்கள் சூழ்ந்த மானாக நமது மாநிலம் விழித்துக்கொண்டிருக்கிறது. நமது மாநிலத்துக்குக் கிடைக்கும் வருமானத்தையும் இழந்து நிற்கிறது.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நமது மாநிலத்தில் மதுவிலக்குத் தோல்வி அடைந்துவிட்டதாகக் கூறினார்கள். நான் அதனை ஒப்புக்கொள்கிறேன். முந்தைய அரசினரைப் போல் ஆகா! மகாப் பெரிய வெற்றி! எனக் கூறி என்னையே நான் ஏமாற்றிக்கொள்ள விரும்பவில்லை. நான் உறுதியாக ஒப்புக்கொள்கிறேன். இக்கொள்கை தோல்வி அடைந்து பலரது நாணயத்தையும் கெடுக்கிறது. அதிகார வர்க்கத்தாரையும் கெடுக்கிறது. இதனை ஏன் கவனிக்கக்கூடாது என்று கேட்கலாம். ஒன்றா இரண்டா கவனிப்பதற்கு? கொள்கையைப் பொறுத்தவரை இது புனிதமான திட்டம். ஏற்கிறேன். இந்தப் புனிதமான கொள்கை இந்தியா முழுதும் இருக்க வேண்டாமா?

## குதிரைப் பந்தயம் ஏன்?

குதிரைப் பந்தய ஒழிப்பும் ஒரு நல்ல திட்டம். எப்போது ஒழிக்கப் போகிறீர்கள் என்று இங்குள்ளவர்களைவிட அண்டை மாநிலத்தவர் அதிக அக்கறை காட்டுகின்றனர். நாம் எடுத்துவிட்டால் உடனே நமது மாநில எல்லையை ஒட்டி அவர்கள் எல்லையில் குதிரைப் பந்தயத்தை ஆரம்பித்து வருமானம் பெறலாம் என முனைந்து நிற்கிறார்கள்!

## தீண்டாமை ஒழிப்பு

தீண்டாமை ஒழிப்பு நல்ல திட்டம் தான். அது தமிழ் நாட்டில் மட்டுமிருந்தால் என்ன நிலை? தமிழ் நாட்டில் தீண்டாமை ஒழிந்து—இங்குள்ள ஒரு ஆதி திராவிட நண்பர் அடுத்த ஆந்திர மாநிலத்திற்குச் சென்று அங்குத் தீண்டாமை ஒழிக்கப்படாமலிருந்தால் என்ன நிலை ஏற்படும்—இங்கு

நடப்பது போல அங்கு நடந்தால் அவர் அடி உதைக்கு உள்ளாகமாட்டாரா? இப்போது தீண்டாமை ஒழிப்பு அகில இந்திய ரீதியில் பரப்பப்பட்டிருப்பதால் அகில இந்தியா விலும் வெற்றி பெறும் நிலை உள்ளது.

தீண்டாமை ஒழிப்பைப் போலவே காந்தியக் கொள்கை யான மதுவிலக்கை, காந்தி வளர்த்த காங்கிரஸ் அரசுகள் கைவிட்டுவிட்டன. நமது அரசு கைவிடாததற்குப் பாராட்டுத் தெரிவித்தார்கள்.

மதுவிலக்கைப் பற்றி திரு டி. கே. சண்முகம் அவர்கள் ஒரு பாட்டையே பாடினார்கள். மதுவிலக்கை ரத்து செய் தால் ஆங்காரமாக தொகையறுவே பாடிவிடுவார்கள். அந்த அருமையான பாட்டைக் கேட்கவாவது ரத்து செய்தால் என்ன என்று கூட ஒரு ஆவல் தோன்றுகிறது. நான் இப்படி யெல்லாம் கூறுவதால் மதுவிலக்கு ரத்தாகும் எனப் பத்திரி கைக்காரர்கள் தலைப்புப் போட்டுவிடவேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன். இத்தகைய சூழ்நிலைகளைக் கொண்டு மதுவிலக்கு அமல்படுத்தப்பட வேண்டுமா என்பதைச் சிந்தித்துப் பாருங்கள் என்று அனைத்துக் கட்சியினரையும் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கிருஷ்ணசாமி நாயுடு** (நி. காங்) : முதலமைச்சர் அவர்கள் மதுவிலக்கு எடுக்கப்படலாம் என்ற தோரணையில் உரை நிகழ்த்தினார்கள். இங்குள்ள 2 கோடி பெண்கள் சார்பில் தயவு செய்து மதுவிலக்கை ரத்து செய்து விடா தீர்கள் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

**முதல்வர் :** ரத்து செய்யப் போவதாகக் கூறவில்லை. உறுப்பினர்களைச் சிந்தித்துப் பார்க்கத் தான் கூறினேன். மதுவிலக்கு ரத்து செய்யப்பட்ட மாநிலங்களிலும் பெண்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.



# நிதிநிலை அறிக்கை விவாதத்துக்கு முதல்வர் பதில்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, மேலவை ஆகியவைகளில் இடைக்கால நிதி நிலை அறிக்கை விவாதத்துக்குப் பதிலளித்துத் தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் நிகழ்த்திய உரைகளின் தொகுப்பு கீழே தரப் படுகிறது. முதல்வர் அவர்களின் உரை வருமாறு :—

இடைக்கால நிதிநிலை அறிக்கை மீது நடைபெற்றுள்ள விவாதத்திற்குப் பதில் அளிக்கிற இந்த நேரத்தில் ஏற்கனவே இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்து பிறகு அயல் நாடாக ஆகிவிட்ட பாகிஸ்தானின் ஒரு பகுதியான கிழக்கு வங்காளத்தில் நடைபெறுகிற கோரக் கொலைகளை, உலக அரசியல் சட்டங்களுக்கு அப்பாற்பட்டு மனிதாபிமானத்தோடு நாம் கூர்ந்து கவனித்து, அந்த மக்களினுடைய உரிமைகளுக்காகப் போராடுகிற வீர மறவர்களுக்கு நம்முடைய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். இது வெளிநாட்டு விவகாரம், அதிலே நாம் தலையிடக்கூடாது என்றாலும் கூட, நான் முதலில் குறிப்பிட்டதைப்போல் உலக அரசியல் சட்டங்களினுடைய நிலைமைக்கும் அப்பாற்பட்ட நிலையில் மனிதாபிமானத்தோடு நான்கு கோடி தமிழ் மக்களின் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம்.

இடைக்கால நிதிநிலை அறிக்கைமீது பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் வெகு விளக்கமாக நல்ல பல கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்த அவையில் இன்றைக்கு ஒரு புதிய அரசு மீண்டும் திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பில் அமைக்கப்பட்டிருக்கிற நிலையில், நிதிநிலை அறிக்கையை நிதி அமைச்சர் என்ற முறையில் நான் முன்வைத்து உங்களுடைய சீரிய கருத்துக்களையெல்லாம் கேட்டுப் பதிலளிக்கிற பேறு பெற்றமைக்குப் பெருமைப் படுகிறேன். மிகுந்த பூரிப்பும் அடைகிறேன்.

### ஆற்றல் படைத்தவர்கள்

பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்டு நான்காண்டுக்காலம் அவர் வழி நின்று ஆட்சி நடாத்தித்தமிழ் நாட்டுப்பெருங்குடி மக்களின்பேராதரவினைப்பெரும்பான்மையாகப் பெற்று இந்த அரசு அமைந்திருக்கிறது. இங்கு வந்திருக்கிற உறுப்பினர்கள் எவ்வளவு ஆற்றல் மிக்கவர்கள் என்பதை நான் நன்கு அறிவேன்.

இந்த மாமன்றத்திற்கு வந்திருக்கிற உறுப்பினர்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாத்திரம் 30 வழக்கறிஞர்களும், நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சியின் சார்பில் 5 வழக்கறிஞர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் 2 வழக்கறிஞர்களும், பார்வேர்ட் ப்ளாக் கட்சியின் சார்பில் ஒரு வழக்கறிஞரும், முஸ்லீம் லீக் சார்பில் ஒரு வழக்கறிஞரும் ஆக 39 வழக்கறிஞர்கள் இந்த மாமன்றத்தின் உறுப்பினர்களாக வந்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் டாக்டர்கள் 4 பேரும், சுதந்திரா கட்சி சார்பில் 2 பேரும் ஆக ஆறு பேர்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் ஆற்றல் மிகு கருத்துரைகளை மாத்திரம் அல்ல, சமயத்தில் உதவக் கூடிய அளவிலும் இங்கே ஆறு டாக்டர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். ஆசிரியர்கள் பிரதிநிதிகளாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 5 பேரும் சுயேச்சை ஒருவரும் ஆக 6 பேர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். பொறியாளர்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒருவர் இடம் பெற்றிருக்கிறார். பட்டதாரிகள் சார்பில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 20 பேரும், காங்கிரஸ் கட்சி சார்பில் 3 பேரும், ஆக 23 பேர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள்.

## எதிர்க்கட்சிகள் வரிசை

இந்த அளவிற்கு ஆற்றல் படைத்தவர்கள், வழக்கறிஞர்கள், மருத்துவத்துறை நண்பர்கள், பொறியாளர் இப்படிப் பட்டவர்கள் நிறைந்திருக்கிற இந்த மாமன்றத்தில் நான் முதல் அமைச்சராக இருப்பதிலும், விவாதங்களுக்குப் பதில் அளிப்பதிலும் உள்ளபடியே பெரும்பேறு பெற்றவன் என்ற முறையில் நான் பெருமைப்படுகிறேன். எதிர்கட்சி வரிசையில் அமர்ந்திருப்பவர்களில் குறிப்பிடத்தக்கவர், காங்கிரஸ் கட்சியின் தலைவராக வீற்றிருக்கும் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள். அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்திருக்க வேண்டுமென்று நான் பலமுறை ஆசைப்பட்டவன். அந்த ஆசை இன்றைக்கு அரைகுறையாக நிறைவேறியிருப்பதற்காக நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். ஏனென்றால் நல்ல வாதத்திறமையோடும், கருத்தாழத்தோடும், புள்ளி விவரங்களோடும், மெத்த மரியாதையுணர்ச்சியோடும், அரசியல் பண்போடும், தமிழர்களின் நாகரீகத்திற்கு ஏற்றவாறு அவர்கள் பேசக் கூடியவர்கள் என்ற காரணத்தினாலும், அவர்கள் இந்த மாமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்திருக்கக் கூடாதா என்று நான் பல நேரங்களில் எண்ணியதுண்டு. என்னுடைய அமைச்சர் பெருமக்களிடத்திலும் அதைப் பற்றிச்சில நேரங்களில் அங்கலாய்த்துக் கொண்டதும் உண்டு. இன்று அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக வரமுடியாவிட்டாலும் இன்றைக்கு எதிர்க்கட்சிக்

குழுவில் பிரதான கட்சியாக இருக்கிற காங்கிரஸ்கட்சியின் தலைவராக அமர்ந்திருக்கிறார்கள். அதற்கு வழி வகுத்த திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அவர்கள் நன்றி சொல்லாவிட்டாலும் நான் அவர்கள் இங்கு இடம் பெற்றிருக் கிறார்களே என்ற வகையில் எனது மகிழ்ச்சியைத் தெரிவித் துக் கொள்கிறேன்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தலைவராக வீற்றிருக்கிற மதிப்பிற்குரிய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் ஐந்தாண்டுக் காலத்திற்கு மேலாகப் பாராளு மன்றத்தில் உறுப்பினராக இருந்து பாராளுமன்றத்தில் நீண்ட நேரம் பேசக்கூடியவர் என்ற பெயரையும், நல்ல பல கருத்துக்களை எடுத்துச் சொல்லக்கூடியவர் என்ற புகழையும் பெற்றவர்களாவார்கள். அவர்களுடைய முற்போக்கு எண்ணங்களை இந்த மாமன்றத்தில் தங்குதடையில்லாமல் எடுத்துச் சொல்லட்டும். அவைகள் எல்லாம் எங்களுக்கு நல்ல அறிவுரைகளாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

## தோழமை உணர்ச்சி

முஸ்லீம் லீக் கட்சியின் தலைவராக வீற்றிருக்கிற பெரு மதிப்பிற்குரிய திருப்பூர் மொய்தீன் அவர்கள் நாங்களெல் லாம் மாணவர்களாக இருந்த காலத்தில் மேடைப் பேச்சுக் கள் மூலமாக நாங்கள் எல்லாம் உணர்ச்சியும் உத்வேகமும் அடையக்கூடிய அளவிற்கு தமிழ்நாட்டில் புகழ் வாய்ந்தவர் களாக இருந்தவர்களாவார். இன்று சட்ட மன்றத்தில் முஸ்லிம் லீக் கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்று அவர்கள் தரக்கூடிய இனிய கருத்துக்கள், தோழமை உணர்ச்சியோடு பரிமாறிக் கொள்ளக்கூடிய நல்லெண்ணங்கள் இவைகளுக் கெல்லாம் இந்த மாமன்றத்தில் நல்ல மதிப்பு இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

பார்வார்ட் பிளாக் கட்சியின் தலைவராக அமர்ந்திருக்கக் கூடிய நண்பர் திரு. பெருமாள்அவர்கள் வீர உரை ஆற்றுவர், அதே நேரத்தில் விவேகம் மிளிர்ந்திருக்கத் தக்க அளவிற்கு உரையாற்றுவார். அவர்கள் கட்சி சார்பில் எடுத்துச் சொல்கிற கருத்துக்களையும் இம்மாமன்றம் நின்று நிதா னித்துக்கவனித்து நல்லவைகளைச் செய்யக் கடமைப்பட்டிருக் கிறது என்றும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

## குட்டியைக் கவ்வும் பூனை

சுதந்திராக் கட்சியின் தலைவராக வீற்றிருக்கிற மதிப்பிற் குரிய டாக்டர் ஹாண்டே அவர்கள் மேலவை உறுப்பின

ராகவும் இருந்திருக்கிறார்கள். இம்மாமன்றத்திலும் நான் காண்டுக் காலம் உறுப்பினராக வீற்றிருந்து இப்போதும் உறுப்பினராகவும், சுதந்திரக் கட்சியின் தலைவராகவும் வீற்றிருக்கக்கூடிய வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள். எனக்கு நன்றாக நினைவிருக்கிறது, அவர்கள் ஒருமுறை அரசினுடைய கொள்கைகளைக் கண்டித்துப் பேசிய நேரத்தில் அன்றைய தினம் முதல் அமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், ஹாண்டே அவர்கள் எங்களைக்கண்டிப்பது பூனை தன் குட்டியை வாயால் கவ்விச் செல்வது போல் இருக்கிறது. மாறாகக் காங்கிரஸ்காரர்கள்கண்டிப்பது பூனை எலியைத் தூக்கிச் செல்வது போல் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். ஆனால் இனிமேல் எந்த லாவகத்தைக் கையாள்வார்களோ தெரியாது. ஏனென்றால் எலியைத் தூக்குகிற நிலைமையில் உள்ளவர்களைச் சேர்ந்திருக்கிற காரணத்தினால் அவர்கள் குட்டியைக் கவ்வுவது போல் கண்டனங்கள் தெரிவிப்பார்களா அல்லது எலியைப் பிடிப்பது போல் கண்டனங்கள் தெரிவிப்பார்களா என்று எனக்குத் தெரியாது. ஆனாலும் இன்றைக்குக் காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களும் நிச்சயமாக பூனை, குட்டியைக் கவ்வுவது போலவே கண்டனங்கள் தெரிவிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருப்பதால் இருவரும் ஒருசாரராராகயிருந்து நல்ல வகையில் தேவையான ஆக்கபூர்வமான கருத்துக்களை இங்கு அறிவிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.




மிகுந்த அடக்கத்திற்கும் எளிமைக்கும் பெயர்போனவராக விளங்குகிற நம் மதிப்பிற்குரிய திரு. மாரிமுத்து அவர்கள் பி.எஸ்.பி. கட்சியின் தலைவராக வீற்றிருக்கிறார் அவர்களது பேச்சில். காரம் இருக்காது. என்றாலும் சாரம் அதிகமாக இருக்கும். அவர்களுடைய நல்ல அறிவுரைகளை ஏற்றிட ஆளும்கட்சித் தரப்பில் இருக்கிற நாங்கள் தயாராக இருக்கிறோம். தமிழரசுக் கழகத்தின் தலைவராக வீற்றிருக்கிற நண்பர் திரு. தியாகராஜன் அவர்கள் பொதுப்பணிகளில் நாட்டம் கொண்டவர். பல பொது நிறுவனங்களில் இருந்தவர். அவருடைய தலைவர் இங்கு வரமுடியாமல் போனாலும்

அவருடைய தலைவரின் எண்ணங்களையெல்லாம் இங்கு எதிரொலிப்பார் என்ற அளவிலும் அவருடைய தலைவர் சிலம்புச் செல்வர் உரையாகவே அவரது உரையை நாங்கள் மதிப்போம் என்று இங்கு எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக் கிறேன்.

இந்த மாமன்றத்திலே அமர்ந்திருக்கிற உறுப்பினர் களின் பணி எவ்வளவு நேர்த்தியாக இருந்திட வேண்டும், எவ்வளவு பொறுப்புடையதாக இருந்திட வேண்டும் என்பதனை முஸ்லீம் லீக் கட்சியின் சார்பில் பேசிய மாண்பு மிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டினார்கள். மின்விசிறியின் கீழே அமர்ந்து இருக்கும் நாம், இந்த நாட்டிலே நமக்காக வாக்களித்த லட்சோப லட்சம் மக்கள், ஏழை எளியவர்கள், சாதாரண மக்கள், தொழிலாளர்கள், நடுத்தர மக்கள், அவர்கள் எல்லாம் தங்களுடைய வாழ்வுக்காக மின்விசிறியைப் போல் சுழன்று கொண்டு, அவதிப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள் என்ற எண்ணத்தில் இருக்க வேண்டியவர்களாவோம். நல்ல மெத்தையில் அமர்ந்து இருக்கிறோம், மேலே விசிறி ஓடிக் கொண்டு இருக்கிறது, எவ்வளவு பெரிய அந்தஸ்து நமக்குக் கிடைத்து இருக்கிறது என்று கருதாமல், இந்த இடத்தை நமக்குத் தந்த லட்சோப லட்சம் ஏழை எளிய மக்கள் ஏற்றம் பெற வேண்டுமென்ற நியாய உணர்வோடு, நேர்மை எண்ணத்தோடு, நாம் அவர்களுக்குத் தந்த வாக்குறுதிகளை மனதில் கொண்டு ஒவ்வொரு உறுப்பினரும் பணியாற்ற வேண்டும் என்று இந்த அவையில் வீற்றிருக்கும் எல்லாக் கட்சித் தரப்பினர்களையும் கேட்டுக்கொள்வது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

### ஜூன் மாதத்தில் விரிந்த நிலையில் கொள்கை விளக்கம்

இங்கே வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிதி நிலை அறிக்கையில் கொள்கை விளக்கங்கள் எதுவும் அதிகமாகச் சொல்லிவிட முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். நம்முடைய மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் எடுத்துக்காட்டியது போல் ஜூன் மாதத்தில் வெளிவர இருக்கிற முழு வடிவம் உடைய நிதி நிலை அறிக்கையில்தான் அமைச்சரவையினுடைய கொள்கை விளக்கங்களை அதிகமாக எடுத்துச் சொல்ல முடியும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.




நம்முடைய காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் மாண்புமிகு அம்மையார் அனந்த நாயகி அவர்கள் ''வரிகள் குறையவில்லை, வசதிகள் பெருகவில்லை'' என்று தங்களுடைய பேச்சை முடித்தார்கள். வரிகள் குறையவில்லை என்று அவர்கள் சொல்லுகிற அதே நேரத்தில், நஞ்சைக்கும், புஞ்சைக்கும் நில வரி விலக்கு அளிக்கப்பட்டு இருப்பதை தமிழ் நாட்டிலே உள்ள மக்கள் யாரும் மறந்து இருக்க முடியாது. இன்னும் ஏராளமான வரிச் சலுகைகள் அளிக்கப்பட்டு இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அன்புச் செழியன் எடுத்துக் காட்டியதுபோல், ஒரு அரசாங்கம் என்றால், அது வரி போடாமலேயே நடக்க வேண்டும் என்கிற கொள்கையை யாரும் ஏற்றுக் கொண்டது கிடையாது.

### தாங்கக்கூடியவர்களுக்கு வரி

நாங்களும் வரியைப் போடமாட்டோம் என்று சொன்னது கிடையாது. தாங்கக் கூடியவர்களுக்கு வரி போட்டு, தாங்க முடியாத மக்களுக்கு வசதிகளைப் பெருக்குவதுதான் ஒரு முற்போக்கு அரசாங்கத்தின் நல்ல கொள்கையாக இருக்க முடியும். அந்த வகையிலேதான் வரிகள் இந்த நாட்டிலே நான்காண்டுக் காலமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. இதிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களும், அம்மையார் அனந்தநாயகி அவர்களும் தரப்பட்டுள்ள குறிப்பேடுகளிலிருந்து இரண்டொன்றைச் சுட்டிக் காட்டினார்கள்.

ரிஜிஸ்டிரேஷனுக்கு எந்த அளவிற்கு இடைக்கால வருமானம் உயர்ந்து இருக்கிறது என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். ரிஜிஸ்டிரேஷனுக்கு உயர்ந்திருக்கிற அந்த வருமானம் இன்றைக்கு 316 லட்சம் ரூபாயாக இருக்கிறது. ஆனால், 1938–39 ஆண்டிலே 32 லட்சம் ரூபாயாக இருந்தது. 1962-ம் ஆண்டிலேயே 124 லட்சம் ரூபாயாக உயர ஆரம்பித்து விட்டது. ரிஜிஸ்டிரேஷனில் ஏதோ நாம் கூடுதலாக வருமானத்தைப் பார்க்கிறோம் என்று மாத்திரம் எடுத்துக் கொள்ளாமல் ரிஜிஸ்டிரேஷனில் அதிக வருமானம் வருவ

தற்குக் காரணம், அந்தக் காலத்தை ஒட்டி நிலங்களின் மதிப்பீடுகள் உயர்ந்துகொண்டு போகிறது என்பதையும், அதற்கு ஏற்றவாறு ரிஜிஸ்டிரேஷன் கட்டணம் மூலமாக அரசாங்கத்திற்கு அதிக வருமானம் வருகிறது என்பதையும் நாம் மறந்து விடுவதற்கு இல்லை.

### வருமானம் உயர்ந்ததின் காரணம்

அடுத்ததாக, மோட்டார் வாகனங்கள் மீதானவரி. இதன்பேரில் 1938-ல் 81 லட்சமாக இருந்த வருமானம், இப்போது 23 கோடியாக வருகிறது என்றால் அந்தஅளவுக்கு வாகனங்கள் எண்ணிக்கை உயர்ந்து இருக்கிறது என்பது தான் காரணமே தவிர, வரிகள் மட்டும் உயர்ந்துவிட்டன என்பது காரணமல்ல.

திரு. கே. எம். சுப்பிரமணியம் பேசுகிற நேரத்தில் ஒன்றைச் சொன்னார்கள். மத்திய அரசிடமிருந்து பெற்ற கடன் தொகைகள், அவை அனுமதிக்கப்பட்ட காரியத்திற்குப் பயன்படுத்தப்பட்டதா என்ற விவரத்தைத் தரவேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையிலும், மாநகராட்சி மன்றத்தின் நிலையில் இருக்கிறார்கள். மாநகராட்சி மன்றக் கணக்கிற்கும், மாநில அரசின் கணக்கிற்கும் இருக்கிற வேறுபாடுகளை நாம் முதலில் புரிந்து கொண்டாக வேண்டும்.

கார்ப்பரேஷன் முதலிலேயே அரசிடமிருந்து கடனைப் பெற்றுவிட்டு, பிறகு செலவுகளைச் செய்கிறது. ஆனால், மாநில அரசு அப்படி அல்ல. பெரும்பாலும் செலவுகளைச் செய்துவிட்டு, அதற்கு ஈடுகட்ட மத்திய அரசிடம் கடன் அல்லது மான்யங்களைப் பெறுகிறது. ஆகவே, செய்யப்பட்ட செலவுகளுக்குத்தான் மாநில அரசு மத்திய அரசிடமிருந்து பெரும்பாலும் கடனாகவோ, மான்யமாகவோ பெறுகிறதே அல்லாமல் இன்னின்ன செலவுகளைச் செய்ய வேண்டுமென்று கடன் பெற்றுப் பிறகு அவைகளைச் செய்யாமல் வைத்துக் கொண்டு இருக்கிறது என்று குற்றம் கூற வேண்டிய எந்த விதமான அவசியமும் நேர்ந்துவிடவில்லை என்று நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

### எல்.ஐ.சி.-யிடமிருந்து மாநகராட்சி பெற்ற கடன்

இன்னொன்றையும் குறிப்பிட்டார்கள். சென்னை மாநகராட்சி மன்றம் எல்.ஐ.சி.-யிடமிருந்து 5 கோடி ரூபாய் கடன் பெற்றது. அந்த 5 கோடி ரூபாயை அரசாங்கம் வைத்துக்கொண்டு இருக்கிறது என்று சொன்னதோடு நிற்காமல், கொஞ்சம் பயங்கரமான ஒரு விஷயத்தையும் வெளி

யிட்டார்கள். ஏதோ ரிசர்வ் பாங்க் 'ஓவர் டிராப்டை' அடைப்பதற்காக சென்னை மாநகராட்சி எல்.ஐ.சி. மூலமாகப் பெற்ற கடனை இந்த அரசு பயன்படுத்திக்கொண்டது என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். உள்ளபடியே எல்.ஐ.சி. யிடமிருந்து பெற்ற கடன் ரூ. 5 கோடி ரூபாய் அல்ல, எல்.ஐ.சி.யிடமிருந்து பெற்ற கடன் 3 கோடி ரூபாய்தான். அந்த 3 கோடி ரூபாயை எல்.ஐ.சி.யிடமிருந்து மாநகராட்சி மன்றத்திற்காக அரசாங்கம் பெற்றது.

மாநகராட்சி மன்றம் 3 கோடி ரூபாய் கடன் அரசாங்கத்தின் மூலமாகப் பெற்று இல்லாவிட்டால், அதை ஒரு வங்கியில் வைத்து, அந்த வங்கியிடமிருந்து மாநகராட்சி மன்றம் பெறும் வட்டி 4 சத விகிதமாக இருந்து இருக்கும். எல்.ஐ. சி.-க்கு மாநகராட்சி மன்றம் 7 சதவிகித வட்டியைக் கொடுத்து இருக்க வேண்டும். அந்தத் தர்மசங்கடத்திலிருந்து மாநகராட்சி மன்றத்தை விடுவிப்பதற்காக எல்.ஐ. சி.யிடமே பொறுப்பு ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு 7 சத வீதம் வட்டியை அரசாங்கமே தருவதாக வாக்களித்து 3 கோடி ரூபாய் கடனைப் பெற்றது. திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டது போல், பெற்றது 5 கோடி ரூபாய் அல்ல, 3 கோடி ரூபாய்தான்.

அந்த மூன்று கோடி ரூபாயில் 1 கோடி ரூபாய் மாநகராட்சி மன்றத்துக்குத் தரப்பட்டு இருக்கிறது. மீதமுள்ள 2 கோடி ரூபாய் அரசாங்கத்திடம் பத்திரமாக இருக்கிறது. அது மாத்திரம் அல்லாமல், கிட்டத்தட்ட இரண்டரைக் கோடி ரூபாய் மாநகராட்சி மன்றத்திற்கு 'வழிவகை முன்பணமாக' (வேய்ஸ் அண்டு மீன்ஸ் அட்வான்ஸ்) இந்த அரசு கொடுத்து இருக்கிறது. அது அந்தக் கடனோடு இணைந்தது அல்ல, என்றாலும் மாநகராட்சி மன்றத்திற்கு இந்த அரசு, எவ்வகையில் உதவி செய்து இருக்கிறது என்பதைக் கூற இதனை நான் குறிப்பிடுகிறேன்.

பொதுநலக் கடனாக மாநகராட்சி திரட்டிய ஒரு கோடியே 10 லட்சம் ரூபாயில், 5 லட்சத்தை வைத்துக் கொண்டு, பாக்கிக் கடனை, 1 கோடி 5 லட்சம் ரூபாயை, அரசிடமே ஒப்படைத்து இருக்கிறது. அதற்கான 6 சதவீத வட்டியை இந்த அரசு தந்து கொண்டு இருக்கிறது என்பது உண்மை நிலையாகும்.

### சிறு தொழில் துறைக்கு நிதி குறையவில்லை

சிறு தொழில்கள், கிராமத் தொழில்களுக்காக நிதி ஒதுக்கீடு குறைந்து விட்டது என்று குற்றம் சாட்டப்பட்டது. ரூ. 50 லட்சத்திலிருந்து ரூ. 20 லட்சமாகக் குறைந்துவிட்டது என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் தம்மிடத்திலுள்ள 'ஒயிட் பேப்பர் ஆன் பட்ஜெட்' என்று இருக்கிற

புத்தகத்தில் இருக்கிற குறிப்பை மாத்திரம் படித்த காரணத்தால் அந்தக் குற்றச்சாட்டைச் சாட்டினார்கள். அதிலே உள்ள குறிப்பை நான் மறுத்திடவில்லை. ஆனால், ரூ. 50 லட்சத்திலிருந்து ரூ. 24 லட்சத்திற்குக் குறைந்து விட்டது என்று யாரும் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது. இந்த ரூ. 24 லட்சம் அல்லாமல், சிட்கோ, அதாவது ஸ்மால் இண்டஸ்ட்ரீஸ் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன், சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் ஒன்றை அரசு நிறுவி, அதன் பெயரால் ரூ. 100 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, ரூ. 100 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது 1971–72-ம் ஆண்டு இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில்தான். வெள்ளை அறிக்கை என்ற பெரிய புத்தகத்திலே இது பற்றிய விவரம் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

## அக்கறை குறைந்து விடவில்லை



அதே புத்தகத்தில் 25-ம் பக்கத்தைப் பார்த்தால், அந்தப் பக்கத்திலே கூட கிராமச் சிறு தொழில்களுக்காக எந்த அளவுக்கு இந்த அரசு முயன்று, பணத்தை அதிகமாக ஒதுக்கியிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். மேலும், பெரிய பெரிய நடுத்தரத் தொழில்கள், கனிவள மேம்பாட்டிற்காக 1970–71-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 3·92 கோடியாக இருந்தது, இப்பொழுது 1971–72-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 5·35 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது கூட இடைக்கால வரவு-செலவுத் திட்டம்தான் என்பதை நான் நினைவு படுத்துகிறேன். அது போலத்தான் கிராமச் சிறு தொழில்களுக்காக ஏற்கனவே 1970–71-ம் ஆண்டில் ரூ. 360 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பொழுது 1971–72-ம்ஆண்டில் ரூ. 421 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதுவும் இடைக்காலத் திட்டம்தான். மேலும் ஒதுக்கப்படும் என்பதையும் கூறிக்கொள்கிறேன். ஆகவே, சிறுதொழில் வளர்ச்சியிலே அரசினுடைய அக்கறை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து, கரைந்து, தேய்ந்துவிட்டது என்று யாரும் எண்ணிக்கொள்ளத் தேவையில்லை.



மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு எந்தெந்த இனங்களிலிருந்து வருமானம் வருகிறது என்றால், 'வருமானவரி', 'மத்திய ஆயத்தீர்வை' (எக்சைஸ் டியூடி), 'சொத்து உரிமை' போன்ற மற்றைய இனங்களின் மூலம் நம் மாநில அரசுக்குப் பங்கு கிடைக்கிறது. அது போலவே, நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கேற்ப அளிக்கப்படும் தனி மானியங்களின்மூலம் மாநில அரசுக்குப் பணம் கிடைக்கிறது. மூன்றாவதாகத் திட்ட நிதி உதவியின் மூலம் பணம் கிடைக்கிறது. நான்காவதாக, திட்டம் அல்லாத, திட்டத்தில் சேராத சில பணிகளுக்காக நிதி உதவி கிடைக்கிறது. இதிலே மூன்று, நான்கு என்று நான் சொன்ன, திட்டநிதி உதவி, திட்டத்தில் சேராத பல பணிகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையைத் தவிர, மற்றபடி நான் ஏற்கனவே எடுத்துக்காட்டிய, வருமான வரி, மத்திய ஆயத்தீர்வை, நிதி ஆணைக் குழுவின் பரிந்துரைகளின் மூலம் கிடைக்கும் பணம் இவையெல்லாம் நமது அரசினுடைய நிதியில் பொதுவாக இணைக்கப்பட்டு, செலவு செய்யப்படுகின்ற காரணத்தினால், எந்தத் தனிப்பட்ட வேலைக்காக அவை செலவு செய்யப்படுகின்றன என்று கணக்கிட்டுக் கூற இயலாது.

மொத்தத்தில் நம்முடைய மாநிலத்தின் தேவைகளுக்காக இந்தப் பணத்தின் மூலம் செலவுகள் செய்யப்படுகின்றன. முறையாகச் செய்யப்படுகின்றன என்பதை மாத்திரம் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

### டிராக்டர்கள் வாங்க நிதி ஒதுக்கீடு

டிராக்டர்கள் வாங்க நிதி ஒதுக்கம் குறைந்து விட்டது என்று குறிப்பிட்டார்கள். நான் ஒரு புள்ளி விவரத்தை இந்த மாமன்றத்தின் முன்னால் வைப்பது நல்லது என்று கருதுகிறேன். 'டிராக்டர்கள் வாங்க அரசு நிதி ஒதுக்கத்தைக் குறைத்து விட்டது' என்பது குற்றச்சாட்டு, அல்லது அவர்களுக்கு ஏற்பட்ட ஐயப்பாடு. 1946-ம் ஆண்டு முதல் 1966-67-ம் ஆண்டு வரை, 20 ஆண்டுக்காலத்தில் டிராக்டர்

கள் வாங்க, பழைய அரசு—பழைய அரசு என்றால் மிகப் பழைய அரசு—அந்த அரசு செலவிட்ட தொகை ரூ. 76 லட்சம்—20 ஆண்டு காலத்தில் ரூ. 76 லட்சம். ஆனால், 1967–68-ல் ரூ. 6 லட்சம், 1968–69-ல் ரூ. 22.68 லட்சம், 1969–70-ல் ரூ. 69.95 லட்சம், 1970–71-ம் ஆண்டில் ரூ.29.55 லட்சம் செலவிட்டிருக்கிறோம். அதிலே கூட மேலும் 16 டிராக்டர்கள் வாங்க ரூ. 30 லட்சம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணம் இதில் சேரவில்லை. அது சேர்ந்தால் 1970—71-ல் அதுவும் ரூ. 59 லட்சம் என்கின்ற அளவுக்கு வந்து நிற்கும்.



ஆக, நான்கு ஆண்டு காலத்தில் டிராக்டர்கள் வாங்க இந்த அரசு ரூ. 129 லட்சம் பணம் ஒதுக்கீடு செய்திருக்கிறது. ஆனால், 20 ஆண்டு காலத்தில் அவர்கள் செய்த பண ஒதுக்கீடோ ரூ. 76 லட்சம்தான் என்பதைக் குற்றச் சாட்டாக அல்ல, உறுப்பினர்களின் கவனத்திற்காகக் குறிப்பிட விரும்புகிறேன்.

குடிசை ஒழிப்பைப்பற்றி அம்மையார் அவர்களும், கே. எம். எஸ். அவர்களும் பேசினார்கள். இருவரும் சென்னைவாசிகள் என்கின்ற காரணத்தினால் இனிமேல் குடிசையைப்பற்றி அதிகமாகப்பேசவேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்படும் என்கின்ற காரணத்தினால் பேசினார்கள். அவர்களுடைய அரசு இருந்த காலத்திலே ரூ. 3 கோடி ஒதுக்கப்பட்டது, நீங்கள் என்ன புதிதாகச் செய்து விட்டீர்கள் என்று பொருள் தொனிக்கும் வகையில் அவர்களுடைய பேச்சு அமைந்திருந்தது.



மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ்—குடிசைவாழ் மக்களுக்காகக் கட்டப்பட்ட டெனமெண்ட்ஸ், மாடி வீடுகள் 2,688. அவர்கள் ஆட்சிக் காலத்தில் 1966–67-ல் கட்டப் பட்ட டெனமெண்ட்ஸ்1, 476. ஆக, அவர்களுடைய 20 ஆண்டுக் கால ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட டெனமெண் ட்ஸ் 4,164. நான்கு வருடங்களில் கழக ஆட்சியில் 1970 டிசம்பர் 31 முடிய கட்டப்பட்டுள்ள டெனமெண்ட்ஸ் 7,037. நான்கே ஆண்டுக் காலத்தில், அதுவன்னியில் 2,247 தீப்பிடிக்காத வீடுகளும் கட்டப்பட்டிருக்கின்றன. அதைப்பற்றி அம்மையார் அவர்கள் அவை தீப்பிடிக்காத வீடுகள் அல்ல. தீப்பெட்டி வீடுகள் என்று சொன்ஞர்கள். தீப்பெட்டிக்குள் தீக்குச்சிகள் இருக்கும். ஆகவே தீப் பெட்டி என்ருல், அலட்சியப்படுத்தக் கூடியது அல்ல. தீக்குச்சிகள் வைப்பதற்குத் தீப்பெட்டிகள் தேவைப்படு கின்றன. குடிசைகளிலே இருக்கிற ஏழை எளிய மக்கள் தீக்குச்சிகளுக்குச் சமமானவர்கள் என்பதை அவர்களுக்குத் தலைவர் அவர்களின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## உயர்ந்து எழும்பும் வீடுகள்



இந்தத் தீக்குச்சிகள் தீ பற்ருமல் பார்த்துக் கொள்ளும் கடமை அர சைச் சார்ந்தது. அதற் காகத்தான் ரூ. 40 கோடி அளவில் 7 ஆண்டுக்கான ஒரு திட்டம் வகுத்து, குடிசைகளை மாற்றி, நல்ல எழிலான காற்ருேட்டம் மிகுந்த வலுவான வீடு களைக் கட்டுவதற்கு 'குடிசை மாற்று வாரியம்' என்ற அமைப்பை உருவாக்கியிருக் கிருேம். இந்த மாமான்றத் தின் உறுப்பினரான திரு. இராம. அரங்கண்ணல் அவர்கள் குடிசைப் பகுதி மக்களோடு நீண்ட நாட் களாக உறவும், தோழமையும் கொண்டுள்ள காரணத்திஞல் அவரை அவ்வாரியத்திற்குத் தலைவராக நியமனம் செய்திருக் கிருேம். குடிசை மாற்று வாரியம் திறம்படப் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. குடிசைவாழ் மக்களுக்கு எந்த அளவுக்கு வசதி செய்து கொடுக்கப்படுகிறது என்று கேட்பவர்கள் சென்னை மாநகரத்தில் சில பகுதிகளைச் சுற்றிப் பார்க்க லாம், அங்கெல்லாம் உயர்ந்து எழும்பிக்கொண்டிருக்கிற அந்த வீடுகள் அவர்களுக்குப் பதில் சொல்லும் என்பதை மாத்திரம் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

### வேளாண்மைக்கு அளித்த வசதி

வசதிகள் பெருகவில்லை என்கின்ற குற்றச்சாட்டு அடிக்கடி கூறப்படுகிறது. வேளாண்மைத் துறையில் மாத்திரம் 1966–67-ம் ஆண்டில் குறுகிய காலக் கடனுகக் கொடுக்கப் பட்ட தொகை ரூ. 31 கோடி. 1970–71-ல் அந்தக் குறுகிய காலக் கடன் தொகை ரூ. 55 கோடியாக உயர்த்தப்பட்டி ருக்கிறது. 1966-67-ம் ஆண்டில் வேளாண்மைத் துறையில் கொடுக்கப்பட்ட நீண்டகாலக் கடன் தொகை ரூ. 3 கோடி; ஆனுல், 1970–71-ம் ஆண்டில் நீண்டகாலக் கடன் தொகை ரூ. 19 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இது வசதி களைப் பெருக்குவதற்காகச் செய்யப்பட்ட காரியம் அல்லவா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். வேளாண்மைக்காக மொத்தச் செலவு என்ற அடிப்படையில் பார்த்தால்கூட, 1966–67-ம் ஆண்டில் ரூ. 11.80 கோடி, 1970–71-ல் ரூ. 14.74 கோடி, 1971–72-ல் ரூ. 18.39 கோடி, அதுவும் முதல் (ஃபர்ஸ்ட் பார்ட்) திட்டமாக ரூ. 18 கோடி என்ற அளவுக்கு வேளாண்மைக்கான மொத்தச் செலவு இன்றைய தினம் பெருக்கப்பட்டிருக்கிறது.

### கல்விக்கான நிதி ஒதுக்கம்

கல்வித் துறையை எடுத்துக்கொண்டால், 1966–67-ல் ரூ. 43 கோடி ஒதுக்கப்பட்டதற்கு மாருக, இன்றைக்கு ரூ. 79 கோடி செலவழிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. மருத்துவத் துறையில் 1966–67-ல் ஒதுக்கப்பட்ட ரூ. 11 கோடிக்கு மாருக, இன்றைக்கு ரூ. 20 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய சுவாமிதாஸ் அவர்கள் பேசும்போது இந்த சதவிகிதத்தைப் பார்த்தால், கல்விக்காகச் செலவிடும் தொகையை 1971–72-க்கு உள்ளதை 1966–67 உடன் ஒப்பிட்டுப் பார்த்தால், குறைவாக உள்ளதே என்று குறிப்பிட்டார்கள். அது சரியான வாதம் அல்ல. சரியான புள்ளியும் அல்ல. 1966–67 வருவாய்க் கணக்கில் மொத்தத் தொகையில் ரூ. 201 கோடியில், கல்விக்காக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது ரூ. 43.86 கோடி.



இது மொத்தத் தொகையில் 22 சத விகிதம்; 1971 72-ல் மொத்தத் தொகை ரூ. 349 கோடியில், கல்விக்காக ஒதுக்கப்பட்டது ரூ. 79.11 கோடி. இது மொத்தத்தில் 22·6 சத விகிதம். ஆக, அவர் குறைந்துவிட்டது என்று கூறுவது சரியாகாது. எந்த அளவிற்கு வருமானம் பெருகி யிருக்கிறதோ, எந்த அளவுக்கு மொத்தச் செலவுகள் செய்யப்படுகின்றனவோ, அந்த அளவிற்குக் கல்வித்துறையில் கூடுதலாகச் செலவழிக்கப்படுகிறது. சதவிகிதக் கணக்கைப் பார்த்தாலும், புள்ளிவிவரங்களைப் பார்த்தாலும், குறைந்து விடவில்லை, உயர்ந்திருக்கிறது என்பதையும் அவர்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

## மின்ஒளி இல்லாத ஊர் இல்லை

வசதிகள் பெருகவில்லை, வசதிகள் பெருகவில்லை என்று அம்மையார் குற்றம் சொன்னார்கள். வசதிகளைப் பெருக்கு வதற்காகத்தான், தண்ணீர்த் திட்டத்திற்காக இந்த அரசாங்கம் ரூ. 15 கோடி ஒதுக்கியிருக்கிறது. மின் வசதிகள் கொடுக்க ரூ. 39 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. நாட்டில் மின் விளக்குகள் இல்லாத கிராமமே இருக்கலாகாது என் கின்ற சபதத்தை எடுத்துக்கொண்டு, அதற்கென ஒதுக்கீடு செய்து அந்தக் காரியத்தில் தீவிரம் காட்டுகிறது இந்த அரசு. பின்தங்கியவர்கள் நலனுக்காக ரூ. 3 கோடி ஒதுக்கப் பட்டிருக்கிறது.



எதிர்க்கட்சி வரிசை யில் நாங்கள் இருந்த போது அம்மையார் ஆளும் கட்சி வரிசையில் உட்கார்ந்து கொண்டு, பின்தங்கிய மக்கள் நலனுக்காக ஒரு தனி இலாகா வேண்டும் என் றெல்லாம் நாங்கள் வா தாடிய நேரத்திலெல் லாம், யாராவது காதில் போட்டுக்கொண்டார் களா? காது கொடுத்துக் கேட்டார்களா? உரிமை யோடு "உட்கார்" என்று உட்கார வைக்கப்பட்டது கிடையாதா? இன்றைக்கு நாங்கள் பொறுப்பேற்றுக் கொண்ட நேரத்தில், அண்ணா அவர்கள் மறைவுக்குப் பின்னால், நான் பொறுப்பேற்ற நேரத்தில் சொன்னேன், நான் மிகப் பின் தங்கிய வகுப்பில் பிறந்தவன்—'மிக', 'மிக' 'மிக

என்று எவ்வளவு வேண்டுமானாலும் போட்டுக்கொள்ளுங்கள். ஆகவே, இந்த நாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, பின் தங்கிய மக்களுக்காக, என் உயிரைப் பணயமாக வைத்து, அவர்கள் வாழப் பாடுபடுவேன் என்று எடுத்துச் சொன்னேன்.

**பின்தங்கியவர்கள் நிலை உயர உதவிகள்**




அது வாய்ச் சொல் அல்ல என்று நிரூபிக்க, உடனடியாகவே பின்தங்கியவர் நலனுக்காக ஒரு தனி இலாகா அமைக்கப் பட்டது. தனி இலாகா, தனி அமைச்சர் அல்லாமல், ஒரு குழுவும் அமைக்கப் பட்டது. அந்தக் குழு தன்னுடைய பரிந்துரைகளைத் தந்து, அந்தப் பரிந்துரைகளை அரசு ஆராய்ந்து கொண்டிருக்கும் நிலையில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம். அது மாத்திரமல்ல, பின்தங்கியோர் நலத்துறையில், மாணவர்களுக்கு 50 சத விகிதம் எண்கள் பெற்றால் தான் அவர்களுக்கு "ஸ்காலர்ஷிப்" கொடுக்கப் படும் என்கிற நிலையை மாற்றி, 40 சதவிகிதம் எண்கள் பெற்றவர்களும் ஸ்காலர்ஷிப் பெற வகை செய்தோம். ஏற்கனவே ரூ. 90 லட்சம் உதவிப் பணம் என்றிருந்ததை ரூ. 300 லட்சம் உதவிப்பணம் தரும் அளவில் திருத்தி அமைத்தோம்.

அதேபோல், இடைக்கால வரவு-செலவுக் கணக்கில் ரூ. 9 கோடி ஒதுக்கி, பின்தங்கியவர்களுக்கு ரூ. 3 கோடி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ரூ. 6 கோடி என்ற விவரத்தைப் புள்ளி விவரம் காட்டுவது மட்டுமல்ல; தாழ்த்தப்பட்ட மக்களுடைய முன்னேற்றத்திற்காகப் பல பணிகள் செய்யப் பட்டிருக்கின்றன. கிராமங்களில் இடுகாட்டுக்குக்கூடச் செல்ல முடியாத அளவில் கஷ்டங்கள் இருந்ததை, எதிர்க் கட்சியிலிருந்தபோது சுட்டிக்காட்டியவற்றை மறந்து விடாமல், மெல்ல மெல்ல, ஆனால் உறுதியாக, இன்றைக்கு அந்தக் காரியங்களை நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம். எத்தனையோ கிராமங்களில் அரிசனக் காலனிகளுக்கு இணைப்புச் சாலைகளை உருவாக்கிக் கொடுத்து வருகிறோம்.

முன்னால் இருபத்து மூன்று ஆண்டுக் காலத்தில் 5,000-க்கு மேற்பட்ட அரிசனக் காலனிகள் மின் வசதி பெறுமல் இருந்தன.

## இருள் அகலுகிறது

இந்தப் புதிய அரசு வந்தபின், அந்த 5,000-காலனிகளில் 4,000 காலனிகளுக்கு மின் விளக்குக் கொடுத்திருக்கிறது. ஆகவே, இந்த அரசு ஏழை, எளிய, நடுத்தர மக்களுடைய முன்னேற்றத்திற்காகச் செயல்படுகிறது என்பது தெளிவு.



தொழிலாளர்களைப் பற்றிக் குறிப்பிடவில்லை என்று திரு. கே. டி. கே. தங்கமணி குறிப்பிட்டார்கள். தொழிலாளர்களுடைய முன்னேற்றத்திற்காக, இங்கே கூறினுலும், கூருவிட்டாலும், தொழிலாளர்கள், பாட்டாளி மக்கள், ஏழை எளிய மக்கள், நடுத்தர மக்கள், பின் தங்கிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், சமுதாயத்தின் அடித்தளத்தில் அழுத்தப் பட்டுக் கிடக்கும் மக்கள் இவர்களுக்காகப் பாடுபட இந்த அரசு உறுதி பூண்டிருக்கிறது. அதற்குத் தோழமை உணர்ச்சி உள்ளவர்களின் உதவி தேவை. தேவை என்று மிகுந்த அன்போடு கேட்டுக் கொள்கிறேன். இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் நிதி நிலைகளை ஆராய்ந்து, மத்திய சர்க்கார், மாற்றுந்தாய் மனப்பான்மையோடு நடந்துகொள்ளாமல், தேவைகளை நிறைவேற்றிட நிதியைத் தந்திட வேண்டும் என்று அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

இது இடைக்கால நிதிநிலை அறிக்கை என்பதால், இதில் எழுப்பப்பட்டிருக்கும் உரிமைக்குரல் இடைக்கால உரிமைக் குரலோ என்று யாரும் எண்ணத் தேவையில்லை.

## ஒருமித்த உரிமைக்குரல்

மேலவையில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், பேசிய மற்ற உறுப்பினர்களும் நீங்கள் மத்திய அரசிடமிருந்து அதிகமான நிதியைப் பெற எந்தவிதமான நடவடிக்கைகளை

எடுத்தாலும் அதை ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்தார்கள். மேலவை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இந்த அரசின் மீது உள்ள நம்பிக்கையின் காரணமாக அப்படிப்பட்ட உறுதியைத் தெரிவித்தார்கள் என்று கருதுகிறேன்.

வன்முறைச் செயலில் நாட்டம் கொண்டவர்கள் அமைச்சரவையில் இருப்பார்கள் என்றால் அந்த வார்த்தையை அவர்கள் பயன்படுத்தியிருக்க மாட்டார்கள்.

அவர்கள் கள்ளம் கபடமின்றி, வெள்ளை உள்ளத்தோடு இப்படிக் கூறக் காரணம், எடுக்கப்படுகிற நடவடிக்கைகள் நிதானத்தோடு, நேர்மையோடு, நாடாளுமன்ற முறைப்படி இருக்கும்; அண்ணா அவர்களின் பாதையில் தான் அந்த நடவடிக்கை இருக்கும் என்று அவர்கள் நம்பியதால் தான் இவ்வளவு அழுத்தந்திருத்தமாகச் சொன்னார்கள். நான்கூட அவருடைய இந்தப் பேச்சைக் கேட்டு அவருடைய கட்சிக் காரர்கள் என்ன சொல்வார்களோ என்று பயந்தேன்.

தமிழ்நாட்டின் முன்னேற்றத்தில் அவர்கள் கொண்டிருக்கிற இந்த ஆர்வத்தைப் பாராட்டப் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறேன்.

நமக்கு வந்து சேர வேண்டிய நிதிநிலைக் கூறுகள் வந்து சேராததற்கான காரணங்கள் என்னென்ன என்பதையெல்லாம் உறுப்பினர் திரு. சாமிநாதன் ஆராய்ந்தார். மத்திய அரசின் தூதுவர் ஒருவர் பேசுகிறாரோ என்று எண்ணக் கூடிய அளவிற்கு அவருடைய பேச்சு போய்விடுமோ என்று கூட எண்ணிக்கொண்டிருந்தேன். ஆனால் அவர் பேச்சை முடித்த பிறகுதான் பரவாயில்லை, தமிழக அரசு, மத்திய அரசிற்கு எதிராக நடத்துகின்ற அறப் போராட்டத்திற்கு—உரிமைப் போராட்டத்திற்கு—பாராளுமன்ற முறைக்கேற்ற போராட்டத்திற்குத் திரு. சாமிநாதன் அவர்களும், நிச்சயமாக நம்மோடு இருப்பார் என்ற துணிவினைப் பெற்றேன்.

இந்த அரசு ஒன்றுதான் மத்திய அரசோடு வீரமாக எதிர்த்துக் குரலை எழுப்பக்கூடிய அரசு என்பதை அனைவரும் அறிவார்கள்.

## தமிழ்நாட்டின் பண்பாடு

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் நீண்ட காலம் பணியாற்றிய பெரியவர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களும் மேலவையில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பேசிய நேரத்தில், குடும்பத்திலுள்ள ஒரு பெரியவர் வாழ்த்துவது போன்ற உணர்ச்சியையும், உள்ள உணர்வையும் நான் பெற்றேன். தேர்தலுக்கு முன்பு அவர்கள் தங்களுடைய

கட்சிக்காகப் பணியாற்றிய நேரத்தில் அவர்களுடைய எண்ணமெல்லாம் அவர்களுடைய கட்சியின் அரசு வர வேண்டும் என்பதுதானே தவிர, நாங்கள் வரக்கூடாது என்ற தீய நோக்கத்தோடு பணியாற்றவில்லை.

தமிழ்நாட்டில் பலர், இந்தச் சாதாரணமானவர்கள், சாமான்யமானவர்கள் ஆட்சிக் கட்டிலில் வீற்றிருப்பதா என்ற எரிச்சலோடு பார்த்தவர்கள் உண்டு.

நான்காண்டுக் காலத்தில் நாங்கள் நாட்டிற்குச் செய்திருக்கிற நன்மைகள் எல்லாம் மறைக்கப்பட்டு, எடுத்துக் கூறிய சாதனைகளெல்லாம் எள்ளி நகையாடப்பட்டு, நாங்கள் அகற்றப்பட வேண்டுமென்ற முறையில் தேர்தலில் பணியாற்றியவர்களும் உண்டு.

### உள்ளத் தூய்மையோடு பாராட்டு

ஆனால் இங்கே வாழ்த்திய இந்தப் பெரியவர்கள் அந்த எண்ணத்தோடு இந்தத் தேர்தலில் பணியாற்றவில்லை. உள்ளத்தூய்மையோடு அவர்கள் அளித்த பாராட்டுக்களை மிகுந்த கனிவோடும் பணிவோடும் நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். அந்தப் பாராட்டுக்கள் என்னுடைய பணிக்கும், சக அமைச்சர்களுடைய பணிக்கும் நல்ல உறுதுணையாக அமைந்திடும்.

தேர்தல் முடிந்து விட்டது. தேர்தலுக்குப் பிறகு நடைபெற்றிருக்கிற சம்பவங்களானாலும் முன்பு நடைபெற்ற சம்பவங்களானாலும் அவை அரசியல் ரீதியில் நடைபெற்றிருக்கிற சம்பவங்களானால் உள்ளபடியே அதற்காக நாமெல்லாம் வருத்தப்பட வேண்டும். வேதனைப்பட வேண்டும்.

அரசியல் கட்சியில் ஈடுபட்டிருக்கிற அத்தனைபேரையும் கேட்டுக் கொள்கிறேன், கொலை வெறிக்கு யாரும் ஆட்படாமல், மனமாச்சரியங்கள், அரசியல் மாச்சரியங்கள் எவ்வளவு இருந்தாலும் அவை பேச்சின் மூலம், எழுத்தின் மூலம் தீர்த்துக் கொள்வதில்தான் தமிழ் நாட்டின் பண்பாட்டையும், அரசியல் நாகரீகத்தையும் காப்பாற்ற முடியும்.

### வன்முறையைச் சகியோம்

வேண்டுகோள் விடுக்கிற அதே நேரத்தில், இப்படிப்பட்ட வன்முறைகளில் ஈடுபடுகிறவர்கள் எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் கண்டிப்பாக நடவடிக்கைக்கு ஆளாவார்கள் என்கிற எச்சரிக்கையை மீண்டுமொருமுறை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நாட்டின் நலன் கருதி, தமிழ்நாட்டின் எதிர்காலம் கருதி, அரசியல் பண்பாட்டைக் காப்பாற்றும் பெருநோக்கின் அடிப்படையில் இந்தக் கண்டிப்பான எச்சரிக்கையை வன்முறை எண்ணம் கொண்டவர்களுக்கு விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் ஒவ்வொரு பக்கத்திலும் நம்முடைய உரிமைக்குரல் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டேன். இந்த உரிமையைப் பெற என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் என்று உறுப்பினர் திரு. சாமிநாதன் கேட்டார். எந்த நடவடிக்கையானாலும் தமிழக அரசினைப் பொறுத்தவரை, பாராளுமன்ற முறைப்படித்தான் நடவடிக்கைகளை எடுக்குமே அல்லாமல், வன்முறைப் போக்கில் நம் நடவடிக்கைகள் இருக்காது.

### அன்று கொண்டாடிய எழூச்சி நாள்



ஆளும் கட்சியாக நாங்கள் வந்த நேரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் காங்கிரசைத் தவிர்த்த ஏனைய அனைத்துக் கட்சிகளையும் சேர்த்து, தூத்துக்குடித் துறைமுகத்திற்காகவும், சேலம் இரும்பாலைக்காகவும் எழுச்சி நாள் கொண்டாடினார்கள். ஆளும் கட்சி எழுச்சி நாள் கொண்டாடலாமா என்றெல்லாம் அப்போது கேலி புரிந்தார்கள். அந்த எழுச்சி நாள் குரலுக்கு நல்ல மதிப்பிருந்தது. தூத்துக்குடித் துறைமுகம் ஆழ்கடல் துறைமுகமாக அறிவிக்கப்பட்டதை யாரும் மறந்திருக்க முடியாது.

சேலம் இரும்பாலை வேண்டும், இல்லாவிட்டால் நாங்கள் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஒத்துக் கொள்ள மாட்டோம் என்று பாராளுமன்ற முறைப்படி சொன்ன பிறகு சேலம் இரும்புத் தொழிற்சாலைக்கு அனுமதி கிடைத்தது.

அனைவரும் சேர்ந்து குரல் எழுப்புவோமேயானால், ஒரு கட்சியின் நன்மைக்காக அல்ல, தமிழ்நாட்டு மக்களின் நன்மைக்காக எழுப்புவோமேயானால், கிடைக்க வேண்டிய நியாயங்கள் நிச்சயமாகக் கிடைக்கும். அதுவரை நாம் தொடர்ந்து நம்முடைய அறப்போராட்டங்களைப் பாராளுமன்ற முறைப்படி நடத்திக் கொண்டிருப்போம்.

### எடுத்த காவடியை இறக்குவது எப்போது ?

காவடி எடுக்க வேண்டிய நிலைமை இருக்கலாமா என்று குறிப்பிட்டார்கள். எங்கள் உறுப்பினர் மாத்திரமல்ல, திரு. காமராசரே கூடக் கேட்டார். யார் எடுத்தாலும் காவடி தான். நான் சொல்வது எல்லாம், எடுத்த காவடியை எப்போது இறக்கி வைப்பது? அதற்கு எல்லோரும் ஒன்று சேர வேண்டாமா? என்பதுதான்! அந்த வழியில்தான் மாநில சுயாட்சியைப் பெறமுடியும் என்று நாம் கூறுகிறோம். அப்படிப்பட்ட கருத்தின் அடிப்படையில் அரசு எடுக்கிற முடிவானாலும், இந்த மாமன்றத்தில் இருக்கிற அனைவரும் எடுக்கிற முடிவானாலும், அந்த முடிவிற்கு மத்திய அரசு மதிப்பளித்து நடந்து கொள்ள வேண்டுமென்று இந்த மன்றத்தின் சார்பில் மத்திய அரசிற்கு நான் வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன்.

இங்கே பேசப்படுகிற பேச்சுக்கள் ஏதோ ஒரு சிறிய கூடத்திற்குள், 40, 50 பேர் அமர்ந்து பேசுகிறோம் என்றாலும், இந்தப் பேச்சிற்கு உரிய மதிப்பு இல்லாமல் போகவில்லை. இந்தப் பேச்சுக்கள் நிச்சயம் டெல்லிப் பட்டணத்தில் எதிரொலிக்கக் கூடிய பேச்சுக்கள். தமிழ் நாட்டின் முதலமைச்சர் கருணாநிதி இப்படி கருத்து தெரிவித்திருக்கிறார் என்றும், அதை எல்லாக் கட்சிகளும் ஆதரித்திருக்கின்றன என்றும் செய்திகள் டெல்லிப் பட்டணத்தில் பரவும். இதை நான் கூறுவது யாரையும் பயமுறுத்துவதற்காக அல்ல; இந்த நாட்டிலிருக்கிற எல்லா மக்களுடைய பிரதிநிதிகளும் தமிழ்நாடு வஞ்சிக்கப்படக் கூடாது என்று விரும்புகிறார்கள், தமிழ் நாட்டிற்குத் தேவையான நிதியினை அளிக்க வேண்டுமென்று கோருகிறார்கள் என்பதை அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகத் தான் இதனைச் சொல்லுகிறேன்.

### அறுத்துக்கொள்ள வேண்டும் என்பது அவர்கள் ஆசை.

ஆளுங்கட்சி உறுப்பினர்களும், எதிர்க் கட்சிகளின் தலைவர்களும், அனைவரும் குறிப்பிட்டார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் மத்திய சர்க்காரைக் கேட்பதை வரவேற்கிறேன் என்றார்கள். இப்பொழுது உறுதியாக, நிச்சயமாக வரவேற்பார்கள். நம்முடைய ஹாண்டே அவர்கள் மத்திய சர்க்காரைக் கேட்டுக் கொண்டே இருக்கிறீர்களே, அவர்கள் கொடுக்காவிட்டால் என்ன செய்யப் போகிறீர்கள் என்றார்கள். ஏதாவது செய்து அறுத்துக் கொள்ள வேண்டும் என்பது அவர்களுடைய ஆசை. ஆகவே, என்ன செய்யப் போகிறீர்கள், என்ன செய்யப் போகிறீர்கள்? என்றார்கள். அவரையே 'என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள்' என்று நான் கேட்டேன்.




நாங்கள் இந்திரா அம்மையாருக்குக் கொடுக்கும் ஆதரவு மாநிலத்திற்குப் பணம் பெறுவதைப் பொறுத்த காரியம் அல்ல. நாங்கள் தந்த ஆதரவு, நாங்களும் முற்போக்குக் கூட்டணிக் கட்சித்தலைவர்களும், நண்பர்களும் தந்த ஆதரவெல்லாம், கொள்கை ரீதியான ஆதரவு, ஏதோ பேரம் பேசிக்கொண்டு தரப்பட்ட ஆதரவு அல்ல.

நாங்கள் ஆதரவு தந்தாலும் தராவிட்டாலும் திருமதி இந்திரா அம்மையார் அவர்களுடைய அரசு மத்தியில் பலமான அரசாக அமைந்திருக்கிறது. இன்றைக்கு நாங்கள் ஆதரவு தராத நிலைமையிலும் கூட, மத்திய அரசு முற்போக்கான கொள்கைகளை உருவாக்குகின்ற நேரத்தில் எங்களுடைய 23 ஓட்டுகள் விழுந்தாலும் விழாவிட்டாலும் வெற்றிபெறும் நிலையில் மத்திய அரசு இருக்கிறது. முற்போக்கான கருத்துக்கு ஆதரவாக எங்களுடைய கைகள் உயருமே அல்லாமல் எங்களுடைய கைகள் தாழாது என்பதை எதிர்க்கட்சிக்காரர்களுக்கும், சுதந்திராக் கட்சிச் சட்டமன்றத் தலைவர் திரு. ஹாண்டே அவர்களுக்கும் எடுத்துக்காட்டி, இது கொள்கை ரீதியான ஆதரவே என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

### இந்தி திணிக்கப்பட்டால்.....

இன்றைக்கு ராஜமானிய ஒழிப்பு, வங்கிகள் தேசியமயமாக்கும் திட்டம் இவைகளுக்கு ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கிறோம். நாளையத் தினமே தமிழ் நாட்டில் இந்தி திணிக்கப்படும் என்ற நிலை, மறைமுகமான முறையில் திணிக்கப்படும் என்ற நிலை, ஜாடைமாடையாகத் தெரிந்தாலும்கூட, அங்கே இருக்கிற எங்களுடைய தோழர்கள் பட்டாளத்துச் சிப்பாய்களாய் இருந்து அதை எதிர்த்துப் போர்க்குரல் கொடுப்பார்கள் என்பதை மறக்க வேண்டாம் என்று சொல்லிக்கொள்கிறேன். மத்திய அரசுடன் உறவுக்குக் கை கொடுப்போம், அதே நேரத்தில் எங்களுடைய உரிமைகளுக்குக் குரல் கொடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'நீங்கள் மத்திய அரசுக்கு வணங்காதீர்கள், வளையாதீர்கள்' என்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அம்மையார் சொன்னது, அவர் மறவர் குல மங்கை என்ற காரணத்தால் வீரத்தைப் போதித்தார் என்று கருதுகிறேன். ஒரு தாய், அதுவும் புறநானூற்றுத் தாய் என்று எடுத்துக் கொண்டேனேயல்லாமல், எங்களை இழிவுபடுத்துவதற்காக வணங்காதீர்கள், வளையாதீர்கள் என்று சொன்னதாக நான் கருதவில்லை. அவர் அப்படிச் சொன்னது, 'நாங்கள் உங்களுடன் சேர்ந்து உங்களுக்காகப் போராட நேரடியாக இல்லாவிட்டாலும் மறை முகமாக ஒத்துழைக்க இருக்கிறோம்' என்ற கருத்தில்தான் பேசினார்கள் என்று நான் கருதுகிறேன்.

## மாநிலத் திட்டக் குழு, போட்டிக் குழு அல்ல !




இன்னும் நம் நாட்டிற்குப் பல்வேறு திட்டங்களை அமைக்க வேண்டும். அதற்கேற்ற வகையில்தான் மாநிலத் திட்ட ஆணைக்குழு ஒன்றை ஏற்படுத்திப் பத்தாண்டு காலத்திற்கான திட்டங்களை வகுக்க வேண்டுமென்று கவர்னர் உரையிலும், என்னுடைய அறிக்கையிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்ட ஆணைக் குழு, மத்தியில் இருக்கிற திட்டக் குழுவிற்குப் போட்டியாக ஏற்படுவதல்ல ; இந்தக் குழு பத்தாண்டுக் காலத்தில் தமிழகத்தில் மக்கள் தொகை எந்த அளவிற்குப் பெருகும் ? அவர்களுக்கான வாய்ப்புகள், வசதிகள் எந்த வகையில் அரசு செய்ய வேண்டும் ? அவர்களுக்கான கல்வியைத் தர வாய்ப்புக் கூறுகள் என்னென்ன ? மருத்துவ வசதி எந்த வகையில் தேவைப்படும் ? விவசாயத்தில் முன்னேற்றம் அந்த நேரத்தில் எப்படி இருக்கவேண்டும்? தண்ணீர்ப்பற்றுக் குறை ஏற்படுமானல் அதற்கெல்லாம்எப்படி வழி வகை செய்ய வேண்டும் ? இப்படிப் பல்வேறு அம்சங்களை அந்த மாநிலத் திட்ட ஆணைக்குழு ஆராய்ந்து தங்களுடைய அறிக்கையில் அவைகளைச் சமர்ப்பிக்கும்.

பத்து ஆண்டு காலத்திற்கு எப்படித் திட்டங்களை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்று வரையறுத்துக்கொண்டு, அதை வைத்துக்கொண்டு போராட முடியும். என்னென்ன காரியங்களுக்காகக் கேட்கப்பட்டது என்று கேள்வி வருமானல் அதற்கு இந்தத் திட்டக் குழுவின் அறிக்கை பயன்படும்.

அடுத்தாண்டில் 1972–73-க்கான நிதி நிலை அறிக்கை வைக்கப்படுகிற நேரத்தில், அதற்குள்ளாக அந்தக் குழுவின் அறிக்கை அவையில் வைக்கப்பட்டு, அந்தத் திட்ட வரைவு பற்றி நாமெல்லாம் விவாதிக்கலாம் என்ற மகிழ்ச்சியான செய்தியை உங்களுக்கு உறுதியோடு அளிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

## உரிமைக் குரல்

மாநில சுயாட்சி என்னும்போது அதிகாரங்கள் பரவலாக்கப்படவேண்டும்; ஒரே இடத்தில் அதிகாரங்கள் குவிந்துவிடக் கூடாது; அரசியல் துறையில் சமுதாயத் துறையில், பொருளாதாரத் துறையில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்கிறோம். மத்திய அரசு எல்லா அதிகாரங்களையும் முடக்கி வைத்துக்கொண்டும், மாநிலங்கள் கையைக் கட்டிக் கொண்டும் இருக்கிற நிலை இருக்கக் கூடாது என்றுதான் சொல்கிறோம்.

பாகிஸ்தான் ஏன் ஏற்பட்டது ? மாநில சுயாட்சிக்கு இணங்காத காரணத்தால்தான் பாகிஸ்தான் ஏற்பட்டது. இன்றைக்கு கிழக்குப் பாகிஸ்தானில் என்ன நிலைமை ? மாநில உரிமைகளைத் தடுத்திடும் போக்கால் மாநிலத்திற்கு மாநிலம் ரகுமான்களைத் தோற்றுவிக்க இந்தியாவிலே யாரும் முன்வரமாட்டார்கள் என்று நானும் நிச்சயமாகநம்புகிறேன். இந்த நிதி நிலை அறிக்கை தமிழ் நாட்டு மக்களுடைய உரிமைக் குரலை எதிரொலிக்கிற ஒரு அறிக்கையாகும். பாராளுமன்ற முறைகளை ஏற்றுக் கொண்டிருக்கிற நாம், அந்த அடிப்படையில் நம்முடைய உரிமைக் குரலை இதன் மூலம் எழுப்பியிருக்கிறோம்.


தமிழ்நாடு அரசு
வாய்மையே வெல்லும்